# வரலாறு

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் -10






சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# வரலாறு

## தரம் 10

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
## Teacher Instructional Manual

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2007

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# வரலாறு

தரம் - 10

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு : 2006
மீள் பதிப்பு : 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

© தேசிய கல்வி நிறுவகம்

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

இந்நூல், கல்வி வெளியீடு தணைக்களத்தினால், சென்வின் தனியார் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்து.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

# வரலாறு பாடத்திட்டக் குழு

வழிகாட்டல் :

பேராசிரியர் ஜே.டபிள்யு. விக்கிரமசிங்ஹ - பணிப்பாளர் நாயகம் - தே.க.நி

திரு விமல் சியம்பலாகொட - உதவிப் பணிப்பாளர் நாயகம் - தே.க.நி

ஆணைக்குழு :

பேராசிரியர் எம்.யூ. த சில்வா - உருகுணைப் பல்கலைக்கழகம்

பேராசிரியை இந்திராணி முனசிங்ஹ - கொழும்பு பல்கலைக்கழகம்

பேராசிரியர் ஏ.வீ. சுரவீர - தேசிய கல்வி ஆணைக்குழு

பேராசிரியை திருமதி மாலினி அதகம - ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

கலாநிதி. எஸ். அனுசியா - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கலாநிதி எச்.டீ.ஏ. லலிதா படுவிடகே - பணிப்பாளர் சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி

திரு. ரீ. இராஜேந்திரன் - இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

திருமதி. டி.எச். சந்திமா நிஷாணி தர்மபால - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி

பாடத்திட்டக்குழு :

திருமதி. டி.எச். சந்திமா நிஷாணி தர்மபால - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி

திரு. பி.எல்.ஆர். ரோஹனகுமார - பிரதம செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி

திரு. எப்.எம். நவாஸ்தீன் - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி

திரு. எஸ். கருணாகரன் - உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி

எழுத்தாளர் குழு :

திருமதி. டி.எச். சந்திமா நிஷாணி தர்மபால - தேசிய கல்வி நிறுவகம்

திரு.எம்.கே.கே. பிரியந்த - தேசிய கல்வி நிறுவகம்

திரு. சீ.எஸ்.ஜயசிங்ஹ - ஆசிரியர் மத்திய நிலையம், ஹொரண

திருமதி. ஆர்.எம்.டப்ளியு. மெனிக்கே - மீ/மல்லவகெதர ம.வி., மல்லவகெதர

திருமதி. என்.எஸ்.கே வீரகோன் - மஹா/உடுவ ம.வி., உடுவ

திருமதி. எஸ்.ஏ.என்.பெரேரா - மஹாநாக ம.வி. ரன்வில

திருமதி. ஈ.எம்.எஸ். மெனிக்கே - வலயக் காரியாலயம், குளியாப்பிட்டிய

திருமதி. ஏ. இந்திராணி - ர/ஜேசு பிளன்தரகே கன்யாராம ம.வி. இரத்தினபுரி

திரு. எஸ்.எம். தயானந்த - தேசிய கல்வி நிறுவகம் (ஓய்வு பெற்றவர்)

திரு. ஏ.எஸ்.பீ.எஸ்.பீ. சஞ்சீவ - ர/தன்ஜின்தென்ன ம.வி. பலாங்கொடை

தேசப்படங்கள் :

செல்வி. கே.ஏ.எல். கீதானி - தேசிய கல்வி நிறுவகம்

கணணி வடிவமைப்பு

செல்வி. எம்.என்.எப். றிஹானா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்

# வரலாறு

## தரம் 10

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பாடத்திட்டக் குழு | ii |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்திகள் | iii |
| பொருளடக்கம் | iv |
| **பாடத்திட்டம்** | |
| பாடத்திட்ட அறிமுகம் | 02 |
| வரலாற்றுப் பாடப் பொதுத் தேர்ச்சிகள் | 02 |
| தரம் 10 - வரலாற்றுப் பாடத் தேர்ச்சிகள் | 03 |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | 04-15 |
| பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் | 16-17 |
| **கற்றல் கற்பித்தல் முறைமைகள்** | |
| கற்றல் கற்பித்தல் முறைமை - அறிமுகம் | 19-22 |
| வரலாற்றுப் பாட கற்றல் கற்பித்தல் முறைமைகள் | 22-23 |
| பாடச் செயற்பாடுகள் | 24-291 |
| **கணிப்பீடும் மதிப்பீடும்** | |
| 3.1 கணிப்பீடும் மதிப்பீடும் அறிமுகம் | 291-292 |
| 3.2 கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு விரிவுபடுத்தற் கருவிகள் | 293-298 |

# 1.0 பாடத்திட்டம்

# 1.0 பாடத்திட்டம்

## 1.1 பாடத்திட்ட அறிமுகம்

மனித நாகரிகங்களின் வளர்ச்சிப் போக்கில் எற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, சமய மற்றும் பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றின் வெற்றிகளின் பல்வகைத்தன்மைகளை ஒப்பீட்டு ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் விளங்கிக் கொள்வதனூடாக வரலாற்றைக் கற்கக் கூடியதாயிருக்கும். இத்தகைய கற்றலானது சூழல் மற்றும் தேசிய உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அனைத்து இனங்களும் ஒன்றாக வாழ்வதற்கான சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் முதன்மைப்படுத்தப்பட்டதாக இருத்தலவசியம்.

2007 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீரத்திருத்தங்களின் மூலம் தரம் 6 இல் இருந்து தரம் 11 வரை வரலாற்றுப் பாடமானது பாடசாலை கலைத்திட்டத்தில் கட்டாயப் பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்த்திருத்தங்களின் கீழ் அறிமுகம் செய்யப்படும் பாடங்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. தரம் 6 இல் இருந்து தரம் 11 வரை வரலாறு பாடத்திட்ட தயாரிப்பில் அடையாளம் காணப்பட்ட பாடத்திட்ட தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது 2007 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எட்டு தலைப்புகளையும் செயற்றிட்டங்களையும் கொண்டுள்ள இப்பாடத்திட்டத்தில் இலங்கை, இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய உலக வரலாற்று நிகழ்ச்சிகளும் தலைப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## 1.1 வரலாற்றுப் பாடப் பொதுத் தேர்ச்சிகள்

- வரலாற்றுப் பரவல், போக்குகள் தொடர்பாக அறிந்து கொள்வார்
- நிகழ்காலத்தை அறிந்து கொள்வதற்காக கடந்த காலம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளும் முறையை ஆராய்வார்
- தேசிய பிரச்சினைகளின் பால் தெளிவான நோக்கை வளர்த்துக் கொள்வார்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நபர்களின் குணவியல்புகளை முன்மாதிரியாகக் கொண்டு தேசிய பெறுமானங்களை விருத்தி செய்வார்
- வரலாற்றினூடாகத் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளத் தூண்டப்படுவார்
- வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கால சம்பவங்களை பயனுள்ளதாக்கிக் கொள்வார்

## 1.2 தரம் 10 இற்கான தேர்ச்சிகள்

- வரலாறு பாடத்தைக் கற்பதற்குப் பொருத்தமான மூலாதாரங்களை ஆராய்ந்தறிவார்.
- இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை ஆராய்வார்.
- பொலன்னறுவை யுகத்தின் இறுதி வரையிலான வரலாற்று வளரச்சியினை கற்பார்.
- நீர்வள நாகரிகம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- மத்திய கால இலங்கையின் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்வார்.
- மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் கற்பார்
- மத்திய கால உலகின் முக்கியமான வரலாற்றுத் தகவல்களைக் கற்பார்.
- ஐரோப்பிய இனத்தவரின் ஆட்சிப் பரவல் ஏற்பட்ட விதத்தினை ஆராய்வார்.
- இலங்கைக்கும் மேற்கத்தேயருக்கும் இடையில் நிலவிய தொடர்புகளை விபரிப்பார்.
- ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்தறிவார்.

மேற்கூறப்பட்ட தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைந்து கொள்வார்.

- வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவத்தை மாண்புடன் ஏற்றுக் கொள்வார்.
- வரலாற்றை கற்பதற்கான விருப்புகளை விருத்தி செய்து கொள்வார்.

# தரம் 10
# வரலாறு பாடத்திட்டம்

**அலகு 10.1**

தேர்ச்சி : வரலாறு பாடத்தை கற்பதற்குப் பொருத்தமான மூலாதாரங்களை ஆராய்ந்தறிவார்.

## தேர்ச்சி மட்டங்கள்

- வரலாறு என்பதை வரைவிலக்கணஞ் செய்வார்.
- வரலாற்றைக் கற்பதன் பெறுமானத்தை மதிப்பார்.
- வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை வகைப்படுத்துவார்.

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 03)

### 10.1 வரலாற்றுக்கு ஓர் அறிமுகம்

10.1.1 வரலாறு என்றால் என்ன?

10.1.2 வரலாற்றைக் கற்பதன் அனுகூலங்கள்

10.1.3 வரலாற்று மூலாதாரங்கள்

- இலக்கிய மூலாதாரங்கள்
  - உள்நாட்டு
  - வெளிநாட்டு இலக்கியங்கள்
- தொல்பொருள் ஆதாரங்கள்
  - நாணயங்கள்
  - கல்வெட்டுக்கள்
  - சிதைவுகள்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- வரலாறு தொடர்பான வரைவிலக்கணங்களைச் சேகரித்தல்.
- வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்காக வரலாற்று மூலாதாரங்களின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் அறிக்கை தயாரித்தல்.

## தர உள்ளீடுகள்

- வரலாறு பற்றிய வரைவிலக்கணங்கள்

அலகு 10.2

தேர்ச்சி : இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை ஆராய்வார்

## தேர்ச்சி மட்டங்கள்

- இந்திய ஆரியக் குடியிருப்புக்களின் பரம்பலை ஆராய்வார்.
- பதினாறு பெருந்தேசங்களை தேசப்படத்தில் குறிப்பார்.
- மௌரியப் பேரரசின் பரவலுக்குப் பங்களிப்பு நல்கிய அரசர்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்வார்.
- குப்தப் பேரரசின் பரவலைக் கற்பார்.
- குப்த யுகத்தின் கலாசார பணிகளை மதிப்பிடுவார்.

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 06)

### 10.2 இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி

10.2.1 இந்தியாவின் ஆரியக் குடியேற்றங்கள்
10.2.2 பதினாறு பெருந்தேசங்கள் (மஹா ஜனபதங்கள்)
10.2.3 மௌரியப் பேரரசு
10.2.4 குப்தப் பேரரசு

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- இந்திய ஆரியக் குடியிருப்புக்களின் பரவலினை தேசப்படத்தில் குறித்தல்.
- பதினாறு பெருந்தேசங்களை தேசப்படத்தில் குறித்தல்.
- மௌரியப் பேரரசின் எழுச்சியினைக் காட்டும் தேசப்படமொன்றைத் தயாரித்தல்.
- குப்தப் பேரரசின் எழுச்சியினைக் காட்டும் தேசப்படமொன்றைத் தயாரித்தல்.
- மௌரிய, குப்த கலைகள் தொடர்பான படங்களைச் சேகரித்தல்.

## தர உள்ளீடுகள்

- சாராணாத் தூண் தலை, சாரணாத் புத்தர் சிலை, சாஞ்சி தூபி, அஜந்தா ஓவியங்கள் போன்ற படங்கள்

அலகு 10.3

தேர்ச்சி : பொலன்னறுவை யுகத்தின் இறுதி வரையிலான இலங்கையின் வரலாற்று வளர்ச்சியினை விளக்குவார்.

தேர்ச்சி மட்டங்கள்

- இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய யுகம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- ஆரியக் குடியிருப்புக்களின் அமைவிடம் தொடர்பாகக் கற்பார்.
- பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரையிலான முக்கிய அரசர்களினது பணிகளை மதிப்பார்.
- தென்னிந்திய ஆக்கிரமிப்பினை கற்பார்.

பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 12)

10.3 வரலாற்றுக்கு முந்திய யுகம் முதல் பொலன்னறுவை யுகத்தின் இறுதி வரையிலான இலங்கை வரலாறு

10.3.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
- வரலாற்றுக்கு முற்பட்ட இடங்களை இனங்காணல்.
- வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கைக்கோலம்

10.3.2 ஆரியக் குடியேற்றங்கள்
- விஜயனின் கதைகள்
- குடியேற்றங்களின் பரவல்
- ஆரியர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முறைமைகள்

10.3.3 பொலன்னறுவை இராச்சியத்தின் இறுதிவரை அரசியல் வரலாறு
- ஆட்சியை நிலை நிறுத்தல்.
- அரசர்கள்
  பண்டுகாபயன், தேவனாம்பியதிசன், எல்லாளன், துட்டகைமுனு, காசியப்பன், இரண்டாம் அக்போ, நான்காம் மஹிந்த, ஐந்தாம் மஹிந்த, மகா பாராக்கிரமபாகு, நிஸ்ஸங்க மல்லன்
- தென்னிந்திய ஆக்கிரமிப்பு

உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- வரலாற்றுக்கு முந்திய இடங்களை தேசப்படமொன்றில் குறித்தல்.
- பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவத்தின் மூலமாக வரலாற்றுக்கு முந்திய மனிதனின் வாழ்க்கைக் கோலத்தை இனங் காணுதல்.
- ஆரியக் குடியிருப்பின் பரம்பலினை தேசப்படமொன்றில் குறித்தல்.

தர உள்ளீடுகள்

- வரலாற்றுக்கு முந்திய இடங்களை காட்டும் இலங்கைப்படம்
- பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவப்படம்
- ஆரியக் குடியிருப்புக்களின் பரவலினை காட்டும் படம்

அலகு 10.4

தேர்ச்சி : நீர்வள நாகரிகம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.

தேர்ச்சி மட்டங்கள்

- நீர்வள நாகரிகத்தின் நீரியல் தொழினுட்பம் தொடர்பாகக் கற்பார்.
- நீர்வள நாகரிகத்தின் ஆட்சி ஒழுங்கமைப்பு முறைகளைப் பரிசீலிப்பார்.
- நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறைகளை விபரிப்பார்.
- நீர்வள நாகரிகத்தின் சமய, கலாசாரம் தொடர்பான தகவல்களைக் கற்பார்.
- வெளிநாட்டு உறவுகளை விபரிப்பார்.
- நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சியை விபரிப்பார்.

பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 12)

## 10.4 நீர்வள நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

10.4.1 நீர்ப்பாசன முறையும் தொழினுட்பமும்
- ஆரம்பமும் வளர்ச்சியும்
- சிறிய குளங்கள் முதல் பாரியக் குளங்கள் வரை
- குளங்களும் கால்வாய்த் தொகுதிகளும்
- நீரியல் தொழினுட்பம் - குளத்தின் பிரதான கூறுகள்
- கால்வாய் தொடர்பான தொழினுட்பம்

10.4.2 நிர்வாக ஒழுங்கமைப்பு
- மத்திய ஆட்சி
- உள்ளூராட்சி

10.4.3 பொருளாதாரக் கோலங்கள்
- விவசாயம்
- கைத்தொழில்
- வர்த்தகம்

10.4.4 சமயமும் கலாசாரமும்
- பௌத்தம்
  - அரசனும் சமயமும்
  - பௌத்த கோட்பாடுகள்
- இந்து சமயம்
- ஏனைய சமயங்கள்
- கலாசாரம், சமுதாய வாழ்க்கை, கலையும் கட்டட நிர்மாணமும், கல்வி, இலக்கியம்

10.4.5 வெளிநாடுகளுடனான தொடர்புகள்
- இராஜதந்திர உறவு
- கலாசார உறவு

10.4.6 நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- இராஜரட்டை நீர்பாசனத் தொகுதியைக் காட்டும் தேசப்படத்தை உருவாக்குதல்.
- குளமொன்றின் மாதிரியை நிர்மாணித்தல்.
- நீர்வள நாகரிகத்தின் நிர்வாக ஒழுங்கமைப்பு பற்றிய அறிக்கையை தயாரித்தல்.
- நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறைமை தொடர்பாக கலந்துரையாடல் .
- நீர்வள நாகரிகத்தின் சமய, கட்டிடங்களினது படங்களைச் சேகரித்து, அதன் மூலம் சமயமும் கலாசாரமும் பற்றிய கலந்துரையாடலினை ஒழுங்குபடுத்தல்.
- நீர்வள நாகரிக வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தெளிவுபடுத்தும் வகையில் அறிஞர்கள் குழுவினது கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தல்.
- பொலன்னறுவை இராஜதானியின் இறுதிவரை இலங்கை வரலாற்றில் முக்கியமான அரசர்களினதும் அவர்களது சேவைகளும் தொடர்பான அட்டவணை தயாரித்தல்.
- பொலன்னறுவைக் காலத்தில் இடம்பெற்ற தென்னிந்திய ஆக்கிரமிப்பும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பாக பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்.

## தர உள்ளீடுகள்

- வரலாற்றுக்கு முற்பட்ட இடங்களைக் காட்டும் இலங்கைப்படம்
- பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவப்படம்
- ஆரியக் குடியிருப்புக்களின் பரவலை சித்தரிக்கும் தேசப்படம்

அலகு 10.5

தேர்ச்சி : மத்திய கால இலங்கையின் முக்கியமான வரலாற்று நிகழ்ச் சிகளை ஆராய்வார்.

## தேர்ச்சி மட்டங்கள்

- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை இலங்கையின் அரசியல், பொருளாதார, சமய, சமூக வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிப்பார்.
- இலங்கையின் 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை கலை, கட்டட நிர்மாணம், இலக்கியம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரையிலான இலங்கையின் இராசதானிகளை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 06)

### 10.5 பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கை

10.5.1 அரசியல் வரலாறு
10.5.2 பொருளாதார மாற்றங்கள்
10.5.3 சமுதாய மாற்றங்கள்
10.5.4 சமய, இலக்கிய, கலை, கட்டடக்கலை

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரையிலான இலங்கையின் இராசதானிகளை தேசப்படமொன்றில் குறித்தல்.
- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை இலங்கையின் அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலைமைகளை தேடியறியும் வகையில் குழுச் செயற்பாட்டிலீடுபடுத்துதல்.
- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கியப் படைப்புக்களின் பட்டியலை தயாரித்தல்.
- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை கலை மற்றும் கட்டட நிர்மாணம் ஆகியவற்றின் படங்களை சேகரித்தல்.

## தர உள்ளீடுகள்

- மத்திய கால இராசதானிகளைக் காட்டும் தேசப்படம்

## அலகு 10.6

தேர்ச்சி : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் கற்பார்.

### தேர்ச்சி மட்டங்கள்

- மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களை சேகரித்து விளக்குவார்.
- மத்திய கால ஆசியாவின் கலாசார நடவடிக்கைகளைக் கற்பார்.
- மத்திய கால ஆசிய நாடுகளுக்கிடையில் இடம் பெற்ற தொடர்புகளை விசாரித்தறிவார்.
- மத்திய கால ஆசியாவின் வரலாற்று இடங்களை தேசப்படமொன்றின் ஊடாக விளக்குவார்.

### பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 11)

10.6 மத்திய கால ஆசியா

10.6.1 இஸ்லாமிய சமயத்தின் பரவலும் இந்தியாவில் அதன் தாக்கமும்
- வடமேல் மற்றும் மேற்கு இந்தியா
- டில்லி சுல்தான் சாம்ராஜ்யம்
- மொகலாய பேரரசு
- தக்கணத்தில் பகமன் அரசு
- விஜய நகரப் பேரரசு

10.6.2 ஆசியாவில் பௌத்த, இந்து சமயங்களின் செல்வாக்கு
- மத்திய ஆசியா
- சீனா
- பர்மா (மியன்மார்)
- சீயம் (தாய்லாந்து)
- யாவா, சுமத்திரா
- கம்போடியா (கம்பூச்சியா)

10.6.3 இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்புகள்

### உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- மத்திய கால இந்தியாவில் இஸ்லாம் மார்க்கம் பரவிய பிரதேசங்களை தேசப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடல்.
- மத்திய கால ஆசியாவின் பௌத்த, இந்து சமயங்களின் செல்வாக்குத் தொடர்பான தகவல்கள், படங்களைச் சேகரித்து களப்புத்தகம் ஒன்றை ஒழுங்குபடுத்தல்.
- மத்திய கால் யுகத்தின் இலங்கைக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையிலான அரசியல், கலாசாரம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய அட்டவணையொன்றைத் தயாரித்தல்.

### தர உள்ளீடுகள்

- மத்திய கால ஆசியப்படம்
- மத்திய கால ஆசியாவின் சமய கட்டடங்களின் படங்கள்

அலகு 10.7

தேர்ச்சி : மத்திய கால உலகின் முக்கியமான வரலாற்றுத் தகவல்களைக் கற்பார்.

## தேர்ச்சி மட்டங்கள்

- ஐரோப்பாவில் இடம்பெற்ற மானிய முறை தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- சிலுவை யுத்தத்துடன் வர்த்தகம் வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவார்.
- மறுமலர்ச்சி யுகத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பிடுவார்.
- ஐரோப்பாவில் உருவாக்கிய தேசிய அரசுகளின் பண்புகளைத் தெளிவுபடுத்துவார்.
- நாடுகாண் பயணங்களின் முக்கியத்துவமான சந்தர்ப்பங்களை தேசப்படமொன்றினூடாக விளக்குவார்.
- ஐரோப்பாவில் ஏற்பட்ட சமய சீர்த்திருத்தங்களை விபரிப்பார்.

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 10)

### 10.7 மத்திய கால ஐரோப்பாவில் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி

10.7.1 நில மானிய முறை
10.7.2 சிலுவை யுத்தமும் வர்த்தக விருத்தியும்
10.7.3 மறுமலர்ச்சி
10.7.4 ஐரோப்பிய தேசிய அரசுகள்
10.7.5 நாடுகாண் பயணங்கள்
10.7.6 மதச்சீர்த்திருத்தம்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- நில மானிய பண்புகளைக் கலந்துரையாடுதல்.
- ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி தொடர்பாக பின்வரும் தலைப்புக்களின் கீழ் சிறு நூல் தயாரித்தல்.
  - விஞ்ஞானக் கண்டுபிடிப்பு
  - கலை, கட்டட நிர்மாணம்
  - கல்வி
- ஐரோப்பாவில் தோன்றிய அரசுகள் தொடர்பாக பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்
- நாடுகாண் பயணங்களின் போக்குவரத்துப் பாதையினைக் காட்டும் படம் ஒன்றை வரைதல்.

## தர உள்ளீடுகள்

- நாடுகாண் கண்டுபிடிப்புகளின் போக்குவரத்துப் பாதைகளைக்காட்டும் உலகப்படம்

அலகு 10.8

தேர்ச்சி : ஐரோப்பிய இனத்தவரின் ஆட்சிப் பரவல் ஏற்பட்ட விதத்தை ஆராய்வார்.

தேர்ச்சி மட்டங்கள்

- ஐரோப்பிய இனத்தவர் குடியேற்றங்களைத் தேடிச் சென்றமைக்கான காரணங்களைத் தேடியறிவார்.
- ஐரோப்பிய இனத்தவர் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய நாடுகளினைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவார்.
- கிறிஸ்தவ சமயத்தின் பரவல் இடம்பெற்ற விதத்தைப் பரிசீலிப்பார்.

பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 05)

10.8 ஐரோப்பிய அதிகார விரிவாக்கம்

10.8.1 ஸ்பெய்ன், போர்த்துக்கல், ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க்

10.8.2 கிறிஸ்தவ சமயத்தின் பரவல்

- றோமன் கத்தோலிக்க சமயம்
- புரட்டஸ்தாந்து சமயம்

உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- ஆசியா, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய அதிகார விரிவாக்கத்தினைக் காட்டும் தேசப்படத்தினை வரைதல்.
- ஐரோப்பிய இனத்தவர் ஆசியா, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க அரசுகளில் பெற்றுக் கொண்ட பொருளாதாரப் பயன்களை அட்டவணைப்படுத்துதல்.

தர உள்ளீடுகள்

- ஐரோப்பிய அதிகார விரிவாக்கத்தினைக் காட்டும் தேசப்படம்

அலகு 10.9

தேர்ச்சி : இலங்கைக்கும் மேற்கத்தேயருக்கும் இடையில் நிலவிய தொடர்புகளை விபரிப்பார்.

## தேர்ச்சி மட்டங்கள்

- கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்களுடன் போர்த்துக்கேயர் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளை விபரிப்பார்.
- மேற்கத்திய இனத்தவர் கண்டி இராச்சியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பினை தேடியறிவார்.

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 07)

### 10.9 இலங்கையும் மேற்கு நாடுகளும்

10.9.1 கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான தொடர்புகள்.

10.9.2 கண்டி இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயருக்கும் இடையிலான தொடர்புகள்.

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயருடன் இடம் பெற்ற உறவுகள் தொடர்பாக கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தல்.
- முதலாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டியடிப்பதற்கு மேற்கொண்ட கொள்கைகள் எனும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்.

## தர உள்ளீடுகள்

- கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை, கண்டி இராச்சியங்கள் குறிக்கப்பட்ட தேசப்படம்

அலகு 10.10

தேர்ச்சி : ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்தறிவார்.

## தேர்ச்சி மட்டங்கள்

- கைத்தொழில் புரட்சி ஆரம்பமாகிய விதத்தை விளக்குவார்.
- கைத்தொழில் புரட்சிக் காலத்தில் ஏற்பட்ட புத்தாக்கங்களைக் கற்பார்.
- கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதக தன்மைகளை விபரிப்பார்.
- கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்களினை தேசப்படத்தினூடாக விபரிப்பார்.

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 06)

### 10.10 கைத்தொழில் புரட்சி

10.10.1 ஆரம்பமும் வளர்ச்சியும்
10.6.2 புதிய கண்டு பிடிப்புக்கள்
10.6.3 விளைவுகள்
- அரசியல்
- பொருளாதாரம்
- சமூகம்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- கைத்தொழில் புரட்சிக்குரிய புதிய கண்டுபிடிப்புகளும் அவற்றை உருவாக்கிய நபர்களினதும் தொடர்பான பெயர்ப்பட்டியலை உருவாக்குதல்.
- கைத்தொழில் புரட்சியுடன் தொடர்பான புதிய கண்டுபிடிப்பு அல்லது படங்கள் சேகரித்தல்.
- கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதக விளைவுகளை வெளிப்படுத்தும் விதத்தில் விவாதம்/ உரையாடல்/ கலந்துரையாடல்.
- கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்களினை தேசப்படத்தில் குறித்துப் பெயரிடல்.

## தர உள்ளீடுகள்

- கைத்தொழில் புரட்சியுடன் தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அட்டவணை களும் படங்களும்

## அலகு 10.11

தேர்ச்சி : ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்தறிவார்.

### தேர்ச்சி மட்டங்கள்

- பிரான்சியப் புரட்சியினால் வென்றெடுத்த உரிமைகளை விபரிப்பார்.
- இத்தாலியை ஐக்கியப்படுத்தும் இயக்கம், ஜேர்மனிய ஐக்கிய இயக்கங்களுக்கூடாக தேசிய வாதம், மானுடவாதம் எழுச்சி பெற்ற விதத்தைத் தெளிவுபடுத்துவார்.
- இரஷ்சியப் புரட்சி மூலமாக புதிய பொருளாதார, அரசியல் சிந்தனைகள் தோற்றம் பெற்ற விதத்தை விளக்குவார்.

### பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 12)

10.11 ஐரோப்பாவின் புதிய அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சி

10.11.1 மானுட வாதம்
- பிரான்சியப் புரட்சி

10.11.2 தேசிய வாதம், தாராண்மை வாதம்
- இத்தாலிய ஐக்கிய இயக்கம்
- ஜேர்மனிய ஐக்கிய இயக்கம்

10.6.3 சமவுடமை வாதம்
- இரஷ்சியப் புரட்சி

### உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- பிரான்சியப் புரட்சியினூடாக மானுட வாதம் எழுச்சி பெற்றமை பற்றிய கலந்துரையாடலை ஒழுங்குபடுத்துதல்.
- இத்தாலியை ஐக்கிய இயக்கம், ஜேர்மனிய ஐக்கிய இயக்கம் ஊடாக தேசியவாதம், தாராண்மைவாதம் தோன்றிய விதம் தொடர்பாக அறிஞர் குழாத்தின் கலந்துரையாடலினை ஒழுங்குபடுத்தல்.
- இரஷ்சியப் புரட்சியுடன் தொடர்பாக சமவுடமைவாதம் தோன்றிய விதம் பற்றி பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றை எழுதுதல்.

### தர உள்ளீடுகள்

- ஐரோப்பிய தேசப்படம்

## 1.5 பாடசாலையின் கொள்கையும் வேலைத் திட்டங்களும்

- உத்தேச கலைத்திட்ட மறுசீரமைப்பின்படி 6ஆந் தரம் தொடக்கம் 11ஆந் தரம் வரையில் வரலாற்றுப் பாடம் கற்பிப்பதற்காக வாரத்திற்கு ஆறு (6) பாடவேளைகள் வீதம் ஒதுக்கப் பட்டுள்ளது.

- கற்றல்- கற்பித்தற் செயன்முறையானது செயற்பாடுகளை முதன்மையாகக் கொண்ட அணுகு முறையில் திட்டமிடப்பட்டுள்ளது.

- கற்றல் - கற்பித்தற் முறையியலானது நிலைமாற்ற ஆசிரியர் வகிபாகத்துக்கு (Transformation Role) அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நிலைமாற்ற ஆசிரிய வகிபாகத்தை நடை முறைப்படுத்துவதற்காக 5-E மாதிரிகளுக்கு (5-E Model) அமையத் திட்டமிடப்பட்ட செயற் பாடுகள் இவ்வழிகாட்டியில் முன்வைக்கப்பட்டுள்ளது.

- ஒரு செயற்பாட்டை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு பாடவேளையிலும் கூடுதலான காலம் செலவாகும். எனவே நேரசூசி தயாரிக்கையில் அடுத்தடுத்த இரண்டு பாடவேளைக ளுக்காக பாடசாலைக் காலத்தை வகுத்துக் கொள்வது பற்றி பாடசாலை முகாமைத்துவம் அறிவூட்டம் பெற்றிருத்தல் அவசியம்.

- செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு அந்தந்த தரமட்டத்தில் சீரான திட்டமிடலின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. இதற்காக ஒவ்வொரு தரத்தினதும் சமாந்தர வகுப்புக் களில் வரலாற்றுப் பாடம் கற்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகள் அனைவரும் செயற்பாடுகளை திட்டமிட்டு கூட்டாக ஒழுங்கு செய்து கொள்வது புத்திசாலித்தனமாகும்.

- ஒவ்வொரு பாடசாலை தவணைக்கு. முன்னரும் அத்தவணையுள் நடைமுறைப்படுத்த எதிர் பார்க்கும் செயற்பாடுகளுக்குத் தேவையான தர உள்ளீடுகளை இனங்கண்டு அவற்றைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்குமுரிய திட்டங்களைத் தயாரிப்பதற்காக அதிபர்/பிரிவுத் தலைவர்கள்/பிரிவுத் தலைவிகள் யாவரும் ஆசிரிய ஆசிரியைகளுக்கு போதனா தலைமைத் துவத்தை (Instructional Leadership) வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- சில செயற்பாடுகளை நடத்துவதற்கு போதிய முன்னாயத்தம் இன்றியமையாததாகையால் ஒவ்வொரு தரத்திலும் சமாந்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரிய, ஆசிரியைகள் கூட்டாக செயற்பாடுகளுக்குத் தேவையான அமைப்புக்களையும், அச்சுச் சாதனங்களையும் திரட்டி தேடி பேணி வைத்து பாதுகாத்தலானது கற்றல்-கற்பித்தற் செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக நடத்துவதற்கு உறுதுணையாகும் என்பதில் ஐயமில்லை.

- உத்தேச செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவ, மாணவியர்களால் ஆக்கப்படும் ஆக்கங்களை மதிப்பிடுவதற்காக தவணை இறுதியில் கண்காட்சி, வருட இறுதிக் கண்காட்சி போன்றவற்றை நடத்துவது நல்லது என விதந்துரைக்கப்படுகின்றது. இது புத்தாக்கம் புரிதல் தொடர்பாக மாணவரது ஆற்றல்களை மேன்மேலும் தூண்ட வழிகோலும்.

- உத்தேச செயற்பாடுகளோடு அவற்றுக்கு இணையாக அமையும் வகையில் கற்றலை மேலும் விரிவுபடுத்தத்தக்க மாணவரது சிறப்பான திறன்களை பட்டைதீட்டத்தக்க விவாதம், சுவரேடுகள், சஞ்சிகை, பாடசாலை விஞ்ஞான சங்கங்கள் / கழகங்கள், விஞ்ஞான தினம், விஞ்ஞான கண்காட்சி போன்ற பாட இணைச் செயற்பாடுகளின் பால் மாணவ, மாணவியரை வழிப்படுத்துதல் வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வரலாறு பாடத்திட்டத்தின் உள்ளடக்க கருத்துக்களை வெற்றிகரமாகவும் செயற்றிறன் வாய்ந்த வகையிலும் கற்பதற்கும் அதனூடாக கற்றல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் ஏற்புடைய வகையில் மாணவர்களின் பங்கு பற்றலை விருத்தி செய்யும் விதமாகப் பாடசாலை வேலைத்திட்டம் வழங்கப்படுதல் மிகவும் அவசியமாகும். இவ்வேலைத்திட்டம் மாணவர்களின் வாழ்க்கைக்கும் அவர்களது சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும்.

இங்கு அவ்வாறான சில ஆலோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கேற்ப வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் தயாரிப்பதற்கான சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- வரலாற்று மன்றத்தை நிறுவி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கான கலந்துரையாடல்கள், மாநாடுகள், விவாதங்கள், கண்காட்சிகள், சஞ்சிகைகள், சுவர் பத்திரிகை போன்றவற்றைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்தப்படல் வேண்டும்.
- மேலும் காலத்திற்குக் காலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கான கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்ள வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்கும் ஏதுவான முன்னேற்பாட்டுடன் கூடிய கல்விச் சுற்றுலாவை ஒழுங்குபடுத்தல் முக்கியமானது.
- இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்றாய்வாளர்களை வரவழைத்து அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்
- தொல்பொருள் அழிவுக்குள்ளாகி வரும் இன்றைய காலகட்டத்தில் பிரதேசம் முழுவதும் தொல்பொருள் முக்கியத்துவமுள்ள பொருட்கள் தொடர்பாகத் தேடியாராயவும் அவற்றைப் பாதுகாப்பதற்கான பாடசாலை மற்றும் மக்களது பங்குபற்றலுடனான மக்கள் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தல்
- வரலாற்று பாடத்திற்குரிய சித்திரங்கள், சிலைகள், ஏனைய பொருட்களை அதானிப்பதற்கும் அவதானிப்பு அறிக்கை தயாரிக்கக் கூடியவாறும் அருங்காட்சியகத்தின் நிகழ்ச்சி நிரலை ஏற்பாடு செய்தல் உகந்தது.

# 2.0 கற்றல் கற்பித்தல் முறைமைகள்

# 2.0 கற்றல் - கற்பித்தல் முறைமைகள்

## 2.1 அறிமுகம்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்ற வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைக்களாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி '(தொடர்புறுத்தும் படி) ஈடுபடுத்தும் படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள்

தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும். மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையுயும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்றற் வகிபாங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றற் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

## 2.2 வரலாற்றுப் பாட கற்பித்தல் முறையும் பாடவேளைகளும்

வரலாறு கற்பிக்கும் ஆசிரியர், தகவல்களை வழங்குவதை விடவும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களைத் தூண்டுபவராக செயற்படுவாராயின் கற்பித்தலானது மிகவும் பயனுள்ளதாக அமையும். இதன்பொருட்டு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் கலந்துரையாடல், மூலாதாரங்களை ஆராய்தல், அவதானிப்பு போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல் வேண்டும். வரலாற்றைப் பொருளுள்ளதாக கற்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தக் கூடிய வழிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய மரபுரிமை வாய்ந்த, பிரதேச மரபுரிமை வாய்ந்த பொருட்களைப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.
- மாணவர்களை பிரதேச வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வமூட்டுவதனூடாக தேசிய வரலாற்றையும் அறிந்து கொள்வதற்கு வழிப்படுத்தல்.
- பல்வேறு ஊடகங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல். (வானெலி, தொலைக்காட்சி கல்விச் சேவை)
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட ஊக்குவித்தல்.
- மூலாதாரங்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.
- மாணவரின் திறமைக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் சுவர்ப்பத்திரிகை, கண்காட்சி, பாடசாலை அரும்பொருளகத்தை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்.
- நடைமுறைப்பிரச்சினைகள் தொடர்பாக நடுநிலையுடனும் யதார்த்தபூர்வமாகவும் நோக்கக் கூடிய சிறந்த பிரசையை உருவாக்கும் செயற்பாட்டில் வரலாறு பாடத்தை கற்பிக்கும் உங்களுக்கு பங்களிப்புச் செய்ய முடியும். அது தொடர்பாக உங்களது பொறுப்பு மிகவும் பரந்துபட்டது.

## உத்தேச பாடவேளைகள்

தரம் 10

| பாட அலகு | பாடவேளைகள் |
|---|---|
| 10.1 | 03 |
| 10.2 | 06 |
| 10.3 | 12 |
| 10.4 | 12 |
| 10.5 | 06 |
| 10.6 | 11 |
| 10.7 | 10 |
| 10.8 | 05 |
| 10.9 | 07 |
| 10.10 | 06 |
| 10.11 | 12 |
| மொத்தம் | 90 |

அலகு 10:1 பாடவேளைகள் 03

## அறிமுகம்

எந்தவொரு பாடத்தைக் கற்கும்போதும், அப்பாடம் எத்தகையது, அப்பாடத்தைக் கற்பதனால் நாம் பெறக்கூடிய பயன்பாடு யாது என்பன தொடர்பான விளக்கம் பாடத்தைக் கற்பவருக்கு அவசியமாகும்.

வரலாற்றுப் பாடத்தைக் கற்றவர்களுக்குக் கூட வரலாறு என்றால் என்ன என்பது பற்றிய சரியான விளக்கம் இல்லை என்பது தெரிந்தவிடயமாகும். இதனால் முதலாம் அலகிலேயே வரலாறு என்றால் என்ன? அப்பாடத்தைக் கற்பதனால் பெறக்கூடிய பயன்பாடுகள் தொடர்பான கல்வியில் ஈடுபடுத்தப்படுகிறது.

தரம் 10 பாடவேளை 03

### 10.1.1 வரலாறு ஓர் அறிமுகம்

மேலோட்டமாக நோக்கும் போது பண்டைய மனிதனின் செயற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளுதல் வரலாறு என்று குறிப்பிடலாம்.

C.H. கார் என்ற 'வரலாற்றாசிரியரின் கருத்து இங்கு கவனிக்கத்தக்கதாகும். இவரது கருத்துப்படி வரலாற்றறிஞரின் கடமைப்பாடு இறந்த காலத்தை நேசிப்பதோ இறந்தகாலத்தில் மூழ்குவதோ அல்ல. நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்குத் திறவுகோலாக இறந்தகாலத்தை வெற்றி கொண்டு விளங்கிக் கொள்வதாகும். அவ்வாறாயின் வரலாறு என்பனை இறந்தகாலத்துக்கும் நிகழ்காலத்துக்குமிடையில் இடம்பெறும் உரையாடல் எனக்கூறலாம்.

C.H. காரின் இந்தக்கருத்தின் படி வரலாற்றைக் கற்க வேண்டியது எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்காகும். வரலாற்றை எல்லாப்பாடங்களினதும் அடிப்படை என்று கருதலாம்.

## 10.1.2 வரலாறு கற்பதன் பயன்கள்

- பண்டைய மனித செயற்பாடுகளைக் கற்று அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பல்வேறு இனத்தவர்களின் வரலாற்றைக் கற்பதனால் அவர்களின் தனித்துவத்தை அறியமுடியும். அது இனங்களுக்கிடையே ஒற்றுமை, ஒத்துழைப்பு, அந்நியோன்னிய மதிப்பும் கௌரவமும் ஏற்பட வழிவகுக்கும்.
- மாணவர் தமது தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்வதோடு அதைப் பாதுகாக்கவும் முற்படுவார்.
- வரலாற்று இடங்கள், வரலாற்றுப் பொருட்கள், தொல் பெறுமானமுள்ளவைகள் என்பவற்றை மதித்துப் பாதுகாப்பார்.
- இறந்த காலத்தின் பாடத்தைக் கற்று நிகழ்காலத்தை கட்டியெழுப்பி எதிர்காலத்தைத் திடடமிடுவதற்கான அறிவைப் பெற்றுக் கொள்வார்.
- ஏனையோரின் கருத்துக்களை மதித்தல்.
- தமது வரலாற்றைப் பற்றி அபிமானமொன்றை ஏற்படுத்திக் கொள்வார்.
- பாகுபாடின்றிச் சிந்திப்பதற்கு மாணவன் பழகிக்கொள்வான். அதே போல் நியாயமாகத் தர்க்கிப்பதற்கான சக்தியையும் வளர்த்துக் கொள்வார்.
- நற்பிரசையாவார்.

## 10.1.3 இலக்கிய ஆதாரங்கள்

இலங்கை வரலாற்றை அறிவதற்கான இலக்கிய ஆதாரங்களை உள்நாட்டு இலக்கிய ஆதாரங்கள், வெளிநாட்டு ஆதாரங்கள் என இரண்டாக வகைப்படுத்தலாம்.

இலங்கை வரலாற்றை அறிய உதவும் முக்கிய உள்நாட்டு இலக்கிய ஆதாரங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

1. தீபவம்சம்
2. மகாவம்சம்
3. தாத வம்சம் (தாத்தா)
4. போதிவம்சம்

- முதன்முதல் எழுதப்பட்டதாகக் கருதப்படுவது தீபவம்சமாகும். அது பிக்குமாரால் எழுதப் பட்டதெனக் கருதப்படுகின்றது.
- இலக்கிய ஆதாரங்களில் உன்னத இடத்தைப் பெறுவது மகாநாமதேரரால் எழுதப்பட்ட மகாவம்சம் ஆகும்.
- மகாவம்சத்தில் இலங்கை வரலாற்றின் ஆரம்பந்தொட்டு மகாசேனன் மன்னனின் காலம் வரையான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- அது காலம் வரை இருந்த வாய்மொழிக் கதைகளையும் புண்ணியநூல்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தி மகாவம்சம் எழுதப்பட்டுள்ளது. இதில் துட்டகைமுனுவின் கதை, வீரகாவியமாகப் போற்றப்படுவதுடன் மல்லவர் தொடர்பான கல்வெட்டுக்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- மகாவம்சத்தில் 2ம் பகுதி சூழவம்சம் ஆகும். இது கைபர் பண்டிதரால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- முழுமையாகப் பார்க்கும் பொழுது மகாவம்சம் 3000 வருடம் தொடர்ச்சியான எழுத்து மூல வரலாற்றை முன்வைக்கின்றது. இதனை சீன மூலாதாரங்களுக்கு அடுத்ததாக இரண்டாவதாக கருதமுடியும்.

- தாத்தா வம்சம் தலதாப் பிக்குகளின் வரலாற்றையும் போதிவம்சம் ஜய ஸ்ரீ மகாபோதி பிக்குகளின் வரலாற்றையும் எடுத்துக்காட்டுகின்றது.
  இம்மூலதாரங்களுக்கு மேலாக வெவ்வேறு யுகங்களில் எழுதப்பட்ட இலக்கியக் குறிப்புகளின் மூலமும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரதத் தகவல்களை பெறலாம்.

| காலங்கள் | மூலாதரங்கள் (கிரந்தங்கள்) |
|---|---|
| அநுராதபுர காலம் | தம்பியா அடுவாகடபதய, சிகவலந்தசிசு, சிசுவலந்த வினிச, சியமஸ்லகா, பொரணசிக |
| பொலன்னருவைக்காலம் | முவதெவிதாவத, சசந்தாவக, தர்மப்பிரதீபிகாவ |
| தம்பதெனியாக்காலம் | சத்தர்மரத்னாவலிய, பூஜாவலிய, நில் அகிகநுஜத வம்சம் |
| குருநாகல் காலம் | சாதகக் கதைப்புத்தகம், சிங்கள போதி வம்சம் |
| கோட்டைக்காலம் | சந்தேச இலக்கியங்கள், குத்தில காவியம் |

- இவை வரலாற்று ஏடுகளாக எழுதப்படாமையால் சமகாலத்தகவல்களை கவனமாக உபயோகித்துக் கொள்ள வேண்டும்.
- பிரதான மூலாதாரங்களின் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் இவை உதவும்.
- இலங்கை வரலாற்றை அறியவுதவும் மூலாதாரங்களை இவ்வாறு எடுத்துக்காட்டலாம்
- இலங்கை இந்தியாவுக்குத் தெற்கே அமைந்துள்ளமையாலும், பழைய பட்டுப்பாதையில் அமைந்துள்ளதாலும் வியாபாரிகள், நாடுகாண் பயணிகள், தேசசஞ்சாரிகள் (யாத்திரை யாளர்கள், மத குருமார்கள்) இந்நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்
- முற்காலத்தில் இந்தியா, சீனா, பர்மா, மலாயத்தீப கற்பம், அராபியா,கிரேக்கம், உரோமம் போன்ற கிழக்கு மேற்கு நாடுகளுடன் தொடர்புகள் இருந்தன.
- இதனால் பல்வேறு நாட்டினரும் இல்ங்கையைப் பற்றி வர்ணித்துள்ளனர். அவற்றில் சில சின இனத்து பாகியனின் - தேசாடக பிரயாணக்குறிப்பு
  கிரேக்கத்து அரிஸ்டோட்டில் - டும்முண்டோ
  கொஸ்மாஸ் - டொமோகிரபியா கிரிஸ்டியானா

இவையல்லாமலும் இப்னுபதூதா, அல்புரூனி, குவைரோஸ் சுவாமியார், பரோஸ் ஆகிய பல்வேறு எழுத்தாளர்களும் இலங்கைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.



## கல்வெட்டுக்கள்

இலங்கையில் மகிந்ததேரரின் வருகைக்குப்பின்னரான எழுத்துத் தொகுதியொன்று கிடைத்துள்ளது. இவை கரோஷ்ட, பிரஹ்மிய எழுத்துக்களினால் கல்வெட்டுக்களில் எழுதப்பட்டுள்ளன.

* குகைக் கல்வெட்டு - மிகிந்தலை, இசுறுமுனிய போன்ற இடங்களிலும் இலங்கையின் பல்வேறு குகை நீர் தூண்களுக்கு மேல் எழுதப்பட்டுள்ளன.
* குன்றுக்கல்வெட்டு - கற்களின் செதுக்கப்பட்டுள்ளது. கடலாதெனியில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன.
* சுவர்க்கல்வெட்டு - பொலன்னறுவையில் கல்பொத்த (கல்ஓடு)
* தூண்கல்வெட்டு - பதுளைத்தூண்கல்வெட்டு

- இலங்கை வரலாறு பற்றிக் கற்கும் போது இந்தியாவின் பல்லவராயன் பேட்டை போன்ற வெளிநாட்டுக் கல்வெட்டுக்களும் முக்கியமானதாகும்.
- வல்லிபுரம் செப்பேடும், பனாகடுவ பித்தளை செப்பேடுகளும் முக்கியமானதாகும்.
- ஒவ்வொரு யுகங்களிலும் காணப்பட்ட பொருளாதார முன்னேற்றம், தொழில் நுட்ப முன்னேற்றம் என்பவற்றை நாண்யங்களின் மூலம் அறியலாம். தங்கம், வெள்ளி, உலோக நாணயங்கள் வெளியிடப்பட்டது அதன்படியாகும்.
- மகாபராக்கிரம பாகு, மகாவிஜயபாகு, நிஸ்ஸங்க மல்லன் ஆகிய அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் ஒருமைப்பாடு காணப்பட்டது.
- பௌத்த சுவஸ்தீர நாணயம், கஜலத்ஸ்மீ நாணயம், தம்பதெனியாக்கால் பித்தளை நாணயம், தங்க நாணயம், VOC, நாணயம் ஆகிய நாணயங்கள் முக்காலத்தில் இருந்து பல்வேறு காலங்களில் இந்நாட்டில் பாவனையில் இருந்தன.
- உரோம நாணயங்கள் இலங்கையில் பரவலாகக் கிடைத்துள்ளது. சீகிரிய, கொடவாய, மன்னார், களனி போன்ற இடங்களில் இவை கிடைத்துள்ளன.
- மகாபராக்கிரமபாகு அரசனின் கால நாணயம் தென் இந்தியாவில் கிடைத்துள்ளது.

## சிதைவுகள்

அநுராதபுரம், பொலன்னறுவைக் காலங்களில் கட்டடக்கலை முன்னேறியிருந்தது. கலை ஆக்கங்களும் உயர் வளர்ச்சி கண்டிருந்ததால் வெஹர விகாரை, வைத்தியசாலை, அரச மாளிகைகள் கட்டியெழுப்பப்பட்டதோடு அவற்றின் சிதைவுகளை இக்காலத்திலும் காணக்கூடியதாக உள்ளது.

- சிகிரியா முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கோட்டையாகவும் இராஜதானியாகவும் கலைக் கூடமாகவும் விளங்கியது
- அரசமாளிகை, ஆராமைகள், சைத்தியங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றின் சிதைவு களைக் காணலாம்.
- படிக்கட்டுகள், சந்திரவட்டக்கல், காவற்கல், வட்டதாதுமனை ஆகிய கலைநுட்பங்கள் முன்னேறி இருந்தன.
- அநுராதபுர காலத்தின்பின் இந்து சமயத்தின் செல்வாக்கும் ஏற்பட்டது.
- கற்களால் அமைக்கப்பட்ட கட்டடங்கள் மட்டுமன்றி பிற்காலத்தில் மரங்களும் பயன்படுத்தப் பட்டன. அம்பக்கத் தேவாலயம் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

## செயற்பாடு. 10.1.1

**தேர்ச்சி மட்டம்** : வரலாறு என்பதன் பொருள் கூறுவார்.
வரலாற்றைக் கற்பதன் பெறுமதியை மதிப்பார்.

**செயற்பாடு** : "வரலாற்றைக் கற்போம்"

**காலம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 01 செயற்படிவம்
- 10 ஆம் வகுப்பு பாட நூல்
- ஏ4 கடதாசி (போதியளவு)
- பெல்ட் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.1.1.1** :

- வரலாறு என்றால் என்ன? என்ற வினாவை மாணவரிடம் முன்வைக்கவும்.
- மாணவர்களின் விடைகளை கரும்பலகையில் எழுதி பின்வரும் கருத்துக்கள் உள்ளடக்கக் கூடிய விதத்தில் கலந்துரையாடுக.

- வரலாறு என்பது மனித சமுதாயத்தில் பரவிய கதை ஒன்று போன்றது.
- அவ்வாறாயின் மனிதனால் முற்காலத்தில் கூறியவை களும் செய்தவைகளுமாகும்.
- முன்னைய (பழைய) மனிதனின் அரசியல், பொருளா தார, சமூக, கலாசாரச் செயற்பாடுகள் பற்றிய படிப் பினை வரலாற்றினூடாக இடம்பெறுகிறது.
- எல்லா விடயங்களுக்கும் ஒரு வரலாறு உண்டு.
- அதனால் வரலாறு அனைத்துப்பாடத்தினதும் மூலமாக கருத முடியும்.
- வரலாற்றைக் கற்பதனால் இறந்த கால சம்பவங்களை அறிந்து கொள்வது மட்டுமல்லாமல் அவற்றினால் பல பயன்பாடுகள் உண்டு.
- தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ள முடியும். அது நிகழ்காலத்தைக்கட்டியெழுப்புவதற்கு உபாயம் ஆகும்.
- இணக்கமாகச் செயற்படுவதற்கு முடியுமாதல்.

(07 நிமிடங்கள்)

படி 10.1.1.2 :

- வகுப்பு மாணவர்களைப் பொறுத்தமானவாறு குழுக்களாக்குக.
- செயற்பாடுகளுக்காக இணைப்பு 1 இன் செயற்படிவத்தை குழுக்களுக்கு வழங்கவும்.
- தேவையான வழிகாட்டல்களையும் அறிவுறைகளையும் வழங்குக.
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.

(10 நிமிடங்கள்)

படி 10.1.1.3 :

- செயற்பாட்டினை வகுப்பில் முன்வைக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கவும்.
- குழுக்களின் அபிப்பிராயங்களைப் பெறுக.
- மாணவர்களின் நிறை, குறைகளைக் கண்டறிந்து பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் மீட்டாய்வு ஒன்றை மேற்கொள்ளுங்கள்.

- வரலாற்றைக் கற்பதனால் எமது வாழ்க்கைக்கு அதிகப் பயன்கள் கிடைக்கின்றன.
- கடந்த கால மனித நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியுமாதல்.
- பல்வேறு இனக்குழுக்களினதும் தனித்துவம் பற்றியும் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, ஒத்துழைப்பு, சக வாழ்வு என்பவற்றை ஏற்படுத்த முடியுமாதல்.
- தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளக் கூடியதாய் இருத்தல்.
- கடந்த கால நிகழ்வுகளின் மூலம் நிகழ்காலத்தில் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும், எதிர் காலத்தைத் திட்டமிடவும் கூடிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல்.
- உண்மைகளையும் புனைகதைகளையும் இனங்கண்டு சிந்தனா ஆற்றலை வளர்த்துக் கொள்ளக் கூடியதாய் இருத்தல்.
- தேச அபிமானம், நாட்டுப்பற்று ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளக் கூடியதாயிருத்தல்.
- வரலாற்று நிகழ்வுகளை கதைகளைப் புரிந்து கொள்ள முடியுமாதல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்** :

- வரலாற்றைக் கற்பதனால் பெறக்கூடிய பயன்களை விபரிப்பார்.
- வரலாற்றைக் கற்பதனால் கிடைக்கும் பயன்களை மதிப்பார்.
- வரலாற்றைக் கற்பதன் பயன்கள் தொடர்பாக அட்டவணையொன்றைத் தயாரிப்பார்.
- செயற்பாட்டினை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ஒத்துழைப்பார்.
- தலைமைத்துவப் பண்புகளை எடுத்துக்காட்டுவார்.

## இணைப்பு 01

### செயற்பத்திரம்

- வரலாற்றைக் கற்பதனால் உங்கள் வாழ்க்கைக்கு கிடைக்கக்கூடிய பயன்கள் 5 எழுதுக.
- அவ்விடைகளை வகுப்பில் காட்சிப்படுத்தக்கூடிய முறையில் வேறொரு தாளில் (நிறங்களைப் பயன்படுத்தியோ) குறித்துக் கொள்க.
- வீடையை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.

## செயற்பாடு 10.1.2

**தேர்ச்சி மட்டம்** : வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை அறிந்து கொள்வார்.

**செயற்பாடு** : "மூலாதாரங்களைக் கற்போம்"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 01 - மூலாதாரங்களின் உருவப்படம்
- இணைப்பு 02 - செயற்படிவம்
- பாடப்புத்தகம்
- தாள் (கடதாசி)
- பெல்ட் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.1.2.1** :

- இணைப்பு 01 இல் உள்ள உருவப்படங்களை வகுப்பறையில் முன்வைக்கவும்.
- தொல் பொருள் சான்றுகளால் தெரிவிக்கப்படுகின்ற செய்திகள் யாவை?
- அவற்றின் முக்கியத்துவம் யாது - ஆகிய வினாக்களை மாணவர்களுக்கு முன்வைத்து கீழ்வரும் கருத்துக்கள் உள்ளடங்கக் கூடிய விதத்தில் கலந்துரையாடுக.

- வரலாறு மூலாதாரங்களினால் கட்டியெழுப்பப்பட்டதாகும்.
- அவை வரலாற்று ஆதாரங்கள் என்ற பெயரில் இனங் காணப்படுகின்றது.
- அவ்வரலாற்று மூலாதாரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.
- அவை இலக்கிய, தொல்பொருள் ஆதாரங்களாகும்
- இலக்கிய மூலாதாரங்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஆதாரங்கள் என்ற வகையில் பிரிக்கலாம்.
- தொல்பொருள் சான்றுகளை கலவெட்டுகள், நாணயங்கள், சிதைவுகள் என மூன்றாக வேறுபடுத்தலாம்.

(15 நிமிடங்கள்)

**படி 10.1.2.2** :

- வகுப்பை உகந்த முறையில் குழுக்களாக்குக.
- இணைப்பு 02 இல் உள்ள செயற்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்கவும்.
- ஒரு குழுவுக்கு ஒரு செயற்பாடு வீதம் வழங்கவும்.
- செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடுத்தவும்.

(25 நிமிடங்கள்)

படி 10.1.2.3 :

- செயற்பாட்டை வகுப்பறையில் காட்சிப்படுத்த சந்தர்ப் பம் வழங்கவும்.
- குழுக்களின் நிறைகளையும் குறைகளையும் விளங்கிக் கொள்ளவும்.
- பாடத்தைப் பின்னூட்டல் செய்து பின்வரும் கருத்துக்க ளை உள்ளடக்கும் வகையில் மீட்டாய்வு செய்க.

- இலங்கை வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் இலக்கிய ஆதாரங்களுக்கு உயர்ந்த இடம் உண்டு.
- தீபவம்சம், மகாவம்சம், தாத்தாவம்சம், போதிவம்சம் என்பன அவற்றுள் முக்கியமானவையாகும்.
- முதலாவதாக எழுதப்பட்ட மூலாதாரமாகக் கருதப் படுவது தீபவம்சமாகும். அத்துடன் அது பிக்குமாரால் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
- மகாவம்சத்துக்கு இலங்கை வரலாற்றில் உன்னத இடம் உள்ளது.
- மகாவம்சத்தின் இரண்டாம் பாகமாக சூலவம்சம் கருதப்படுகிறது.
- இந்த மூலாதாரங்களை விட ஒவ்வொரு யுகங்களிலும் இலக்கிய மூலாதாரங்கள் பல உள்ளன.
- அநுராதபுரம், பொலன்னறுவை காலங்களிலும் தம்ப தெனிய, குருநாகல், கோட்டை காலங்களிலும் முக்கிய இலக்கிய நூல்கள் படைக்கப்பட்டுள்ளன.
- பிரதான மூலாதாரங்களின் தகவல்களை உறுதிப் படுத்துவதற்கு இந்த மூலாதாரங்கள் பயன்படுகின்றது.
- பாகியான் பிக்குவின் தேசசஞ்சாரக் குறிப்புக்கள், ஹியுன்சான்பிக்குவின் பிரயாணக் குறிப்பு, அரிஸ்டோ டலின் டுமின்டோ, கொஸ்மஸின் "டோபோகிரபியா" ஆகிய வெளிநாட்டு ஆதாரங்களும் இலங்கை வரலாற் றுடன் தொடர்புடையவையாகும்.
- இதைவிட இப்னுபதூதா, அல்புரூனி, அருட்தந்தை குவைரொஸ் பரோஸ் ஆகிய பல்வேறு எழுத்தாளர் களும் இலங்கையைப் பற்றி எழுதியுள்ளனர்.
- தொல் பொருள் ஆதாரங்களாக கல்வெட்டுக்கள், நாணயங்கள், சிதைவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- கல்வெட்டுக்களில் குகைக்கல்வெட்டு, குன்று கல்வெட் டுகள், சுவர்க்கல்வெட்டு, தூண்கல்வெட்டுக்கள் என்பவற்றைக் கருதலாம்.
- நாணயங்களால் ஒவ்வொரு காலப்பகுதியிலும் பொரு ளாதாரத்தில் காணப்பட்ட, தொழிநுட்ப முன்னேற்றம் என்பவற்றை அறியலாம்.
- அடிப்படையில் தங்கம், வெள்ளி உலோக நாணயங் கள் வெளியிடப்பட்டது.
- வெளிநாட்டு நாணயங்களும் இந்நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதோடு மகாபராக்கிரமபாகு மன்னனின் கால நாணயம் தென்னிந்தியாவில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

- சிதைவுகளிலும் வரலாற்றுத் தகவல்கள் வெளியுா கின்றன.
- அவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான தகவல்களை வெளிக் காட்டக்கூடிய சிதைவுகள் பல இலங்கையில் உள்ளன.
- அவற்றில் அநுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனிய ஆகிய காலங்கள் தெளிவாகத் தெரிகின்றன.
- சிதைவுகளின் மூலம் அக்காலத்துக்குரிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரத் தகவல்களை வெளியிடமுடியும்.
- இந்த வரலாற்று மூலாதாரங்கள் மூலம் இலங்கை பெருமைக்குரிய வரலாற்றுக்கு உரிமை கோரக் கூடிய சான்றுகள் கிடைக்கின்றன.
- எமது வரலாற்று உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- இலங்கையின் வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்ற மூலாதாரங்களை விபரிப்பார்.
- 3000 வருடங்கள் பழமைவாய்ந்த தொடர்ச்சியான எழுத்து மூல வரலாறு இலங்கைக்கு உண்டென அபிமானத்துடன் ஏற்றுக் கொள்வார்.
- இலங்கையின் வரலாற்று மூலாதாரங்களை வகைப் படுத்துவார்.
- குழுச் செயற்பாட்டில் ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- தலைமைத்துவப் பண்புகளை எடுத்துக்காட்டுவார்.



மெதிரிகிரிய வட்டதாகய



அநுராதபுர அபயகிரி பிரதேச சந்திரவட்டக்கல்



இலங்கையின் பழைய நாணயங்கள்

## இணைப்பு 02

## செயற்படிவம் 01

இலங்கையின் வரலாற்றை அறிய உதவும உள்நாட்டு வெளிநாட்டு இலக்கிய ஆதாரங்கள் பற்றி பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.

| | தேசிய இலக்கிய மூலாதாரங்கள் | வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

- இவ்வட்டவணையை வகுப்பறையில் காட்சிப்படுத்தக் கூடிய வகையில் தயாரித்துக் கொள்ளவும்.
- பெல்ட் பேனாக்களை முடியுமானால் பயன்படுத்தவும்.
- அட்டவணையைப் பூர்த்தி செய்து வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.

## செயற்படிவம் 02

இலங்கையின் வரலாற்றைக் கற்கக்கூடிய தொல்பொருள் மூலாதாரங்களின் படி அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.

| | கல்வெட்டுக்கள் | நாணயங்கள் | சிதைவுகள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

- இவ்வட்டவணையை வகுப்பறையில் காட்சிப்படுத்தக் கூடிய வகையில் தயாரித்துக் கொள்ளவும்.
- பெல்ட் பேனாக்களை முடியுமானால் பயன்படுத்தவும்.
- அட்டவணையைப் பூர்த்தி செய்து வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.

அலகு 10.2

# இந்தியாவில் ஆரியக்குடியேற்றங்கள் அமைக்கப்படுதல்

(பாடவேளை 03)

## அறிமுகம்

வடக்கிலும் வடமேற்கிலும் அமைந்துள்ள பெரிய மலைத்தொடர்களினாலும் தெற்கிலும் மேற்கிலும் கிழக்கிலும் பெரிய சமுத்திரத்தாலும் சூழப்பட்ட இந்தியா புவியியல் ரீதியான பலவேறுபாடுகளைக் கொண்ட ஒரு நாடாகும். புவியியல் பல்வகைத்தன்மைக்கு ஈடு கொடுக்கும் வகையில் பல்லின, மொழி வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் கூட்டமொன்று இந்தியாவை வாழிடமாகக் கொண்டுள்ளது.

மிகப் பழைய காலத்திலிருந்து பலவேறு வர்க்கங்களைக் கொண்ட சமூகங்கள் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்ததோடு, வடமேற்கு இந்தியாவின் கைபர், போலன் கணவாய்களினூடாக ஆரிய மொழியைப் பேசிய கூட்டமொன்று இந்திய உபகண்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் இடம்பெயர்ந்ததாக அறிய முடிகிறது.

பல்வேறு இடப்பெயர்வுகளால் ஆரியரையும் ஆரியரல்லாதோரையும் சேர்ந்த மக்கள் சமூகங்கள் உருவாகியதோடு காலப்போக்கில் அவர்கள் எல்லோரும் இந்தியர் என்ற நிலையை எய்தினர் எனத் தெரிகின்றது.

இந்த மக்கள் கூட்டத்தினர் ஒன்றுபட்டு ஆட்சியைக் கட்டியெழுப்பியதோடு அதன் பிரதிபலனாக மௌரிய, குப்த போன்ற பேரரசுகள் வளர்ச்சியடைந்ததையும் காணமுடியும். அதேவேளை பல்வேறு காரணிகளால் சில இராஜதானிகள் வீழ்ச்சியடைந்ததையும் காணலாம்.

ஆரியர் குடியேற்றம் அமைக்கப்பட்டதில் இருந்து குப்த கால இறுதிவரையிலான வரலாற்றுத் தகவல்களை சுருக்கமாகக் கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தலே இவ்வலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்ச்சி : இந்தியாவின் வரலாற்று வளர்ச்சியைக் கற்பார்.

தேர்ச்சி மட்டங்கள் :

- இந்தியாவில் ஆரியக்குடியேற்றம் அமைக்கப்பட்டமை தொடர்பான தகவல்களை ஆராய்வார்.
- 16 தேசங்கள் பற்றி தேசப்படத்தின் மூலம் விபரிப்பார்.
- மௌரியப் பேரரசின் பரம்பலுக்குப் பங்களிப்புச் செய்த அரசர்களின் நடவடிக்கைகளை பக்கச்சார்பின்றி மதிப்பிடுவார்.
- குப்த இராச்சியத்தின் பரம்பல் நடைபெற்ற முறையை கற்பார்.
- குப்தர் காலத்தில் ஏற்பட்ட கலாசார மறுமலர்ச்சி தொடர்பான தகவல்களை ஆராய்வார்.

## பாட உள்ளடக்கம்:

## 10.2 இந்தியாவில் ஆரியர் குடியேற்றம்

### 10.2.1 இந்து நதி நாகரீகம்

இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரீகம் வீழ்ச்சியடைந்த பின் கி.மு. 1500க்குக் கிட்டிய காலத்தில் வடமேற்குக் கணவாய்வழியாக ஆரிய மொழி பேசிய மக்கள் கூட்டம் இந்தியாவிற்குள் வந்து குடியேற்றங்களை அமைத்தனர்.

- ஆரியர்களின் பூர்வீக இடம் தொடர்பாக வரலாற்றறிஞர்களிடையில் பல்வேறு கருத்துப் பேதங்கள் உள்ள போதும் பலரின் கருத்தானது கிர்கிஸ் - ஸ்டப்ஸ் புல்நிலப் பிரதேசமே ஆரியர்களின் பூர்வீக இடம் என்பதாகும்.
- மத்தியாசியாவில் இருந்து வந்த ஆரியரில் ஒரு கூட்டத்தினர் ஐரோப்பாப்பகுதிக்கும், இன்னுமொரு கூட்டத்தினர் மத்திய கிழக்குப் பகுதிக்கும் இன்னுமொரு கூட்டத்தினர் மத்திய கிழக்குப் பிரதேசத்திற்கும் இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்தனர்.
- ஆரிய குடியேற்றம் பரவியவிதம் : சிந்து நதியின் உயர் பகுதியில் உள்ள பஞ்சாப் பிரதேசத்தில் முதலில் குடியேற்றங்களை அமைத்தனர். பின்னர் இந்தியாவின் எல்லாப் பிரதேசங்களிலும் குடியேற்றங்களை அமைத்தனர்.
- குடியேற்றங்களை அமைக்கும் போது சிலவேளைகளில தேசிய மக்கள் கூட்டத்துடன் முரண்பாடுகள் தோன்றின.
- கி.மு 6 ஆந் நூற்றாண்டளவில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஆரியக் குடியேற்றங்கள் தோன்றின.
- ஆரியக் குடியேற்றங்களின் தோற்றம், பரம்பல் பற்றிய தகவல்களைப் பெறக்கூடிய மூலாதாரங்களாக வேத நூல்கள், பிரஹ்மன, உபநிடத, பழைய கிரந்தங்களும் வீரக் காவியங்களும் (மகாபாரதம்) விளங்குகின்றன.

### நிர்வாக ஒழுங்கமைப்பு

- கோத்திரங்களாக அமையப் பெற்றிருந்த ஆரியர் நிரந்தரக் குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட பின் கிராமங்கள் தோன்றின.
- பிற்காலத்தில் குடியேற்றங்கள் பல ஒன்றிணைந்து அரசு உருவாகியது.
- கோத்திர அல்லது கிராமத்தலைவன் 'காமின என்ற பெயராலும் அரசின் தலைவன் மன்னன் (அரசன்) என்ற பெயராலும் அழைக்கப்பட்டனர்.
- நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு "சபா" என்ற அமைப்பு தோற்றம் பெறல்
- நாட்டு மக்கள் மன்னனுக்குச் செலுத்திய வரி அரசின் பிரதான வருமான மார்க்கமாக இருந்தது.
- அரசனின் அதிகாரங்கள் வளர்ச்சியடைதல்.
- அரசாட்சியும் சமூக அரசாட்சியும் வளர்ச்சியடைதல்.

### பொருளாதார முறை

நாடோடி வாழ்க்கை நடத்திய ஆரியர் நிரந்தரக் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டபின் விவசாயம் செய்வதற்குப் பழக்கப்பட்டனர். இவர்களிடம் மிருக வளர்ப்பும் தொடர்ந்து நிலைத்தது.

- வர்த்தகம்
- கைத்தொழில் : சட்டி பானை வனைதல், உலோகம், தோல் பொருட்கள்

## சமூக அமைப்பு

- மக்கள் இரு கூறுகளாகப் பிரிந்திருந்தனர்
  * ஆரியர்
  * ஆரியரல்லாதோர்
- பிற்காலத்தில் குடிபேதம் (வர்க்க பேதம்) தோன்றியது.
  (பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்)
- தந்தையை முதன்மையாகக் கொண்ட சமூகமாக இருந்தது..
- ஆடையணிகள்
  (பருத்தி, பட்டு ஆடைகளும், ஆபரணங்ளையும் அணிந்தார்கள்)
- பொழுதுபோக்கு (நாட்டியம், வீணை வாசித்தல், சங்கீதம், விளையாட்டு)

## சமயமும் வழிபாடும்

- கடவுளை வணங்குதல்.
- யாகங்களைச் செய்தல்.
- பிராமண எண்ணக்கரு விரிவடைதல்.
- கடுந்தவம் மேற்கொண்டு மெய்ஞ்ஞானத்தை நோக்கிச் சென்ற முனிவர்கள்.
- உபநிடதத் தத்தவங்கள், பௌத்த சமயம், ஜைன சமயம்

கி.மு. 7ம், 6ம் நூற்றாண்டின் இந்தியா



## 10.2.2 பதினாறு பெருங்குடியேற்றங்கள் (பெருந்தேசங்கள்)

- கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் ஆரியக் குடியேற்றங்கள் அரசுகளாக ஒழுங்கமைக்கப்பட்ட தோடு அவற்றில் 16 தேசங்கள் முதலிடம் பெற்றன. இவை 16 பெருந்தேசங்கள் என அழைக்கப்பட்டன.
- அரசுகள் உருவாதல் கோசலம், மகதம், அவந்தி
- சமூக ஆட்சி தோன்றுதல் (வஜ்ஜி, மல்ல)
- கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் அரை இறுதிக் காலத்தில் பலம் வாய்ந்த பிரபல அரசுகள் தோற்றம் பெறல் - மகதம், கோசல, அவந்தி, வத்சய.
- மகதம் பெரும் பலம் பொருந்திய அரசாக வளர்ச்சியடைதல்.

## மகத இராச்சியத்தின் எழுச்சி

- மகத இராச்சியம் விரிவடையும் போது சினேகத் தொடர்புகள் மூலமும், போரிட்டு இராச்சியங்களை இணைத்துக் கொள்ளுதல் மூலமும் வளர்ச்சியடைந்தது.
- புத்த பெருமானுக்குச் சமகாலத்தவனான பிம்பிசார மன்னனும் அஜாசத்து மன்னனும் இராச்சியத்தை பலப்படுத்துவதற்கு கைக்கொண்ட கொள்கைகள். மகத இராச்சியத்துக்குப் பாரிய பிரதேசத்தை இணைத்தக் கொள்வதற்காக நந்த ராஜ வம்சத்து மகாபத்ம நந்த அரசன் செயற்பட்ட விதம் என்பன.
- சந்திரகுப்த மௌரிய இளவரசன் நந்த வம்சத்தின் அதிகாரத்தைப் பிரித்து மகதவின் அரசனாதல்.


மௌரியப் பேரரசு
மாண்சேரா
பிரம்ம புத்ரா
குரு
தில்லி
சிந்து
பய்ராத்
யமுனை
கபிலவஸ்து
சாவித்திரி
குசிதாரா
வைசாலி
காமரூப
சாரநாத்
பாடலி புத்ரா
அலகபாத்
பராபர்
ருபநாத்
வங்க
கிர்தார்
டோலி
கோதாவரி
ராமேஸ்வரம்
காவேரி
சோழ
கேரள
பாண்டிய
தம்பபன்னி
அசோகனின் ஆட்சிக்கால பிரதேசம்

## 10.2.3 மௌரிய பேரரசு

- மௌரியப் பேரரசின் அரம்பம்.
  சந்திரகுப்த மௌரியன் கி.மு. 324-300
- பிந்துசாரன் கி.மு. 300-273.
- பிந்துசார மன்னனின் . மகன் அசோககுமாரன் 273-236
- பாடலிபுத்திர நகரை தலைநகராக்கிக் கொள்ளல்.
- பெரிய யுத்தத்தின் பின் கலிங்கத்தைக் கைப்பற்றிக் கொள்ளல்.
- அசோக மன்னன் பௌத்த மதத்தைத் தழுவிக் கொள்ளலும் 2வது தந்தை என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டு அப்பெயரைப் பாவித்தலும்.
- தம்ம விஜயக் கொள்கையைப் பின்பற்றுதல்.
- அசோக தர்மத்தால் மன்னன் மக்கள் மனதைக் கவர்ந்த மன்னனாதல்.
- வேற்று மதத்தவரையும் மதிக்கின்ற சமயக் கொள்கையைப் பின்பற்றல்.



## அசோக மன்னனுக்குப் பின் இந்தியா

- மௌரியப் பேரரசின் வீழ்ச்சியும் அதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளும்
- வடக்கில் இருந்து வந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள்
- பிரதேச ஆட்சியாளர்கள் பலமடைதல்.
- அசோக மன்னனுக்குப் பின் பலமற்ற மன்னர்களினால் பெரிய இராச்சியமொன்றை பரிபாலிக்க முடியாமல் போனமை.
- பிரதேச ஆட்சியாளர்கள் பலம் பெற்றதால் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படல்.

மௌரியப் பேரரசின் இறுதி தொடக்கம் குப்தப் பேரரசின் ஆரம்பம் வரை

- வட மேற்கு இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட குசான அரசு (கனிஷ்க அரசு)
- தென்னிந்தியப் பிரதேச அரசுகள்.

## மௌரியர் கால நிர்வாக முறை

- மூலாதாரங்கள் : கௌடில்யனின் அர்த்தசாஸ்திரம், அசோகக் கல்வெட்டு, தொல்பொருள் சிதைவுகள்
- ஆட்சி முறை : அரசனை முதன்மையாகக் கொண்ட ஆட்சி
- மந்திரிகளும் அமைச்சர்களும்: மந்திரிமாருக்கு ஒவ்வொரு பகுதி பொறுப்பளிக்கப்படல்
- பிரதான அதிகாரிகள் : இளவரசன் (யுவராஜன்), புரோகிதர், சேனாதிபதி

- பல்வேறு வேலைகளுக்குப் பொறுப்பான பணியாளர்கள்
- நீதிமன்ற நடவடிக்கைகள் :
- மாகாண நிர்வாகம் :
- நகர நிர்வாகம் :

## கலாசார முன்னேற்றம்

### - சமயமும் வழிபாடும்

- பௌத்த, ஜைண, இந்து மதங்கள்
- மூன்றாம் பௌத்த தர்ம சங்கத்தை நிறுவுதல்
- தர்மப்பிரசார நடவடிக்கை

### - மொழியும் இலக்கியமும்

- மௌரியர் காலத்தில் பிக்குமாரின் மொழியாக பிரகிதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் இருந்தன.
- சாதாரண மக்கள் பேசுகின்ற மொழி பிராஹ்மிய மொழியாகும்
- இலக்கிய நூல்களில் வேதநூல்கள், பிராமண நூல்கள், ஆரண்ணிய நூல்கள், இராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்கள்
- கலை நுட்பம் - சிலை வடித்தல் - சாஞ்சித்தூபி, பார்கூத் சாஞ்சி, வாகல்கட
- அசோக மன்னால் புத்தகயாவில் அமைக்கப்பட்ட தூண்களில் அசோக தர்மம் எழுதப்படல்.

## 10.2.4 குப்த பேரரசு



## குப்தப் பேரரசின் பரம்பல்

கங்கை, யமுனைச் சமவெளியை அடிப்படையாகக் கொண்டு இப்பேரரசு உருவாகியது.

- குப்தர் கால முக்கியத்துவம் வாய்ந்த அரசர்களும் அவர்களது நடவடிக்கைகளும்.
  1ம் சந்திர குப்தன் - கி.பி. 320-335
  சமுத்திர குப்தன் - கி.பி 335-380
  2ம் சந்திரகுப்தன் - கி.பி 380-413
- சமுத்திர குப்தமன்னனின் திக் விஜயக் கொள்கை.
- முதலாம் சந்திரகுப்த அரசன் மேற்குக்கரையின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு கிழக்கு-மேற்கு இரு திசைகளிலும் வியாபாரத்தில் பங்குபற்றினான்.
- சந்திர குப்தனின் பின் 1ம் குசார குப்த, ஸ்கந்த குப்தன் ஆதிக்கத்துக்கு வருதல்.
- குப்தப் பேரரசின் வீழ்ச்சி.

## நிர்வாகம்

- குப்தர் காலத்தில் அரசன் மகாராஜாதி ராஜா என்ற விருதுப் பட்டத்தைப் பயன்படுத்தினான்.
- உயர்ந்த அமைச்சர்களாக மந்திரிமார் இருந்தனர்.
- இராணுவத் தலைவர்கள் சேனாதிபதிகள்.
- மத்திய, பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள்.

## பொருளாதார நிலைமை

- விவசாய விருத்தி
- கைத்தொழில்
- பிடவை - பருத்தி, பட்டு, கம்பளி
- ஆபரணங்கள் செய்தல் (தங்கம், பித்தளை, வெள்ளி)
- கைத்தொழில், வியாபாரம் தொடர்பான நுட்பங்கள்

## சமூக நிலை

- நான்கு வர்ண சமூக அமைப்பு தொடர்ந்தும் பின்பற்றப்படல்.
- மதமும் வழிபாடும்.
- இந்து வழிபாடு, பௌத்த வழிபாடு, ஜைன வழிபாடு பரவுதல்.
- விஷ்ணு, சிவ வழிபாடு பிரசித்தமடைதல்.

## கல்வி

- கல்வி பெறும் உரிமை பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய வர்க்கங்களுக்கு உரிமையாக இருந்தமை.
- உயர்ந்த பௌத்த கல்வி நிலையங்கள் தோன்றுதல்.
- நாலந்த சர்வகாலாசாலை.
- வளபி சர்வகலாசாலை
- பரந்த பாடப்பரப்பை உள்ளடக்கிய கல்வி கிடைத்தல்.

## இலக்கியம்

வீர காவியங்கள் எழுதப்படல் - ராமாயணம், மகாபாரதம், காளிதாசனின் மேகதூதம், சகுந்தலை போன்ற இலக்கிய நூல்கள்.

### கட்டிட நிர்மாணக்கலை

குன்றினுள்ளேயும் அகழ்ந்து ஆராமைகள், தியான மண்டபங்கள் அமைத்தல்
உதாரணம்: அஜந்தா, எல்லோரா, அவுரங்கபாத்

- சிலை செதுக்கற் கலை
  சிவ பார்வதி உருவக் கல் செதுக்கப்பட்டன.

- சித்திரக்கலை
  அஜந்தாக் குகை.

## செயற்பாடு 10.2.2

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | இந்தியாவின் வரலாற்று வளர்ச்சியை கற்பார். |
| தேர்ச்சி மட்டம் | : | 16 பெருந்தேசங்களை படத்தின் மூலம் விவரிப்பார். |
| செயற்பாடு | : | 16 பெருந்தேசங்களின் ஊடாக ஒரு சுற்றுலா. |
| காலம் | : | 40 நிமிடங்கள் |
| தர உள்ளீடுகள் | : | • இணைப்பு 01 - 16 பெருந்தேசங்களைக் குறித்த பெரியளவிலான இந்தியத தேசப்படம் (வகுப்பில் காட்சிப்படுத்துவதற்காக)<br>• இணைப்பு 02 - 16 பெருந்தேசங்களைக் குறித்து காட்டியுள்ள சிறியளவிலான இந்தியத் தேசப்படம் (குழுக்களுக்கு வழங்குவதற்கு)<br>• இணைப்பு 03 - தேசப்படத்தில் குறிப்பதற்காக 16 பெருந்தேசங்களைக் காட்டும் தேசப்படம் (வகுப்பறையில் மாணவர்களுக்கு கொடுக்கப் போதுமானளவு படங்கள்)<br>• இணைப்பு 04<br>• இணைப்பு 05 ஆலோசனைகள் |
| கற்றல் கற்பித்தல் செயன்முறை | : | |
| படி 10.2.2.1 | : | • இணைப்பு 01 - 16 தேசங்களையும் காட்டுகின்ற தேசப்படத்தினை வகுப்பறையில் முன்னிலையில் காட்சி படுத்துக.<br>I 16 குடியேற்றங்களும் எவை?<br>II அத்தேசங்களின் அமைவிடம் இந்தியாவின் எப்பிரதேசங்களிலாகும்.<br>III அதிக தேசங்கள் அடையாளமிடப்பட்டுள்ளது எந்த நதிக்கு அருகாமையில் உள்ளன?<br>போன்ற வினாக்களைக் கேட்டு இந்தியாவின் 16 தேசங்களையும் அறிந்து கொள்வதற்கு வழி காட்டுங்கள்.<br>• பாடப்புத்தகம், வேறு மூலாதாரங்களின் துணைகளோடு கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கக் கூடியதாக கலந்துரையாடுக. |

| |
|---|
| • பல்வேறு குடியேற்றங்கள் இருந்த போதும் அவற்றில் 16 தேசங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.<br>• 16 தேசங்களாக அமைந்த இக்குடியேற்றங்களின் முக்கியத்துவம். வட இந்தியாவிலும் தக்கண மேட்டு நிலப் பிரதேசங்களிலும் பரவியிருந்தமை. |

- அங்க, மகத, கோசல, வஜ்ஜி, அஸ்வதி, மேதி வத்ஸ, காந்தார, கம்போஜ போன்ற 16 தேசங்கள் அரசியல் ரீதியான முக்கியத்துவம் பெறுகிறது.
- இத்தேசங்கள் அநேகமானவற்றில் மன்னராட்சி நடை பெற்றதுடன் வஜ்ஜி, மல்ல தேசங்களில் சமூக உடமை ஆட்சி முறை நிலவியது தெளிவுபடுத்தலாம்.
- கி.மு. 6 ஆம் நூற்றாண்டாகும் பொழுது இத்தேசங் களுள் மகத, கோசல, அவன்தி, வத்ச ஆகிய தேசங் கள் பலமடைந்திருந்தது.
- புத்த பெருமான் வாழ்ந்த காலத்தில் மகதம் ஏனைய இராச்சியங்களைவிட மேன்மையடைவதற்கு பிம்பிசார மன்னரின் கொள்கை காரணமாகியது.
- நன்த இராஜவம்சத்தின் கீழ் மகதம் பலமடைந்து பேரரசு நிலையையடைந்தது.
- மௌரிய வம்சத்து சந்திரகுப்த மௌரியனால் மகதத் தின் ஆட்சி அதிகாரம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

(15, நிமிடங்கள்)

**படி 10.2.2.2** :

- மாணவர்களை பொருத்தமான முறையில் குழுக்களாக பிரிக்கவும்
- இணைப்பு 02 - சிறிய படங்களை குழுக்களுக்கு பிரித்துக் கொடுக்கவும்
- இணைப்பு 03 தேசப்படங்களை மாணவர்களுக்கு போதுமான முறையில் பிரித்தக் கொடுக்கவும்
- இணைப்பு 02 இல் உள்ள படத்தை அவதானித்து இணைப்பு 03 இல் உள்ள படத்தில் 16 தேசங்களையும் குறிக்கும்படி ஆலோசனை வழங்கவும்
- இணைப்பு 04 படிமுறை பாட அலகினைப் பிரித்துக் கொடுக்கவும். (ஒவ்வொன்றாக)
- இணைப்பு 05 அறிவுறுத்தல் பத்திரத்திற்கு ஏற்ப அந்தப் பாடத்தை பூரணப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்க வும்.

(15 நிமிடங்கள்)

**படி 10.2.2.3** :

- தேசங்களைக் குறித்த படத்தை வகுப்பில் முன்வைக் கச் செய்யவும்
- இங்கு ஒவ்வொருவரின் சிறப்புத்தன்மையை மதிப்ப தோடு பலவீனத்தை விளங்கிக் கொண்டு பிழைகளைத் திருத்திக் கொள்வதற்காக மீட்டாய்வில் ஈடுபடவும்
- மாணவர்களின் விளக்கத்தை விரிவாக்கும் விதத்தில் அந்தக் கலந்துரையாடலை நடாத்துக.
- இணைப்பு 04 பூரணப்படுத்திய பின் பாடத்துடன் தொடர்பு படுத்தி குறைநிறைகளை சரிசெய்யவும்
- மாணவர்கள் பூரணப்படுத்திய படத்தினை, தேசப்படம் மேலும் விசேட தகவல்களினூடாக பின்வரும் கருத்துக் களை உள்ளடக்கத்தக்கதான வகையில் மீட்டாய்வு செய்யவும்.

- 16 தேசங்களில் கூடுதலானவை கங்கை நதிக்கரையில் தோன்றியதாக வரலாற்றிஞர்களின் கருத்து ஆகும்.
- கி.மு. 6ம் நூற்றாண்டு அளவில் வடக்கு பாகத்தில் புதிய சமூக முறையும் பொருளாதார முறையும் 16 தேசங்களினூடாக ஏற்படல்
- 16 தேசங்களில் வளர்ச்சியடைந்த நகர்களில் ரஜகஹநுவர பிரதான இடத்தைப் பெற்றுக் கொள்ளல்
- 16 தேசங்களில் பெரும்பாலானவை மன்னராட்சி முறையாக இருந்ததுடன் சில சமூக அரசாகவும் இருந்தன.
- பௌத்த கலாசாரமும் சைன கலாசாரமும் 16 தேசங்களினதும் வரலாற்றை கட்டியெழுப்புவதற்கு உதவியாக இருந்தது.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- 16 தேசங்களையும் குறிப்பிடுவார்.
- 16 தேசங்களிலும் நிலவிய ஆட்சிமுறைகளை மதிப்பார்
- 16 பெரிய தேசங்களினை தேசப்படத்தில் குறிப்பார்.
- குழு ஒத்துழைப்புடன் செயற்படுவர்.
- குழுச் செயற்பாடுகளின் போது அனுபவங்களை விரிவுபடுத்திக் கொள்வர்.

## இணைப்பு 01 மற்றும் 02




16 தேசங்களையும் வகுப்பில் காட்சிப்படுத்தல்

இணைப்பு 03



# இணைப்பு 04

படிமுறை. பாடம் 16 - தேசங்கள் 1ம் படியில் இருந்து வாசித்து பாடத்தின் இடைவெளிகளை நிரப்புக. படிக்குப் படி முன்னெடுத்துச் செல்லுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ..... என்பன வட இந்தியாவிலும் தக்கண மேட்டு நிலப்பகுதியிலும் தோன்றிய சிறிய இராச்சியங்களுமாகும். | பதினாறு பெருந்தேசங்கள் |
| 2. | இந்த ..... இராச்சியங்கள் அங்க, மகத, காசி, கோசல, வஜ்ஜி, மல்ல, குரு, பாஞ்சால, மத்சய சுர சென, அவந்தி, அஸ்மக, சேதி, வத்ச, காந்தார, கம்போஜ ஆகும். | சமூக அரசுகள் |
| 3. | இந்த தேசங்கள் பலவற்றில் மன்னராட்சி நடை பெற்ற தோடு வஜ்ஜி, மல்ல குடியேற்றங்களில் ..... நடைமுறையில் இருந்து. | |
| 4. | கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் பலமான அரசாக இருந்த மகத, கோசல, அவந்தி, வத்சிய குடியேற்றங் களுள் ..... மிகப் பலம் வாய்ந்த தாக இருந்தது. | 1. சிநேகபூர்வமான<br>2. யுத்தம் (போர்) |
| 5. | மகத இராச்சியம் உயர் நிலையடைவதற்கு<br>1. .....<br>2. .....<br>காரணமாகியுள்ளன. | பிம்பிசார |
| 6. | புத்தரின் சமகால பாரதத்தில் மகதத்தை ஆட்சி செய்த ..... அரசனின் கீழ் இந்த வளர்ச்சி ஆரம்பமானது. | அஜந்தா |
| 7. | பிரதேசங்களைக் கைப்பற்ற பலமான இராச்சியத் தைக் கட்டியெழுப்புவதற்கு ..... அரசன் பங்கெடுத்தான். | முதலாவது கொதிபத்வியவாதி |
| 8. | மகாபத்மானந்த அரசன் இந்தியாவில் ..... ..... ஆகியது மகதத்துக்காக பெரும் பிரதேசங் களை இணைத்துக் கொண்டதனாலாகும். | தனானந்த |
| 9. | மகதத்தின் கடைசி அரசன் நந்த அரச வம்சத்தின் ..... அரசனாகும். | 1. மகா அலெக்ஸாண்டர்<br>2. மௌரிய அரசவம்சம் |

# இணைப்பு 05

16 தேசங்கள் தொடர்பான வழிமுறைப் பாடத்திற்கு ஆலோசனைகள்

- முதலாவது படிமுறையில் இருந்து வாசிக்கத் தொடங்குங்கள். அதன்பின் இடைவெளி நிரப்பிக் கொண்டு பின்தொடரவும் ஒரு படிமுறையை விட்டு இன்னொரு படிமுறைக்குச் செல்ல வேண்டாம். படிமுறைக்குப் படிமுறை இறுதிவரை முன்னெடுத்துச் செல்லவும்.
- இடைவெளி நிரப்பும் போது 16 பெருங் குடியேற்றங்களைக் காட்டுகின்ற பாடப்புத்தகத்தின் பாடத்தையோ மூலாதாரத்தையோ தெரிந்து கொள்ளவும். பாடத்தை பூரணமாகப் படித்த பின்
  * நீங்கள் சரியான முறையில் செய்தீர்களா என்பதற்கு வலப்புறத்தில் உள்ள கூட்டில் உள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு சரிபார்க்க முடியும்.
  * என்றாலும் பாடத்தினைக் கற்பதில் ஈடுபட்டிருக்கும் போது அப்பகுதியைப் பார்க்க வேண்டாம்.

## ஆசிரியருக்கான குறிப்புகள்

- பாடத்தைப் பூரணமாகக் கற்றபின் மேலும் சரியானதா என்பதையும் பார்க்க முடியும்.
- முற்பகுதியில் காட்டப்பட்டுள்ள உதவும் பகுதியை மாணவர்களுக்கு பாடத்தை வழங்கு முன் கோடிடப்பட்ட பகுதியூடாக பின்பக்கமாக மடித்துக் கொடுக்கவும்.

## செயற்பாடு 10.2.2

தேர்ச்சி மட்டம் : மௌரியப் பேரரசின் பரம்பல் தொடர்பாக பரீட்சிப்பார்.

செயற்பாடு : பேரரசு

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01 - சாஞ்சி, சரணாத் தூபிகளின் படங்கள்
- இணைப்பு 02 - அசோகப் பேரரசின் படம்
- இணைப்பு 03 - போட்டிக்கான ஆலோசனைப் பத்திரம்
- பாடப்புத்தகம்
- இந்தியாவின் வரலாறு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (மேலதிகமாகக் கற்பதற்கு)

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.2.2.1 :

- இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படத்தை மாணவர்களிடம் முன்வைக்கவும்
- அப்படங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு இடமளித்து பின்வரும் கருத்துக்கள் உள்ளடக்கக் கூடியவாறு மீட்டாய்வு செய்க.

| |
|---|
| • படங்களில் காட்டப்படுவது சாஞ்சி தூபியும் அசோகத் தூபியினதும் தூண்களேயாகும் |
| • அவை அசோகப் பேரரசு காலத்தில் அமைக்கப்பட்டது |
| • அசோக மன்னன் இந்தியாவில் மௌரிய வம்சத்து அரசனாவான். |
| • இந்திய வரலாற்றில் மௌரியர் காலம் மிகவும் சிறப்பான காலமாகும். |

(10 நிமிடங்கள்)

படி 10.2.2.2 :

- வகுப்பை பல்வேறு சிறு குழுக்களாகப் பிரிக்கவும். (ஒரு குழுவில் 4 பேர் இடம் பெறும் வகையில்)
- அக்குழுக்களுக்கு மௌரியர் காலம் தொடர்பாக பாடப்புத்தகத்தையும் மௌரியர் காலம் தொடர்பான வேறு மூலாதாரங்களையும் பயன்படுத்தி இயன்றளவு வினாக்களைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தவும்.
- வினாக்களைத் தயாரிப்பதற்கு வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கவும்.

(30 நிமிடங்கள்)

படி 10.2.2.3 :

- வகுப்பை மீண்டும் இரு குழுக்களாகப் பிரிக்கவும். (இங்கு சிறிய குழுக்கள் பிரிபடாமல் இருக்கும். முறையில் வேறுபடுத்தவும்)
- அந்தக் குழுவை ஏ,பீ எனப் பெயரிடுக.
- குழுக்களுக்கு இரண்டு தலைவர்களை நியமிக்கவும்
- 5 நிமிடமளவு சிறு குழுக்களால் தயாரிக்கப்பட்ட வினாக்களில் மாணவரிடம் வினாவுவதற்கு 20 வினாக்களை தெரிவு செய்வதற்காக ஆலோசனை வழங்கவும்
- இணைப்பு 03 இன் அறிவுறுத்தல் பத்திரத்திற்கேற்ப வினாக்களைக் கேட்பதற்கான போட்டியை ஆரம்பிக்கவும்.
- வினாவிடைப் போட்டி முடிவுற்ற பின் பின்வரும் கருத்துக்கள் தெளிவுறுமாறு மீட்டாய்வில் ஈடுபடவும்.

- சந்திர குப்த மௌரியன், பிந்துசாரன், அசோகன் ஆகிய அரசர்கள் மௌரியப் பேரரசின் பரம்பலுக்கு பங்களிப்புச் செய்தனர். இணைப்பு 2 படத்தினூடாக
- பாடலிபுர நகரம் தலைநகராகியது.
- யுத்தமொன்றின் மூலம் கலிங்கம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.
- அசோக மன்னன் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டமை.
- அவன் தர்மவிஜயக் கொள்கையை பின்பற்றினான்
- அசோக தர்மம்.
- அசோக மன்னன் மக்கள் மனதை வென்ற நிர்வாகியாவான்.
- வேற்று மதங்களுக்கும் மதிப்பளிக்கும் கொள்கையைப் பின்பற்றினான்.
- வடமேற்கில் இருந்து வந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் பிரதேச நிர்வாகிகள் வலிமை பெறல், அசோக மன்னனின் பின்னர் வந்த அரசர்களுக்கு பெரிய பேரரசொன்றை நிர்வாகிக்க முடியாமற் போனமை, பிரதேச ஆட்சியாளர்கள் வலிமையடைந்தமை, பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது ஆகிய காரணிகள் மௌரிய பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது.
- மௌரியக் காலத்திற்குப் பின் குசான், தென்னிந்தியப் பிரதேச அரசான குப்தர் காலம் ஆரம்பிக்கும் வரை இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- மௌரியர் காலம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- அசோக மன்னனின் தர்மவிஜயக் கொள்கையை மதிப்பார்.
- மௌரியர் காலம் தொடர்பாக வினாக்கொத்தொன்றைத் தயாரிப்பார்.
- குழுச் செயற்பாட்டுடன் செயற்படுவார்.
- தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

இணைப்பு 01



படம் சாஞ்சித் தூரி



படம் அசோகத் தூண்

இணைப்பு 02



## இணைப்பு 03

### அறிவுறுத்தற் பத்திரம்

- வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரிக்கவும்
- இங்கு சிறு குழுக்கள் வேறுபடாதவாறு பிரிக்கவும்
- குழுக்களை ஏ,பீ எனப் பெயரிடுக
- தெரிவு செய்யப்பட்ட 20 வினாக்களையும் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கவும்
- குழுத்தலைவரால் எதிரணியினரிடம் வினாக்களை எழுப்பவும்
- விடையளிக்கும் போது வகுப்பில் எல்லா மாணவர்களும் பங்குபற்றக் கூடிய முறையில் ஒழுங்கு படுத்தவும்
- புள்ளி வழங்கும் போது

  வினா தொடுக்கப்பட்ட மாணவன் ஒரே முறையில் விடையளித்தால் 05 புள்ளிகள்

  அந்த அணியில் வேறொருவர் விடையளித்தால் 02 புள்ளிகள்

  வினா எழுப்பியகுழுவினரே விடையளித்தால் 01 புள்ளி

  என்ற அடிப்படையில் புள்ளி வழங்கவும்
- இதன்படி ஒரு அணியினருக்கு விடையளிக்க இரண்டு சந்தர்ப்பம் கிடைக்கின்றன. அந்த இரு சந்தர்ப்பங்களிலும் விடையளிப்பதற்கு முடியாமல் போனால் அடுத்த அணியினருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்
- கரும்பலகையை இரண்டாகப் பிரித்து புள்ளிகளை பதியவும்
- இந்த அறிவுறுத்தலுக்கேற்பவும் உங்கள் அனுபவத்திற்கேற்பவும் போட்டியை ஒழுங்குபடுத்தி நடாத்தவும்

## செயற்பாடு 10.2.3

**தேர்ச்சி** : இந்திய வரலாற்று வளர்ச்சியைக் கற்பார்.

**தேர்ச்சி மட்டம்** :
* குப்த பேரரசின் பரம்பலைக் கற்பார்.
* குப்தர் காலத்தில் கலாசார முக்கியத்துவத்தை விபரிப்பார்.

**செயற்பாடு** : "குப்த பரம்பல்"

**காலம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 01 அஜந்தா ஓவியத்தின் படங்கள்
- இணைப்பு 02 - குப்தர் காலப் படம்
- இணைப்பு 03 - செயற்பத்திரம்
- 10 வரலாற்றுப் பாடநூல் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம (மேலதிகமாகக் கற்பதற்கு)

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.2.3.1** :
- இணைப்பு 01 இல் குறிப்பிடும் படத்தை மாணவர்களிடம் முன்வைக்கவும்.
- இக்குகை எது?
- இச்சித்திரத்தை எங்கிருந்து தேடிப்பெற்றிருக்கக் கூடும்?
- இதற்குச் சமமான சித்திரங்களை நீங்கள் கண்டிருக் கிறீர்களா?

போன்ற வினாக்களை மாணவர்களிடம் கேட்டுப் பின்வரும் விடயங்கள் தெளிவாகும் விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுக

- இக்குகையும் சித்திரமும் இந்தியாவின் குப்த காலத் திற்குரியது.
- அது அஜந்தாக் குகை என அறியப்பட்டுள்ளது.
- குப்தப் பேரரசு கங்கை யமுனைச் சமவெளியை அடிப் படையாகக் கொண்டு உருவாகியது.
- முதலாவது சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், 2 வது சந்திர குப்தன், குமார குப்தன், இஸ்கந்த குப்தன் போன்ற அரசர்கள் இக்காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.
- பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில்கள் என்ப வற்றோடு உள்ளடக்கி உருவாகியது.
- குகைக் கோயில்கள் பலவற்றை இக்காலத்தில் காணக் கூடியதாகவுள்ளது.
- இக்காலத்தில் சித்திரங்களும் சிற்பக்கலையும் மிக உயர்ந்த மட்டத்தில் வளர்ச்சியடைந்திருந்தன.

(15 நிமிடங்கள்)

படி 10.2.3.2 :

- வகுப்பினை பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 03 இன் செயற்பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்கவும்.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளவும்.

(25 நிமிடங்கள்)

படி 10.2.3.3 :

- குழுச் செயற்பாட்டை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
- மாணவர்களின் நிறை குறைகளையும் விளங்கிக் கொள்ளவும்.
- பின்வரும் கருத்துக்கள் உள்ளடக்கக் கூடிய விதத்தில் மீட்டாய்வு செய்க.

குப்தப் பேரரசின் பரம்பல்:

- கங்கை, யமுனைச் சமவெளிகளை அடிப்படையாகக் கொண்டு குப்தப் பேரரசு ஆரம்பமாகியது.
- 1 ஆம் சந்திரகுப்தன், சமுத்திர குப்தன், 2 ஆம் சந்திர குப்தன், குமார குப்தன், இஸ்கந்த குப்தன் ஆகிய அரசர்கள் குப்தப் பேரரசின் பரம்பல் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த மன்னர்களாவர்.
- பேரரசுக் குடும்பத்தில் உட்பூசல்கள் ஏற்பட்ட போது அவற்றைப் பயன்படுத்தி கொண்ட பிரதேச நிர்வாகிகள் பிரபல்யமடைவதற்கு முயற்சித்தமை, குப்தப் பேரரசில் ஏற்பட்ட (ஹசன) ஆக்கிரமிப்பு ஆகியவற்றினால் குப்த காலம் முடிவடைந்தது

குப்தப் பேரரசின் நிர்வாகம்

- குப்தர் கால அரசர்கள் மகா ராஜாதிராஜ எனும் விருதுப் பெயரினைப் பயன்படுத்தினர்.
- அரசர்கள் அதிகாரத்தைப் பெற்ற தெய்வீகத்தன்மை பொருந்தியவர்களாகக் கருதப்பட்டனர்.
- அடுத்த அரச பதவிக்கு வருபவர் முடிக்குரிய இளவரசர் குப்தரின் ஆட்சி முறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாவர்.
- குப்த அரசர்களுக்கு பலமனைவியர் இருந்ததனால் கிரீடத்துக்கு உரிமையான வரைத் தெரிவு செய்தலில் குழப்பநிலை இருந்தது.
- இந்தச் சிக்கலான பிரச்சினையான நிலமையே குப்தர் ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

- குப்தர்கள் சம்பிரதாய பதவி முறைக்கேற்ப கட்டியெழுப் பப்பட்ட நிர்வாக முறையொன்றை ஒழுங்கு செய்து நடாத்தினர்.
- அமைச்சரவை, இராணுவ அமைப்பு என்பவற்றை இவ்வாட்சி முறையில் காணலாம்.
- பிரதேச பரிபாலன அலகு "புக்தி" என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
- சட்டமும் நீதியும், நீதிமன்ற நடவடிக்கைகளும் நடை முறைப்படுத்தப்பட்டது.
- கடமையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தர்மம் ஒழுக்க நெறிகள், பழக்க வழங்கங்கள் (சமூக ஒப்புதல்), சம்பிரதாயங்கள், சிம்மாசனம் (அரசனின் கட்டளை) ஆகிய காரணிகள் 4 உம் முக்கியத்துவம் உடையதாக இருந்தது. (தர்மம், பழக்கவழக் கம், சம்பிரதாயங்கள், அரச கட்டளை)
- சொத்துக்களை பங்கீடு செய்யும் போது சட்டரீதியாக தந்தையை முதன்மையாகக் கொண்ட அமைப்புக்கு முக்கிய இடம் கிடைத்தது.

பொருளாதார நிலை

- விவசாயப் பொருளாதார முறையொன்று காணப்பட்டது
- பிடவை, ஆபரணங்கள் தயாரித்தல் போன்ற கைத் தொழில்கள் இருந்தன.
- கைத்தொழில், வர்த்தகம் பற்றிய தேர்ச்சியுள்ள மக்கள் இருந்தன
- சமூக நிலையில் நான்கு வர்ணம் காணப்பட்டது.
- இந்து, பௌத்த, சைன மதங்கள் காணப்பட்டன.
- விஷ்ணு, சிவ வழிபாடுகள் பிரச்சித்திபெற்றிருந்தது.

கல்வி

- கல்வி பெறும் உரிமை பிராமண, சத்திரிய, வைசியர் ஆகிய மூன்று குலங்களுக்கே இருந்தது.
- உயர்ந்த பௌத்த கல்வி நிலையங்கள் தோன்றின. (உதா: நாலந்தா பல்கலைக்கழகம், பலபி பல்கலைக் கழகம்)
- விரிந்த பாடத்திட்டத்தின் கீழ் கல்வி பெற்றுக் கொடுக்கப் பட்டது.
- இராமாயணம், மகாபாரதம், காலிதாசனின் மேகதூதம், சகுந்தலை போன்ற இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன.
- குகைக்கோயில்களும் வழிபாட்டிடங்கள் பலவும் தோற் றம் பெற்றன.
  உதா: அஜந்தா, எல்லோரா, அவுரங்கபாத்
  (இணைப்பு இல 01)
- மிக முன்னேற்றமான சிற்பக்கலையொன்றிருந்தது.
  உதா: சாரனாத் புத்தர்சிலை, சிவன் பார்வதி செதுக்கல்கள்
- வளர்ச்சியடைந்த சித்திரக்கலையும் காணப்பட்டன.

கணிப்பீட்டு மதிப்பீட்டு
நியதிகள் :

- குப்த காலம் பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- குப்தர் கால ஆக்கங்களை மதிப்பார்.
- குப்தர் காலம் தொடர்பான தகவலகளை அட்டவணைப் படுத்துவார்.
- குழு ஒற்றுமையுடன் செயற்படுவார்.
- தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

இணைப்பு 01





அஜந்தாக் குகையினுள் வரையப்பட்ட ஓவியம்

இணைப்பு 02


குப்த பேரரசு
காஷ்மீர்
புருஷ்புரம்
விதஸ்தா
கார்த்திபுரம்
யோதேசம்
இந்திர பிரஸ்தம்
சிந்து
குப்த
பேரரசு
திபெடய
நேபாளம்
வைசாலி
காசி
பாடலிபுத்ரா
புத்தகயா
மாலவ
தாமலிப்தி
தாபி
மகா கோசலை
கோதாவரி
கிருஷ்ணா
பூலவ
காவேரி

# செயற்பத்திரம் 03




- பாடநூலுடன் ஏனைய மூலாதாரங்களையும் ஆதாரமாகக் கொண்டு குப்தர் காலம் தொடர்பாக அட்டவணையை நிரப்பவும்.
- அதனை வகுப்பில் காட்சிப்படுத்தக் கூடிய முறையில் தயாரித்துக் கொள்ளவும். (தேவையாயின் பல்வேறு நிறங்களைப் பயன்படுத்தவும்)
- செயற்பாட்டை வகுப்பறையில் முன்வைக்கவும்.

அலகு 10.3

# இலங்கையில் தொல்பொருள் யுகத்திலிருந்து பொலன்னறுவைக் கால இறுதிவரை

## அறிமுகம்

மனிதன் வனசஞ்சாரியாக மேற்கொண்ட வாழ்க்கையை அடுத்து முறையாக முன்னேறியது பற்றியும் அந்த முன்னேற்றத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களைக் கற்பதும் இந்த அலகின் நோக்கமாகும். அதனால் இந்த அலகில் இலங்கையில் அவதானத்தைச் செலுத்தி இலங்கையில தொல்பொருளியல் யுகம், ஆரியக்குடியேற்றங்களை அமைத்தல், பொலன்னறுவை இராஜதானி வீழ்ச்சியடைதல் வரையிலான அரசியல் வரலாற்றை எடுத்துக்காட்டும் துணைத் தலைப்புக்களின் கீழ்க் கவனத்திற் கொள்ளப்படுகிறது.

இதனுள் மனிதன் நாகரிகமடைவதற்கு எடுத்த முயற்சிகள் நாகரீகத்தின் உச்சக் கட்டத்திற்குச் சென்றதும் மனித செயற்பாட்டின் காரணமாகவே நாகரீகம் வீழ்ச்சியடைந்ததும் தொடர்பாக கற்பதற்கு மாணவனுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும் இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதாலும் ஏனைய நாடுகளிலும் பார்க்க இந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் காணப்படுகிறது. ஆக்கிரமிப்புக்களாலும் குடிப்பெயர்வுகளாலும் வேறு கலாசாரத் தொடர்புகளாலும் இரு நாடுகளினதும் வரலாறு கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பது இந்நாட்டு வரலாற்றை கற்கும் போது தெளிவாகிறது.

தேர்ச்சி : பொலன்னறுவைக்கால இறுதிவரை இலங்கையின் வரலாற்று வளர்ச்சியைக் கற்பார்.

## தேர்ச்சி மட்டங்கள் :

- இலங்கையில் தொல்பொருள் காலம் தொடர்பான தகவல்களைப் பரிசீலனை செய்வார்.
- ஆரியக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமை தொடர்பாக கற்பார்.
- பொலன்னறுவையை இறுதிவரை ஆட்சி செய்த முக்கிய மன்னர்களின் நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை விவரிப்பார்.
- தென்னிந்திய ஆக்கிரமிப்புக்களையும் அதன் விளைவுகளையும் கற்பார்.

## விடய உள்ளடக்கம் :

தொல்பொருள் சிதைவுகளை மட்டும் பயன்படுத்திக் கட்டியெழுப்பப்படுகின்ற வரலாறு, அதாவது எழுத்து மூலத்திலான வரலாறு இல்லாத யுகமாக தொல்பொருள் காலத்தைக் கூறலாம்.

தொல் பொருள் யுகத்தை மூன்றாகப் பிரிக்கலாம்

1. புராதன கற்காலம் - வேடுவர் யுகம்
2. மத்திய கற்காலம் - இடையர் யுகம்
3. புதிய கற்காலம் - விவசாய யுகம்

- ### இலங்கையின் புராதன கற்காலத்திற்குரிய வரலாற்று இடங்கள்

இரத்தினபுரிப் பிரதேசத்தில் வண்டல் மண் படையிலும், இரத்தினக்கற் சுரங்கங்களில் இருந்து அகழப்பட்டு எடுத்த மண்ணில் பழைய கற்காலத்துக்குரிய கரடுமுரடான கல்லாயு தங்கள் கண்டு பிடிக்கப்பட்டமை.

- ### மத்திய கற்காலத்திற்குரிய வரலாற்று இடங்கள்

யாழ்ப்பாணக் குடாநாடு, தவிர இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் மத்திய கற்காலத்தின் மனிதப் பரம்பல் தொடர்பாக உள்ள காரணிகள். பிரதேசவாரியாக வகைப்படுத்தப்பட் டுள்ளமை.

1. இலங்கையில் வடக்கு வடமேற்கு சிவப்பு மண் பிரதேசம்
2. ஈரவலயத்தில் கற்குகைகள்
3. மலைநாட்டுக் காடுகள்
4. கடற்கரையோர மணற் குன்றுகள்

தொல்பொருளியல் சிதைவுகள் காணப்படும், சில இடங்கள் குதிரமணல், பொம்பரிப்பு, மஹியங்கனை, பெலிலென, ராவனா அல்லக்குகை, ஹெனகனுகல, புலத்சிங்ஹள, பாகியான்கல, கேகாலை, படதொம்பகுகை, பெல்லன்னபெதிபலஸ்ஸ, தந்திரிமலை ஆகியன.

- ### புதிய கற்காலத்திற்குரிய வரலாற்று இடங்கள்

காரைநகர், மாந்தை, பொம்பரிப்பு, கதிரவெளி, மாமண்டுவ, குருகர்கின்ன, அனுராதபுரம், யாப்பகூவ, பிட்டவெல, இப்பன்கட்டுவ, இராஜங்கனை, பதவிகம்பளை, யகல என்பனவாகும்.

## தொல்பொருள்கால மனிதனின் வாழ்க்கைக் கோலம்

- பழைய கற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த ஆதிமனிதனின் வாழ்க்கைக் கோலம் தொடர்பான தகவல்கள் குறைவாகும்.
- மத்திய கற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த ஆதிமனிதன் ஹோமோசேபியன் பலாங்கொடை நீஸ் என அறியப்பட்டுள்ளான். "பலாங்கொடை மனிதன்".
- பல்வேறு வடிவங்களில் செப்பனிடப்படாத கல்லாயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. (முக்கோண, வட்ட வடிவங்களில்)
- கல்லாயுதங்களை ஆக்குவதற்கு திருவாணக்கல் என்ற ஒருவகையான மஞ்சள் நிறக் கல் பயன்படுத்தப்பட்டது.
- அரைக்கும் கற்களில் (திரிகை) தானியங்கள் அரைக்கப்பட்டன.
- சிறு கற்களை அரைத்து நிறப்பூச்சு தயாரிக்கப்பட்டது. (சித்திரம் வரைவதற்காக)

- ககுண விதைகளை தட்டுவதற்கு துவாரங்களிடப்பட்ட கற்கள் பயன்படுத்தப்பட்டன.
- மிருகங்களின் எழும்புகளாலும் கொம்புகளாலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்கள் பாவிக்கப் பட்டன. (ஈட்டி, ஊசி)
- புசித்த மாமிச வகையான முள்ளம் பன்றி, மர அணில், குரங்கு, தரை நீர் நத்தைகள் கடல் நத்தை, காட்டுப்பன்றி, மான் ஆகியவற்றின் இறைச்சி.
- பயன்படுத்திய தானியங்களும் வேறு உணவு வகைகளும் குரக்கன் போன்ற தானிய வகைகள் கீகிரிந்தி விதை, கிதுல், தோதலு (பாக்கு) ஆசனிப்பலா விதை, கருணக் விதை
- நெருப்பைப் பயன்படுத்தல்.

- புதிய கற்காலத்தின் வாழ்க்கைக் கோலம்

  * நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கை அமைப்புக்கு பழக்கப்பட்டனர்.
  * வீடுகள், நிரந்தர வீடுகள், கட்டப்படல் - கிராமங்கள் உருவாதல்.
  * அன்றாடத் தேவைகளுக்கு அவசியமான உபகரணங்கள் செய்து கொள்ளப்பட்டன உதா: மட்பாண்டம், விவசாய உபகரணங்கள்.
  * உடைகளாக மரப்பட்டைகள், மிருகங்களின் தோல், மர இலைகுழைகள் பயன் படுத்தப்பட்டன.
- முத்துச் சிற்பிகளால் ஆபரணங்கள் செய்யப்பட்டன.
- மயானங்கள் (சுடுகாடு) அமைக்கப்பட்டன.
- கடல் வளங்கள் பயன்படுத்தப்பட்டன.
- மனித சிந்தனை ஓட்டத்தில் வளர்ச்சியோடு விருத்தியான சமூக முறையும் அரசியல் முறையும் ஆரம்பமானது.
- நகராக்கத்தின் ஆரம்பம் - உதா: அநுராதபுர தலைநகரம்
- பழக்க வழக்கங்கள் நிலைத்திருந்தன.
- சிந்தனையின் வளர்ச்சியோடு ஒழுங்கான சமூக முறையொன்று தோற்றம் பெற்றது.

# இலங்கையில் புராதன வரலாற்று இடங்கள்




படம் இல 01

புராதன கல்லாயுதங்கள்







## 10.3.2 ஆரியர் குடியேற்றங்களை அமைத்தல்

- பல நூற்றாண்டுகளாக ஆரியரின் இடப்பெயர்வால் பல்வேறு குடியேற்றங்கள் அமைக்கப் பட்டன.
- இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான தொடர்பைப்பற்றிய வேறு மூலாதரங்கள் - வலாஹஸ்ஸ ஜாதகய, பாகியான், ஹியுன்னசான் குறிப்புக்கள் பெரிப்லாஸ் குறிப்பு

### ஆரியக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்கள்

1. மல்வத்து ஓயாவுக்கும் கலா. ஓயாவுக்குமிடையில் அமைந்துள்ள தம்பபண்ணி பிரதேசத்தில் வந்து கரையேறிய விஜயனும் பரிவாரங்களும் குடியேற்றங்களை அமைத்தனர்.
   உதா: தம்பபண்ணி
2. விஜயனின் அமைச்சர்களால் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள். அநுராத, உபதிஸ்ஸ, உதேனி, விஜித, ஊருவெல போன்றொரால் அமைக்கப்பட்டவை.
   கோணநதி (கல் ஓயா), கதம்ப நிதி (மல்வத்து ஓயா), கணதரா ஓயா போன்ற நதிக்கரைகளில் முதலாவது ஆரியக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன.

- விஜய அரசனுக்கு முடிசூட்டுவதற்காக இந்தியாவில் இருந்து இராணி கொண்டு வரப்படுதல்
- பண்டுவாசு தேவனும் அவனுடைய பரிவாரங்களும் வந்து குடியேறியமை.
- பண்டுவாசுதேவனுக்கு மனைவியான பத்தகச்சானாவும் பரிவாரங்களும் வந்து குடியேறியமை. இவர்கள் மகாவலி கங்கை, கல்ஓயா, கிரிந்தி ஓயா, மாணிக்கங்கை ஆகியவற்றின் அருகில் உள்ள பிரதேசங்களில் குடியேறி குடியேற்றங்களை அமைத்தனர்.

அவ்வப்போது வந்த பல்வேறு கூட்டத்தினர் ஆரம்பத்தல் ஆற்றுமுகத்துவாரம் பகுதிகளில் குடியேறியதுடன் பின் படிப்படியாக ஆற்றுப்பள்ளத்தாக்கினூடாக நாட்டின் உட்பிரதேசத்திற்குள் சென்று குடியேற்றங்களை அமைத்தனர்.

### ஆரியரின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முறைகள்

* அரசியல்
  - குடியேற்றங்களை அமைத்த ஆரியர் குடியேற்றங்களை நிருவகிப்பதற்கு ஆட்சி முறையொன்றை அமைத்தனர்.
  - குடியேற்றங்களின் நிருவாகத்தின் தலைவர் காமனி, பருமக அரசன் ஆகிய பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்டான்.
  - உலர் வலயம் முழுவதும் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட பின் அவற்றை ஒருமைப் படுத்த வேண்டிய அவசியம் ஏற்படல்.
  - பண்டுகாபய அரசன், ஆரியர், ஆரியரல்லாத குடியேற்றங்களை ஒன்றிணைத்து அரசனாதல்.
  - பண்டுகாபயனின் காலத்தில் அரசாட்சி நிலைபெறச் செய்யப்பட்டது.
  - மன்னராட்சி ஒன்று தோற்றம் பெறுதல்.
  - அரசாட்சி தோற்றம் பெறுதலும் கிராம எல்லைகள் நிர்ணயிக்கப்படுதலும்.
  - தேவநம்பிய தீசன் காலத்தில் வட இந்தியாவின் முடிசூட்டு முறை அறிமுகப்படுத்தப் படல்.
  - பத்து அரச தர்மத்தின் அடிப்படையில் ஆட்சியை கொண்டு செல்லல்.
  - அரசனின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக இளவரசன் (யுவராஜன்), அமைச்சர் சபை, புரோகிதர்கள், சேனாதிபதிகள் ஆகியோர் இணைந்த அரசாட்சி நடைபெறல்.

* பொருளாதாரம்
  - பொருளாதார முறை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.
  - மழைநீரை ஆதாரமாகக் கொண்டு ஒரு போகம் மாத்திரம் பயிர் செய்தல்.

* சமூகமும் கலாசாரமும்
  - வட இந்தியாவில் நடைமுறையில் இருந்த சமூக முறைக்கு ஒப்பான சமூகமொன்று உருவாகியது.
  - ஆரியர், ஆரியரல்லாதோர் ஆகிய மக்களின் கலப்பினால் சிங்கள வர்க்கத்தினர் உருவாகினர்.
  - அரசியல், சமூக, நடவடிக்கைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்கள் பின்பற்றப்பட்டன.
  - நகர் நிர்மாணிக்கப்படல்.
  - பல்வேறு மத வழிபாடுகள் (பிராமண, பேய், இயற்கை பொருட்கள், சைன, தேவதைகள்)

## 10.3.3 பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடையும் வரை ஆட்சி செய்த மன்னர்கள்

- பண்டுகாபய மன்னன்
  * அநுராதபுரத்தை தலைநகராக்கல்.
  * பல்வேறு மதத்தவர்களுக்கும் தேசிய மக்களுக்கும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வ தற்காக அவர்களுக்கு அனுசரணை வழங்குதல்.
  * முதலாவது குளத்தைக் கட்டுதல் - வசவக்குளம்

- தேவநம்பியதீச மன்னன் (கி.மு 250-210)
  * பௌத்த சமயத்தின் தோற்றமும் நாடுமுழுவதும் பரவுதலும்.
  * முதலாவது தூபி (தூபாராமை) கட்டப்படுதல், பௌத்த விகாரைகள் அமைக்கப்படல்.

- எல்லாளன்

  * சோழ இளவரசனான எல்லாளன் அசேல மன்னனைக் கொன்று அநுராதபுர அரசைக் கைப்பற்றிக் கொள்ளல்.
  * 44 ஆண்டுகள் நீதியான ஆட்சி செய்தல்.

- துட்டகைமுனு மன்னன் (கி.மு 161- 137)
  * வடக்கின் ஆட்சியாளரான எல்லாளனைத் தோற்கடித்து இலங்கையை மீட்டு ஒற்றுமைப் படுத்தினான்.
  * எதிரியானாலும் எல்லாளனுக்கு அரச கௌரவத்தை அளிக்க நடவடிக்கை எடுத்தான்.
  * இலங்கையின் மிகப் பெரிய சைத்தியத்தையும் இன்னும் மத வழிபாட்டிடங்களையும் கட்டினான்.
  * சம்புத்த சாசனம் (புத்தசாசன வளர்ச்சி) தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

- காசியப்ப மன்னன் (கி.மு 473-491)
  * அநுராதபுர இராஜதானி முதலாவதாக சீகிரியாவுக்கு மாற்றப்படல், அங்கிருந்து 18 வருடங்கள் ஆட்சி செய்தல்.
  * தற்பொழுது உலகின் 8 வது அதிசயமாகக் கருதப்படும் கலைக்கூடமான சீகிரியாவை சித்திரம், மற்றும் வேறு அம்சங்களிலும் அழகான நீர்ப்பூங்கா, கற்பூங்கா, நகர அம்சங்கள், கோட்டை போன்ற சகல அம்சங்களினாலும் பூரணத்துவம் பெற்ற நகராக் அமைத்தான்.

- 2ம் அக்போ அரசன் (கி.பி. 608-618)
  * தூபாராமையைப் புதுபித்தல்.
  * புதிய விகாரைகளைக் கட்டுதல்.
  * விகாரைகளைப் பரிபாலிப்பதற்குச் சொந்தமாக நிலங்களை வழங்குதல்.
  * பெரிய குளங்களை அமைத்தல். (கிரித்தலை, சங்கத்தல், வலாஹஸ்ஸ)
  * காலிங்க அரச குடும்பத்துக்கு இந்நாட்டில் பாதுகாப்புப் பெற்றுக்கொடுத்து இந்நாட்டுக்கும் கலிங்க நாட்டுக்கும் இடையிலான உறவை நிலைநிறுத்தினான்.

- 4 ஆம் மகிந்தன் கி.பி. (966-972)
  * நாட்டில் நிழவிய குழப்ப நிலைக்கு மத்தியில் ஆட்சி நடத்துதல்.
  * உருகுணையில் கலகம் ஏற்படல்.
  * கலிங்க இளவரசியை பட்டத்து ராணியாக்கியதனால் கலிங்க உறவுகள் வளர்ச்சியடைதல்.
  * தென்னிந்திய ஆக்கிர்மிப்பு/ 2ம் பரந்தாகன்:

- 5 வது மகிந்தன் (982-1017)
  * இம்மன்னன் அரசனாகும் போது அநுராதபுர இராசதானியில் அரசியல் நிலைமை மிக மோசமாக இருந்தது.
  * அரச நீதிகளில் இருந்து விலகி மிகமோசமாக ஆட்சி செய்ததனால நாட்டு மக்கள் வரி கொடுக்காமல் மறுத்தல்.
  * அரசனின் 10 வது ஆட்சி ஆண்டில் கேரளப் படையினருக்கு சம்பளத்தைக் கூட வழங்க முடியாமல் அவர்கள் அரச மாளிகையைச் சுற்றி வளைத்து அரசனுக் கெதிராகக். கலகம் செய்தனர்.
  * அரசன் குழப்பக்காரரிடம் இருந்து தப்புவதற்கு உருகுணைக்குச் செல்லல்.
  * கி.பி. 1017 இல் சோழர் ஆக்கிரமிப்பு நடைபெறல். (1ஆம் ராஜராஜசோழன்)
  * 1ம் ராஜாஜனால் எழுதப்பட்ட கல்வெட்டில் பொலன்னறுவை, வெல்கம் விகாரை ஆகிய இடங்களில் கிடைத்தவற்றில் தெரிவது இலங்கையில் பல கிராமங்களில் வருமானம் தென்னிந்தியாவில் தஞ்சாவூர் கோயிலுக்கு தானம் செய்தனர் என்பதாகும்.
  * அக்காலத்தில் வெல்கம் விகாரை இராஜராஜம் பெரும்பள்ளி எனும் பெயரில் அறியப்பட்டுள்ளது.
  * சோழ ஆக்கிரமிப்பால் அநுராதபுர இராஜதானி மட்டுமல்ல உருகுணையில் சில பிரதேசங்களும் சோழ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது.

- 1ம் விஜயபாகு 1055-1110
  - * சோழரைத் தோற்கடித்து அநுராதபுரத்தை மீண்டும் மீட்டுக் கொள்ளல்.
    - ஒரு வருடத்தின் பின் பொலன்னறுவையை இராஜதானியாக்கல்.
    - உடைந்து போன குளம், கால்வாய் என்பவற்றை புனர்நிர்மாணம் செய்தல்
    - வெஹர விகாரையை புணர்நிர்மாணம் செய்தல்.
  - * ராமஞ்ஞ தேசத்துடன் சினேகத் தொடர்புகளை ஏற்படுத்தி புத்தசாசனத்துக்குச் சேவை செய்தான்.

- மகாபராக்கிரமபாகு (கி.பி 1153-1186)
  - * தக்கிண தேசத்தின் நிர்வாகியாகக் கடமையாற்றியமை.
    - அரசனானபின் பலம் வாய்ந்த நிர்வாகத்தைக் கட்டியெழுப்பல்.
    - பலம் வாய்ந்த கடற்படையொன்றை அமைத்தல்.
    - லாவோஸ், காம்போஜிய ஆகிய நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
  - * மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காம்போஜியாவிற்கு அனுப்பிய அரசகுமாரி தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் தர்மஞ்ஞ தேசத்தை ஆக்கிரமித்தல்
  - * பாண்டிய சிங்காசனம் தொடர்பாக ஏற்பட்ட பிணக்கில் பராக்கிரமபாகுவின் உதவியைப் பெற்றதனால் சோழ - சிங்களஅரசுகளுக்கிடையில் பிணக்குகள் ஏற்படல்.

- நிஸ்ஸங்கமல்லன் (1187-1196)
  - * கலிங்க வம்சத்துக்கு இந்நாட்டு அரசுரிமை உள்ளதென நிலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தான். (கல்வெட்டுக்கள் மூலம் தெரியவருகிறது)
  - * இலங்கையை ஆட்சி செய்த கலிங்க வம்ச மன்னர்களில் தான் முக்கியமானவன் என வெளிக்காட்டியமை.
  - * அரசாட்சியில் பதவி வகித்த விவசாயக் குடும்பத்தினர் சிலர் அரச பதவிகளைப் பெறும் நோக்கில் அரசனுக்கு எதிராகச் செயல்பட்டதனால் அவர்களது கருத்துக் களையும் கல் வெட்டுக்களில் எழுதி தனதாட்சியை நிலைநிறுத்த முயற்சி எடுத்தமை.
  - * எதிரிகள் பலர் இருந்தபோதும் மிகவும் காரிய சித்தமான ஆட்சி முறையொன்றைப் பின்பற்றியமை.
  - * நியாயமான வரிமுறை ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம் மக்களின் ஆதரவைப் பெற முயன்றமை.
  - * கலிங்க- பாண்டிய அதிகாரம் தொடர்பான குழப்பத்தால் அரசியல் நடவடிக்கைகளில் பிரதேச ஆட்சியாளரைக் கட்டுப்படுத்தி அவர்களின் அரச அதிகாரத்தையும் பெற்றுக் கொள்ளல்.
  - * தான் இருமுறை பாண்டிய நாட்டை ஆக்கிரமிப்புச் செய்ததாக கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொலன்னறுவைக் காலத்தின் முடிவு

- அமைதியாக நீண்ட காலம் ஆட்சி செய்து வெற்றி பெறக்கூடிய ஆட்சியாளர் இல்லாமல் போதல்.
- அரசியல் துறையில் குழப்பநிலை உருவாதல்.
- அரசியல் குழப்பநிலையைப் பயன்படுத்திய பிரதேச ஆட்சியாளர்கள் தலைதூக்கியமை.
- ஆட்சி முறை சீரழிந்து காணப்பட்டமையால் கலிங்க மாகனுக்கு அரசாட்சியைக் கைப்பற்ற இலகுவாதல்.
- 1215 இல் கலிங்க மாகன் 24000 படையினருடன் வந்து இலங்கையை ஆக்கிரமித்து பராக் கிரம பாண்டிய மன்னனைப் பிடித்து பொலன்னறுவை ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளல்.

- கலிங்க மாகன் இராஜரட்டையை அழித்தல். பராக்கிரம பாண்டிய மன்னனைக் கைது செய்து அரசனைச் சித்திரவதை செய்து அரசாட்சியைக் கைப்பற்றல்.
- அரச உரிமை உடையவர்களையும் அரச குடும்பத்தில் அரசுரிமை கோரக்கூடியவர்களையும் அழித்தமை.
- குலபேதங்களைப் பொருட்படுத்தாது குலங்களுக்குள் பொருத்தமில்லாத குடும்பத் தொடர் புகளை ஏற்படுத்தல்.
- அரச நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்கும் பிக்குமாரை அழித்தல், பிக்குமாருக்குத் தானமளித்தவர்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தல்.
- பௌத்த மத வழிபாட்டிடங்களை அழித்தல், விகாரைகளில் கலிங்கப்படைகளுக்கு தங்குமிடம் அளித்தல்.
- மதம், மொழி, இலக்கிய நூல்களை அழித்தான் - சுட்டெரித்தான்.
- நீர்ப்பாசனத் தொகுதியை அழிப்பதற்காகக் குளம், அணைக்கட்டுகள், கால்வாய்கள் என்ப வற்றை உடைத்து நாசம் செய்தல்.
- மரங்களை வெட்டி வீழ்த்துதல், சேனை, தோட்டங்களுக்குத் தீவைத்தல்.
- அனேக மக்களின் கைகால்கள் வெட்டப்பட்டு அங்கவீனர்களாக்குதல்.
- இவ்வாறான கொடூர நடவடிக்கைகளைக் கையாண்டு ஆட்சி செய்ததால் சிங்கள மக்கள் இராஜரட்டையை கைவிட்டு பாதுகாப்பு நாடி மலைய ரட்டைக்கும் ருகுணு ரட்டைக்கும் சென்றதனால் இராஜரட்டை ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

## செயற்பாடு 10.3.1

தேர்ச்சி மட்டம் : இலங்கையில் தொல்பொருள் யுகம் தொடர்பாக தகவல்களை பரிசீலிப்பார்.

செயற்பாடு : "ஆதிமனிதனை அறிந்து கொள்வோம்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01 - பாடப்புத்தகத்திலும் ஏனைய மூலாதாரங்களிலும் தகவல்களைத் திரட்டிக் கொள்ளக் கூடிய வினாக்கொத்து.
- இணைப்பு 02 - தொல்பொருள் அகழ்வு நடைபெறுகின்ற இடங்களைக் காட்டும் படம்
- இணைப்பு 03 - செயற்படிவம்
- இணைப்பு 04 - தொல்பொருள் கால மனிதனின் வாழ்க்கைக் கோலம் தொடர்பாக கற்கின்ற தகவல்களை பதியக் கூடிய அட்டவணை
- பாடப்புத்தகமும், ஏனைய மூலாதாரங்களும்
- இலங்கையின் புறவுருவப்படம்
- நிறப் பென்சில்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

ஆலோசனைகள் :

செயற்பாடு தொடர்பாக முதலில் மாணவர்களுக்கு அறிவுறுத்தவும்.

- இலங்கையில் தொல்பொருள் காலம் தொடர்பாக தகவல் பெறக்கூடிய மூலாதாரங்களைத் தேடுவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தல்.
- பாடப் பொறுப்பாசிரியர் என்ற முறையில் உங்களுக்கு முடியுமான வகையில் தேவையான மூலாதாரங்களை வழங்குவதற்கு முயற்சி எடுக்கவும்.
- இணைப்பு 01 வகுப்பில் சகல மாணவர்களாலும் வாசிக்கக்கூடியவாறு தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.
- இணைப்பு 2,3,4 குழுக்களுக்கு போதியளவு பிரதி செய்து கொள்ளவும்.

**படி 10.3.1.1 :**

- இணைப்பு 01 இன் படி தயாரித்த வினரக்களை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- பாடப்புத்தகத்தில் குறிப்பிட்ட பாடத்தினதும் ஏனைய மூலாதாரங்களையும் கற்று, கொடுக்கப்பட்டுள்ள வினாக்கொத்துக்கு ஏற்ப விடைகளை தேடுவதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- மாணவர்களால் கற்ற காரணிகள் தொடர்பாக கேட்டு பின்வரும் காரணிகள் உள்ளடங்கும் வகையில் கலந்து ரையாடல் ஒன்றில் ஈடுபடுத்தவும்.

- எழுத்து மூல வரலாறொன்று இல்லாத காலம் தொல் பொருள் காலமாகும்.
- தொல் பொருள் அகழ்வுகளினால் தேடிப் பெற்ற எழும் புகளின் எச்சங்களும் சிதைவுகளுமே தொல்பொருள் யுகம் தொடர்பான தகவல்களைத் தருகின்றன.
- தற்போது கிடைத்துள்ள தகவல்களின் படி பழைய கற்காலம் மத்திய கற்காலம், புதிய கற்காலம் என மூன்று காலங்களாக தொல்பொருள் யுகம் இனங் காணப்பட்டுள்ளது.
- இலங்கையின் பல்வேறு இடங்களில் நடத்திய அகழ் வுகள் மூலம் தொல்பொருள் காலம் தொடர்பான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
- பலாங்கொடை மனிதன் என அறியப்பட்டுள்ளது இலங் கையில் தொல்பொருள் கால மனிதனாகும்.
- இலங்கையில் தொல்பொருள் கால மனிதனின் கலா சாரம் பலாங்கொடை கலாசாரம் என அறியப்பட் டுள்ளது.

(15 நிமிடங்கள்)

**படி 10.3.1.2 :**

- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களா கப்பிரிக்குக.
- இணைப்பு 03 இற்கேற்ப தயாரிக்கப்பட்ட தொல்பொருள் அகழ்வுகள் நடைபெற்ற இடங்களைக் குறித்துக்காட்டும் படத்தை குழுக்களிடையே பகிர்ந்தளிக்கவும்.
- செயற்படிவத்தின் படி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- மாணவர்களிடையே சென்று செயற்பாடு தொடர்பாக அவர்களுக்குத் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வழி காட்டல் செய்து மாணவர்கள் செயற்பாட்டை செய்வ தற்கு உதவி செய்யுங்கள்.
- செயற்பாடு தொடர்பாக மாணவர்களின் ஒத்துழைப்பை யும் பங்குபற்றுதலையும் முயற்சியையும் கணிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

(30 நிமிடங்கள்)

படி 10.3.1.3 :

- செயற்பாட்டின் போது அந்தந்தக் குழுக்களால் தயார் செய்யப்பட்ட படங்களையும் தகவல் அடடவணை யையும் வகுப்பில் முன்வைப்பதற்கு இடமளிக்கவும்.
- குழுக்கள் முன்வைக்கும் போது அந்தத்தகவல்களின் முக்கியத்துவத்தை மதிப்பிட்டு குறைபாடுகளை நீக்கி விருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டலூடாக பின்வரும் காரணிகள் உள்ளடங்குமாறு மீட்டாய்வில் ஈடுபடுத்தவும்.

- பழைய கற்காலம், மத்திய கற்காலம், புதிய கற்காலம் ஆகிய தொல்பொருள் யுகங்களில் மூன்று காலங்களுக் குமான ஆதாரங்கள் இலங்கையில் கிடைத்துள்ளன.
- மத்திய கற்காலம், புதிய கற்காலம் ஆகிய இரண்டு காலங்களுக்கும் சொந்தமான தொல்பொருள் ஆதாரங் கள் இலங்கையில் பல்வேறு இடங்களில் கிடைத்து உள்ளன.
- பழைய கற்காலத்தில் இலங்கையில் ஆதி மனிதன் பற்றிய தகவல்கள் குறிப்பிட்டனவேயாகும்.
- ஹோமோசேபியன் பலாங்கொடை நீஸ் என அறியப்பட் டது இலங்கையில் மத்திய கற்காலத்தின் ஆதி மனித னேயாகும்.
- தொல்பொருள் அகழ்வினால் கிடைத்துள்ள ஆதாரங் களின் படி மத்திய கற்காலத்திலும் புதிய கற்காலத் திலும் ஆதிமனிதனின் வாழ்க்கை முறை (பயன் படுத்திய ஆயுதங்கள், வீட்டு உபகரணங்களும் வேறு உபகரணங்களும் உணவு, இருப்பிடம் ஆகியன) பற்றிய தகவல்களைப் பெறமுடியும்.
- மத்திய கற்காலத்தில் ஆதிமனிதனை விட புதிய கற் கால அதி மனிதனின் வாழ்க்கை முறையில் முன்னேற் றகரமான இயல்புகள் இருந்ததென தொல்பொருள் ஆதாரங்கள் மூலம் அறியலாம்.

(35 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- தொல்பொருள் கால மனிதனின் வாழ்க்கைமுறை பற்றி தகவல்களை விவரிப்பார்.
- இலங்கையில் தொல்பொருள் இடங்களை படத்தில் குறித்துப் பெயரிடுவார்.
- எமது தாய்நாடு மன்ித நாகரிகத்தில் நீண்டவரலாற்றை உடைய நாடென்ற அபிமானத்தை மதிப்பார்.
- ஒத்துழைப்புடன் செயற்படுதவற்கும் தலைமைத்து வத்தை ஏற்பதற்குமான திறன்களைக் காட்டுவார்.
- சக மாணவர்களின் முன்மாதிரியைப் பெற்று அனுபவங் களை விரிவுபடுத்திக் கொள்வார்.

## பின்தொடர் வேலை :

- இலங்கையில் தொல்பொருள் காலம் பற்றிய தகவல் களை உள்ளடக்கிய கையேடு ஒன்றைத் தயாரிக்குக. (தகவல்களை உள்ளடக்கும் போது அது தொடர்பாக பயன்படுத்திய, தேசப்படம், படங்கள், சித்திரம் என்பவற் றையும் உள்ளடக்கி கையேட்டினை மிகவும் சிறந்த முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்)

## இணைப்பு 01

- தொல்பொருள் யுகம் என்றால் என்ன?
- தொல்பொருளியல் காலத்தைக் கற்பதற்கு உதவுகின்ற சான்றுகள் எவை?
- தற்போது கிடைத்த தகவல்களின் படி அறியப்பட்டுள்ள தொல்பொருள் யுகத்தின் மூன்று காலங்களையும் பெயரிடுக.
- இலங்கையில் தொல்பொருள் யுகம் பற்றி ஆதாரம் கிடைத:துள்ள இடங்கள் சிலவற் றைப் பெயரிடுக.
- இலங்கையில் தொல்பொருள் கால மனிதன் எப்பெயரால் அழைக்கப்படுகிறான்?
- தொல்பொருள் கால மனிதனின் வாழ்க்கைமுறையை அறிவதற்கு பயன்படுத்தக்கூடிய தொல்பொருள் ஆதாரங்கள் எவை?

# இணைப்பு 02

## தொல்பொருள் அகழ்வு நடைபெறும் இடங்கள்




ALK அத்தனகொட அலுலேன
BA மானியம கலபெலிலேன
BPB பெல்லன்பதிபலஸ்ஸ
BD குருவிடபடதொம்பலேன
KB கிதுல்கல பெலிபேன
RA ராவனா அல்ல
*UF யடகம்பிடிய பாகியான்கல*

## இணைப்பு 03

### செயற்படிவம்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்படும் வேலை தொல் பொருள் யுகம் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய கையேடு ஒன்று தயாரிப்பதற்கு தேவையானவற்றை ஒழுங்குபடுத்தி திட்டமிடுவதாகும். அதற்காக
- பாடப்புத்தகத்தில் குறிப்பிட்ட பாடத்தில் வழங்கப்பட்டுள்ள மூலாதாரங்கள், தேசப்படம் அட்டவணை என்பவற்றைக் கற்று பின்வரும் இடங்களை
  * மத்திய கற்காலத்திற்கு
  * புதிய கற்காலத்திற்கு தகவல் கிடைத்துள்ள இடங்கள்
  * தொல்பொருள் அகழிவு நடைபெறும் இடங்கள் என்ற அடிப்படையில் வெவ் வேறாக விளங்கக்கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக. அதற்கு சுட்டியொன்றை வழங்கவும்.

  குதிரமலை, பொம்பரிப்பு, கிதுல்கல, பெலிலேன, மாமடவ, குருகல்ஹின்ன, குழுவிட, படதொம்பலேன, பெல்லன்பதி பலஸ்ஸ, அத்தனகொட அலுலென, மானியம்கம, ராவண அல்ல, யடகம்பிடிய பாகியான்கல
- நீங்கள் கற்றுள்ள விடயங்களினூடாக கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப் படுத்துக.
- குழுக்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் குழுக்களால் தயார் செய்யப்பட்ட தேசப் படத்தையும் தகவல் அட்டவணையையும் வகுப்பறையில் முன்வைக்கவும்.

இணைப்பு 04

| தொல்பொருள் காலம் | ஆதாரம் கிடைத்துள்ள இடம் | பயன்படுத்திய ஆயுதம் | வேறு உபகரணங்கள் | உடை | பழக்கப்பட்ட மிருகங்கள் | பழக்க வழக்கங்கள் | புதிய கண்டு பிடிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## செயற்பாடு 10.3.2

**தேர்ச்சி மட்டம்** : ஆரியக் குடியேற்றம் அமைக்கப்பட்டமை பற்றிக் கற்பார்.

**செயற்பாடு** : "இலங்கையின் முதல் குடியேற்றத்தை அறிந்து கொள்வோம்"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 01 - மகாவம்சத்தில் படவன்துடாவே தொகுப்பில் 7வது பந்தியிலிருந்து பிரதி பண்ணிய பகுதியொன்று.
- இணைப்பு 02 - சீன நாட்டு பிக்குவான ஹியுன்சாங் பாகியான பிக்குமார்களால் எழுதப்பட்ட அறிக்கை களின் சிங்களமொழிபெயர்ப்பின் பிரதி பண்ணப்பட்ட ஒரு பகுதி
- இணைப்பு 03 - மகாவம்வம் I ம் பாகத்தில் 6 வது பந்தியின் பிரதி பண்ணப்பட்ட ஒரு பகுதி (விஜயனின் வருகையும் ஆரியரின் குடியேற்றப் பரம்பலும் பற்றிய தகவல்கள் அடங்கியது)
- இணைப்பு 04 - இலங்கையில் முதல் ஆரியக் குடியேற்றம் பரவிய நதிகளைக் குறித்துக்காட்டுகின்ற இலங்கையின் புறவுருவப் படம்
- இணைப்பு 05 - செயற்பத்திரம்
- பாடப்புத்தகமும், ஏனைய மூலாதாரங்களும்
- எழுதும் கடதாசிகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**அறிவுறுத்தல்** : இணைப்பு 1 ஐயும் 2 ஐயும் வகுப்பறையில் மாணவர்கள் மூவருக்கு ஒன்று கொடுக்கக் கூடிய முறையில் பிரதி செய்து கொள்ளவும்.

இணைப்பு 3,4,5 ஆகியவற்றை குழுக்களுக்கு போதுமான அளவில் பிரதி செய்து கொள்ளவும்.

**படி 10.3.2.1** :

- இணைப்பு 01 ஐயும் பாடப்புத்தகத்தில் குறிப்பிட்ட பாடப் பகுதியையும் கற்பதற்கு மாணவர்களை ஈடு படுத்தி அதில் குறிப்பிட்டுள்ள விஜயனின் வருகை தொடர்பான சம்பவம் பற்றிய கதைகளை, தகவல் களை மாணவரிடம் விசாரித்தறியவும்.

- மாணவர்கள் முன்வைக்கும் கருத்துக்களினூடாக விஜயனின் வருகையுடன் தொடர்பான வரலாற்று ரீதியான முக்கியத்துவம் பெறும் தகவல்களை கரும் பலகையில் குறிப்பிடுவதற்கு முயலவும்.
- இணைப்பு 02 ஐ கற்பதில் மாணவர்களை ஈடுபடுத்தி அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களையும் வம்சக் கதைகளில் வருகின்ற தகவல்களையும் ஒப்பிட்டு அவற்றில் உள்ள வேறுபாடுகள் தொடர்பாக மாணவர் களிடம் கேட்டறியவும்.
- வம்சக்கதைகளில் வருகின்ற தகவல்களை விட வேறு அறிக்கைகளுக்கேற்ப இலங்கையில் முதற்குடியேற்றம் அமைக்கப்பட்டது பற்றி மாணவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களையும் கரும்பலகையில் எழுதவும்.
- மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்களின் படி கரும் பலகையில் குறிப்பிடப்பட்ட கருத்துக்களை பாடத்தின் வளர்ச்சிக்கு அவசியமான திருத்தங்களுடன பின்வரும் விடயங்கள் உள்ளடக்கத்தக்கவாறு கலந்துரையாடல் செய்யவும்.

| |
|---|
| • ஆரியர் வருகைக்கு முன் ஒரு மக்கள் கூட்டம் இலங்கையில் வாழ்ந்துள்ளனர். |
| • இலங்கைக்கு வந்து குடியேற்றங்களை அமைத்த ஆரியர் இந்தியாவின் ஒரே பிரதேசத்தில் இருந்து வந்தவர்கள் அல்ல. |
| • விஜயனும் கூட்டத்தினரும் இந்தியாவின் கிழக்குப் பிரதேசத்தில் இருந்து வந்த குடியேற்றங்கள் அமைத் திருப்பார் என நம்பப்படுகின்றது. |
| • வர்த்தகத் தொடர்புகளைக் கருத்திற் கொண்டு முதற் குடியேற்றங்கள் தோன்றியது. |

(15 நிமிடங்கள்)

**படி 10.3.2.2 :**

- மாணவர்களை பொருத்தமான முறையில் குழுக்களாக் கவும்.
- இணைப்பு 3,4,5 ஆகியவற்றை குழுக்களுக்குப் பிரித்து கொடுக்கவும்.
- செயற்பத்திரத்தின் படி மாணவர்களை குறிப்பிட்ட செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான இடத்து அவசியமான ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டலுடன் மாணவர்களின் வேலையை இலகுவாக்குவதற்கு உதவி செய்யவும்.
- மாணவர்களை உரிய வேலைகளில் ஈடுபடுத்துவதுடன் அவர்களின் குழு வேலைப்பாட்டில் காட்டும் ஆர்வம், குழுவில் காட்டும் ஒத்துழைப்பு செயற்பாடு, பங்கு பற்றுதல் ஆகியன தொடர்பாகக் கணிப்பீடு செய்யவும்.

(15 நிமிடங்கள்)

படி 10.3.2.3 :

- இலங்கையில் முதல் ஆரியக் குடியேற்றங்களின் பரம்பல் தொடர்பாக மாணவர்களால் தயாரிக்கப்பட்ட படத்தையும் விரிவுரைக்காக அவர்களால் சேர்க்கப்பட்ட கருத்துக்களையும் முன்வைப்பதற்கு சந்தர்ப்பமளிக்கவும்
- மாணவர்கள் முன்வைக்கும் கருத்துக்களில் திருத்தங்கள் இருப்பின் அவற்றைத் திருத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு வழிகாட்டவும்.
- மாணவர்களின் ஒத்துழைப்பையும் பங்குபற்றுதலையும் பெற்று பின்வரும் கருத்துக்கள் வெளிப்படுமாறு மீட்டாய்வில் ஈடுபடவும்.

- இந்தியாவிலிருந்து பல்வேறு ஆரியக் கூட்டங்கள் படிப் படியாக இலங்கைக்கு வந்துள்ளனர்.
- வம்சக் கதைகளுக்கு அமைய விஜயனால் தம்ப பண்ணி குடியேற்றம் அமைக்கப்பட்டதோடு அது மல்வத்து ஓயா முகத்துவாரத்துக்கு அண்மையில் இருந்திருக்கும் என கருதப்படுகிறது.
- விஜயனுடன் வந்த மந்திரிகளாலும் கதம்ப நதி (மல்வத்து ஓயா) அண்மையில் அநுராதபுரகமயும் கம்ஹரி நதி (கனதார ஓயா) ஓரத்தில் உபதிஸ்ஸ கமவும் அமைக்கப்பட்டது.
- விஜயனுடன் வந்த கூட்டத்தினால் அவனது அமைச்சர் களால் உஜ்ஜினி, ஊடுவெல, விஜித போன்ற குடி யேற்றங்கள் கட்டியெழுப்பப்பட்டன.
- விஜயனின் பட்டமளிப்புக்காக பட்டத்துராணி மதுரா புரியிலிருந்து கொண்டு வரப்பட்ட போது அவர்களுடன் இந்தியாவின் கிழக்கு, மேற்குப் பிரதேசங்களிலிருந்து மட்டுமல்லாமல் தென்னிந்தியப் பிரதேசங்களிலிருந்தும் கூட வந்த ஆரியர் இங்கு குடியேற்றங்களை அமைத் தனர்.
- விஜய மன்னனுக்குப் பின்வந்த பண்டுவாசுதேவன் அவனது அரசி பத்தகச்சானாவுடனும் வந்த கூட்டத் தினரும் இலங்கையில் முதற் குடியேற்றங்களை நிறுவுவதில் பங்களிப்புச் செய்தனர்.
- ராமகேன, ஊருவெல, அனுராத, விஜிதகம, தீகாயு, ரோஹண ஆகியன அமைக்கப்பட்ட குடியிருப்புக் களாகும் என வம்சக்கதைகளில் குறிப்பிட்டுள்ளது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு
நியதிகள் :

- இலங்கையில் முதல் ஆரியக் குடியேற்றங்கள் பரவிய விதத்தை விவரிப்பார்.
- இலங்கையில் "முதல் ஆரியக் குடியேற்றம்" என்ற தலைப்பில் பாடசாலை வரலாற்று மன்றத்தில் பேச்சு ஒன்றை நிகழ்த்துதல்.
- இலங்கையில் ஆரியக் குடியேற்றப் பரம்பல் பற்றி வம்சக்கதைகளில் உள்ள எல்லாத் தகவல்களும் பூரணமாக ஏற்றுக் கொள்ளவோ அல்லது எல்லாம் ஒதுக்கக் கூடிய தகவல்களோ இல்லை என்பதை ஒப்புக் கொள்வார்.
- ஆத்ம சக்தியுடைய ஒரு தொகுதியினர் எதிர்காலத்தில் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கான திறனை காட்சிப்படுத்துவார்.
- குழுச் செயற்பாட்டின் போது குழுவில் உள்ள சகல ரோடும் செயலாற்றி அனுபவங்களை விரிவுபடுத்திக் கொள்வர்.

பின்தொடர் வேலை

- உங்களால் கோவைப்படுத்திய கருத்துக்களைப் பயன்படுத்தி பாடசாலையில் வரலாற்று மன்றத்தில் "இலங்கையில முதல் ஆரியக் குடியேற்றங்களின் பரம்பல்" என்ற தலைப்பில் ஒரு உரை நிகழ்த்தவும்.

## இணைப்பு 01

புத்தர் பெருமான் மரணப்படுக்கையில் இருக்கும் போது இந்திர தேவனும் தேவர்களும் சூழ்ந்து நின்றனர். அப்போது புத்தர் பெருமான் இந்திரதேவனிடம்,

சிங்கபாகு அரசனின் புத்திரன் விஜயனும் 700 தோழர்களும் லாட தேசத்தில் இருந்து இலங்கைத் தீவில் காலடிவைத்துள்ளனர். எனது சாசனத்தையும் அங்கு நிலைநிறுத்துவர். அதனால் அவர்களையும் இலங்கையையும் நன்கு பாதுகாக்க வேண்டும் என்றார்.

இதனை மிக கௌரவத்துடன் செவிமடுத்த இந்திரன் இலங்கையைப் பாதுகாக்க உத்பலவர்ண தேவரை உடனே அனுப்பிவைத்தார். உத்பலவர்ண தேவர் முனிவர் வேசத்தில் மரமொன்றின் கீழ் அமர்ந்து கொண்டார். அப்போது விஜயனும் தோழர்களும் அவ்விடம் வந்து "நல்லடியாரே! இது என்ன தீவு?" என்று கேட்டார்கள். முனிவர் வேடத்தில் இருந்த உத்பலவர்ண தேவர் "இது இலங்கை தீவு" என்று கூறி இங்கு மனிதர்கள் இல்லாவிட்டாலும் நீங்கள் பயபப்டத்தேவையில்லை என்றியம்பி விட்டு புனித நீர் தெளித்து பிரித்நூலை அவர்களின் கைகளில் கட்டிவிட்டு வான் வழியே சென்றார். (மகாவம்சத்தின் படவன்துடாவத் தொகுதியின் 7வது பந்தியின் சுருக்கம் - தமிழ் ஆக்கம்)

## இணைப்பு 02

சிங்கள இராச்சியத்தின் எழுச்சி பற்றி சீனதேசத்து பிக்குவான "ஹியுங்சாங்சிங்" இரண்டு விளக்கங்களை எழுதியுள்ளார். அதில் ஒரு விபரம் மகாவம்சக்கதைக்கிணங்க எழுதப்பட்டாலும் சில முக்கிய தகவல்கள் கைவிடப்பட்டுள்ளன. குவேணியின் சம்பவம் முழுவதும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. கதையின் முற்பகுதிக்கு பின்னணியாக இருப்பது இந்தியாவாகும். சிங்கத்தின் மகன் தனது தந்தையைக் கொலை செய்தமையால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு ரத்தினத்துவிபத்திற்கு கரையேறினான். இரத்தினதுவிபத்துக்கு வந்த அவன் வியாபாரதத்திற்காக அங்கு வந்த வியாபாரிகளைக் கொன்று அவர்களுடைய பிள்ளைகளை தடுத்து வைத்துக் கொண்டான். காலப்போக்கில் தடுத்து வைக்கப்பட்ட கூட்டத்தினர் அதிகரித்து அவர்கள் அமைச்சர்களையும் அரசனொருவரையும் தெரிவு செய்து கொண்டு அரசொன்றை அமைத்தனர். அவர்கள் அமைத்த அரசு சிங்ஹல எனும் பெயரைப் பெற்றது.

பழைய கதைகளுள் மிகவும் குறைந்த கற்பனையுடையது நேசத்து பிக்குவான பாகியானின் குறிப்புக்களாகும். அந்த விபரம் இவ்வாறாகும்.

* முதலில் இலங்கையில் வாழ்ந்தோர் (ராசுகோ, மகரு) இயக்கர், நாகர் ஆகும். பல்வேறு நாடுகளின் வியாபாரிகள் வியாபாரத்திற்காக இங்கு வந்துள்ளனர். கொடுக்கல் வாங்கலின் போது இயக்கர் தாம் தென்படாமலும் தமது பெறுமதியான பொருட்கள் மாத்திரம் தென்படும் விதத்திலும் அமைத்தனர். பொருட்களின் விலையை அங்கு வைத்து விட்டு பொருட்களை எடுத்துச் சென்றனர். இந்நாட்டின் கவர்ச்சியை அறிந்து கொண்ட ஏனைய நாட்டு மக்கள் பெருந்தொகையினர் இங்கு வந்தனர். காலப்போக்கில் இங்கு அரசொன்று உருவாகியது.

# இணைப்பு 03

விஜயன் எனும் பெயருடைய அரசகுமாரன் ஒருவன் இந்தியாவிலிருந்து 700 தோழர்களுடன் இலங்கைக்கு வந்தான். அக்காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த இயக்கர் நாகர்களை (யக்தனத்) வெற்றிகொண்டு தமதாட்சியின் கீழ் கொண்டுவந்ததாகவும் அவனுக்குப் பின் படிப்படியாக குடியிருப்புகள் பரந்து சிங்கள இராசதானி முன்னேற்றமடைந்ததென்றும் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது. விஜய மன்னனுக்கு மதுரையில் இருந்து மனைவி கொண்டுவரப்பட்டது. அவனுக்கு பின் அரசைப் பொறுப்பேற்பதற்கு பண்டுவாசு தேவ அரசன் வந்தான். பின் பண்டுவாசு தேவனின் மனைவியான பத்தகச்சானா இளவரசி இந்நாட்டுக்கு வந்தார். பத்தகச்சானாவின் சகோதரர்கள் இலங்கைத் தீவுக்கு வருதல் போன்ற பல்வேறு கதைகள் விஜயன் கதையோடு தொடர்பு கொண்டிருக்கின்றது.

வம்சக்கதைகளின் படி விஜயன் தம்பபண்ணி நகரை கட்டியெழுப்பியதோடு அரசன், அமைச்சர்கள் கதம்ப நதிக்கு அருகில் அநுராத கிராமத்தையும், கம்ஹிர (கனதார) நதியோரம் அநுராத கிராமத்துக்கு வடக்கில் உபதிஸ்ஸ கிராமமும் அமைத்தனர். விஜயனின் ஏனைய அமைச்சர்கள் வெவ்வேறாக உஜ்ஜனி, ஊருவெல, விஜித நகரம் என்பவற்றை கட்டியெழுப்பினர். விஜயனின் முடி சூட்டலுக்காக அரச குமாரியொன்றைத் தேடிச் சென்ற அவனது அமைச்சர்கள் மதுரை நகரில் அரச குமாரியும் 18 தம்பியர்களுடனும் வந்தனர். அவர்கள் இந்நாட்டில் கரை இறங்கியது மகாதித்தவில் ஆகும். விஜயனின் மறைவுக்குப் பின் இந்நாட்டு ஆட்சியை ஏற்க வந்த பண்டுவாசுதேவன் மகாகந்தார நதி முகத்துவாரத்தில் இறங்கி உபதிஸ்ஸ கிராமத்துக்குச் சென்றான். அவனின் பட்டத்து ராணியாகிய பத்தகச்சானா சோகர்ணா துறைமுகத்தில் இறங்கி உபதிஸ்ஸ கிராமத்தை நோக்கிப் பயணம் செய்தார். பத்தகச்சானா ராணியின் சகோதரர்கள் ராமகோண, ஊருவெல, அநுராத, விஜிதகம, தீகாயு, ரோகண என்ற தனது பெயர்களாலே குடியேற்றங்களை அமைத்தனர். இந்தக் குடியேற்றங்கள் நதி முகத்துவாரங்களிலும் நதிக்கரைகளிலும் அமைந்தன. முதன்முதல் வடமேற்கு இலங்கையிலும் அதன் பின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்திலும் ஆரம்பித்து நாட்டின் உட்பகுதியில் பரவியதெனத் தெரிகிறது.

இணைப்பு 04

ஆரியக் குடியிருப்புகள் அமைக்கப்பட்ட நதிக்கரைகள்



# இணைப்பு 05

## செயற்பத்திரம்

உங்கள் குழுவுக்கு வழங்கப்படும் வேலை இலங்கையின் முதல் ஆரியக் குடியேற்றம் ... தலைப்பின் கீழ் பாடசாலை வரலாற்றுக் கழகத்தில் உரையொன்று ஆற்றுவதற்கு தேவை... கருத்துக்களை உள்ளடக்கிய குறிப்பொன்று தயாரிப்பதாகும். அதற்காக பாடப்புத்தகத்... குறிப்பிட்ட பந்தியையும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மூலாதாரங்களையும் கற்கவும்.

பின்வரும் வினாக்களுக்கு விடையளித்து அதன்படி உங்கள் பேச்சுக்குத் (உரைக்கான) தேவை... குறிப்பைத் தயாரித்துக் கொள்ளவும்.

- இலங்கையில் முதல் ஆரியக் குடியேற்றம் பற்றிய தகவல்களை பெறக்கூடிய மூலாதார... எவை?
- வரலாற்று ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் படி இலங்கையில் முதல் குடியேற்றம் அமைக்கப்பட்டது தொடர்பாக எடுக்கக்கூடிய முடிவு எதுவாகும்?
- படிப்படியாக இலங்கைக்கு வந்த ஆரியக் குழுக்களால் அமைக்கப்பட்ட குடியேற்றங்... காட்டும் அட்டவணையைத் தயாரிக்குக.
- வழங்கப்பட்டுள்ள இலங்கையில் முதல் ஆரியக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட ... ளைக் காட்டும் இலங்கைப் படத்தில் அக் குடியேற்றங்கள் பரவி இருந்த முறையைக் குறித்து பெயரிட்டு ஆறுகளையும் பெயரிடுக. (இதற்காக பாடப்புத்தகத்தையும் ஆதாரங்களையும் பயன்படுத்தவும்.)
- இலங்கையில் முதல் ஆரியக் குடியேற்றம் பரவிய முறையை சுருக்கமாக விளக்குக.

செயற்பாடு 10.3.3

தேர்ச்சி மட்டம் : ஆரியக் குடியேற்றம் அமைக்கப்பட்டமை பற்றிக் கற்பார்.

செயற்பாடு : "ஆரியர்களின் அரசியல், பொருளாதார நிலைகளை அறிந்து கொள்வோம்"

காலம் : 80 நிமிடங்கள்

ர உள்ளீடுகள் :

- இணைப்பு 01 - பிரவேசப் பிரச்சினை
- இணைப்பு 02 - ஆரியர்களின் நிர்வாகம் பற்றிய விளக்கமொன்று
- இணைப்பு 03 - செயற்பத்திரம்
- பாடநூல்/ வேறு துணை நூல்கள்
- கடதாசிகள்
- பிரிஸ்டல் போர்ட்/ டிமை கடதாசி
- கலர் பென்சில்/ பெல்ட் பேனைகள்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

டி 10.3.3.1 :

- இணைப்பு 1 ஐக் கொண்டு பாடத்தை முன்வைத்தல்.
- பாடப்புத்தகத்தில் குறிப்பிட்ட பாடத்தைக் கற்றலின் போது இணைப்பு 1 இல் உள்ள பிரச்சினைகளுடன் தொடர்புடைய தகவல்களை சேகரிப்பதற்காக மாணவர் களுக்கு இடமளித்தல்.
- மாணவர்கள் கற்றவைகளில் ஏற்பட்ட பிரச்சினை களைக் கேட்டறிந்து ஒவ்வொரு துறைகளிலும் மாண வர்கள் முன்வைத்துள்ள கருத்துக்களை வெவ்வேறாக கரும்பலகையில் குறித்தல்.
- மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களுக்கு மேலதி கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • ஆரியர்களின் வருகை பின்பு இலங்கையின் அரசியல் முறையான ஒரு மாற்றம் ஏற்பட்டமை. |
| • இதுவரை காணப்பட்ட பொருளாதார முறை மாற்றம் அடைந்து முறையானதொரு பொருளாதாரம் தோற்று விக்கப்பட்டமை. |
| • ஆரியர்களின் வருகையால் இன்றுவரை காணப்பட்ட சமூக கலாசார நிலை புதுத்தோற்றம் பெற்றமை. |

(15 நிமிடங்கள்)

படி 10.3.3.2 :

- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்குக.
- செயற்படிவத்தை குழுக்களுக்கு வழங்கவும்.
- செயற்படிவத்தின் படி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதன் மூலம் மாணவர்களின் செயற்படிவத்தை இலகு படுத்த ஒத்துழைப்பு நல்குதல்.
- செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் நடத்தைக் கோலங்களை நியதிகளுக்கு ஏற்ப கணிப்பீட்டுக்கு உட்படுத்தல்.

(35 நிமிடங்கள்)

படி 10.3.3.3 :

- மாணவர்களால் உருவாக்கப்பட்ட எண்ணக்கரு விளக்கப்படம்.
- வகுப்பில் காட்சிப்படுத்தி அதிலுள்ள வடிவங்களை விளக்கிக் கூறுவதற்கு மாணவர்களுக்கு அவகாசம் வழங்குதல்.
- மாணவர்களது ஆக்கங்களில் உள்ள குறை, நிறைகளை அவதானித்து நிறைகளை மதித்தலும் குறைகளுக்கான வழிகாட்டலைச் செய்தலும் அவ்வாறான வழிகாட்டலுக்காக பின்வரும் கருத்துக்களை கருத்திற் கொள்ளல்.

- விஜயனுடன் வருகை தந்த ஏனைய குழுக்களால் உருவாக்கப்பட்ட குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு முறையான அரசு ஒன்று தோற்றம் பெற்றமை.
- அவ்வாறு இருந்தாலும் ஆரியர் குடியேற்றங்களின் நிர்வாகம் முழுமையானதாக அமைந்ததா? என்பது பிரச்சினைக்குரிய ஒரு விடயமாக இருந்தமை.
- விஜயனும் பண்டுவஸ் தேவ மன்னனும் முடிசூட்டு விழாக்கள் நடாத்தியமை பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்படுவதால் அவர்கள் அனைத்து ஆரிய குடியேற்றங்களுக்கும் அதிபதிகளாக இருந்தமை.
- குடியேற்றங்கள் அமைக்கப்பட முன் இலங்கையில் ஒருமைப்பாடுடைய தன்மை காணப்படவில்லை.
- மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்ப ஆரிய குடியேற்றங்கள் குல ரீதியில் அமைந்த சிறு சிறு இராச்சியங்களால் விளங்கின.
- இக்கோத்திர அரசுகள் காமினி, பருமக அகிய பிரதானிகளின் கீழ் இருந்தன.
- அரசனுக்கு உதவியாக அதிகாரங்கள் (அமைச்சர்கள்) இருந்தன.
- ஆரியர்களின் சீவனோபாயம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தமை.

- குடியேற்றங்கள் தோற்றம் பெற்றது முதல் அங்கு விவசாயப் பொருளாதாரம் முக்கிய அங்கமாக விளங்கியமை.
- ஆரியர் குடியேற்றம், நாட்டின் உள்நாட்டின் விவசாயத்திற்கும் நீர்ப்பாசனத்துறைக்கு பிரதான இடத்தை வழங்கி இருந்தமை பற்றி மகா வம்சத்தில் குறிப்பிடப் படுகின்றது.
- மதுராபுரி இராணியுடன் வருகை தந்த பதினெட்டு கைவிளைஞர்களினால் உருவாக்கப்பட்ட ஆரியர் குடியேற்றத்தின் பின் இலங்கையின் கைத்தொழிற்துறை வளர்ச்சி அடைந்தமை.
- இடைக்கிடையே வந்த ஆரியர் குழுக்களின் காரணமாக வர்த்தகம் என்பன பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெற்றமை.
- ஆரியர் குடியேற்றம் பரவியதன் பின் இலங்கை மக்கள் அனைத்து பழக்க வழக்கங்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமூகமாக இருந்தமை.
- ஆரியர்கள் இரும்பின் உபயோகத்தை அறிந்திருந்தமையால் குடியேற்றம் விரிவடைந்ததுடன் இரும்பின் உபயோகமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம்.
- ஆரியர் குடியேற்றங்கள் பரவியதனால் இலங்கையில் பல்வேறு சமயங்களும் வழிபாட்டு முறைகளும் ஏற்பட்டமை.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஆரியர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நிலைமைகளை விளக்குவார்.
- ஆரியர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நிலையினை விளக்குகின்ற எண்ணக்கரு விளக்கப்படம் ஒன்றை அமைப்பார்.
- ஒன்று பட்டு கருமமாற்றுவதற்கும் தலைமை வகிப்பதற்கும் இயலும் என்பதை ஆக்கதின் மூலம் காட்சிப் படுத்துவர்.
- ஒத்துழைப்புடன் கருமமாற்றியதுடன் தலைமைத்துவத்தை ஒத்துழைப்புடன் ஏற்பதற்கான ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- குழுச் செயற்பாட்டின் போது குழுவில் உள்ள சகலரோடும் செயற்படுவார்.

# இணைப்பு 01

இலங்கையில் ஆரியர் குடியேற்றம் ஆரம்பிக்க முன்பும் பின்பும் பின்வரும் துறைகளில் நீர் காணும் மாற்றங்கள் எவை?

- அரசியல்
- பொருளாதாரம்
- சமயம்
- பழக்க வழக்கங்கள்
- உடை

# இணைப்பு 02

இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்கள் இலங்கையில் குடியிருப்புக்களை அமைத்தமை பற்றி மகாவம்சம் குறிப்பிடும் தகவல்கள் அதிகமானவற்றை நம்பக் கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு ஆரியர் இடங்களையும் ஆரியர்களின் ஓர் இடம்பெயர்வுச் சந்தர்ப்பத்தையும் வெளிப்படுத்தும் ஓர் குறிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜயனின் பின்பு அரசாட்சிக்காக வந்த பண்டுவாசுதேவ மன்னன் பற்றியும் அவனது மனைவியான பத்தகச்சானாவின் சகோரதர்களினால் அமைக்கப்பட்ட குடியேற்றங்களில் சிலவற்றை இங்கு மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவ்வாறு அமைக்கப்பட்ட குடியேற்றங்களில் ஒருவெல அநுராத, தீகாயு, ரோகன என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

குல ரீதியான முறையில் ஆட்சி முறை இங்கு இணைந்துள்ளது. இக்குலமுறையிலான ஆட்சி காமினி, ரஜ, பருமக என்ற பிரதானிகளின் கீழ் நீண்ட காலம் நிலைத்து நின்றிருக்கலாம்.

# இணைப்பு 03

## செயலடைவுப்படிவம்

- அரசியல்
- பொருளாதாரம்
- சமூகம்
- கலாசாரம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கியவாறு ஒரு எண்ணக்கரு படத்தை, எழுதும் தாளில் குறிப்பிடுக.
- எழுதப்பட்ட எண்ணக்கரு விளக்கப்படத்தை பாடப் பொறுப்பாசிரியர்/ பொறுப்பாசிரியையிடம் ஒப்படைக்குக.
- ஒழுங்கமைத்த எண்ணக்கரு/ விளக்கப்படத்தை பிரிஸ்டல் போர்ட்/ டிமை கடதாசியில் காட்சிப்படுத்தி அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை வகுப்பறையில் விளக்கமாக முன்வைக்குக.
- உங்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உங்கள் ஆக்கத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்தி அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை வகுப்பறையில் விளக்கமாக முன்வைக்குக.
- ஒவ்வொரு குழுவும் வடிவமைத்து முன்வைத்த எண்ணக்கரு/ விளக்கப்படத்தை பற்றிய தத்தமது கருத்துக்களை முன்வைக்குக.

## செயற்பாடு 10.3.4

தேர்ச்சி மட்டம் : பொலன்னறுவை யுகத்தின் பிற்பகுதி வரை இருந்த முக்கிய மான அரசர்களின் சேவையையும் நிகழ்வுகளையும் மதிப்பிடுவார்

செயற்பாடு : "இலங்கையில் அரசாட்சி ஆரம்பம் பற்றிக் கற்போம்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01 - மகாவம்சத்தில் பமுவத்துடாவ எனும் ஏட்டிலிருந்து பெற்றுக் கொண்ட உதாரணங்கள் சில.
- சமூகக்கல்வியும் வரலாறும் - ஆசிரியர் பயிற்சி பாடத் திட்ட மொடியூல் இலக்கம் 125309 இலிருந்து பெற்ற விளக்கம்.
- இராசரட்டை கலாசாரமும் தென் மேல் இராசதானி யும் (இந்திர கீர்த்தி ஸ்ரீ வீர) எனும் நூலில் இருந்து பெற்ற விளக்கம் ஒன்று.
- இணைப்பு 2 - செயற்பத்திரம்.
- பாடநூல்/ வேறு உசாத்துணை நூல்கள்
- எழுதும் கடதாசி (தாள்)

## கற்றல் கற்பித்தல் செயன்முறை

படி 10.3.4.1 :

- பாடநூலில் குறிப்பிடப்பட்ட பாடத்தையும் இணைப்பு 1 இல் வழங்கப்பட்டுள்ள தகவல்களையும் கற்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- அரசாட்சி தொடர்பான பின்வரும் தகவல்களுக்கு மாணவர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ள, சிந்தனைக் கிளரல் முறை மூலம் கலந்துரையாட இடமளிக்குக.
- அது தொடர்பாக பின்வரும் வினாக்களை மாணவர்க ளுக்கு முன்வைக்குக.

- அரச ஆட்சி என்றால் நீர் கருதுவது என்ன?
- அரச ஆட்சியின் ஆரம்பமும் அழிவும் பற்றி நூல்களில் இருந்து பெற்றுக் கொண்ட சான்றுகள் யாவை?
- விஜய மன்னனினதும் பண்டுவாசு தேவ மன்னனினதும் முடி சூடல், அரசாட்சி தொடர்பாக வரைவிலக்கணம் செய்வதற்கு எவ்வளவு தூரம் நியாயமானது என நீர் கருதுகின்றீர்?
- ஓர் அரச ஆட்சி நிலைத்து நிற்பதற்கான இலட்ச ணங்கள் எவை?

- மாணவர்கள் முன்வைத்த விடைகளுக்கு தேவையான திருத்தங்களுடன் பின்வரும் காரணிகள் வெளிக் கொணரப்படும் வகையில் மீட்டாய்வு செய்க.
- இலங்கையில் ஆரம்ப ஆரியக் குடியிருப்புக்கள் உருவாகும் போது அரச ஆட்சி பற்றிய நோக்கம் அவர்களுக்கு இருந்ததாக சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை.
- ஆரியக் குடியேற்றங்களை அமைத்த ஆரியர்கள் அக் குடியிருப்புக்களை அவர்களின் பெயர்களாலேயே அமைத்தனர். பெயர்களுக்குரியவர்களே அதன் தலைவராகவும் விளங்கினர்.

  உதா: தம்பபண்ணியின் தலைவன் - விஜயன்
  உபதிஸ்ஸகாமயின் தலைவன் - உபதிஸ்ஸன்
  அநுராதகாமயின் தலைவன் - அநுராதன்
- விஜயன், மதுரை நாட்டு பட்டத்து இராணியுடனும் பண்டுவாசுதேவ, பத்தகச்சானாவின் திருமணத்தின் பின்னும் முடிசூடியதாக மகாவம்சம் குறிப்பிட்டாலும் அரச ஆட்சியுடன் இணைந்த ஒன்றாக அது கருதப் படவில்லை.
- வரலாற்றுச் சான்றுகளின்படி பார்க்கையில் முடி சூடியதன் பின்னர் அவர்கள் குடியேற்றங்களின் தலைவர்களாகவே இருந்து கருமமாற்றினர்.
- அரச ஆட்சி என்பது நாட்டின் முறையான நிர்வாகம், நாட்டு மக்களின் பாதுகாப்பு, நாட்டின் பொருளாதாரம், மக்களின் கல்வி அபிவிருத்தி என்பன உள்ளடக்கலான எண்ணக்கருவைக் கொண்டு அமையும் ஆட்சி ஆகும்.

(15 நிமிடங்கள்)

படி 10.3.4.2 :

- பொருத்தமான முறையில் மாணவர் குழுக்களை அமைக்குக.
- இணைப்பு 2 செயற்பத்திரத்தை குழுக்களுக்கு பகிர்ந்து அளிக்கவும்.
- பாடநூல், ஏனைய உசாத்துணை நூல்கள் என்பன ஊடாக செயற்பத்திரத்தின் படி சிந்தனைக் கிளரல் மூலம் தேவையான தகவல்களை கோவைப்படுத்துவதற்கு மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- தேவையான வழிகாட்டலையும் உபதேசங்களையும் வழங்கி இலகுபடுத்த வழி வகுத்தல்.
- எல்லாக் குழுக்களிலிருந்தும் ஒவ்வொரு மாணவனை மதியுரைஞர் கலந்துரையாடலுக்காக கலந்து கொள்ள செய்யவும்.

(25 நிமிடங்கள்)

**படி 10.3.4.3 :**

- குழுக்களில் 6 மாணவர்களுக்கு மதியுரைஞர் கலந்துரையாடல் தொடர்பாக முன்வருவதற்கு இடமளிக்கவும். (விரும்பி முன் வராத சந்தர்ப்பத்தில் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்து கொள்க.)
- மதியுரைஞர் கலந்துரையாடலை மேற் கொள்வதற்காக மாணவர் ஒருவருக்கு இடமளிக்கவும்.
- செயற்பத்திர ஆலோசனையின் படி மதியுரைஞர் கலந்துரையாடலை மேற்கொள்ள இடமளிக்குக.
- தங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கு ஒவ்வொரு மாணவனுக்கும் மூன்று நிமிடங்களை வழங்குக.
- மதியுரைஞர்கள் கலந்துரையாடலினால் எழும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு அவகாசமளிக்குக.
- மதியுரைஞர்கள் கலந்துரையாடலின் இறுதியில் எழுகின்ற கருத்துக்களுக்கு தேவையான பின்னூட்டல்களை வழங்கி பின்வரும் காரணிகள் வெளிக் கொணரப்படும் வகையில் மீளாய்வு செய்க.

- ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை அரசியலுடன் அரசாட்சி ஒன்றிணைந்து இருக்கவில்லை.
- பண்டுகாபய மன்னனால் ஆரியக் குடியேற்றங்களை ஒருமைப்படுத்தி பாரிய பிரதேசமொன்று உருவாக்கப்பட்டதன் பின்பு தனது அதிகாரத்தை பலப்படுத்தவதற்காக மேற் கொண்ட நடவடிக்கையினால் அரசாட்சி அமைப்பு அமைந்தது.
- அசோக மன்னனால் அனுப்பி வைக்கப்பட்ட முடி சூட்டும் முறை முதன்மையாக் கொண்டு நடத்த தேவநம்பிய தீசனுடைய இரண்டாவது முடிசூட்டு விழாவுடன் இலங்கையில் அரச ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- இம் முடிசூட்டுதல் நிகழ்வு நாட்டு மக்கள் மத்தியில் விழாவாக நடைபெற்றதுடன் அங்கு நாட்டு மக்களின் பாதுகாப்பை மேற்கொள்வதற்காக அரசன் பொருந்திக் கொண்டான்.
- சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தி மக்களை பாதுகாப்பதும் மக்களின் மேம்பாட்டிற்கு அவசியமான நீர்ப்பாசனத்திட்டங்களை மேற் கொள்வதும் நாட்டு மக்களின் கல்வி, கலாசாரம், சமயம் ஆகியவற்றின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் அரசு பங்கேற்றல் வேண்டும்.
- அரச ஆட்சிக்குள் சர்வாதிகாரியாக கருமமாற்றுவதற்கு அவசியம் இல்லை.
- முன்னைய சம்பிரதாயங்கள் இல்லாத போதும் முன்பு இருந்த மன்னர்கள் பின்பற்றிய சிறந்த நீதி நியாயங்களின் படியும் புத்த சமயத்தில் உள்ள அரச பதின்மர் தர்மம் பற்றிய பின்பற்றுதல் கொண்ட அரச ஆட்சியாக இணைந்திருந்தன.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- இலங்கையில் அரச ஆட்சியின் தோற்றமும் வீழ்ச்சியும் பற்றி விபரிப்பார்.
- அரச ஆட்சியுடன் இணைந்து காணப்படுகின்ற எண் ணக்கருவை விளக்குவார்.
- பொருத்தமான வேளையில் பிழையின்றி தர்க்க ரீதியாக தம் கருத்துக்களை முன்வைக்கும் திறமையை காட்சிப் படுத்துவார்.
- நாட்டின் நிலைப்பாடு பொருத்தமானதாக அமைய அரச ஆட்சியுடன் பின்னிப்பிணைந்துள்ள குறிக்கோள் கள் நிறைவேற்றுதல் அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வதுடன் காரணிகளையும் முன்வைப்பார்.
- தமது கருத்துக்களை முன்வைப்பதற்கும் மற்றவர்களது கருத்துக்களைப் பொறுமையாக ஏற்பதற்கும் பழக்கப் படுவதால் எதிர்காலத்தில் பிரச்சினைகளுக்கு சிறந்த முறையில் முகங்கொடுக்கக் கூடியதாக இருப்பார்.
- முழுமையாக நோக்குகையில் சிறப்பான வாழ்க்கைத் தயார் நிலைக்கு தன்னை மாற்றிக் கொள்வார்.

## செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :

- சிந்தனைக் கிளரல் மூலம் கலந்துரையாடப்படவுள்ள மையை முன்கூட்டி மாணவர்களுக்கு தெரிவித்தல்.
- கலந்துரையாடலுக்குத் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக நூல்களின் துணையுடன் ஈடுபடுதலின் அவசியத்தைக் கூறுவதுடன் அவற்றிற்கு உதவி செய்தல்.
- தேவையான இடங்களில் ஆலோசனைகள் வழங்கி மதியுரைஞர்கள் கலந்துரையாடலில் ஈடுபட பங்களிப் புச் செய்க.
- நூல்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வ தற்காக அவற்றின் பக்க இலக்கங்களையும் பந்திகளை யும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறல்

# இணைப்பு 01

மேலும் அனைத்து அமைச்சர்களும் ஒன்று கூடி இருக்கையிலே இளவரசன் விஜயன் முடிசூடிக் கொண்டான்.

சிறந்த புத்திமிக்க அவ்வமைச்சர் சகல திறன்களும் நிறைந்த பண்டுவாசு தேவ குமாரனனை அரசாட்சியில் அபிஷேகம் செய்து வைத்தார்.

விஜயன் முதல் தேவநம்பியதிஸ்ஸ வரை இருந்த அனைத்து அரசர்களும் முடி சூட்டப்பட்டார்கள் என மகாவம்சம் குறிப்பிடப்படுகின்ற போதிலும் பேராசிரியர் செனரத் பரண விதாரன அவர்களின் கருத்துப்படி முதன்முறையாக முடி சூட்டப்பட்ட அரசன் தேவனம்பிய தீசன் ஆவான். கடவுள்கள், கடவுள்களுக்கு பிரியமான எனும் கருத்துடையதாக தேவனம்பிய எனும் பட்டம் அசோக சக்கரவர்த்தியால் வழங்கப்பட்டது.

உறுதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய வரலாற்று அரசன் தேவனம்பியதீஸ்ஸ ஆவான். (கி.பி 250-210) இந்திய அரச வழக்கப்படி பூசை வழியைப்பின் பற்றி முதன் முதலாக முறையான அபிசேகத்தைப் பெற்ற அநுராத புரநகரத்தை கேந்திரமாகக் கொண்டு அப்போதைய இலங்கையின் பலமிக்க அரசனாக இவன் ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

# இணைப்பு 02

## செயற்பத்திரம்

இலங்கையின் அரச ஆட்சிக் கொள்கை எனும் தலைப்பின் கீழ் மதியுரைஞர் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துவதற்கு அவசியமான காரணிகளை சேகரித்து குறித்துக் கொள்வதும் மதியுரைஞர் கலந்துரையாடலுக்கு பொருந்தக் கூடிய முறையில் ஒழுங்கமைத்து கலந்துரையாடலை மேற்கொள்ளல் வேண்டும் என்பது ஒப்படைக்கப்பட்ட வேலையாகும்.

இது தொடர்பாக,

- பாடநூல், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள, உங்களால் தேடிப்பெற்ற உசாத்துணை நூல்களைக் கற்றல்.
- தலைப்பிற்கு பொருத்தமான தகவல்களை அந்நூல்களில் இருந்து பெற்று குறித்துக் கொள்ளவும்.
- ஆரம்ப உரையாடலின் போது எடுத்துக் கொண்ட வினாக்களில் கவனம் செலுத்தி அதன்படி தகவல்களை குறித்துக் கொள்ள முயற்சிக்கவும்.
- குறித்து வைத்துக் கொண்ட தகவல்களை குழு அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்க.
- குழுவின் ஒருவர் அல்லது இருவர் மேற் குறிப்பிட்ட முறையின் மூலம் கலந்துரையாடலை முன்வைக்குக.
- கலந்துரையாடலை நெறிப்படுத்துபவர் என்ற வகையில் கலந்து கொண்டு உங்கள் கருத்துக் களை முன்வைக்குக.

## செயற்பாடு 10.3.5

தேர்ச்சி மட்டம் : பொலன்னறுவை யுகத்தின் பிற்பகுதி வரை இருந்த முக்கிய மான அரசர்களின் நடவடிக்கைகளை விபரிப்பார்.

செயற்பாடு : "பொலன்னறுவை வீழ்ச்சி வரை அரசியல் நிலை"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01 - பண்டுகாபய மன்னனின் அரசியல் நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒரு பந்தி.
- இணைப்பு 02 - அரசர்களின் நடவடிக்கைகள் உள்ள டங்கிய பட்டியல் ஒன்று.
- இணைப்பு 03 - செயற்பத்திரம்
- பாடநூல்/ வேறு உசாத்துணை நூல்கள்
- எழுதும் கடதாசி (தாள்)
- உருவச்சித்திரங்கள், சித்திரம், படங்கள்
- டிமை கடதாசி, நிறப் பென்சில்/ பெல்ட் பேனைகள்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

ஆலோசனைகள் :

- இணைப்பு 01 இனை வகுப்பில் முன்று மாணவர்களுக்கு ஒன்று வீதம் கொடுப்பதற்காகப் பிரதி பண்ணிக்கொள்க.
- செயற்பாட்டிற்கு அவசியமான நூல்களைப் பெற்றுக் கொள்ள மாணவர்களைத் தூண்டுக.
- பாட ஆசிரியர் என்ற வகையில் பொருத்தமான நூல் களைப் பெற்றுக் கொடுக்க ஒழுங்கு செய்க.
- இணைப்பு 2, இணைப்பு 3 - செயற்பத்திரம் என்ப வற்றை குழுக்களுக்கு போதுமான அளவு வழங்குக.

படி 10.3.5.1 :

- இணைப்பு 01 இல் பாடநூலில் குறிப்பிடப்பட்டவற்றைக் கற்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர்கள் கற்றுப் பெற்றுக் கொண்ட தகவல்களின் படி அரச ஆட்சியாளன் ஒருவனின் அரசியல் நிலைமை கள்/ நடவடிக்கைகள் தொடர்பாக வினா எழுப்புதல்.
- எதிர்பார்த்த குறிக்கோள்கள் அடைய்ப்பெறும் வகை யில் நடத்தை மாற்றம் நிகழ்ந்துள்ளனவா என அவதானித்தல்.
- மாணவர்கள் முன்வைத்த தகவல்களுக்குத் தேவை யான திருத்தங்களை எடுத்துக் கூறி பின்வரும் காரணி களும் வெளிக் கொணரப்படும் வகையில் கலந்துரை யாடலை மேற்கொள்க.

- பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சி வரை அரசியல் காலம் 1650 வருடங்கள் (கி.மு. 236-கி.பி.1017 வரை அநுராதபுர யுகம், கி.பி 1070-1215 வரை பொலன்னறுவை யுகம்).
- உலகில் நீண்ட காலம் தலை நகரைக் கொண்ட ஒரு இராசதானி, அநுராதபுரம் ஆகும். அரசியல் தொடர்பான வரலாற்றைப் பார்க்கையில் தெட்டத் தெளிவாக அறியக் கூடிய நிகழ்வுகள் பல இடம் பெற்றமை.
- இச்சந்தர்ப்பங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் முக்கியமான ஆட்சியாளர்கள் சிலர் இருந்தமை.
- ஆட்சியாளர்களின் செயல்கள், முக்கிய நிகழ்வுகள் நடவடிக்கைகள் அக்கால அரசியல் நிலையில் ஒரு மாற்றத்தை எடுத்துக்காட்டியது.
- அரசாட்சி, வெளிநாட்டுக் கொள்கை, ஆட்சிப்பரம்பல், நாட்டின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார நடவடிக்கைகள் ஆட்சியாளனின் அரசியல் நடவடிக்கைகளுள் முக்கியமானவை ஆகும்.

(15 நிமிடங்கள்)

**படி** 10.3.5.2 :

- மாணவர்களை பொருத்தமான முறையில் குழுப்படுத்தி குழுத்தலைவர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு மாணவர்களுக்கு இடமளிக்குக.
- இணைப்பு 2 தகவல்கள் உள்ளடக்கிய பட்டியல், இணைப்பு 3 செயற்பத்திரம் இவற்றை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கவும்.
- வகுப்பிலுள்ள தொகைப்படி ஒவ்வொரு குழுவிலும் தகவல்களை தேடுவது யார் யார் என்பதை பொருத்த மான முறையில் பிரித்துக் கொள்க.
- பாட நூலில் உள்ள குறிப்பிட்ட பாடம், வழங்கப்பட்ட மற்றைய நூல்களை கற்பதன் மூலம் செயற்பத்தி ரத்திற்கு பொருத்தமான வகையில் மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளை யும் வழங்கி மாணவர்களின் வேலையை இலகுபடுத்த வழி செய்தல்.
- செயற்பாட்டில் ஈடுபடும் வேளையில் மாணவர்களின் துலங்கலை பொருத்தமான முறையில் கணிப்பீடு செய்தல்.

(35 நிமிடங்கள்)

படி 10.3.5.3 :

- குழுக்களால் அமைக்கப்பட்ட எண்ணக்கரு விளக்கப் படத்தை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு இடம் அளித்தல்.
- மாணவர்கள் முன்வைத்த விளக்கப்படத்தில் திருத் தங்கள் இடம் பெற்றுள்ளதாயின் அவற்றைச் சரி செய்து கொள்வதற்கு வழிகாட்டுக.
- மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாட லில் பின்வரும் காரணிகள் வெளிக் கொணரப்படும் வகையில் மீட்டாய்வு செய்க.

- செயற்பாட்டிறுதியில் பின் தொடர் வேலையாக விளக்கப் படத்திற்கு (பட்டியலிற்கு) பெற்றுக் கொண்ட தகவல் களை ஆக்கபூர்வமான (தேவையான வரை படங்கள், சித்திரம், உருக்கள், படங்கள்) தகவல்கள் அடங்கி யதாக வடிவமைத்துக் கற்றல் உபகரணமாக வகுப்ப றையில் காட்சிப்படுத்த மாணவர்களுக்கு அறிவுறுத்துக. (இதற்காக குறிப்பிட்ட காலத்தை வழங்கவும்)
- பண்டுகாபயன், தேவனம்பிய தீசன், எல்லாளன், துட்ட கைமுனு, வலகம்பா, வசபன், மகாசேனன், தாது சேனன், காசியப்பன், இரண்டாம் அக்போ, நான்காம் மகிந்தன், ஐந்தாம் மகிந்தன் ஆகிய அரசர்கள் அநுரா தபுர இராசதானியின் பிரதான மன்னர்களாவர்.
- 1 ஆம் விஜயபாகு மகாபராக்கிரமபாகு, நிஸ்ஸங்க மல்லன் ஆகியோர் பொலன்னறுவை இராசதானியின் பிரதான ஆட்சியாளர்களாவர்.
- அநுராதபுர யுகத்தின் ஆட்சியாளர்களில் அந்நிய ஆட்சியாளரான எல்லாளன் அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒருவனாவான்.
- பண்டுகாபயன், தேவனம்பிய தீசன், துட்டகைமுனு, வலகம்பா, நான்காம் மகிந்தன், 1 ஆம் விஜயபாகு, பராக்கிரமபாகு ஆகிய மன்னர்கள் பொலன்னறுவை யின் வீழ்ச்சி வரை அரசியல் வரலாற்றில் சிறந்தவர் களாகத் திகழ்ந்தனர்.
- ஆட்சியாளர்கள் பின்பற்றிய வெளி நாட்டு கொள்கை களின் போக்கு இராச்சியத்தின் அரசியலில் நிலைத்த தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- ஆட்சியாளர்களின் அரசியல் நடவடிக்கைகள், பொரு ளாதார, கலாசாரத்தல் பெரும் தாக்கத்தினை ஏற்படுத் தின. மட்டுமின்றி நாட்டின் முன்னேற்றத்திலும் பல தரப்பட்ட விளைவுகளை எற்படுத்தின.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரை ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் அரசியல் போக்கின் முக்கியத்துவத்தை விபரிப்பார்.
- பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரை முக்கியமான ஆட்சியாளர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூல் ஒன்றை அமைக்குக.
- ஆட்சியாளர்களின் அரசியல் நடவடிக்கைகள், சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு தாக்கத்தை எற்படுத்தியதை எற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களை முன்வைப்பார்.
- சிறந்த அரச ஆட்சியாளர்களின் சிறந்த போக்குகள் எம் வாழ்க்கைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- குழுச் செயற்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அனுபவத்தினால் வாழ்க்கையின் மேம்பாட்டிற்காக எம்மை தயார் பண்ணிக் கொள்ள முடிகின்றது.

# இணைப்பு 01

பண்டுகாபய இளவரசன் உபதிஸ்ஸ கிராமத்தில் அபய மன்னனின் மகளுக்கு பிறந்து வளர்க்கப்பட்ட ஒருவனாக இருப்பினும் அவனது தந்தையான தீக்காமினி தீகவாபி என்னும் பிரதேசத்தை சேர்ந்தவனாவான். பண்டுகாபயக் குமாரன் கல்வி பயின்ற பண்டகாமம் மகாவலி கங்கைக்கு தெற்கே அமைந்துள்ளதாக நம்பப்படுகிறது. வம்சக் கதைகளின் படி பண்டுகாபய இளவரசனின் யுத்த நடவடிக்கைகள் அநுராதபுரத்துக்கு அண்மையில் அமைந்துள்ளதாகக் கருதப்படும் பண நகரத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறிருப்பினும் இராசரட்டையை கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியானது மகாவலி கங்கைக்கு தெற்கே அமைந்திருந்த "தொலபப்பத" கிராமத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டது. நதியின் தென்கரையில் இருந்த பண்டுகாபய இளவரசன் அநுராதபுரத்துக்கு அண்மையில் யுத்தம் செய்து மீண்டும் கங்கையின் தெற்கிற்கு சென்று இராசரட்டையைக் கைப்பற்றிக் கொள்ளப் போரிட்டான். ஆகவே உருகுணை தேசத்திலிருந்து போராட்டம் ஆரம்பித்து கிரிகண்ட மற்றும் பண நகரத்தையும் கைப்பற்றி அவ்வழியாக அநுராதபுரம் வரை ஆட்சியைக்கைப்பற்றிக் கொள்ள போரிட்டான் என்பது இலகுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம் அல்ல. ஆகவே உருகுணை தேசத்திலிருந்து போராட்டம் ஆரம்பித்து கிரிகண்ட மற்றும் பண நகரைத்தையும் கைப்பற்றி அவ்வழியாக அநுராதபுரம் வரை ஆக்கிரமிப்பை மேற்கொண்டு வடமேல் இலங்கையின் குடியிருப்பான பிரதேசங்களை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கலாம். வம்சக்கதைகளில் வரும் சம்பவங்களின் பிரகாரம் தெரிய வருவதாவது, தீகவாபி பிரதேசத்தின் ஆட்சிப் பரம்பரையில் வந்த ஒருவன் மகாவலி கங்கையின் தெற்கில் இருந்து ஆரம்பித்த யுத்த நடவடிக்கையின் விளைவாக இராசரட்டையினை ஒன்று சேர்க்க முடிந்தமையாகும். இதன் பிரகாரம் இராச ரட்டையில் நிலவிய ஆரியக் குடியேற்றங்களுள் அதிகமானவற்றை ஒன்று சேர்த்த ஒருவனாக பண்டுகாபய மன்னன் முக்கியத்துவம் பெறுகிறான். ஆரியக் குடியிருப்பை ஒன்றுபடுத்தியமை பாரிய பிரதேசங்களை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருந்ததன் விளைவாக மற்றுமொரு பிரச்சினைக்கு பண்டு காபய மன்னனுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. தமது ஆட்சியை நிலையாக வைத்திருப்பதற்கு உபதிஸ்ஸகமவில் அரச பரம்பரையில் வந்த அபய மன்னனுக்கு நகுத்திகன் பதவியை வழங்கியமை அவர் முன்வைத்த கருத்துக்களை ஏற்ற குழுவினரது போற்றுதலை பெற்றுக் கொண்டார் எனக் கருத இடமுண்டு. சித்தராசன், காலவேலன் ஆகிய பேய்களுக்கு தேவாலயங்கள் கட்டிக் கொடுத்ததாகவும் சித்தராச பேய் தன்னையும் சம மட்டத்தில் கருதியதாகவும் மகாவம்சம் குறிப்பிடுகிறது. இந்தக் கதை பேய், பூதங்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். என்றாலும் சித்தராசனும் காலதேவனும் ஆரியர் அல்லாத் இனத்தவர்களின் தலைவர்களாக இருக்கலாம் என்று ஏற்றுக் கொண்டால். தேவாலயங்களைக் கட்டுவது ஆரியர் அல்லாத இனத்தவர்களுடைய பாரபட்சமற்ற தன்மையை வெல்வதற்கு காட்டிய முயற்சியாகும் எனக் கருத இடமுண்டு.

1500 ஆண்டளவில் இலங்கையின் தலைநகராக இருந்த அநுராதபுரத்தை தமது இராச தானியாக்கிக் கொண்ட பண்டுகாபய மன்னன் புதிய தலைநகரின் ஆரம்பிப்பாளனாகவும் இருந்தான். அநுராதபுர நகரத்தின் பல்வேறு பகுதிகளை நன்கு திட்டமிடலுடன் கட்டியெழுப்பினான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. நகரவாசிகளின் தேவைகளுக்காக குளம் ஒன்றினையும் சமயத்தலம் ஒன்றையும் மயான பூமியையும் அமைத்தான் எனவும் மேலும் குறிப்பிடுகிறது.

## இணைப்பு 02

| இராசதானிகள் | ஆட்சியாளன் | ஆட்சிக்காலம் | ஆட்சிப்பரவல் | ஆட்சி | வெளிநாட்டுக் கொள்கை | சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டுக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# இணைப்பு 03

## செயற்பத்திரம்

பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரை இருந்த முக்கியமான அரசர்களிடையே சிறந்த அரசர்கள் தொடர்பாக தகவல்களைக் கற்று ஓர் அட்டவணை தயாரிப்பதே உமது குழுவுக்கு ஒப்படைக்கப்படும் வேலையாகும்.

- பாடநூலில் குறித்த பாடத்தையும் உமக்கு வழங்கப்பட்டுள்ள ஏனை மூலாதார நூல்களையும் கற்று அட்டவணைக்குத் தேவையான் தகவல்களை வேறுபடுத்தி இனங்கண்டு கொள்ளவும்.
- நீங்கள் சேகரித்த தகவல்களில் அட்டவணைக்குத் தேவையான தகவல்களை மாத்திரம் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடித் தெரிவு செய்த அட்டவணையின் உரிய நிரலினுள் குறிப்பிடுக.
- தகவல்களைக் குறித்ததன் பின் இறுதியில் பாட ஆசிரியருக்குக் காண்பித்து அதில் திருத்தங்கள் இருப்பின் அதனை சரி செய்து கொள்ளவும்.
- உங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உமது அட்டவணையில் அடங்கி உள்ள தகவல்களை வகுப்பில் முன்வைக்கவும்.
- இறுதியில் பாட ஆசிரியரினால் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உங்களது அறிவை விருத்தி செய்து கொள்ளுங்கள்.
- உங்களது குழுவினர் அட்டவணைப்படுத்திய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின் தொடர்வேலையாக காட்சிப்படுத்தலுக்காகத் தகவல் தொகுப்பொன்றை தயாரிக்குக. அட்டவணையாக அல்லது படங்களாக, சித்திரங்களாக, உருவங்கலாக, தேசப்படங்களுடன் சேர்ந்ததான அறிக்கையாக அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.

## செயற்பாடு 10.3.6

**தேர்ச்சி மட்டம்** : தென்னிந்திய ஆக்கிரமிப்பு முற்றுப் பெறல்.

**செயற்பாடு** : "தென்னிந்திய ஆக்கிரமிப்பு"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 01 - மகாவம்சத்தின் பட்டு துடாவ சீர்திருத்த ஏட்டில் எல்லாளன் மன்னன் பற்றிய ஒரு வாக்கியம் (பக்கம் 98)
- இணைப்பு 02 - தகவல் உள்ளடங்கிய ஒரு பட்டியல்
- இணைப்பு 03 - செயற்பத்திரம்
- பாடநூல்/ வேறு உசாத்துணை நூல்கள்
- எழுதும் கடதாசி (தாள்)
- டிமை கடதாசி
- நிறப் பென்சில்/ பெல்ட் பேனைகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**ஆலோசனைகள்** :

- வகுப்பறையில் மூன்று பிள்ளைகளுக்கு ஒன்று வீதம் இணைப்பு 01 ஐ பிரதி செய்து கொள்ள வழி செய்தல் அல்லது வகுப்பறையில் காட்சிப்படுத்தக் கூடியதரன பொருத்தமான கடதாசியை தெரிவு செய்க.
- குழுக்களுக்கு தேவையான இணைப்பு 2 ஐயும் இணைப்பு 3 ஐயும் பிரதி செய்க.
- பாடப்புத்தகத்திற்கு மேலதிகமாக உசாத்துணை நூல் களை பயன்படுத்தி மாணவர்களை அறிவுறுத்துக/ உதவி செய்க/ பெற்றுக் கொடுக்குக.

**படி 10.3.6.1** :

- இணைப்பு 01ஐ மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வழி செய்க அல்லது வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- இணைப்பு 1 இலுள்ள விடயத்தை வாசித்து அறிவதற்கு மாணவர்களுக்கு இடமளிக்குக.
- மேலே கூறப்பட்ட விடயங்களைக் கவன்த்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு மாணவர்களை விடை அளிக்க வழி செய்க.

- மகாவம்சத்தில் வரும் இந்தக் கதைப் புத்தகத்தில் குறிப்பிடப்படும் மன்னன் யார்?
- அந்த அரசன் எந்த நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்தான்?

- அம்மன்னன் இலங்கை வந்து அரசாட்சியை எவரிடம் இருந்து பெற்றுக் கொண்டான்?
- இங்கு குறிப்பிடப்படும் அரசன் நீதியான ஆட்சியொன்றை மேற் கொண்டான். இந்த நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்கள் தருக.
- இம்மன்னனைப் பற்றி நீர் அறிந்த செவி வழிக் கதையொன்றை முன்வைக்குக.
- மாணவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட விடைகளையும் தகவல்களையும் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களையும் வெளிப் படும் விதத்தில் கலந்துரையாடுக.
- எல்லாளன் மன்னன் தென் இந்திய ஆக்கிரமிப்பாளன் அக்காலத்தில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த சூரதிஸ்ஸ மன்னனின் ஆட்சியை கைப்பற்றினான்.
- வெளிநாட்டவரும் அரச பாலனத்தின் நியாயமான ஒரு அரசனுமாவான்.
- அநுராதபுர யுக ஆரம்பத்திலிருந்து பொலன்னறுவை யுகத்தின் இறுதி வரை அடிக்கடி இலங்கை தென்னிந்தியர்களின் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டமை.

(15 நிமிடங்கள்)

படி 10.3.6.2 :

- வகுப்பறைக்குப் பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 2 அட்டவணையும் இணைப்பு 3 செயற்படிவத்தையும் குழுக்களுக்கு பகிர்ந்தளித்தல்.
- பாட நூல்களையும் வேறு உசாத்துணை நூல்களையும் செயற்படிவத்தின் படி கவனத்திற் கொண்டு செயற் பாட்டில் ஈடுபடச் செய்தல்.
- தேவையான வழிகாட்டல்களையும் உபதேசங்களையும் வழங்கி மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக வழிகாட்டலை மேற்கொள்க.
- அட்டவணை தொடர்பான தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்துக் கொள்வதற்காக வழிகாட்டலை மேற் கொள்க.
- அட்டவணையைப் பூர்த்தி செய்த தன் பின் அவற்றில் திருத்தங்கள் காணும் பட்சத்தில் அவற்றைத் திருத்தி தேவையான ஆலோசனைகளை வழங்குக.

(35 நிமிடங்கள்)

படி 10.3.6.3 :

- குழுக்களால் ஒழுங்கமைத்த தகவல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு இடமளிக்குக.
- ஒவ்வொரு குழுக்களும் தத்தமது குழு ரீதியான கருத்துக்களை முன்வைக்கையில் ஏனைய மாணவர்களுக்கு இது தொடர்பான பிரச்சினைகள் எழும் பட்சத்தில் அது பற்றி கலந்துரையாடுவதற்கு அவர்களுக்கு இடமளித்தல்.

- இலங்கையின் அமைவிடம் தென்னிந்தியர்களின் செல்வாக்குக்குக் காரணமாகியது.
- அநுராதபுர யுகத்தில் அரச பரிபால்னம் வீழ்ச்சி அடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தென்னிந்தியர்களின் ஆக்கிரமிப்பு இடம் பெற்றது.
- அநுராதபுரத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த சூரதிஸ்ஸ மன்னனின் அரசாட்சியை சேன, குத்திக ஆகிய இருவரும் பலாத்காரமாக கைப்பற்றினர்.
- அசோக மன்னனின் ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டில் இருந்து வந்த எல்லாளன் ஆட்சியைக் கைப்பற்றி 44 வருடங்கள் ஆட்சி புரிந்தான்.
- வலகம்பா காலத்தில் பூலதித்த உட்பட 7 திராவிடர்கள் இங்கு ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர்.
- 7 திராவிடர்களில் பூலகத்த, சாஹிய ஆகிய இருவரையும் தவிர ஏனைய 5 பேரும் அநுராதபுரத்தை ஆட்சி செய்தனர்.
- மித்த சேன மன்னனுடைய காலத்தில் தென்னிந்தியர் 5 பேரைக் கொண்ட குழுவொன்று இலங்கையை ஆக்கிரமத்தமை.
- 1ம் சேன காலத்தில் ஸ்ரீமார ஸ்ரீவல்லப (பாண்டிய) நான்காவது உதய அரசன் காலத்தில் 1ம் பத்தக (சோழ) மூன்றாம் கிருஷ்ணா ஆகியோரால் அநுராதபுரம் சூறையாடப்பட்டது.
- ஐந்தாம் மகிந்த அரச சமயத்தில் 1ம் ராஜாஜ ராஜேந்திர (சோழ) ஆகியோரின் ஆக்கிரமிப்பால் அநுராதபுர இராச்சியம் வீழ்ச்சிடைந்தது.
- சோழர்களின் ஆக்கிரமிப்பால் 53 வருடங்கள் இலங்கையின் வட பிரதேசம் சோழர் ஆட்சியின் கீழே இருந்தது.
- கி.பி 1215 கலிங்க, மாகன் ஆகியோரின் ஆக்கிரமிப்பால் பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியுற்றது.

(35 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரை இலங்கையின் தென்னிந்தியர்களின் ஆக்கிரமிப்பு பற்றி விளக்குக.
- பொலன்னறுவை யுகத்தின் வீழ்ச்சியுடன் இலங்கையின் தென்னிந்தியர்களின் ஆக்கிரமிப்பு எனும் தலைப்பில் பாடசாலை சஞ்சிகைக்கு கடிதம் ஒன்று எழுதுக.
- இலங்கையின் பண்டைய இயல்புகள் அழிக்கப்படுவதற்கு தென்னிந்தியர் படையெடுப்பு காரணமாயின என்பதை ஏற்றுக் கொள்வார்.
- குழுச் செயற்பாட்டின் மூலம் மற்றவர்களின் கருத்துக்களை மதிக்கும் தன்மையினை வெளிக்காட்டுவார்.
- தலைமை தாங்குவதாலும் பலர் மத்தியில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் திறமையையும் பெற்றுக் கொள்வார்.

## இணைப்பு 01

21.

22.

23.

24.

25.

26

## இணைப்பு 02

| இராசதானிகள் | ஆக்கிரமிப்பு | காலம் | ஆக்கிரமிப்புக் காலத்தில் இந்நாட்டு ஆட்சியாளர்கள் | ஆக்கிரமிப்பின் விளைவு | ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைப் பாதுகாத்த ஆட்சியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## இணைப்பு 03

## செயற்பத்திரம்

- பொலன்னறுவை யுகத்தின் வீழ்ச்சியின் பின் இலங்கை எதிர்கொண்ட தென்னிந்தியப் படை யெடுப்புக்கள் பற்றி பல தகவல்களை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றை முன்வைப்பது உங்கள் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட வேலையாகும். பாடநூல்களையும் உசாத்துணை நூல்களையும் இதற்காகப் பயன்படுத்துக.
- அநுராதபுர யுக ஆரம்பத்தில் இருந்து பொலன்னறுவை யுக இறுதிவரை இலங்கையை ஆக்கிரமித்த தென்னிந்தியப் படையெடுப்புக்கள் பற்றிய தகவல்களை தேடிப்பெற்று டிமைக் கடதாசியில் எழுதி முன்வைக்குக.
- ஆசிரியருடன் கலந்துரையாடல் மூலம் தேவையான மேலதிக தகவல்களை சேர்த்துப் பூரணப்படுத்துக.
- பின்தொடர்வேலையில் பெற்ற தரவுகளை வைத்துப் பாடசாலை சஞ்சிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.

# அலகு 10.4

# நீர்வள நாகரிகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

(12 பாடவேளைகள்)

## அறிமுகம்

வட இந்தியாவில் ஆரம்பமான ஆரிய மொழியைப் பேசுகின்ற மக்கள் கூட்டம் இலங்கையில் ஆற்று முகத்துவாரங்களை அண்டிக் குடியேறினர். விவசாயத்தை மையமாகக் கொண்ட அவர்கள் நீரையே முதன்மையாகக் கொண்டு விருத்தியுற்றதால் நீர்வள நாகரீகம் தோன்றம் பெற்றது. கி.மு. 6 ம் நூற்றாண்டு முதல் கி.பி 12 வரை அநுராதபுர, பொலன்னறுவை கால யுகமாக விளங்கியது. சனத்தொகை காலப் போக்கில் அதிகரித்தன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே அக்கால மக்கள் தொழில் நுட்பங்களைக் கையாண்டு நீர்ப்பாசனத்தை முன்னேற்றுவதற்கு வழிதேடினர். இதன் பெறுபேறாக விவசாயம் விருத்தியுற்றதுடன் வளமான வாழ்க்கை முறைமை ஒன்று ஏற்பட வழிகோலியதனால் ஓய்வு நேரங்களை பயன்மிக்கதாக அமையுமாறு பல்வேறு ஆக்கத்திறன் வெளிப்பாடுகளில் ஈடுபடுத்தினர்.

ஆட்சியாளர்களின் ஒத்துழைப்பின் பயனாக நீர்ப்பாசனத்துறைக்கு பல்வேறு தூண்டுதல்கள் கிடைத்தன. இதனால் மற்றைய நிர்வாகத் துறைகளும் முறையாக அமைந்தன. பொருளாதார, சமய, கலாசாரத்துறைகள் விருத்தியடைந்தன. இத்தகைய நிலை பற்றியும் நீர்வள நாகரிகம் வீழ்ச்சியுற்றமை பற்றியும் கற்றல் இவ்வலகில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** : நீர்வள நாகரிகம் என்றால் என்ன? என்பது பற்றி விபரிப்பார்.

**தேர்ச்சி மட்டங்கள்** :

- நீர்வள நரகரிகத்தில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பம் பற்றி அவதானிப்பார்.
- நீர்வள நாகரிகத்தில் நிர்வாக ஒழுங்கமைப்பு ஏற்பட்ட முறையை பரிசீலிப்பார்.
- நீர்வள நாகரிகத்தின் சமய, கலாசாரம் தொடர்பான விபரங்களை கற்பார்.
- வெளிநாட்டுத் தொடர்பை விவரிப்பார்.
- நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சியை கற்பார்.

## பாட உள்ளடக்கம்:

### 10.4.1 நீர்ப்பாசனம், நீர்வள தொழிநுட்பம் ஆரம்பித்தலும் விருத்தியடைதலும்

தாக்கம் செலுத்திய

காரணிகள்

- ஆரம்ப குடியேற்றவாதிகளான ஆரியர்களின் பிரதான சீவனோபாயமாக விவசாயம் விளங்கியமை.
- நீரைப் பெற்றுக் கொள்ளத் தக்க ஆற்று முகத்துவாரங்களை அண்டிய இடங்களில் குடியேறியமை.
- விவசாயத்துக்கு போதியளவு நீர் கிடைக்காமை.
- குறிப்பிட்ட ஒரு பருவத்தில் மாத்திரம் மழை கிடைத்தமை.
- சனத் தொகைப் பெருக்கம்.
- நீர்ப்பாசனக் கைத்தொழிலை அமைக்கக் கூடிய புவியமைப்பு உலர் வலயத்தில் காணப்பட்டமை.
- இராசரட்டை சமவெளி கடற்பக்கத்திற்கு சாய்வானதாக அமைந்திருந்ததால் கால்வாய்களை வெட்டுவது (அமைப்பது) இலகுவானதாக இருந்தமை.

### நீர்ப்பாசனம் ஆரம்பமும் விருத்தியும்

- இன்று நாம் கண்டு பிடித்துள்ள பண்டைய குளமாக பண்டுகாபய மன்னன் கட்டிய அபயவாவி காணப்படுகின்றது.
- திஸாவாவி தேவனம்பியதீசன் மன்னனால் அமைக்கப்பட்டது.
- ஆரம்பத்தில் மல்வத்து ஓயா, தெதுரு ஓயா, கிரிந்தி ஓயா, மாணிக்க கங்கை, கலா ஓயா, கும்புக்கன் ஆறு, வளவை கங்கை, கல் ஓயா ஆகிய நதிகளை அண்டி நீர்ப்பாசனைக் குடியிருப்புக்கள் ஆரம்பமாகின.
- பாரிய குளங்கள் அமைப்பதில் வசப மன்னன் முன்னணியில் திகழ்ந்தான். மகா விலாச்சிக் குளம், மானகட்டியக் குளம், எலகரக் கால்வாய் என்பன இவனது படைப்புக்களாகும்.
- வசப மன்னன் காலத்தில் சுரங்கக் கால்வாய்களும் அமைக்கப்பட்டன எனக் கூறப்படுகின்றது.
- நீர்ப்பாசனத் துறையில் மகாசேன மன்னனுடைய ஆட்சிக்காலத்திலேயே அதிக முன்னேற்றம் காணப்பட்டது.
- மின்னேறியக் குளம், .குறுளுவாவி, மகாகணாதஹா வாவி, மாகல்லாவாவி ஆகிய குளங்களும் கால்வாய்களும் இவனால் கட்டப்பட்டன.
- நீர்ப்பாசன வரலாற்றில் அடுத்து முக்கியமான மன்னன் தாதுசேனனே இவனுடைய காலத்தில் நீர்ப்பாசனத்துறை மிகவும் முன்னேற்றம் காணப்பட்டது.
  உதாரணம் : கலாவாவி, யோதக்கால்வாய்
- அடுத்து இரண்டாம் முகலன் காலத்தில் பதவியாக் குளம், பத்பகன் குளம் (நாச்சதுவ) கட்டுவிக்கப்பட்டன.
- முதலாம் அக்போ மன்னனின் சிறந்த படைப்புக்களான மினபிபே கால்வாயும் மினிப்பே அணைக்கட்டும் விளங்குகின்றன. இவன் அதிகமானகுளங்களையும் கட்டுவித்தான்.
- இரண்டாம் அக்போ மன்னனால் கந்தளாய், கிரிதலே ஆகிய குளங்கள் கட்டுவிக்கப்பட்டன.
- மகா பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் நீர்பாசனத்துறையின் அபிவிருத்திக்கு அளப்பரிய சேவை செய்தான். பல குளங்களை இணைத்து பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தான்.
- நிஸ்ஸங்கமல்ல மன்னன் நிஸ்ஸங்க சமுத்திரம் என்ற பெயரால் ஒரு குளத்தைக் கட்டுவித்தாக சான்றுகள் உள்ளன.
- நீர்பாசனத்துறையில் ஆரம்பத்தில் சிறு குளங்களே தோற்றுவிக்கப்பட்டன. பின்பு அவை அரச அனுசரணையின் படி பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களாக அபிவிருத்தியுற்றன. இவற்றினை நீர்வள நாகரிகத்தின் முக்கிய மூலமாகக் கருதலாம்.

## குளங்களும் நீர்ப்பாசனக் கால்வாய்களும்

- நதிகளைக் குறுக்காக மறித்து அணைகள் கட்டி கால்வாய்கள் ஊடாக வயல் நிலங்களுக்க நீர்ப்பாசனம் மேற்ற கொள்ளப்பட்டது
  உதா:
  - * மினிப்பேயில் மகாவலி கங்கையை மறித்து அணைக்கட்டி மினிப்பேக் கால்வாய் உருவாக்கப்பட்டது.
  - * கலாவாவியை மறித்த ஜய் கங்கைக் கால்வாய்.
  - * மகாவலி கங்கையை மறித்து பம்பதன்னக் கால்வாய்.
- பாரிய குளங்களினூடாக சிறிய குளங்களுக்கு நீர் வழங்கப்பட்டன. இதற்காகச் சிறிய குளங்கள் அமைக்கப்பட்டன. சிறிய குளங்களினூடாக நீர் செல்லக் கூடியதாகக் கால்வாய்கள் அமைக்கப்பட்டன.
  உதா: எலகரக் கால்வாயினூடாக மின்னேரியா, கிரிதத்லே குளங்களுக்கு நீர் வழங்கப்பட்டது. சிறிய குளங்கள் ஊடாக இவை அமைக்கப்பட்டுக் காணப்பட்டன.

## நீர்பாசனத் தொழில் நுட்பம்.

- குளத்தின் பிரதான பகுதிகள்
- மலை இடுக்குகளை மையமாகக் கொண்டு குளங்கள் அமைத்தல்.
- குளக்கட்டு
- தாழ் கலிங்கல்
- உயர் கலிங்கல்
- கலிங்கத் தொட்டி
- உட்சுருங்கை
- சுரங்கை
- உயர் அணை
- குளக்கரை
- கலிங்க அணை
- குளக்கரை
- அலை தாங்கி
- சிறிய குளம்

## நீர்பாசனத் தொழில் நுட்பம்

### குளங்கள் அமைத்தல்

- குளக்கட்டுகளை அமைக்கும் போது தரையின் இயற்கை அமைப்பையும் உயர்வு தாழ்வையும் கவனத்திற் கொள்ளப்பட்டது.
  (உதா: மின்னேரியாக் குளக்கட்டின் அமைவு நிலத்தின் க்வாட் சயிட் தன்மையைக் கொண்டமைந்ததாகும்)
- குளத்தின் உட்பகுதிக்கு சரிவுடையதாக மலைகளை (கற்பாறை) தெரிவு செய்துள் ளனர். நீர் துவாரங்களினூடாக வெளியே செல்லாதவாறு சில குளங்கள் அமைக் கப்பட்டுள்ளன.
- சமவுயரக் கோட்டு நீளத்திற்கு ஏற்ப குளக்கட்டுகள் அமைத்தல்.
  உதா: பராக்கிரம சமுத்திரம்
- சீமெந்துக்குப் பதிலாக கருங்கற்களையே அடுக்கி கலிங்கல்கள் அமைக்கப்பட்டன.
- நீர் அரிப்பைத் தடுக்குமுகமாக குளக்கட்டின் உட்பகுதியில் சிறு துவாரங்கள் மூலம் நீர்ப்பாசனக் கால்வாய்க்குத் தொடுக்கப்பட்டுள்ளது.
- குளக்கட்டுக்குக் குறுக்கே நீர் பாய்ந்து கலிங்கல்லூடாக வேகமாக வெளியே செல்லும் போது உள்ளாகும் அழுக்கத்தினால் குளக்கட்டு பெரிதும் பாதிக்கப்படக் கூடும். இதனைத் தடுப்பதற்காகவே கலிங்கத் தொட்டி அமைக்கப்பட்டது.
- கலிங்கத் தொட்டி அமைப்பதில் கற்கள் பயன்படுத்தப்பட்டன. கற்களில் உள்ள துவாரங்களினூடாக நீர் வெளியே செல்லாதவாறு அவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

- நீரை வெளியேற்றுகையில் சேர்ந்து வரும் சேற்று நீரைத் தடுக்குமுகமாக சிறு நீர் தங்கி நிற்குமாறு அமைக்கப்பட்ட அமைப்பை ஈரக்கலிங்கல் எனலாம்.
- நீர் அதிகரித்த வேளையில் மேலதிகமான நீரினால் குளக்கட்டுப் பாதிப்படையாதவாறு அமைக்கப்பட்ட உறுப்பு சுருங்கை எனப்படும்.
- உயர் நிலத்தின் அமையும் குளத்தில் தாழி பகுதியில் 2 அடி அல்லது 3 அடி உயரத்திற்கு மண்ணால் சிறு கட்டுக்களை அமைத்தல். (பொட்டாமெட்) இதனால் குளத்திற்கு வந்து சேரும் சேற்று நீரைத்தடுக்க முடிவதுடன் கட்டிற்கு அருகாமை பிரதேசம் ஈரலிப்பு உடையதாகவும் வைத்துப் பாதுகாக்கலாம். இதனால் அப்பரதேசம் தாவரங்களின் வளர்ச்சிக்குப் பொருத்தமுடையதாக ஈரலிப்புக் கொண்டதாக அமையும்.
- சுருங்கை பாதிக்கப்பட்டு உடைவு ஏற்படும் போது குளத்து நீர் அனைத்தும் வெளியே செல்லாது தடுப்பதற்காக குளத்தினுள் கட்டுக்களை நீர் மரைத்தல். (கலிங்கல் கட்டு)
- தாழ்ப்பகுதிகளில் உள்ள குளங்களுக்கு நீர் பாய்ந்து வரும் போது சேற்று நீர் சேர்ந்து வராமல் இருப்பதற்கும் நீரை இலகுவில் பெற்றுக்கொள்வதற்குமாக உயர் நிலப்பகுதிகளில் சிறு சிறு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நீர்ப்பாசனத் முறையும் தொழில் நுட்பமும்

- நீர்ப்பாசன கால்வாய்களின் சரிவுப் பகுதிகளில் நீர் வழிந்தோடும்போது வேகத்தைக் கட்டுப்படுத்துமுகமாக கற்களினாலும் கற்தூண்களினாலும் கால்வாயினுள் பல உறுப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
  உதா: எலகரக்கால்வாயில் இருந்து மின்னேரியாக் குளத்துக்குச் செல்லும் நீர்ப்பாசனக் கால்வாய்
- மேலதிக நீர் வெளியேற்றுவதற்காக கருங்கற்களினால் வான் அமைத்தல்.
- நீளமான நீர்ப்பாசனக்கால்வாய்களை அமைப்பதற்கு நிலம் கவனத்திற் கொள்ளப் பட்டது. முறையாக நிலத்தை ஒழுங்கமைப்பதற்கு இலகு உபகரணங்களை அக்கால மக்கள் பயன்படுத்தினர்.
- வசபன் காலத்தில் சுரங்கக் கால்வாய்கள் மூலமாக நிலங்களுக்கும் பொய்கை களுக்கும் நீர் வழங்கப்பட்டது.
- கலாவாவி குளத்துடன் இணைந்த ஜயகங்கைக் கால்வாய் ஊடான நீர்பாசனம்
- நீர்ப்பாசனக் கால்வாய்களை அமைக்கும் போது புவியின் அமைவு பற்றியும் நீர் நிலத்தில் உரிஞ்சும் தன்மையினை அவதானத்திற் கொண்டும் சக்தியுடையதாக அமைக்கப்பட்டன. வெள்ளப்பெருக்கினால் பாதிப்படையாது இருப்பதற்காகவும் ஏனைய இயற்கை அழிவுகளில் இருந்து பாதிக்கப்படாதிருப்பதற்காகவும் இவ்வாறு அமைக்கப்பட்டது.
- உலர் வலயத்தில் அனைத்துப்பகுதிகளும் உள்ளடக்கக் கூடிய வகையில் நீர்ப்பாசன விநியோகம் இருந்தது. (உதா: மகாசேனன்)
- நீருற்றுக்களில் இருந்து நீர் வேகமாக பாய்ந்து வரும் போது வேகம் குறைந்த இடங்களை இனங்கண்ட நீர்பாசன நுட்பவியலாளர்கள் அவ்விடங்களில் தடைகளை ஏற்படுத்தி நீரை தாழ்வான பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனக் கால்வாய்களினூடாக கொண்டு செல்லல்.
- எலகரக்கால்வாயை அமைப்பதற்கு கற்றூண்களையும் கால்வாய் முறைகளையும் உபயோகத்திற் கொண்டனர்.

## 10.4.2 நிர்வாக ஒழுங்கமைப்பு

### மத்திய அரசு - அரசனின் கீழ் நிலைத்தது

- அரசனுக்கு உதவியாளர்கள் பலர் இருந்தனர்.
  (அமைச்சர்கள், பட்டகாரிக, சேனாதிபதி, மகலேனா, ஆபா, மாபா, சபாலேனா, சேனவிரத், வெதனா ஆகியோர்)

### உள்ளூராட்சி நிர்வாகம்

- உருகுணை - மாயாரட்டை
- தொலஸ்தட்ட (பன்னிரெண்டு இராச்சியங்கள்)
- அட்டதகஸ் ரட்ட (எட்டு இராச்சியங்கள்)
- தக்கிண தேசம் ஆகிய பிரதேசங்கள்

### கிராம நிர்வாகம்

- பண்டுகாபயன் முதல் பொலன்னறுவை இறுதிக்காலம் வரை கிராம நிர்வாகம் முறையாகக் காணப்பட்டது.

## 10.4.3 பொருளாதாரக் கோலங்கள்

### விவசாயம்

- பிரதான சீவனோபாய மார்க்கம் விவசாயமாகும்.
- நெல் உற்பத்தி முக்கியத்துவம் பெற்றிருந்தது.
- நீர்ப்பாசனத் துறைக்கு அரசனின் ஒத்துழைப்பு கிடைத்தமை.
- அவசியமான ஏனைய பயிர்ச் செய்கை உற்பத்திகள் வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டன.

### கைத்தொழில்

- வகுப்புவாரியான ஒழுங்கமைப்பு.
- உயர் நிர்மானங்களை மதித்தலும் அரச உதவி வழங்கலும்.
- குடிசைக் கைத்தொழில் விவசாயத்தை மையமாகக் கொண்டமைதல்.
  (கரும்பு, பருத்தி)

### வர்த்தகம்

- இரு பகுதிகள்
  உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம்.

- உள்நாட்டு வர்த்தகம்
  * வர்த்தக நகரங்கள் இருந்தமை.
  * அளத்தல் தொடர்பான அளவீட்டு முறை ஒன்று இருந்தமை.
  * வர்த்தகக் குழுக்கள், வர்த்தகச் சங்கங்கள்.
  * முத்து, மாணிக்கம் என்பனவற்றில் ஏகபோக உரிமை அரசினிடமே இருந்தது.

- வெளிநாட்டு வர்த்தகம்
  * மூலாதாரங்கள்
    நாணயங்கள், இலக்கிய மூலாதாரங்கள்
  * இந்தியா, கிரேக்கம், ரோம், சீனா, அரேபியா ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு.
  * பொலன்னறுவை யுகத்தில் வெளிநாட்டு வர்த்தகம் முன்னேறிக் காணப்பட்டது.

## 10.4.4 சமயமும் கலாசாரமும்

### பௌத்த சமயம்

- விவசாயத்தை மையமாகக் கொண்ட மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புடைய சமயம் ஆகும்.
- சிங்கள அரசர்கள் புத்த சமயத்தின் பிரசாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் வழி செய்தனர்.
- புத்த சமயத்தை மையமாகக் கொண்டு விகாரைகளை அமைப்பதில் ஈடுபட்டனர்.
- பௌத்தக் கொள்கைகள் தொடர்பாக பிரதான பிக்குகளின் கருத்து வேறுபாடுகள்.

### இந்து சமயம்

- பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய வழிபாட்டு முறை காணப்பட்டதுடன் இந்து சமய நம்பிக்கை
  உதா : சிவன், பார்வதி, லக்ஷ்மி ஆகிய இந்து சமய சிலைகள் காணப்பட்டன.
- பிராமணர் செல்வாக்கு (ருவன்வலிசாய தூபியின் பயன்பாட்டிற்கு கூட பிராமணர்களின் சேவை அத்தியவசியமாக விளங்கியது).

### கலாசாரம்

கலாசார முன்னேற்றம் நிலைத்தமை.

- கலைகள்
  - * கட்டடக்கலை - சைத்தியங்கள், போதிகள், சிலைகள் விகாரைகள், வைத்திய சாலைகள்
  - * சிலைகள் - சமாதிசிலை
  - * தூபிகள் - ருவன்வெலிசாய
  - * ஓவியங்கள் - சீகிரிய ஓவியம்

- கல்வி
  - * விகாரைகளையும் பிக்குகளையும் மையமாகக் கொண்ட கல்விமுறை.
  - * கலாசாரம் பாளி, சிங்கள மொழிப்பிரயோகம்.

### பாளி இலக்கியம்

புத்தகோச மகா அட்டுசாரிய என்பவரால் பாளி மொழியில் மொழிப்பெயர்த்த அட்டதாக இலக்கியம்.

- விசுத்திமக என்னும் இலக்கியம் - புத்தகோசபுக்கு
- புத்தகோச என்னும் இலக்கியம் - புத்தகோசவுக்கு மொழிப்பெயர்க்கப்பட்ட கிரந்தங்கள்
  - சமந்த பாசாதிகா
  - பபஞ்ச சுதனி
  - மனோரத்த புரணி
  - * தீபவம்சமும் மகாவம்சமும் இலக்கியத்திற்கும் உரித்தானவை.
  - * ஒழுக்கக்கோவை - சார்ந்த தீபனீ

  பொலன்னறுவை யுகம் பாளி இலக்கியத்தின் பொற்காலம் என வர்ணிக்கப் படுகின்றது.

### சிங்கள இலக்கியங்கள்

சிங்களவர்களுக்கு பத்த சமயத்தை இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக எழுதப் பட்ட ஹெலம்புவர் எனும் கிரந்தம் அநுராதபுர காலத்து இலக்கியங்களில் முக்கியமாகின்றது.

1. மகா அடுவா
2. மகா பச்சரி அடுவா
3. குருந்தி அடுவா

- தமிய, பாபரிய, கசுப்கொட, ஆபா, ஆதிமாபா போன்ற 12 கவிஞர்கள் அக்போ மன்னனுடைய அரச அவையில் இருந்தார்கள் என்று நிகாய சங்கிரக என்னும் இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்றது.
- கல்வெட்டுக்கள், சீகிரியாக் காவியங்கள்.
- எஞ்சியுள்ள எழுத்தாவணங்கள் (அநுராதபுர யுகம்)
  - கியபஸ்னகர
  - தம்பியா அட்டுவா
  - முல்பிக்கவும் சிக்கவளந்த வினிச
- பொலன்னறுவை யுகத்துக்கு உரிய இலக்கியங்கள்
  - பத்தியாவத
  - மவதேவ்தாவத
  - ஆவாவதுர
  - புத்சரண
  - சிங்கள தூபவம்சம்
- பொலன்னறுவை யுகத்தில் பிரசித்தி வாய்ந்த உரை நடை இலக்கியங்களில் ஒன்றான சன்ன என்று அழைக்கக் கூடிய ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது..
  - அபிதமமந்த சங்கிரஹய
  - மேக 'தூத்த சன்னய
  - ஜானகீஹரண சன்னய
  - பத்திய சன்னய
  - தாட்டாவங்ச சன்னய
  - ஜானக சன்னய
  - அட்டதா சன்னய
  - வைத்துருதா சன்னய
- அட்டபத புத்தகம் எழுதுதல்
  - மகா போதிவங்ச கெடபதய
  - ஜானக அட்டுவா கெடபதய

## 10.4.5 வெளிநாட்டு உறவுகள்

### அரசியல்

- ஆக்கிரமிப்பு
  ஈழ நாகன் மன்னன், காசியப்ப மன்னன், 1 ஆம் முகலன் தென்னிந்தியாவில் உதவி கோரியமை.
  * 1 ஆம் ஜயபாகு மன்னன் காலத்தில் படைவீரர்களை இங்கு கொண்டு வந்தமை.
- இட்ப்பெயர்வு
  * சங்கமித்தையுடன் 18 வகையான கைவினைஞர்கள் இங்கு வந்தமை.
- திருமண உறவு
  * மதுராபுரி அரசி, பத்தகச்சானா அரசி, திலோக சுந்தரி என்போர் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டமை.
  * பராக்கிரமபாகு மன்னன் கம்போடியாவுக்கு அனுப்பிய அரச குமாரியை பர்மா நாட்டு மன்னன் கடத்திச் சென்றான்.
- நட்பு உறவு முறை
  * முடிசூட்டு உபகரணங்கள் அனுப்புதல்.
    (அசோக மன்னன் - தேவனம்பிய தீச மன்னனுக்கு)
  * உரோம நாட்டு க்ளோடியன் மன்னன் அலங்கரிக்கப்பட்ட தளவிரிப்புக்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தான்.
  * இந்திய மன்னர்கள் பயன்படுத்திய பட்டங்களை இலங்கை மன்னர்களும் பயன்படுத்தியமை. (அசோகன், ஸ்ரீசங்கபோ)
- சிறைக்கைதிகள்
  1 ஆம் பராக்கிரமபாகு மன்னன் பாண்டிய நாட்டினை ஆக்கிரமித்து சிறைக் கைதி களை இங்கு கொண்டு வந்தமையும் குடித்தொயில் அவர்கள் உள்ளடக்கப் பட்டமையும்.

### கலாசார உறவுகள்

- சமயம் -
  பௌத்த கலாசாரத் தொடர்புகள்
- கி.மு.247 இல் இலங்கைக்கு புத்த சமயம் கொண்டு வரப்படல்.
- அதிட்டனுக்கும் குழுவினருக்கும் உயர் பதவிகள் வழங்கியமை.
- தென் இந்தியாவிலுள்ள பௌத்த மத்திய நிலையங்களில் இலங்கையின் பிக்குமார் உறவு வைத்திருந்தமை. (அமராவதி - நாகர்ஜுன)
- கீர்த்தி ஸ்ரீமேவன் மன்னன் இலங்கை யாத்திரிகர்களுக்காக புத்த கயாவில் ஓர் தங்குமிடத்தைக் கட்டுவித்தான்.
- இலங்கையிலுள்ள அபயகிரி விகாரை பிக்குகள் இந்தியாவில் மகாயான மத்திய நிலையங்களுடன் தொடர்புகளை வைத்துக் கொண்டனர்.
- இலங்கையின் பிக்குகள், சீயம், ஜாவா ஆகிய நாடுகளில் தேரவாதக் கொள்கையை பயன்படுத்தத் தொடர்புபட்டமை.

### இந்து கலாசாரத் தாக்கம்

- பொலன்னறுவை - சிவதேவாலயம்
- சிவபெருமான், கனதெய்வ உருவங்களை கண்டு பிடித்துள்ளமை.

### இஸ்லாமிய கலாசாரம்

- கரையோரப் பிரதேசங்களில் இஸ்லாமியர்கள் வாழ்ந்தமை.

### கட்டடக் கலை

- இந்தியாவின் மௌரிய மாதிரிகளை பெற்றுக் கொள்ளல்.

### சிற்பக்கலையும் செதுகுகற்கலையும்

- குப்த மாதிரிப் பின்பற்றுதலுக்கு (உதா: சமாதி சிலை)
- தென்னிந்திய அமராவதி செதுக்கல்களையும் சிங்கங்களையும் கொண்ட மாதிரிகளை இலங்கையும் கையாண்டமை. (உதா: அவுக்கண சிலை)

### ஓவியம்

*குப்த காலத்திற்குரிய அஜந்தா ஓவியத்தின் மாதிரிகளுக்கு உதாரணம் சீகிரியா ஓவியம்.*

### எழுத்துக்கள்

*பிராமிய எழுத்து வடிவங்களின் மாதிரிகள் சிங்கள எழுத்துக்கள் சிலவற்றிலும் காணலாம்.*

## 10.4.6 நீர் வள நாகரிகத்தின் வீழ்ச்சி

- கி.பி 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்திருந்த நீர்வள நாகரீகம் கி.பி 1215 இல் மாகனின் படையெடுப்புடன் முற்று முழுதாக சிதைவுற்று அழிந்தது.
- பொலன்னறுவை காலத்தின் பிற்பகுதியில் சிங்காசன உரிமை பற்றி பிணக்குகள் எழுந்தன.
- மத்திய நிர்வாகத்தில் குழப்பம் ஏற்பட்ட விவசாய நீர்ப்பாசனத்திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலையேற்பட்டது.
- பகைவர்களின் ஆக்கிரமிப்பால் நீர்ப்பாசனத்திட்டங்கள் அழிவுற்றன.
- இராசரட்டை மக்கள் பாதுகாப்புத் தேடி தென் மேற்குத் திசை நோக்கியும் மலயரட்டை ருகுணுரட்டை ஆகியவற்றை நோக்கியும் இடம் பெயர்ந்தனர்.

## செயற்பாடு 10.4.1

**தேர்ச்சி** : நீர்வள நாகரிகம் என்றால் என்ன? என்பதை விவரிப்பார்

**தேர்ச்சி மட்டம்** : நீர்வள நாகரிகத்தில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பம் பற்றி கற்பார்.

**செயற்பாடு** : "நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தின் அதிசயிக்கத்தக்க மரபு உரிமையைப் போற்றுவோம்"

**காலம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 01 - பாடப்பிரவேசத்திற்கான சித்திரம்
- இணைப்பு 02 - செயற்பத்திரம்
- பாடநூல்
- 20x15 செ.மீ. அளவுடைய சிறிய பலகைத்துண்டு
- கிளே/ களி/ சீமெந்து/ பிளாஸ்டர்பரிஸ்
- குண்டூசி
- 2x 2 1/2 செ.மீ அளவுடைய கடதாசித்துண்டுகள்
- பெலட் பேனைகள்
- சிறிய கற்துண்டுகள்
- தட்டையான கற்துண்டுகள் (கலிங்கத் தொட்டி)
- கலிங்கல் தொடர்பாக மிகச் சிறிய கற்துண்டுகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.4.1.2** :

- 10.4.1.1 குளம், நீர்ப்பாசனக் கால்வாய் உள்ளடங்கிய சித்திரங்கள்/ ஒலிப்பேழை/ வீடியோ நாடா இவற்றின் ஊடாக குளமொன்றின் பிரதான உறுப்புக்கள் பற்றிக் கலந்துரையாடல்.

| |
|---|
| • நீர் வழிந்தோடக்கூடிய இடத்தின் உயர்வான இருபக்கங் களையும் இணைத்து குளக்கட்டு அமைப்பதனால் குளங்கள் உருவாக்கப்பட்டமை.<br>• விவசாய நடவடிக்கைகளுக்காக கிராமத்தில் உள்ள சிலரின் ஒத்துழைப்புடன் சிறு குளங்கள் அமைக்கப் பட்டுள்ளமை.<br>• சிறு குளங்களிலிருந்து வெளிச் செல்லும் குளத்து நீர் பெரிய குளங்களைப் போய் அடையும் முறையில் நீர்ப்பாசனத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை.<br>• குளத்தின் பிரதான பகுதிகள் உள்ளன.<br>• மேற்குறிப்பிடப்பட்ட காரணிகளை அவதானித்திற் கொள்ளும் வகையில் கலந்துரையாடுக. |

(15 நிமிடங்கள்)

படி 10.4.1.2 :

- நீர்ப்பாசனக் கால்வாயினதும் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தினதும் இலட்சணங்களை உள்ளடக்கியதாக குளம் ஒன்றின் அமைப்பை உருவாக்குதலுக்காக குழு அடிப்படையில் மாணவர்களை வழிப்படுத்துக.
- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்க ளாகப் பிரிக்குக.
- இணைப்பு 1 உள்ள செயற்பத்திரத்தின் படி குறிப்பிட்ட செயற்பாட்டை உருவாக்குவதற்கு ஆலோச்சனை வழங்குக.
- செயற்பாட்டின் போது தேவையான அறிவுறுத்தல் களையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்க.

(1 மணித்தியாலயம் 5 நிமிடங்கள்)

படி 10.4.1.3 :

- ஒவ்வொரு குழுக்களாலும் அமைக்கப்பட்ட நிர்மாணங் களை வகுப்பறையில் முன்வைக்குக.
- மாதிரிக் குளமொன்றின் பிரதான பகுதிகளையும் அவற் றின் தொழிநுட்பத்தின் இலட்சனங்களையும் அனைத் துக் குழுக்களுமாக விளக்கமளிக்குக.
- ஒவ்வொரு குழுவும் முன்வைக்கின்ற கருத்துக்களை மற்றைய குழுக்கள் கவனத்திற் கொண்டு தமது கருத் துக்களையும் ஆலோசனைகளையும் பொதுவாக பெற்றுக் கொள்க.
- பின்வரும் காரணிகளை உள்ளடக்கியதாக ஒரு கலந்து ரையாடலை நடாத்துக.

- நீர்ப்பாசனத்திட்டங்களை மேற்கொள்ளும் போது புவி யின் அமைவிடத்தையும் கவனத்தில் கொண்டுள்ளமை.
- சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் பாரிய நீர்ப்பாசனத்திட்டங் கள் எனப் பிற்காலத்தில் அபிவிருத்தியுற்றுள்ளமை.
- பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களைத் தொடர்ச்சியாக மேற் கொள்வதற்கு பல்வேறு தொழில் உபாய முறைகளைப் பயன்படுத்தியமை.
- பெரிய குளங்களின் போசிப்பிற்கு சிறிய குளங்களை அமைத்தமை.
- நீரின் அமுக்கத்தைக் குறைப்பதற்கு கலிங்கத் தொட்டி களை அமைத்தமை.
- குளக்கட்டின் அரிப்பைத் தடுப்பதற்காக அலை தாங்கி களை அமைத்தமை.
- சுருங்கைகள் பாதிக்கப்பட்டு உடையும் தருணத்தில் குளத்து நீர் வெளியே செல்லாதிருக்க குளத்தின் உட்பகுதியில் அணைக்கட்டுகளை அமைத்தல்.
- நீரை வெளியே அகற்றக் கூடிய கால்வாய்கள் பாதிப் படையாதிருக்கும் வகையில் கலிங்கல் இருந்தமை.
- மிகவும் உயரமான பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளக் கூடியதாகக் கால்வாய் உடன் கொண்டதாக அமைந்தமை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- நீர்ப்பாசன தொழிநுட்பத்தின் பிரதான இலட்சணங்களை விளக்குவார்.
- பண்டைய மரபுரிமையாக விளங்கி காணப்பட்ட நீர்ப் பாசனத்திட்டங்களை பாதுகாப்பதற்கு மாணவர்களைத் தூண்டுதல்.
- குளங்களையும் நீர்பாசனத்திட்டங்களையும் காட்டக் கூடிய ஒரு படிவத்தை அமைப்பார்.
- நிர்மாணிக்கப்பட்ட படிவங்களின் துணையுடன் நீர்வள நாகரிகத்தில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தின் இலட் சணங்களை விபரமாக முன்வைப்பார்.

## பின் தொடர்வேலை :

- அமைக்கப்பட்ட படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான தகவல்களையும் தரவுகளையும் பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக் கொள்வார்.

# இணைப்பு 01

## குளங்களையும் நீர்ப்பாசனத்திட்டங்களையும் காட்டும் படம்



# இணைப்பு 02

## செயற்பத்திரம்

குளங்களையும் நீர்ப்பாசனக் கால்வாய்களையும் உள்ளடங்கலான பண்டைய நீர்ப்பாசனத் தொகுதியின் மாதிரியை அமைக்குக.

- இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள படத்தின் படி நீர்ப்பாசனத்திட்டத்தையும் குளத்தினையும் கொண்ட மாதிரி ஒன்றை அமைக்குக.
- வழங்கப்பட்ட பலகைத்துண்டில் குறிப்பிட்ட பிரதேசத்தின் தரைத்தோற்ற அம்சங்களை அமைக்குக.
- உருவில் உள்ளவாறு சிறு குளங்களின் மாதிரி ஒன்றை வடிவமைக்குக.
- பெரிய குளத்திற்கு மண் கழுவப்பட்டு வருவதைத்தடுக்குமுகமாக போட்டா (உயரணை) அமைக்குக.
- பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான குளத்தின் உறுப்புக்களை வடிவமைக்குக.
- நீர் அலைகளினால் குளக்கட்டின் அரிப்பைத் தடுப்பதற்கு குளக்கட்டின் உட்பகுதியில் சிறு கற்களைக் கொண்டு அலைதாங்கியை அமைக்குக.
- குளக்கட்டிற்கு அருகில் கலிங்கத் தொட்டிற்கு இணைத்த பகுதிகளை அமைக்குக.




உருவில் காட்டப்பட்டுள்ளவாறு நீர் அரிப்பை தடுப்பதற்காக கலிங்கத் தொட்டியின் பக்கமாக கலிங்கலின் சிறு துவாரம் கொண்ட பகுதியை இணையுமாறு அமைக்குக.

- மெல்லிய கற்துண்டுகளைப் பயன்படுத்தி கலிங்கத் தொட்டியை அமைக்குக.
- மேலதிகமான நீரை வெளியேற்றும் உருப்பான சுருங்கையை அமைக்குக.
- சுருங்கை பாதிக்கப்படும் வேளையில் நீரைப் பாதுகாப்பதற்கான கலிங்க அணையை அமைக்குக.
- நீர்ப்பாசனக் கால்வாயை அமைக்குக.
- உங்களால் (படைக்கப்பட்ட) நிர்மாணிக்கப்பட்ட ஆக்கத்தின் தொழில் நுட்பத் தன்மையை விளக்கமாக வகுப்பில் முன்வைக்குக.

## செயற்பாடு 10.4.2

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | நீர்வள நாகரிகம் என்றால் என்ன என்பதை விவரிப்பார் |
| தேர்ச்சி மட்டம் | : | நீர்வள நாகரிக ஆட்சியமைப்பு அமைந்த முறையை பரிசீலிப்பார். |
| செயற்பாடு | : | "அரசனுக்கு ஒத்துழைப்பு நல்கியோர்" |
| காலம் | : | 40 நிமிடங்கள் |
| தர உள்ளீடுகள் | : | • இணைப்பு 01 - செயற்பத்திரம்<br>• பாடநூல்<br>• ஸ்ரீ லங்கா வரலாறு (சிங்களம்) பகுதி I அநுராதபுரம் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)<br>• இலங்கை வரலாறு - இலங்கை பல்கலைக்கழகம்<br>• ஸ்ரீ லங்கா வரலாறு (சிங்களம்) பகுதி II பொலன்னறுவை யுகம் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)<br>• குண்டுசிகள்<br>• 4x 12 செ.மீ அளவுடைய தாள் (கடதாசித்துண்டுகள்) |
| ஆசிரியருக்கான ஆலோசனை | : | • நிர்வாக அமைப்பும் பதவிகளும் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள ஒவ்வொரு மாணவரையும் தூண்டவும்.<br>• மாணவர்கள் அதிகமாயிருக்கும் பட்சத்தில் அனைத்து மாணவர்களுக்கும் தனித்தனி பாத்திரங்களை ஒப்படைக்குக. (கமிக பதவிகள், படைப்பிரிவுப் பதவிகள் என்பனவாக)<br>• மாணவர் தொகை குறைவாக இருப்பின் ஒவ்வொரு மாணவருக்கும் பல பாத்திரங்களை ஒப்படைக்கவும். |
| கற்றல் கற்பித்தல் செயன்முறை | : | |
| படி 10.4.2.1 | : | • அரசன் என்று அழைக்கப்படுபவர் யார்?<br>• நீங்கள் அறிந்த அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக |

ஆகிய வினாக்களை மாணவர்களுக்கு ஒப்படைத்து பின்வரும் காரணிகள் வெளிக் கொணரப்படும் வகையில் கலந்துரை யாடுவதற்கு வழி செய்க.

- நீர்வள நாகரிக நிர்வாகத்தின் பிரதானமானவர் அரசன் என அழைக்கப்பட்டமை
- நிர்வாகத்தில் அரசனின் கீழ் பல அதிகாரிகள் இருந்தமை
- அரச அவையில் அனைத்து அதிகாரிகளும் ஒன்று கூடி கலந்துரையாடியமை

(10 நிமிடங்கள்)

படி 10.4.2.2 :

- நீர் வள நாகரிகத்தின் பரிபாலன ஒழுங்கமைப்பு அமைந்த முறை பற்றி தகவல்களை பெற்றுப் பாத்திர மேற்று நடிப்பதற்கு.
- நூல்களைக் கற்பதன் மூலம் ஒவ்வொரு அதிகாரிக ளுக்கும் உரிய பொறுப்புக்கள் எவை? என்பது பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கு மாணவர்களை நெறிப்படுத்தவும்.
- ஒவ்வொரு மாணவர்களுக்கும் உரிய பதவிப் பெயர் களை, பெயர்ப்பலகைகளில் ஒழுங்கமைப்பதற்கு வழி செய்க.
- கரும்பலகையில் அல்லது திறந்த வெளி அரங்கில் நிலத்தில் இலங்கைப்படத்தை வரைந்து அதில் பிரதேச நிர்வாகப் பகுதிகளை குறிப்பதற்கு ஆலோசனை வழங்குக.
  (உதா: இராசரட்டை, மாயரட்டை, மலையரட்டை, ருகுண என்றவாறு)

படி 10.4.2.3 :

- புதிய பதவிக்கு ஏற்ப பெயர் அட்டைகளை அணிந்து கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்தவும்.
- அணிந்து கொண்ட தமது பதவிப் பெயரின் படி பாத்திர மேற்று நடிப்பதற்கு மாணவர்களுக்கு அவகாசம் அளிக்குக.
- செயற்பத்திரத்தில் குறிப்பிட்ட படி பாத்திரமேற்று நடிப்ப தற்கு இடமளிக்கவும்.
- தேவையான சந்தர்ப்பத்தில் வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குக.
- பின்வரும் காரணிகள் வெளிக்கொணரப்படும் வகையில் மீட்டாய்வுக்குட்படுத்துக.

- நீர்வள நாகரிகத்தின் நிர்வாகத்தலைவர் அரசன்.
- மத்திய நிர்வாகம் மாகாண நிர்வாகம் என நிர்வாக முறை காணப்பட்டமை.
- அரசனின் கீழ் இருந்த அதிகாரிகளுக்கு பல்வேறு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை.
- கிராமிய நிர்வாகத்திற்காக அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தனர்.
- அரசன் நிர்வாகத்தலைவனாகக் காணப்பட்டதுடன் நிர்வாகப் பகிர்ந்தளிப்பும் கலந்துரையாடலும் இடம் பெற்று முடிவெடுக்கக்கூடிய ஜனநாயக இலட்சணம் காணப்பட்டமை.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- நீர்ப்பாசன நாகரிகத்தின் ஆட்சி ஒழுங்கமைப்பு பற்றிய தகல்களை முன்வைப்பார்.
- பழைய நிருவாக முறையுடன் புண்டைய காலத்தில் ஜனநாயக நிர்வாக முறையின் இலட்சணங்களும் நிலைத்திருந்தமை பற்றி மதிப்பார்.
- பண்டைய நிர்வாக ஒழுங்கமைப்பு பற்றிய தகவல் பெற்று பாத்திரமேற்று நடித்தல்.
- ஒத்துழைப்புடன் கூட்டாக வேலை செய்வதற்கு தூண் டப்படுவார்.
- தலைமைத்துவத்தின் இயல்புகளை வளர்த்துக் கொள் வதற்கு தூண்டப்படுவார்.

## பின் தொடர்வேலை :

- அது தொடர்பான முக்கியமான தகவல்களை (விளக் கங்களை) பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக் கொள்க.

# இணைப்பு 01

## செயற்பத்திரம்

நீர்வள நாகரிகத்தின் நிர்வாக அமைப்பு ஒழுங்கமைக்கப்பட்ட முறை பற்றிய விபரங்களைப் பெற்று பாத்திரமேற்று நடித்தல் உங்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

நீர்வள நாகரிகத்தின் ஆட்சி முறையில் பல அதிகாரிகள் காணப்பட்டனர். அவர்கள் பல பதவிகளையும் வகித்தனர். உங்களுக்கு பின்வரும் அதிகாரிகளின் பெயர்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பதவி பற்றிய விளக்கங்களை ஒன்று சேர்த்தல்.

- அரசன்
- மகா அமாத்ய (முதல் அமைச்சர்)
- யுவராஜன்
- புரோகிதர்
- அமைச்சர்
- சேனவிரத் (சேனாதிபதி)
- துவாரபாலகர்
- நகர குத்திகன்
- படகரிக (அரச திறைசேரி அதிகாரி)
- வெதனா
- மகாலேனா
- ஆபா
- மாபா
- கமிக

- உங்களுக்கு வழங்கப்பட்ட பதவிப் பெயர் அட்டையை முன்பக்கத்தில் அணிந்து கொள்க.
- அரசன் முதல் கமிக வரை ஒவ்வொருவராலும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை முன்வைக்குக. இதற்காக இலங்கைப் படத்தைக் கையாள்க.
- இறுதியில் அரசனாதல், நாட்டின் நிர்வாகம் தனது தலைமையின் கீழ் உள்ளதென்றும் அங்கு ஜனநாயக இலட்சணங்கள் இருந்தமை பற்றியும் விளக்கி பாத்திரமேற்று நாடகம் ஒன்றை நடித்துக்காட்டுக.

## செயற்பாடு 10.4.3

தேர்ச்சி : நீர்வள நாகரிகம் என்றால் என்ன? என்பதை விவரிப்பார்.

தேர்ச்சி மட்டம் : நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறையை விவரிப்பார்.

செயற்பாடு : "நீரினால் போஷிக்கப்பட்ட அன்றைய இலங்கை"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01
- இணைப்பு 02 - செயற்பத்திரம்
- இணைப்பு 03 - செயற்பத்திரம்
- பாடநூல்
- ஸ்ரீ லங்கா வரலாறு (சிங்களம்) பகுதி I
  பகுதி II
  (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)
- இலங்கை வரலாறு - இலங்கை பல்கலைக்கழகம்
- ஏ4 தாள் (கடதாசி)
- பாடநூல்
- பெல்ட் பேனைகள், பேனை

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.4.3.1 :

- இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளவற்றை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக. ஒவ்வொரு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் அக்கால பொருளாதார முறையின் விஷேட இலட்சணங்கள் பற்றி கலந்துரையாடலில் ஈடுபடுக.
- பின்வரும் காரணிகள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

| |
|---|
| • நீர்வள நாகரிகம் எனக் கருதப்படும் அநுராதபுர, பொலன்னறுவை யுகங்களில் விவசாயம் பிரதான பொருளாதார நடவடிக்கையாக அபிவிருத்தியுற்றிருந்தது. |
| • உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம் பரந்து காணப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. |
| • பலதரப்பட்ட கைத்தொழில்கள் இருந்தமைக்கான மூலாதாரச் சான்றுகள் உள்ளன. |

(15 நிமிடங்கள்)

படி 10.4.3.2 :

- நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறை பற்றி தகவற்தொகுதி தயார்ப்படுத்தும் குழு ரீதியான ஒப்படை செய்வதில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- இதற்காக மாணவர்களை குழு நிலைப்படுத்துக.
- இணைப்பு 2 - செயற்பத்திரத்தை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்குக.
- பொருத்தமான நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குக.
- ஒப்படையின் போது இடைக்கிடை தேவையான வழி காட்டல்களையும் ஆலோசணைகளையும் வழங்குக.

(30 நிமிடங்கள்)

படி 10.4.3.1 :

- ஒவ்வொரு குழுவும் தயார் படுத்திய தகவல்களை வகுப்பறையில் பொதுக் குழுவிற்கு முன்வைப்பதற்கு இடமளிக்குக.
- முன்வைத்த தகவல்கள் பற்றி ஒவ்வொருவருக்கும் கருத்துத்தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- இறுதி வெளிப்பாட்டின் தகவற் கட்டளைகளை ஒழுங்க மைப்பதற்காக ஆலோசணை வழங்குக.
- பின்வரும் காரணிகள் கருத்திற் கொள்ளப்படும் வகை யில் மீட்டாய்வு செய்க.

- நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறையின் போது விவசாயத்துறைத் தொழிலுக்கு முக்கியமான இடம் இருந்தமை.
- விவசாயக் தைத்தொழிலிற்கு அரச ஒத்துழைப்பு கிடைத்தமை.
- உற்பத்திப் பயிர்கள் பல்தரப்பட்டுக் காணப்பட்டமை.
- காணி உரிமையும் அதனை அனுபவிக்கும் உரிமை யும் அரசனின் பொறுப்பில் இருந்தமை.
- விவசாயக் கைத்தொழில் அபிவிருத்திக்காக அதிகாரி கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.
- வர்த்தகம் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் என்ற அடிப்படையில் பரவிக் காணப்பட்டன.
- வர்த்தகம் தொடர்பாக இலக்கிய நூல்களில் இருந்தும் தொல்பொருள் ஆராய்ச்சி நூல்களில் இருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.
- பல்தரப்பட்ட கைத்தொழில்களில் மக்கள் ஈடுபட்டு இருந்தனர்.
- தொழிற்சாலைகளுக்கு அண்மையில் பல்வேறு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டமை.
- நீர்வள நாகரிகத்தின் வளமான பொருளாதார முறை ஒன்று விளங்கியமை.

(35 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறையின் தன்மையை விவரிப்பார்.
- வளமான பொருளாதார முறைமையொன்று உருவாவதற்கு அரச அனுசரணை கிடைத்தமையை ஏற்றுக் கொள்வார்.
- "நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறை" .எனும் தலைப்பில் தகவற் கோவை ஒன்றை அமைப்பார்.
- தலைமைத்துவத்தை மதிக்கும் பண்பு விருத்தி பெறும்.
- மக்களினதும் ஆட்சியாளர்களினதும் முயற்சியாண்மையினால் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்ற கருத்துக்களை முன்வைப்பார்.

## இணைப்பு 01

"சீஹல வத்தூகரண, மகாவம்ச ரீக்கா ஆகியவற்றின் தகவல்களின் படி அநுராதபுரகால ஆரம்பப் பகுதிகளில் இலங்கையின். அனைத்து பிரதேசங்களிலும் நெல் உற்பத்தி செய்யப்பட்டமை"

"சங்கமித்தை பிக்குனியுடன் வந்த குலங்களுள் வியாபாரக் குலத்திற்குரிய குடும்பங்கள் பல இருந்தன என மகாபோதி வம்ச என்னும் கிரந்தத்தின் ஒரு பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது"

"விஜய இளவரசனால் கட்டியெழுப்பப்பட்ட தம்பன்னாநுவரவும் வியாபாரச் சந்தையாக இருந்தமையை தீப வம்சம் குறிப்பிடுகின்றது"

"கி.மு 2 ஆம் நூற்றாண்டின் அரை இறுதிப்பகுதியில் அநுராதபுர நகரத்தினுள் வாசனைப் பொருட்கள் விற்பனை செய்யக் கூடிய வியாபாரக் கடைகள் அமைந்திருந்தமை பற்றியும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட பொருட்களின் விற்பனை நிலையங்கள் மிகிந்தலைக்கு அண்மையில் இருந்தமை பற்றியும் மகாவம்சத்திலும் பாகியனின் தேஸாட்டன எனும் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன."

# இணைப்பு 02

## செயற்பத்திரம்

## குழு I

நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறை எனும் தலைப்பில் "விவசாயம்" பற்றி தகவல்கள் சேகரிப்பது உமது குழுவுக்கான ஒப்படையாகும்.

இங்கு,

விவசாய பயிர்ச்செய்கை - மேட்டு நிலம், சேற்று நிலம் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்.
காணி உரிமையும் அனுபவித்தலும் விவசாயக் கைத்தொழிலும் அது தொடர்பான அதிகாரிகள், விவசாய வரி, எனும் தலைப்பின் கீழ் விபரங்களை ஒன்று திரட்டுதல்.

- நீங்கள் தேடிப்பெற்ற தகவல்களை பொதுக் குழுவிற் முன்வைக்குக.
- சேகரித்த விபரங்கள் அடங்கிய பத்திரங்களை ஒன்று சேர்த்து நீர்வள நாகரிகத்தில் பொருளாதார முறை பற்றிய கோவை ஒன்றை வடிவமைக்குக.

## குழு II

நீர்வள நாகரீகத்தின் பொருளாதார முறை எனும் தலைப்பில் "விவசாயம்" சம்பந்தமான விபரங்களை ஒன்று திரட்டுவது உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படையாகும்.

- உள்நாட்டு வர்த்தகம்
  - * நூல்கள்
  - * வியாபாரக் கிராமங்கள்
  - * வர்த்தக வகை
  - * வியாபாரப் பொருட்கள்
  - * விசேட இலட்சணங்கள்

- வெளிநாட்டு வர்த்தகம்
  - * நூல்கள்
  - * வியாபாரப் பொருட்கள்
  - * வியாபாரமும் தொடரான நாடுகளும்
  - * விசேட இலட்சணங்கள்

மேற் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் பற்றி விபரங்கள் சேகரித்து வகுப்பில் பொது குழுவிற்கு முன்வைக்குக.

- ஒழுங்கு படுத்திய விபரப் பத்திரங்களை ஒன்று சேர்த்து நீர்வள நாகரிகத்தின் பொருளாதார முறை பற்றி விபரக்கோவை ஒன்றை வடிவமைத்தல்.

## குழு III

நீர்வள நாகரீகத்தின் பொருளாதார முறை எனும் தலைப்பின் கீழ் கைத்தொழில் பற்றி விபரங்கள் சேகரித்தல் உங்கள் குழுவிற்கு வழங்கப்படும் ஒப்படையாகும்.

- தொழிற்சாலைகள் இருந்தமை பற்றிய நூல்கள்
- தொழிற்சாலை வகைகள்
- தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்
- விசேட இயல்புகள்

  எனும் தலைப்பில் விபரங்கள் சேகரித்து வகுப்பில் பொதுக் குழுவுக்கு முன் முன்வைக்குக.
- அமைக்கபட்ட விபரப் பத்திரங்களை ஒன்று சேர்த்து நீர்வள நாகரீகத்தின் பொருளாதார முறை பற்றி விபரக்கோவை ஒன்றை வடிவமைத்தல்.

## செயற்பாடு 10.4.4

தேர்ச்சி : நீர்வள நாகரிகம் என்றால் என்ன? என்பதை விவரிப்பார்.

தேர்ச்சி மட்டம் : வெளிநாட்டுத் தொடர்பு பற்றி விவரிப்பார்.

செயற்பாடு : "வெளிநாட்டவர்கள் கண்டு வியந்த குளங்கள் கட்டப்பட்ட இராச்சியம்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01
- இணைப்பு 02 - செயற்பத்திரம்
- ஏ4 கடதாசிகள் (தாள்)
- பெல்ட் பேனைகள்
- பேனைகள்
- அடிமட்டம்
- பாடநூல்
- அநுராதபுர யுகம் - கல்வி வெ. திணைக்களம்
  பொலன்னறுவை யுகம் - கல்வி வெ. திணைக்களம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.4.4.1 :

- இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள உலகப்படத்தை மாணவர் முன் காட்சிப்படுத்துக. அதில் காணப்படுகின்ற நாடுகள் சிலவற்றில் வெளிநாட்டு உறவு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றி கலந்துரையாடுக.
- இலங்கையில் துறைமுகங்கள் அமைந்திருந்தமை வெளிநாட்டு உறவுகள் ஏற்பட காரணமாகும். கலந்துரையாடுக.

- இலங்கை அன்று முதல் வெளிநாடுகளுடன் பல்துறைகளில் உறவு வைத்துள்ளமை.
- இவ்வுறவு முறையினால் அண்மித்த பல ஆசிய நாடுகள் முக்கியத்துவமடைந்தமை.
- ஆசிய நாடுகளில் இந்தியாவுடன் பல்தரப்பட்ட சந்தர்ப்பங்களில் உறவு முறையைப் பேணி வந்தமை.
- இந்த உறவு முறையினால் இலங்கை பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டமை.
- இலங்கையின் பிரசித்தமான துறைமுகங்களின் இயற்கை அமைப்பு, பல்வேறு நாடுகளின் தொடர்பிற்கு வழி வகுத்தமை ஆகிய காரணிகளை அவதானத்திற் கொண்டு கலந்துரையாடுக.

(15 நிமிடங்கள்)

படி 10.4.4.2 :

- பல்வேறு துறைகளில் நீர்வள நாகரிகத்தின் வெளிநாட்டு உறவு நிலவிய முறை பற்றிய விபரங்களை சேகரித்து எண்ணக்கரு விளக்கப்படம் ஒன்றை தயாரிப்பதற்கு மாணவர்களை நெறிப்படுத்துக.
- உரிய நூல்களை கையாள்வதன் மூலம் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுக.
- செயற்பத்திரத்தில் உள்ள உபதலைப்புக்களின் கீழ் உதாரணத்தோடு எண்ணக்கரு விளக்கப்படத்தைத் தயாரிப்பதற்கு மாணவர்களை நெறிப்படுத்துக.
- தேவையான வழிகாட்டல்களை வழங்குக.

(25 நிமிடங்கள்)

படி 10.4.4.3 :

- ஒழுங்கமைத்த எண்ணக்கரு விளக்கப்படங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு எண்ணக்கரு விளக்கப்படங்களையும் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- பின்வரும். காரணிகள் தொடர்புபடும் வகையில் மீட்டாய்வு செய்க.

- நீர்வள நாகரிகத்தின் வெளிநாட்டு உறவு மிகவும் விருத்தியுற்று அமைந்தமை.
- வெளிநாட்டு உறவின் கீழ் இராசதந்திர உறவுகள் பல்வேறு துறைகளில் வியாபித்தமை.
- இலங்கை, இந்தியாவிற்கிடையில் தொடர்பு பரந்து வியாபித்துக் காணப்பட்டமை.
- வெளிநாட்டு உறவு முறையினால் பௌத்த, இந்து ஆகிய சமயங்கள் இலங்கையில் மக்கள் வாழ்க்கையில் தொடர்புபடக் காரணமாயின.
- கட்டடக் கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, சிலைகள், இலக்கியங்களின் முன்னேற்றத்திற்கு வெளிநாட்டு உறவு சாதகமாக அமைந்தது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- நீர்வள நாகரிகத்திலே வெளிநாட்டு உறவுமுறை இடம் பெற்ற பகுதிகளை விளக்குவார்.
- அரசியல், பொருளாதார, கலாசார முன்னேற்றத்திற்கு வெளிநாட்டுறவு தாக்கம் செலுத்தி உள்ள விதத்தினை மதிப்பிடுவார்.
- பண்டைய வெளிநாட்டு உறவு முறை பற்றி எண்ணக் கரு விளக்கப்படமொன்றை அமைப்பார்.
- ஒத்துழைப்புடன் வேலை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வார்.
- நாட்டின் அரசியல், பொருளாதாரம், கலாசார மேம் பாட்டிற்கு வெளிநாட்டு உறவு முறையைப் பயன்படுத் திக் கொள்ள முடிகின்றமையை கலந்துரையாடுவார்.

## இணைப்பு 01




## இணைப்பு 02

### செயற்பத்திரம்

நீர்வள நாகரிகத்திலே வெளிநாட்டு உறவு நிலைத்த முறை பற்றிய தகவல்களை ஒன்று திரட்டி எண்ணக்கரு விளக்கப்படம் ஒன்றை அமைத்தல் உங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்படையாகும்.

- வெளிநாட்டு உறவு முறையின் கீழ் இராசதந்திரத் தொடர்பு, கலாசாரத் தொடர்பு ஆகிய தலைப்பின் கீழ் தகவல்களை ஒன்று திரட்டுங்கள்.
- அரசியல் தொடர்பின் காரணமாக ஆக்கிரமிப்பு, குடிப்பெயர்வு, திருமணம், நட்புறவு, சிறைக்கைதிகள் எனும் தலைப்புக்களில் உதாரணத்துடன் எண்ணக்கரு விளக்கப்படத்தை பூரணப்படுத்துக.
- கலாசாரத் தொடர்பின் கீழ் சமய, கட்டடக்கலை, சிலைகள், செதுக்கல், சிற்பம், சித்திரம், எழுத்துக்கள் எனும் தலைப்புக்களில் உதாரணத்துடன் எண்ணக்கரு விளக்கப்படத்தை பூரணப்படுத்துக.
- ஒழுங்கமைக்கப்பட்ட எண்ணக்கரு விளக்கப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை பொது குழுவிற்கு முன்வைக்குக.

## செயற்பாடு 10.4.5

தேர்ச்சி : நீர்வள நாகரிகம் என்றால் என்ன? என்பதை விவரிப்பார்.

தேர்ச்சி மட்டம் : நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி பற்றிக் கற்பார்.

செயற்பாடு : "பண்டைய வளமான வாழ்வு"

காலம் : 40 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 01 - பிரவேசம்
- இணைப்பு 02 - செயற்பத்திரம்
- பாடநூல்
- மகாவம்சம்
- பொலன்னறுவை யுகம் - கல்வி வெ. திணைக்களம்
- ஏ4 கடதாசிகள் (தாள்)
- பேனைகள்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி. 10.4.5.1 :

- இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள படத்தை மாணவர் முன் காட்சிப்படுத்துக. அதில் குறிப்பிடப்படும் ஆக்கி ரமிப்பினால் ஏற்பட்ட அழிவைக் கலந்துரையாடுக.

- மாகனின் ஆக்கிரமிப்பினால் மிக மோசமான அழிவு ஏற்பட்டது.
- காணி பூமிகளும் சொத்துக்களும் அழிவுற்றன.
- சாதாரண மக்கள் பல துன்பங்களுக்கு முகங் கொடுத் தனர்.
- விகாரைகளும் கோபுரங்களும் அழிவுற்றன.
- குளங்கள், அணைகள் அழிவுற்றன.

ஆகிய காரணிகளின் துணையுடன் கலந்துரையாடுக.

(5 நிமிடங்கள்)

படி 10.4.5.2 :

- நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி பற்றி குழு வேலையில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்க ளாகப் பிரிக்குக.
- இணைப்பு 2 செயற்பத்திரத்தை மாணவர்களுக்கு வழங் கவும்.
- அது பற்றிய நூல்களில் இருந்து குறிப்புக்களை சேகரித்துக் கொள்ள மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.
- செயற்பாட்டின் போது தேவையான ஆலோசனைக ளையும் வழிகாட்டல்களையும் வழங்கவும்.

(20 நிமிடங்கள்)

**படி 10.4.5.3 :**

- ஒவ்வொரு குழுவும் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் தலைப்புக்களை வழங்கி பேச வழி செய்யவும். குழுவில் இருந்து பேசக்கூடிய (உரை யாற்றக் கூடிய) ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளு தல் பற்றி ஆலோசணை வழங்கவும்.
- அனைத்துக் குழுக்களுக்கும் முன் பேசவும்.
- தனித்தனி குழுவில் இருந்து ஒருவர் வீதம் பேசுவதற்கு வகை செய்யவும். ஏனையோருக்குத் தமது கருத் துக்களை முன்வைப்பதற்கான அவகாசத்தை பெற்றுக் கொடுக்கவும்.
- பின்வரும் தகவல்கள் உள்ளடங்கக் கூடியதாக கலந்து ரையாடலில் ஈடுபடவும்.

- நீர்வள நாகரிகத்தின் இறுதிப் பகுதியில் அரியணை தொடர்பான பிரச்சினைகள் தோன்றியதன் காரணமாக மத்திய நிர்வாகம் பாதிக்கப்பட்டது பற்றியமை.
- மிக மோசமான இராசரட்டை நிர்வாகத்தை மாகன் ஆக்கிரமித்துக் கொண்டதால் இராசரட்டை நிர்வாகம் படுதோல்வியை தழுவிக் கொண்டது.
- இதனால் நீர்ப்பாசனத்துறையின் சீரான ஒழுங்கமைப்பு பின்னடைவு பெற்றது.
- இவ்வாக்கிரமிப்பால் மக்கள் குடியேற்றங்கள் குறைந்து அப்பிரதேசங்கள் காட்டுப் பிரதேசங்களாக விளங்கின.
- இவ்வாறு தொடர்ந்ததாக இப்பிரதேசங்கள் விளங்கிய தால் இங்கு மலேரியா, கொள்ளை நோய் பரவத் தொடங்கவே குடியேற்றங்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தன.
- இக்காரணங்கள் நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகியது.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்குக்குரிய காரணங்களை விளக்குக.
- ஆட்சியாளர்களின் பலவீனங்கள் இராசதானியின் வீழ்ச் சிக்கு காரணமாகும் என்பதை வெளிப்படுத்துவார்.
- நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்குத் தாக்கம் செலுத்திய தகவல்களை உள்ளடக்கிய பேச்சொன்றை நிகழ்த் துவார்.
- தகவல்களின் குண இயல்புகளை வளர்த்துக் கொள்வர்.
- பல்வேறு தடைகளுக்கிடையில் முன்வந்து திறமையை விருத்தி செய்து கொள்வார்.

# இணைப்பு 01

## பாட நுழைவு

மாகனின் ஆக்கிரமிப்பு நடந்த முறை பற்றி மகாவம்சம் பின்வருமாறு கூறுகின்றது.

நாம் கேரள நாட்டு பலசாலிகள் என எல்லா இடங்களிலும் உரைத்தவாறு மக்களைத் துன்புறுத்தினர். மக்களின் தங்க ஆபரணங்களைப் பறித்துக் கொண்டனர். நீண்ட காலமாக பாதுகாத்த கலாசாரத்தைப் பின்னடையச் செய்தனர். மக்களின் கை, கால்களை வெட்டினர். தொகையான மாளிகைகளை உடைத்தனர். மந்தைகளைக் கடத்தினர். மக்களைக் கட்டி வைத்து அவர்களின் அனைத்து செல்வங்களையும் கொள்ளையடித்தனர். இப்படிச் செய்து மக்களை பரம ஏழைகளாக மாற்றினர். விகாரைச் சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். வணக்க வழிபாடுகளில் ஈடுபட்ட பக்தர்களை தாக்கினர். பிள்ளைகளை அடித்தனர்.

மக்களால் பாரச்சுமைகளை இழுத்தனர். பழுவான வேலைகளை வாங்கினர். பிரசித்தமான ஏடுகளை கிழித்தெறிந்தனர். முன்னைய மன்னர்களின் பெறுமதிமிக்க உருவச் சிலைகளை உடைத்து அழித்தொழித்தனர். கிராமத்து மக்களின் தோட்டங்களை அழித்தனர். சிங்கள மக்களின் எல்லா சொத்து, செல்வங்களையும் கேரள நாட்டிற்குக் கடத்திச் சென்றனர். விகாரைகளையும் பிரிவெனாக்களையும் கேரள நாட்டவர்கள் இருப்பிடங்களாக வைத்துக் கொண்டனர்.

# இணைப்பு 02

## செயற்பத்திரம்

நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்குரிய தகவல்களைச் சேகரிப்பது உங்கள் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையாகும்.

- 1500 வருடங்கள் நிலைத்த நீர்வள நாகரிகத்திற்கு ஏற்பட்ட வீழ்ச்சி எனும் தலைப்பில் பேச்சொன்றை பேசுவதற்கு உங்கள் பாடசாலை மாணர்களை வழிப்படுத்துக.
- இது தொடர்பாக உங்கள் குழுவினர் பின்வரும் இணைத்தலைப்பின் கீழ் தகவல்களைச் சேகரிக்கவும்.

1. பொலன்னறுவை யுகத்தின் இறுதிப் பகுதியில் சிங்காசனம் ஏறல் பற்றிய குழப்பத்தினால் மத்திய நிர்வாகம் பாதிக்கப்பட்டது.
2. மாகனின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட அழிவுகள்.
    - சாதாரண மக்கள் பாதிப்பு
    - நீர்பாசனத்துறை
    - விகாரைகள்
    - புத்தகங்கள் அல்லது ஏடுகள்
    - தோட்டங்கள், உடைமைகள் அல்லது சொத்துக்கள்
    - கலைப்படைப்புக்கள்
    - இராச உரிமையாளர்கள்
3. இராசரட்டை காடர்ந்தது.
4. மலேரியா, கொள்ளை நோய் பரவியது.

* குழுவில் ஒரு மாணவரைத் தெரிவு செய்து உரையொன்றை நிகழ்த்துமாறு வழி செய்க.

# அலகு 10.5

## 13 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு இறுதி வரை இலங்கை

(06 பாடவேளைகள்)

## அறிமுகம்

இராசரட்டை பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின் சிங்கள இராசதானி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த வேளையில் தம்பதெனியா, யாப்பகுவ, குருணாகல், கம்பொல, கோட்டை இராசதானிகளின் அரசியல் வரலாற்றைப் பற்றி போதுமானளவு அறிவை வழங்குவது இந்த அத்தியாயத்தின் எதிர்பார்ப்பாகும்.

இராசதானி இடம் பெயர்ந்தது முதல் நீர்வள நாகரிகத்தினை கருப்பொருளாகக் கொண்ட விவசாய சீவனோபாய அமைப்பிற்கு மாற்றலாக வர்த்தகப்பொருளாதாரம் வளர்ந்து வருவது பற்றி அறிவதாகும். சமயம், இலக்கியம், கலை, கட்டிட நிர்மாணம் கலைஞர்களிடையே ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி இங்கு அவதானம் செலுத்தப்படுகின்றது.

தேர்ச்சி : மத்திய கால இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நிகழ்வு பற்றி கற்பார்.

தேர்ச்சி மட்டங்கள் :

- 13 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் அரசியல், பொருளாதார, சமயங்களிலும் மக்கள் வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாற்றங்களை விபரிப்பார்.
- இலங்கையில் 13 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை கட்டிடக் கலையும் இலக்கியங்களும் பற்றிய தரவுகளை கோவைப்படுத்துக.
- 13 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையின் இராசதானிப்படத்தின் துணையுடன் விளக்குவார்.

## பாட உள்ளடக்கம்:

### 10.5.1 அரசியல் வரலாறு

பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணிகளுள் சில

* பலவீனமுள்ள ஆட்சியாளர்கள் தோன்றியமை
* கலிங்க-பாண்டிய வம்சப்பிரச்சினைகள்
* மகா பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை
* பொருளாதார வீழ்ச்சி
* கொள்ளை நோய் பரவியமை

- பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குரிய முக்கியமான காரணம் கலிங்க, மாகனின் படையெடுப்பாகும்.
- பொலன்னறுவையில் இருந்த மக்கள் தலைவர்களும் புத்த பிக்குகளும் பாதுகாப்புக் கருதி தக்கிண தேசத்திற்கும் உருகுணைக்கும் இடம் பெயர்ந்தனர்.
- வனங்களாலும் மலைகளாலும் நீர் நிலைகளினாலும் அமைந்த பாதுகாப்பான பிரதேசங்களை நோக்கி தலைநகர்கள் இடம் பெயர்ந்தன.
  * புவனேகபாகு - கோவிந்த மலை
  * சங்கசேனாதிபதி - மினிப்பே

### தம்பதெனிய இராசதானி (கி.பி 1232-1270)

- இராசரட்டை இராசதானி தென் மேற்கு நகர்ந்த ஆரம்ப இடமாகக் காணப்படல்.
- கி.பி 1232-1236 வரை 3 ஆம் விஜயபாகு (வன்னிய விஜயபாகு) தம்பதெனியாவை தலை நகராக்கிக் கொண்டு அரசாண்டமை.
- வன்னி ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிபுரிந்தமை.
- தம்பதெனியாவில் விஜய சுந்தரமயவை நிறுவுதல்.
- கொத்மலையில் மறைத்து வைத்திருந்த புனித தந்ததாதுவை வெலிகல எனும் இடத்திற்கு கொண்டு வந்து புத்த பூசை நடாத்தி வைத்தமை.
- கொழும்பிற்கு அருகாமையில் வத்தளை எனும் இடத்தில் தனது பெயருடன் ஒரு விகாரையை அமைத்தமை.
- களணி விகாரையை சீர்திருத்தம் செய்தமை.
- பௌத்த சங்கத்தில் மாற்றங்கள் செய்து உபசம்பதா நடாத்தி வைக்கப்பட்டமை.
- கி.பி 1236-1270 வரை ஆட்சி புரிந்த 2 ஆம் பராக்கிரமபாகு மன்னன் தம்பதெனிய காலத்து மன்னர்களுள் மிகமுக்கியமான மன்னனாவான்.

- 2 ஆம் பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிக்காலத்தின் முக்கியமான நிகழ்வுகள்
  - * 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் 2 ஆம் ஆட்சிக் காலத்தில் சந்திரபாகு எனும் ஜாவா அரசன் ஒருவன் தாமுலிங்க தேசத்திலிருந்து இலங்கையை அக்கிரமித்தமை.
  - * தனது 20 ஆவது ஆட்சிக்காலத்தின் போது அதாவது கி.பி 1255ல் கலிங்க தேச மாகனை தோல்வியடையச் செய்து துரத்தியடிக்கப்பட்டமை.
  - * தமது இராசதானி மீது இரண்டாவது முறையாக ஆக்கிரமித்த சந்திரபானு இரண்டாவது முறையாக தோல்வியடைந்ததுடன் அவன் கொல்லப்பட்டான்.
  - * இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் மாகனைத் துரத்தும் பொருட்டு பாண்டிய, கேரள பேரரசின் உதவியைப் பெற்றான்.
  - * 2 ஆம் பராக்கிரமபாகுவின் மரணத்தின் பின் அவனுடைய மகன் 4 ஆம் விஜயபாகு (போசத் விஜயபாகு) கி.பி 1271ல் தம்பதெனியாவின் மன்னன் ஆகியமை.
- இரண்டு வருடங்களுக்குக் குறைவான காலம் ஆட்சி புரிந்த 4 ஆம் விஜயபாகு மன்னனின் இறப்பின் பின் சித்த என்னும் சேனாதிபதி ஆட்சியை பொறுப்பேற்றான்.

## யாப்பகுவ இராசதானி (கி.பி 1272-1300)

- கி.பி 1272 இல் 4 ஆம் விஜயபாகு மன்னனைக் கொன்ற சித்த என்பவன் விஜயபாகு மன்னனின் சகோதரரான இளவரசன் புவனேகபாகுவை கொலை செய்வதற்கு வேவுகாரர் களைப் பயன்படுத்திக் கொண்டான்.
- புவனேகபாகு இளவரசன் பாதுகாப்பு கருதி யாப்பகுவைக்குச் சென்றான்.
- தென் இந்தியப்படையின் தளபதி சித்தவைக் கொன்று முதலாம் புவனேகபாகுவிற்கு ஆட்சி உரிமையை வழங்கல்.
- கி.பி 1272ல் ஆட்சிக்கு வந்த முதலாம் புவனேகபாகு மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதனை இலகுவாக வெற்றி கொண்டான்.
- யாப்பகுவை தம்பதெனியாவை விட பாதுகாப்பு மிக்க இடமாக விளங்கியமை.
- கி.பி 1284ல் முதலாம் புவனேகபாகுவின் மரணத்தின் பின் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது.
- யாப்பகுவை ஆட்சி செய்யும் பொருட்டு போசத் விஜயபாகு (4ம் விஜயபாகு) மன்னனின் மகன் பராக்கிரமபாகு இளவரசருக்கும் புவனேகபாகு மன்னனின் மகன் 2 ஆம் புவனேகபாகு விற்கும் இடையில் கிளர்ச்சிகள் எழுந்தன.
- இத்தருணத்தில் இலங்கையை ஆக்கிரமித்த ஆரியச்சக்கரவர்த்தி ஒருவர் யாப்பகுவாவைக்கு வந்து புனித தந்ததாதுவையும் பாத்திரதாதுவையும் கடத்திக் கொண்டு பாண்டிய நாட்டிற்குச் சென்றான்.
- 4 ஆம் விஜயபாகுவின் மகன் பராக்கிரமபாகு இளவரசன் பாண்டிய நாட்டிற்குச் சென்று புனித தந்ததாதுவையும் பாத்திர தாதுவையும் பெற்றுக் கொண்டு வந்து கி.பி 1287 இல் 3 ஆம் பராக்கிமபாகு எனும் பெயரில் பொலன்னறுவையில் அரசாட்சியை மேற்கொண்டான்.
- 3 ஆம் பராக்கிரமபாகுவை தோற்கடித்து 2 ஆம் புவனேகபாகு கி.பி 1292ல் அரசாண்டான்.

## யாழ்ப்பாண இராசதானி

- 12 ஆம் நூற்றாண்டின் இறுதி தசாப்பதமும் 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் தசாப்பதமும்
- வடக்கில் தனியான ஆட்சிக்கு அத்திரவாரமிட்டவன் சந்திரபாகு ஆவான். (பேராசிரியர் சேனரத் பரண விதாரன)
- மார்க்கோ போலோ அறிக்கை - வட இலங்கையில் (சந்திரபாகு) எனப்பட்ட ஒருவன் ஆட்சி செய்தமை.
- பின்னர் இந்தியாவின் இராமேஸ்வரத்தில் இருந்து வந்த ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையினர் யாழ்ப்பாணத்தை மீட்டமை.
- ஆரியச் சக்கரவர்த்திப் பரம்பரையில் 12 முக்கிய மன்னர்கள் இருந்தமை.
  * விஜயகுலகங்கை சக்கரவர்த்தி முதல் மன்னன்
  * குலசேகரன்
  * பரராசசேகரன், சங்கிலி, குணபூசண, ஐயவீரன் போன்றோர் அவர்களுள் சிலர்

## யாழப்பாண இராசதானி பரவிய முறை

- சப்புமல்குமாரன் யாழப்பாணத்தை ஆக்கிர்மித்து அதனை கோட்டை இராச்சியத்துடன் இணைத்தல். இது 4 ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இடம்பெற்றது.
- கி.பி 1620 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றல்.

## குருணாகல் இராசதானி (கி.பி 1300-1347)

- கி.பி 1300 இல் 2 ஆம் புவனேகபாகு மன்னன் இராசதானியை குருநாகலுக்கு இடமாற்றினான்.
- 2 ஆம் புவனேகபாகுவின் மகன் 4 ஆம் பராக்கிரமபாகு எனும் பெயரில் கி.பி 1302 இல் அரசனானான்.
- 4 ஆம் பராக்கிரமபாகு கி.பி 1325 வரை ஆட்சி செய்தான் எனக் காண்பித்தல்.
- இவருடைய ஆட்சிக்காலத்தை உறுதியாக குறிப்பிட முடியாவிட்டாலும் இறுதித்தருவாயில் போதமாபா எனும் கிளர்ச்சி ஏற்படுத்தப்பட்டமை.
- கி.பி 1326-1341 இடைப்பட்ட 15 வருடங்களில் அரசியல் நிலை மோசமாகக் காணப்பட்டது.
- 3 ஆம் புவனேகபாகுவும் 5 ஆம் சவுள் விஜயபாகுவும் இக்காலப்பகுதியில் ஆட்சி செய்த தாகக் குறிப்பிடப்படுகின்றது.

## கம்பளை இராசதானி (கி.பி 1341-1415)

- கம்பளை இராசதானி மிகவும் பாதுகாப்பான மகாவலி கங்கையின் அயலில் சிவனொளிபாத மலைப் பிரதானப் பாதை வழிப்பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- கி.பி 1341 இல் 4 ஆம் புவனேகபாகு கம்பளையை தலைநகராக்கிக் கொண்டு ஆட்சி செய்தான்.
- கம்பளை இராசதானியுடன் தொடர்புடைய சேனாதிலங்கார, அலகத்கோணார எனும் இரு முக்கியமான குடும்பங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.
- புவனேகபாகு திரீசிங்களாதீஸ்வர எனும் பெயரைச் சூட்டிக் கொண்டான். யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்தியின் கீழ் சுதந்திரமான ஆட்சி நிலவியமை.
- 5 ஆம் பராக்கிரமபாகு கேகாலை மாவட்டத்தில் தெதிகம எனும் இடத்தில் ஆட்சி செய்தமை.
- கி.பி 1538 அளவில் விக்கரமபாகு எனும் இளவரசன் நிஸ்கங்க அளகத்கோணாரவின் ஆதரவுடன் கிளர்ச்சியொன்றை ஏற்படுத்தி கம்பளை சிங்காசனத்தை தன்வயப்படுத்திக் கொண்டு 3 ஆம் விக்கிரமபாகு எனும் பெயரில் ஆட்சி செய்தான்.
- இக்கிளர்ச்சிக்காக 3 ஆம் விக்கிரமபாகு வடக்கில் ஆரியச் சக்கரவர்த்தியின் உதவியைப் பெற்றதால் கம்பளையின் அயற் பிரதேசங்கள் சில வடபிரதேச நிருவாகத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டது.
- கி.பி 1374 ல் 5ம் புவனேகபாகு அரசனானதுடன் நிஸ்ஸங்க அளகத் கோணார என்பவருக்கு பிரதம பதவியை வழங்கினார்.
- அரசாட்சியாளரை விட அரசியல் துறையில் பிரதமர் முன்னிலையில் விளங்கினார்.
- இதுவரை யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சியை மேற்கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்தி மன்னாரில் இருந்து பாணந்துரை வரை ஓடத்துறைகளில் வரி அறவிடும் பொறுப்பைத் தனது பொறுப்பின் கீழ் வைத்திருந்தார்.
- ஆரியச் சக்கரவர்த்தியைத் துரத்துவதற்கும் மேற்குக் கரையோர வளமான வியாபாரத்தின் மத்திய நிலையமாக கோட்டையைக் கருதி பாதுகாப்பிடமாகவும் அதனை அமைத்தான்.
- கோட்டையை அமைத்துக் கொண்ட நிஸ்ஸங்க அழகக் கோணார மேற்குக் கரையோர ஓட்த்துறைகளில் இருந்து ஆரியச்சக்கரவர்த்தியைத் துரத்தியடித்தமை.
- இதனால் கோபமுற்ற ஆரியச் சக்கரவர்த்தி மாத்தளைக்கூடாக தரைமார்க்கமாக கம்பளையை ஆக்கிரமிக்கும் பொருட்டு படையொன்றை அனுப்புதல்.
- ஆக்கிரமிப்பின் கீழ் 5 ஆம் புவனேகபாகு அரசன் கோட்டைக்கு வருதல்.
- நிஸ்ஸங்க அழகக் கோணார ஆரிய சக்கரவர்த்தியை தோல்வியடையச் செய்து அவனைத் துரத்தியடித்தமை.
- 5 ஆம் புவனேகபாகுவின் பின் கி.பி 1391ல் வீரபாகு ஆட்சியைப் பெற்றுக் கொண்டான்.
- வீரபாகுவின் சகோதரன் அழகக்கோணார தனது சகோதரனின் கட்டளையை மதிக்காது நாட்டை ஆட்சி செய்ய முன்வந்தமை.

- வீரபாகு, அழகேஸ்வரனின் கீழ் இருந்த ரைகமவுக்கு சென்ற போது தோல்வியுற்ற அலகேஸ் வரன் தம்பதிவவுக்குத் தப்பியோடினான்.
- தம்பதிவவில் இருந்து படைகளுடன் வந்த அழகேஸ்வரன் யுத்தம் செய்து வீரபாகுவைக் கொலை செய்தான்.
- வீர அழகேஸ்வரன் அரச பதவியை ஏற்றுக் கொண்டு கம்பளை சேனாதிலங்கார உள்ளிட்ட குழுவினர் பராக்கிரமபாகு ஆபாவை கம்பளையில அரச பதவியை ஏற்றுக் கொள்ளச் செய்தனர்.
- வீர அழகேஸ்வரன் ரைகமவை ஆட்சி செய்து கொண்டிருந்த போது கி.பி 1409 இல் இலங்கைக்கு வந்த சீன இனத்தவரான செங்ஹோ சேனாதிபதி என்பவரை அவர் முறையாக வரவேற்கவில்லை.
- கி.பி 1411 இல் இரண்டாம் முறையாக இலங்கை வந்த செங்ஹோ எனும் சேனாதிபதி வீர அழகேஸ்வரனை தோல்வியடையச் செய்து சிறைக்கைதியாக சீனநாட்டுக்கு எடுத்துச் சென்றான்.
- சீனப் பேரராசன் தனது பிரதானியாக பராக்கிரமபாகு ஏபா அல்லது 5 ஆம் பராக்கிரம பாகுவை நியமித்தார்.

## கோட்டை இராசதானி (கி.பி 1415-1521)

- கி.பி 1415-1467 வரை 53 வருடங்கள் ஆட்சி செய்த 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் கோட்டை இராச்சியத்தின் முதலாம் மன்னனாக விளங்கினான்.
- ஜயமகாலேனா, சுனேத்ராதேவி என்போர் இம்மன்னனின் பெற்றோராவர்.
- இலங்கையை கடைசியாக ஒன்றுபடுத்தி ஆட்சியாளனாக இவன் விளங்கினான்.

### 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சியின் போது முக்கியமான அரசியல் நிகழ்வுகளாவன.

- தென் இந்தியாவுக்கு பொருட்களை ஏற்றிச் சென்ற ஒரு கப்பலை விஜய நகரில் மளவராயன் அரசனால் கைப்பற்றப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த இவன் விஜய நகர் இராச்சியத்தைத் தாக்கினான்.
- சப்புமல் இளவரசனை அனுப்பி ஆரியச் சக்கரவர்த்தியின் கீழ் இருந்த யாழ்ப்பாண இராசதா னியை கி.பி 1449ல் கோட்டை இராசதானியுடன் இணைத்துக் கொண்டான்.
- பன்சிய பணஸ்ஜாதக (ஐநூற்றைம்பது ஜாதகக்கதைகள்) தளதா சிரித, சிங்கள போதிவம்ச, அனாகதவங்ச, தாக்ஸி மஞ்சுசா ஆகிய நூல்கள் குருணாகல் காலத்துக்குரிய நூல்களாகும்.
- இன்றைய கண்டி, நகரம் ஸ்ரீவர்த்தனபுரம் என்னும் பெயரில் தோற்றுவிக்கப்பட்டதும் கண்டி அஸ்கீரிய பீடம் இம்மன்னனுடைய ஆதரவுடனேயே ஆரம்பிக்கப்பட்டமையும்.
- கம்பளை யுகத்தில் சமய தொண்டுகளின் போது பிரபுக்குடும்பத்தினர் முன்னிலையில் இருந்தனர்

- கண்டிக்கு அண்மையில் கடலாதெனிய, லங்காதிலக ஏம்பக்கே தேலாவயம் ஆகிய சமயக் கட்டிடங்கள் கம்பளை யுகத்தில் கட்டப்பட்டமை.
- கட்டடக்கலையில் தென் இந்தியச் செல்வாக்கு மிக முக்கியம் வாய்ந்து காணப்பட்டது.
- கம்பளை யுகத்தில் ஏற்பட்ட இலக்கிய முன்னேற்றம் சந்தேஸ இலக்கித்தின் தோற்றத்திற்கும் காரணமாயின.
- மயுரகாவியம், திஸர காவியம் விமுக்தி தொகுப்பு (சங்கிரகய) எலு அத்தனகழுவஸ்ஸய, சத்தர்மாலங்காரய, நிகாய சங்கிரஹய ஆகியன கம்பளை யுகத்தில் எழுதப்பட்ட பிரசித்தி வாய்ந்த நூல்களாகும்.
- கேகாலை பத்மாவதி பிரிவெனா, தொட்டகழுவே விஜய பிரிவெனா, தெவிநுவர இருகல்குல திலக பிரிவெனா ஆகியன் கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்கு தூண்டுதலாகக் காணப்பட்டன.
- தொட்டகழுவே ஸ்ரீநாகுலதேரர், வித்யாகம மைத்திரீயய தேரர், குருநாகல் வனரத்னதேரர் என்போர் 6 ஆம் பராக்கிரமபாகு காலத்தில் வாழ்ந்த முக்கியமான கற்றோராவர்.
- யாழ்ப்பாண ஆட்சியாளராக சப்புமல் .குமாரன் நியமிக்கப்பட்டமை.
- கி.பி 1462 அளவில் மலை நாட்டில் ஜோதிய சிடான் ஏற்படுத்திய கலகத்தை அடக்கி தம்புலுகல இளவரசனைஅனுப்பியமை.
- கி.பி 1467 ல் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் இறந்தபோது அவரது மகனின் மகனான ஜயபாகு இளவரன் கோட்டை அரசனாகியமை.
- தனக்கு ஆட்சி கிடைத்தமை தொடர்பாக கோபத்திற்குள்ளாகிய யாழ்ப்பாண சப்புமல்குமாரன் கோட்டைக்கு வந்து ஜயபாகுவைக் கொன்று கி.பி 1469 இல் 6ம் பராக்கிரமபாகு எனும் பெயரில் கோட்டையில் அரசானாகியமை.
- புவனேகபாகுவின் ஆணையை ஏற்க வெறுப்புற்ற பஸ்துன் கோரளையின் கெகுலன்தொல ஸ்ரீ வர்த்தன பதிராஜ மற்றும் கூரகம பிக்கு ஆகிய மக்கள் பிரதானிகளின் தலைமையில் 5 ஆண்டுகள் நிலவிய சிங்களப் புரட்சி எனும் சிங்கள சங்கம் ஏற்படுத்தப்பட்டமை.
- 6 ஆம் புவனேகபாகு, கலகத்தை அடக்கி புரட்சியாளர்களை சிறைப்பிடித்தமை.
- 6 ஆம் புவனேகபாகுவின் பிரதிநிதியாகிய அவருடைய மகன் சைபுர பண்டார ஆவான்.
- அவர் பண்டித பராக்கிரமபாகு (7ம் பராக்கிரமபாகு) எனும் பெயரால் அரசனாகியமை.
- பண்டித பராக்கிரமபாகுவின் அரசுரிமையை ஏற்று அம்புலுகல இளவரசன் கோட்டைக்கு வருகை தந்து பண்டித்த பராக்கிரமபாகுவைக் கொன்று கி.பி 1490 இல் 8 ஆம் வீரபராக்கிரம பாகு எனும் பெயரால் கோட்டை அரசனாகியமை.

## 10.5.2 பொருளாதார மாதிரியின் மாற்றங்கள்

- இராசரட்டை நீர்வள நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய, பொருளாதார மாதிரிகள் அவ்வேளை வீழ்ச்சி கண்டிருந்தது.
- கணவாயைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களில் இராசதானி அமைந்துள்ளதுடன் பெரிய குளங் களையும் கால்வாய்களையும் அமைத்தமை.
- விவசாய நடவடிக்கைகளுக்காக மழை நீரைப் பயன்படுத்திக் கொண்டமையையும் காணலாம்.
- அனுராதபுரம் பொலன்னறுவையை விட குறைவான அளவில் நெற்செய்கை பயிரிடப்பட்டது. நீர்பற்றாக்குறையான பிரதேசங்களில் சேனைப்பயிர்ச் செய்கையும் இடம் பெற்றது.
- ஈரவலய கடற்கரையோர காலநிலை தெங்குப்பயிர்ச் செய்கைக்கு சாதகமாக இருந்தமை யினால் தனித்ததோர் பயிர்ச்செய்கையாக தெங்கு வளர்ச்சியுற்றது.

  உதாரணம்: களுத்துறை, பெந்தோட்டை, தொடகமுவ, மொலட்டுகவ, களனி, கேகாலை ஆகிய பிரதேசங்களில் தென்னந்தோப்புகள் பற்றி குறிப்பிடப்படுகின்றது. தேங்காய் எண்ணெய் பயன்பாடு பிரசித்தி பெற்றிருந்தது

- ஈரவலயத்தில் இடைப்பிரதேசத்தில் வளர்ச்சி பெற்ற கறுவா வர்த்தகப்பண்டமாக பரவியமை. 15 ஆம் நூற்றாண்டாகும் போது உலகின் சிறந்த கறுவா இந்நாட்டில் உற்பத்தி செய்யப் பட்டமை.
- பாக்கு, மிளகு, சாதிக்காய், ஏலம் ஆகியன ஈரவலயத்தில் பரவலாக செய்யப்பட்ட பயிர்களும் ஏற்றுமதிக்குள்ளாகியமை.
- முத்து, இரத்தினம், யானைத்தந்தம் முதலிய வர்த்தகப்பண்டங்கள் இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டமை.
- விவசாயப் பொருளாதார முறை வீழ்ச்சி கண்டவேளை வணிகப் பொருளாதாரம் தோற்றம் பெற்றமை.
- இந்தியா, அரேபியா, சீன, பாரசீக, எகிப்து ஆகிய நாடுகளுடன் கீழைத்தேய மேற்கத்திய இருபக்க வர்த்தகம் வளர்ச்சி கண்டிருந்தமை.

## 10.5.3 மக்கள் வாழ்க்கை

- தொழில் ரீதியாக பாகுபடுத்தப்பட்ட குலமுறை காணப்பட்டது. விவாக நடவடிக்கைகளில் குலமுறை பயன்படுத்தப்பட்டமை.
- பொலன்னறுவை யுகத்தில் பெண்களுக்குரித்தான நிலை தற்காலத்திலும் காணப்படுகிறது.
- பொருளாதார, கல்வி நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளமை.

  உதா : கம்பளை யுகத்தல் பத்மாவதி தேவி கோட்டை யுகத்தில் உலக்குடை தேவி

- பந்தாட்டம், நீர் விளையாட்டு, ஊஞ்சலாட்டம் ஆகிய பல்வேறு விநோத விளையாட்டுக்களும் காணப்பட்டன.
- வெசக், பொசன், எசல, கார்த்திகைப்பண்டிகை ஆகியன. பல்வேறு சமய விழாக்களுக்கு சமுகந்தருதல், யாத்திரை தொடர்பாக குறிப்புள்ளது.

### 10.5.4 சமய, இலக்கிய, கலை, கடடடக்கலை

- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பிற்குப் பின் ராசரட்டை ராஜாங்கம் வீழ்ச்சியடைந்ததுடன் பிக்குகள் உருகுணைக்கும் மாயரட்டைக்கும் சென்றமை.
- தம்பதெனிய யுகத்தில் 3 ஆம் பராக்கிரமபாகுவினால் தம்பதெனிய விஜய தந்தராராமய, பெலிகல் தலதா மாளிகை நிருமாணம், களனி விகாரைப்புனரமைப்பு செய்தமை.
- 2 ஆம் பராக்கிரமபாகு மன்னன் தம்பதெனிய விஜய சுந்தராராமயவில் தலதா கூட்சி நடாத்தியமை.
- சங்கராஜ பிரதம பிக்கு, சங்கரச்சித தலைமை பிக்குவின் தலைமையில் தம்பதெனிய கதிகாவையை ஒழுங்குபடுத்தியமை.
- விசுத்திமனிகய, கவிசிலுமின, சத்தர்மரத்னா வலிய, கேஸஜ்ஜ மஞ்சுலா, சமன்தகூட வருணனை நூல்கள் எழுதியமை.
- பிரசித்தி பெற்ற இலக்கியவாதியான 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் கலிகால இலக்கிய சர்வக பண்டிதன் பட்டத்தைப் பெற்றமை.
- யாப்பகூவ ஆட்சியில் தென்னிந்தியாவின் கட்டடக்கலை நுட்பத்தின் செல்வாக்குக் காணப் பட்டது.
- இக்காலத்தில் எழுதப்பட்ட முக்கியமான நூல்களுள் பிறவி சந்தேஷய சலலிஹினி சந்தேஷய, கோகில சந்தேஷய, குத்திலய, காவிய சேகர, புதுகுண அலங்காரய, லோவடசங்கறாவய, பரகும்பா சிறிய முக்கியமான காவிய நூல்களாகும்.
- கோட்டையின் தலதா மாளிகையை நிர்மாணித்தல், இந்து சமயம் முன்னேற்றமடைந்ததுடன் கோட்டையின் தலை நகருக்கு அண்மையில் ஈஸ்வரம், கதிர்காம தேவாலயம் அமைக்கப் பட்டமை. சப்புமல்குமாரன் யாழ்ப்பாணத்தீபகற்பத்தில் இந்துக் கோவில் ஒன்றைக் கட்டியமை.

## செயற்பாடு 10.5.1

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | மத்திய கால இலங்கையில் முக்கியமான வரலாற்று நிகழ்வு களைக் கற்பார். |
| தேர்ச்சி மட்டம் | : | • 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் அரசியல், பொருளாதார, சமய, மக்கள் வாழ்க்கையின் வேறுபாடுகளை விபரிப்பார்.<br>• 13 ஆம் நூற்றாண்டில் இருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை கலை, கட்டிட நிர்மாணக் கலை, இலக்கியம் ஆகியன தொடர்பாக தகவல் திரட்டுவார்.<br>• 13 ஆம் நூற்றாண்டில் இருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையின் இராஜதானிகள் தொடர்பாக தேசப்படமொன்றின் மூலம் விபரிப்பார். |
| செயற்பாடு | : | "இராசரட்டையில் இருந்து தாருகமத்துக்குச் செல்வோம்" |
| காலம் | : | 6 பாடவேளைகள் |
| தர உள்ளீடுகள் | : | • இணைப்பு 01 -சிங்கள இராசதானி பொலன்னறுவையில் இருந்து கோட்டை வரை இராசதானி மாற்றமுறுகின் றதைக் காட்டும் படம்<br>• இணைப்பு 02 - மாணவர் ஒப்படைப்பத்திரம்<br>• இணைப்பு 03 - மாணவர் செயற்பத்திரம்<br>• பாடப்புத்தகம்<br>• இலங்கையின் வரலாறு 2 ஆம் பகுதி (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)<br>• 9 ஆம் ஆண்டு சமூகக்கல்வியும் வரலாறும் பாடப்புத்தகம் |
| கற்றல் கற்பித்தல் செயன்முறை<br>படி 10.5.1.1 | : | • இணைப்பு 1.1 இராசதானி மாற்றமடைவதைக் காட்டும் படத்தை வகுப்பில் முன்வைக்கவும்.<br>• இங்கு காணப்படும் நகரம் எது?<br>• இந்நகரம் எதற்காகப் பாவிக்கப்பட்டது?<br>• இந்த நகரம் தொடர்பாக நீங்கள் அறிந்த தகவல்கள் எவை?<br>ஆகிய வினாக்களுக்கு விடை கேட்கவும், பாடப்புத்தகத் தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் அடங்குமாறு மீட்டாய்வு செய்யவும். |

- காலிங்க மாகனின் ஆக்கிரமிப்புடன் சிங்கள இராசதானிகள் தென்மேற்குத் திசைக்கு இடம்பெயர ஆரம்பித்தது.
- இராசதானி தென்மேற்குத் திசைக்கு இடம்பெயர்வதற்கு பல்வேறு காரணிகள் ஏதுவாயின.
- சிங்கள இராசதானி படிப்படியாக தென்மேற்கு திசையாக திரும்பியது.
- நாட்டின் தலைநகரமாக இந்த நகரங்கள் சிறிது காலமே இருந்தன.

படி 10.5.1.2 :

- செயன்முறை தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுரை பெற்றுக் கொடுக்கவும்.
- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாக ஒழுங்குபடுத்துங்கள்.
- தரவுள்ளீடுகளாக புத்தகங்களை பெற்றுக் கொள்ள ஆலோசனை வழங்குங்கள்.

- இணைப்பு 1.2 மாணவர் ஒப்படைப் பத்திரங்களை குழுக்களுக்கு ஒன்றாக பகிர்ந்தளிக்க.
- குழுக்களுக்கு வழங்கியுள்ள செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஆலோசனை வழங்குங்கள்.

(25 நிமிடங்கள்)

படி 10.5.1.3 :

- ஒரு இராசதானிக்கு ஒரு பாடவேளையை ஒதுக்கவும்.
- இணைப்பு 1.3 மாணவர் செயற்பத்திரத்தை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துங்கள். மாணவர்களுக்கு அதனை பிரதி பண்ணச் செய்வதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
- ஒரு குழுவுக்கு ஒரு பாடவேளையில் தமது செயற்பாட்டினை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கவும்.
- அவர்கள் முன்வைக்கும் தகவல் தொடர்பாக தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஏனைய குழுக்களுக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
- முன்வைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் செயற்பாட்டுப் பத்திரத்தை பூரணப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு அவகாசம் வழங்குங்கள். குழுச்செயற்பாட்டின் மூலம் மாணவர்களின் பலம், பலவீனங்களை அடையாளங் கண்டு கொள்ளவும்.
- தம்பதெனிய காலத்தினை ஒரு பாடவேளையிலும் யாப்பஹுவ, குருநாகலை இராசதானிகளை ஒரு பாடவேளையிலும் கம்பளை இராசதானியை மேலும் ஒரு பாடவேளையிலும் கோட்டை இராசதானியை மேலும் ஒரு கால வேளையிலும் கற்பித்து முடிக்கவும்

- இராசதானிகள் ஐந்தினதும் தொடர்பாக விடயங்களை முன்வைத்த பின்னர் பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்
- சிங்கள இராசதானிகள் உலர்வலய இராஜரட்டையிலிருந்து ஈரவலயம் வரை படிப்படியாக இடம்பெயர்ந்து வந்தது.
- சிங்கள இராஜதானிகள் தென்மேற்காக இடம் பெயர்வதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தின
- இராஜரட்டையிலிருந்து தென்மேற்கு நோக்கி இராஜதானிகள் இடம் பெயரும் போது பொருளாதார நடவடிக்கைகளும் விவசாயத்திலிருந்து வர்த்தகம் நோக்கி மாற்றம் பெற்றது.
- இராசதானிகளின் காலம் குறைவாக இருந்தாலும் பல்வேறு சமய சேவைகளைப் போலவே சமயக் கட்டிடங்களும் நிர்மாணிக்கப்பட்டன.
- சமய முன்னேற்றத்தோடு ஒன்றிணைந்த வகையில் கலாச்சார மேம்பாடும் நிகழ்ந்தது.
- சமய இலக்கிய வளர்ச்சிக்கு அரச அனுசரணையும் துணை புரிந்தது.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- சிங்கள இராசதானி படிப்படியாக வரிசை அடிப்படையில் இடமாற்றம் முறையை விபரிப்பார்.
- இலங்கையின் தலைநகராக தெரிவு செய்யப்பட்ட இடங்களின் பெயர்களை புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
- இந்த யுகத்திற்குரிய இலக்கிய நூல்களை படித்து அதனை மதிப்பார்.
- கூட்டு ஒத்துழைப்புச் செயற்பாட்டின் மூலம் தகவல் சேகரித்தல்.
- தகவல்களை முன்வைக்கும் திறனை வளர்த்துக் கொள்வார்.

இணைப்பு 1




உரு 6.1 இராசதானி. மாற்றம்

# இணைப்பு 2

குழுச் செயற்பாட்டுப் படிவம்

தரம் 10 பாடப்புத்தகம், இலங்கையின் வரலாறு இரண்டாம் பாகம், தரம் 9 சமூகக்கல்வியும் வரலாறும் பாடப்புத்தகம் என்பவற்றைப் பயன்படுத்திக் கீழ் வரும் தகவல்களைத் திரட்டவும்.

1. இராசதானியின் பெயர்
2. இராசதானிகளின் இடப்பெயர்வுக்குக் காரணமாக அமைந்த விடயங்கள் எவை?
3. முதலாவது அரசன் யார்?
4. மிகச் சிறந்த மன்னன் யார்?
5. இந்த இராசதானிச் சமயத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் எவை?
6. இந்த யுகத்தின் பிரதான பொருளாதார நடவடிக்கைகள் எவை?
7. இந்த இராசதானியில் கட்டப்பட்ட சமயக் கட்டடங்களைப் பெயரிடுக.
8. இந்த இராசதானியில் வாழ்ந்த பண்டிதர்கள் யார்?
9. இந்த யுகத்தில் எழுதப்பட்ட இலக்கிய நூல்களைப் பெயரிடுக.

# இணைப்பு 1.3

## மாணவர் செயற் பத்திரம்

தம்பதெனிய யுகம் தொடக்கம் கோட்டை யுகம் வரையான வரலாற்றுத் தகவல்கள்

| | காரணி | தம்பதெனிய இராசதானி | யாப்பஹுவ இராசதானி | குருணாகல் இரர்சதானி | கம்பளை இராசதானி | கோட்டை இராசதானி |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஆரம்ப ஆட்சியாளன் | | | | | |
| 2. | உன்னத ஆட்சியாளன் | | | | | |
| 3. | முக்கிய வரலாற்று நிகழ்வு | | | | | |
| 4. | பிரதான பொருளா தார நடவடிக்கை | | | | | |
| 5. | நிர்மாணிக்கப்பட்ட சமயத்தலங்கள் | | | | | |
| 6. | துறவற, இல்லறக் கல்விமான்கள் | | | | | |
| 7. | எழுதப்பட்ட நூல்கள் | | | | | |

# அலகு 10.6

## அறிமுகம்

இஸ்லாம் சமய எழுச்சியுடன் அரேபியர் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தற்காக யுத்த நடவடிக்கைகளைப் பின்பற்றியதனால் மத்திய கால ஐரோப்பா போல ஆசியாவிலும் அரசியல் பிணக்குகளை ஏற்படுத்தி வெற்றியீட்டிய காலப்பகுதியைக் கற்பது முக்கியத்துவமானது.

ஜிஹாத் புனிதப்போர் இந்தியாவிலும் பரவியதனால் பௌத்த, இந்து கலாசாரத்தினூடாக வளர்ச்சி பெற்ற நாகரிகமொன்றினை வீழ்ச்சியடையச் செய்வதில் அரேபிய ஆக்கிரமிப்பின் முதன்மை தொடர்பாக தகவல்களைக் கற்பது இங்கு இடம்பெறுகின்றது.

தென்கீழ் ஆசியா நாடுகளில் பௌத்த, இந்து சமயத்தின் வளர்ச்சியால் கிடைக்கப்பெற்ற கலாசார பரவலைக் கற்பது இவ்வத்தியாயத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய கால யுகத்தில் இலங்கை தென்கீழ் ஆசிய நாடுகளுடன் வைத்திருந்த சர்வதேச உறவுகள் முக்கியத்துவத்தை கற்பதனூடாக சமகால இலங்கையின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக் கொணரும் காலப்பகுதியினை மதிப்பிடத் தூண்டப்படுவர்.

**தேர்ச்சி** : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் கற்பார்.

**தேர்ச்சி மட்டங்கள்** :

- மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களை சேகரித்து விளக்குவார்.
- மத்திய கால ஆசியாவின் கலாசார நடவடிக்கைகளைக் கற்பார்.
- மத்திய கால ஆசிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற தொடர்பு களை விசாரித்தறிவார்.
- மத்திய கால ஆசியாவின் வரலாற்று இடங்களை தேசப்படத்தி னூடாக விளக்குவார்.

## 10.6 மத்தியகால ஆசியா

### 10.6.1 இஸ்லாம் சமயத்தின் பரவலும் இந்தியாவில் அதன் தாக்கமும்

- வடமேல் மற்றும் மேற்கு இந்தியா
- கி.பி 632 முஹம்மத் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின் இஸ்லாம் சமயப்பரவலுக்கு கலீபாக்கள் பொறுப்பேற்றிருந்தனர்.
- ஜிஹாத் - புனித யுத்தத்தினால் அரேபியர்கள் ஒன்றுபடலும் இஸ்லாம் பரவியமையும்
- ஆப்கானிஸ்தான், வடமேல் இந்தியாப் பஞ்சாப், சுல்தான், சிந்து வரையில் அரேபிய ஆதிக்கம் பரவியமை.
- கி.பி 711 இல் முதல் அரேபிய ஆக்கிரமிப்பு காரணமாக இந்தியாவுக்கு மேற் கொள்ளப்பட்டமை.
- மத்திய ஆசிய கஸ்னிய, சூப் தலைநகரங்களை கேந்திரப் படுத்திய வட மேல் கணவாயூடாக இந்தியாவை ஆக்கிரமித்தமை.
- வடமேல் இந்தியாவில் ஸ்திரமற்ற அரசியல் நிலை இருந்தபோதிலும் முஸ்லிம் ஆக்கிரமிப் புக்கு முகங் கொடுக்க ஹிந்து சாவி அரசர்கள், சிந்துப் பிரதேச தாஹிர் அரசன் மற்றும் ராஜ்பூட் அரசர்கள் ஒன்று சேர்ந்தமை.
- சூர் மஹ்மூத் உடைய இந்திய ஆக்கிரமிப்பு மிகவும் சக்தியுடையதாயிருந்ததால் மேற்கு, வடமேல் இந்தியாவினை தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வர முடியுமாயிருந்தமை.
- சாஹிமஹன் கோட்டை, நகர்கோட், கௌனஜய, சோமநாத் தேவாலயம் ஆகியன முழுமை யாக வீழ்ச்சியடைந்தமை.
- கி.பி 1192 இரண்டாம் தாரேன் மற்றும் பானிபக் எனப்படும் யுத்தம் என்பவற்றால் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நிலை பெற்றமை.
- ஐந்து நூற்றாண்டுகளாக நிலயில வடமேல், மேற்கு இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் ஆக்கிரமிப்புகளின் பெறுபேறாக இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டமை, சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டமை, இஸ்லாமிய சமயம் பரவியமை என்பன விளங்கின.

### டில்லி சுல்தான் சாம்ராஜ்யம் கி.பி 1200-1526

- அடிமை சாம்ராஜ்ய குதுபுத்தீன் அரசனாகக் கருதப்படும் அய்பெக்கின் கீழ் தில்லியைத் தலைநகரமாகக் கொண்டு முஸ்லிம் இராச்சியமொன்றை இந்தியாவினுள் அமுல்படுத்தியமை
- கி.பி 1265-1286 வரை அடிமை சாம்ராஜ்யத்தின் மிகச் சக்திவாய்ந்த ஆட்சியாளராக விளங்கிய கியாஸ்தீன் பல்பன் என்பவரின் கீழான முஸ்லிம் ஆட்சி வங்காளம் வரைப் பரவுதல்.
- கில்ஜி சாம்ராஜ்யத்தின் கீழ் கி.பி 1256-1316 வரை ஜலாலுத்தீன் கில்ஜியின் கீழான வட இந்தியா, வங்காளம் போன்று தக்கினம் போன்ற இராச்சியங்களையும் வென்றமை.

- சக்திவாய்ந்த நிர்வாக அமைப்பினூடாக முஸ்லிம் ஆட்சி இந்தியாவில் நிலைத்திருத்தல்.
- பாதுகாப்பற்ற வடமேல் கணவாய்களுடாக காவல் ஏற்படுத்தியமை.
- துக்ளக் அரச வம்சத்தின் கீழ் கி.பி 1325-1361 வரை முஹம்மத் பின் துக்ளக் என்பவரின் கீழ் தில்லி சுல்தான் சாம்ராஜ்யம் பரம்பல் உச்ச நிலையை எய்தியமை.
- தில்லி சுல்தான் சாம்ராஜ்யத்தின் கீழ் தில்லி சுல்தான் சாம்ராஜ்யம் நலிவுற்றமை.
- கி.பி 1526 மொகலாய ஆக்கிரமிப்பாளரான பாபுல் தில்லி சுல்தான் சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றியமை.

## மொகலாயப் பேரரசு கி.பி 1526-1707

- சஹீருத்தீன் மொஹமட் பாபர் என்பவர் முதலாவது மொகலாய ஆக்கிரமிப்பினை 1504ல் காபுல் பிரதேசத்தில் மேற்கொண்டமை.
- "லோடி" பரம்பரையின் பிரச்சினைகளால் அலாம் லோடி பாபருக்கு இந்தியாவை ஆக்கிரமிக்க அழைப்பு விடுத்தமை.
- கி.பி 1526 பானிபக் போராட்டத்தில் இந்தியாவில் மொகலாய ஆதிக்கம் நிலைபெற்றமை
- ஹுமாயூனின் கீழ் பெஷாவவர், லாஹூர் வரை ஆட்சி விஸ்தரிப்பு நடைபெற்றமை.
- அக்பர் மன்னர் மொகலாய அரசர்களிலே சிரேஷ்ட ஆட்சியாளராகக் கணிக்கப்படுகின்றமை.
- தக்கிணத்தில் அகமதி நகர், தவுலிதாபாத் வரையிலான ஆதிக்கம் பரவச் செய்தமை.
- பிறமொழிகளுக்கும் மதிப்பளிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்த ஆட்சியாளர் என்ற விதத்தில் முக்கியம் பெறுகின்றமை.
- ஜெஹாங்கீர் ஆட்சியின் போது பிரித்தானிய வணிக சங்கம் சுரத்தில் வணிகக் கோட்டையை ஆரம்பித்தமை முக்கிய நிகழ்வானமை.
- சாஜஹான் மன்னனின் மும்தாஜ் மஹால் ஆக்ராவில் நிர்மாணிக்கப்பட்டமை.
- அவுரங்கசிப்பின் காலத்தில் மொகலாய பேரரசு வீழ்ச்சியடைந்தமை.

## தக்கணத்தில் பகமனி அரசு கி.பி 1347-1526

- குல்பர்க்கினை தலைநகராக்கக் கொண்டு தென்னிந்தியாவில் சுதந்திர முஸ்லிம் அரசு உதயமாகுதல்.
- அலாவுத்தீன் பாமன்ஷாவினால் பகமன் அரசு உருவாதல் கி.பி 1344-1358
- தென்னிந்திய முஸ்லிம் ஆட்சிப்பரவலும் இஸ்லாம் சமயப் பரவலும் இதன் மூலமாக இடம் பெற்றமை.
- சம்சுத்தீன் பிரூஸ் என்பவர் பகமனிய அரசியல் சக்தி வாயந்த ஆட்சியாளராதல்
- அமத் ஹுமாயன் ஷா (1422-1435) குல்பர் தலைநகரினை அகமத் நகருக்கு மாற்றியமை.
- விஜய நகர் பேரரசுடன் பகமனிய அரசு தொடர்ந்தும் மோதலை ஏற்படுத்திக் கொண்டமை

விஜய நகரப் பேரரசு கி.பி 1336-1576

- சுதந்திர இந்து இராச்சியமாக துங்கபத்திரா நதியோரமாக ஆட்சி வளர்ச்சியடைதல்.
- விஜய நகரைத் தலைநகரமாக்கி ஹரிஹரன், புரேக்க என்போரால் ஆட்சி அமைத்தல்.
- கிருஷ்ண தேவராய அரசன் (1501-1530) விஜய நகரப்பேரரசின் சிரேஷ்ட ஆட்சியாளனாவான்.
- விஜய நகரப் பேரரசின் பரவல் பகமன் ஆட்சிக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இதனால் அடிக்கடி மோதல் ஏற்பட்டமை.
- முஸ்லிம் ஆட்சியினால் தென்னிந்தியாவில் இந்து கலாசாரம் அழியவிடாது மூன்று நூற்றாண்டு களாகப் பாதுகாத்தது விஜய நகரப் பேரரசாகும்.
- விஜய நகர கட்டடக்கலை முறை புதிய கோலத்தைப் பெற்றது
- வரதராஜ தேவாலயம், கல்ரத தேவாலயம், சுவாமி தேவாலயம் அவற்றில் சிலவாகும்.
- விஜய நகர் பேரரசு இலங்கையுடனும் தொடர்புகளை வைத்திருந்தமை.

## 10.6.2 ஆசியாவின் பௌத்த, இந்து சமயங்களின் செல்வாக்கு

மத்திய ஆசியா

- தரைவழிப்பட்டுப்பாதை ஊடாக மத்திய ஆசியாவிற்கு புத்த சமயமும் இந்து சமயமும் பரவியது.
- கி.பி 1 ஆம் நூற்றாண்டில் 4 வது தர்ம மாநாட்டின் பின்பு கனிஷ்க மன்னனால் மத்திய ஆசியாவில் மகாயான பௌத்த மதம் மாற்றம் பெற்றது.
- ஹிடயுங்சாங் பிக்குவின் அறிக்கைப்படி ஹீனயான பௌத்த மத்திய நிலையங்களாக சான்ஷானி, துர்பான், குச்ச, கப்ஹர் ஆகிய இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- யார்காண்ட், கோட்டான் ஆகிய மகாயான பௌத்த மத்திய நிலையங்கள் காணப்பட்டன.
- பாமியன் புத்தர் சிலை கி.பி 1ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.
- விஷ்ணு, சிவ தெய்வ வழிபாடுகள் பற்றியும் நாராணய பிராமண யாத்திரை பற்றியும் தகவல்கள் காணப்படுகின்றன.
- சைவ சமயத்துடன் தொடர்புடைய கடவுள்கள் மத்திய ஆசியப் பிரதேசங்களில் பிரசித்தம் பெற்றிருந்தன.

சீனா

- தரைவழிப் பட்டுப்பாதை வழியாக சீனாவுக்குப் பௌத்த சமயம் பரவிற்று.
- கனிஷ்க அரசனின் காலத்தில் சீனாவில் மகாயான பௌத்தம் வந்ததாக சீன மூலாதாரங்களில் குறிப்பிடுகின்றன.
- பாகியன், ஹியுங்சாங் முதலான பிக்குகள் இந்தியாவின் பௌத்த மத்திய நிலைங்களுடன் உறவுகளை வைத்திருந்தனர்.

- நாலந்தா, தக்ஷியா போன்ற பௌத்த பல்கலைக்கழகங்களுக்கு சீன பிக்குகள் கல்வி கற்க வந்தமை.
- இலங்கையிலிருந்து சீனாவுக்கு பிக்குனிகள் கொண்டு செல்லப்பட்டதாக பாகியன் பிக்குவினது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பாகியன் பிக்கு அபயகிரி விகாரையிலிருந்து திரிபிடக அட்டுவா கீதத்தை மொழி பெயர்த்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பர்மா

- அசோக மன்னன் தேரவாத பௌதத்தைப் பிரசாரம் செய்த பிரதேசம் பொன்விழையும் பூமியாகும்.
- இந்து செல்வாக்குக்குட்பட்டமையால் பௌத்த கற்கைகளுக்கு உரிய அமைப்புக்குட்பட்டமை.
- இலங்கை பிக்குகள் பர்மாவுடன் உறவுகளைப் பேணியமை.
- முதலாம் விஜயபாகு பர்மாவில் ராமக்ஞா தேசத்தில் உபகர்பதா சடங்கினை இந்நாட்டிற்கு கொண்டு வந்தமை.
- வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு இலங்கை உட்படுகையில் பிக்குகள் பர்மாவிற்கு சென்றமை.
- இலங்கையிலிருந்து பாளி திரிபீடகத்தை பர்மாவிற்கு எடுத்துச் சென்றமை.

சீயம் (தாய்லாந்து)

- பர்மாவில் பௌத்த ஆதிக்கத்தின் காரணமாக சீயம் நாட்டில் தேரவாத பௌத்தம் பரவிற்று.
- ஹீனயான திரிபீடக கிரந்தம் சீயம் நாட்டில் பயன்படுத்தப்பட்டது.
- திரிபீடக நூல் சமஸ்கிருத, நாகரி எழுத்துக்களால் எழுதப்பெற்றுள்ளமை.
- கோட்டையின் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் சீயத்துடன் பௌத்த உறவுகளைக் கொண்டு இருந்தான்.
- கி.பி 1555 இல் தாய்லாந்தின் மன்னன் வெள்ளரசுக்கிளை ஒன்றை சியன்மொங் எனுமிடத்தில் நாட்டியதாக கூறப்படுகின்றது.
- கண்டி யுகத்தில் சியம் நாட்டிலிருந்து உபசம்பதா நடவடிக்கைகள் இந்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாகும்.

ஜாவா, சுமாத்திரா

- கி.பி 7 ஆம் நூற்றாண்டில் இட்சிங் பிக்குவின் அறிக்கையின் படி தேரவாத புத்த சமயம் பிரசித்தமாகவும் பரவலாகவும் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றது.
- "பளண்டொவ்" சுமாத்திராவின் முக்கிய பௌத்த நிலையமாகும்.
- போரபொதூர், கேது பிரதேசங்களில் உள்ள பௌத்த நினைவுத் தூபிகள் முக்கியமானவை களாகும்.

கம்போடியா (கம்பூச்சியா)

- அங்கோர் மன்னர்களது அரச அனுசரணையுடன் மாகாயான பௌத்தமும் பிராமணமும் பரவின.
- குன்றுக் கோவில்கள் அமைப்பது பிரபல்யமடைந்தன.
- கி.பி 12ம் நூற்றாண்டில் உருவாகிய அங்கோர்வின் பௌத்த வழிபாட்டுத்தலம் முக்கியத்துவம் வாயந்தது.
- கம்பூச்சியாவில் தேரவாத பௌத்தம் வளர்ச்சி நிலையை அடைந்திருந்ததாக ஜனகாலமாலி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 10.6.3 இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையிலான தொடர்புகள்

- பொலன்னறுவை யுகத்தில் தென்னிந்தியாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தது.
- இலங்கையில் விகாரை சித்திரங்கள், ஜாதகக் கதைகளை சித்திரமாக்குதல் என்பன கி.பி 11ம் நூற்றாண்டு ஆகும் போது தாக்கம் செலுத்தியுள்ளதாகக் காணப்படுகின்றது.
- சுமாத்திராவின் பிளேனிங் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட அவபேதினஸ்வரன் சிலை சிதுல்பவ்வ சிலையுடன் ஒத்திருப்பதாக எடுத்துக்காட்டப்படுகின்றது.
- ஜாவாத் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர் சிலைகளில் இலங்கையின் சாயல் காணப் படுகின்றது.
- ஜாவாவின் குறிப்பொன்றின் படி அபயகிரி விகாரையிற்கு இணையான ஒன்று அங்கே காணப்பட்டதாக குறிப்பிடுகின்றது.
- பொலன்னறுவை யுகத்தில் உருவாக்கப்பட்ட அட்டதாகய, வட்டதாகய எழுடுக்குக் காவலரண் என்பவற்றின் கட்டட நிர்மாணமுறை தென்னாசியாவின் செல்வாக்கினால் ஏற்பட்டவையாகும்.

## செயற்பாடு 10.6.1

தேர்ச்சி : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார்.

தேர்ச்சி மட்டம் : மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களைச் சேகரிப்பார்.

செயற்பாடு : "இஸ்லாம் சமயத்தினதும் முஸ்லிம் ஆட்சியினதும் பரவல் ஆரம்பித்த விதம் பற்றி விளங்கிக் கொள்வோம்"

காலம் : 40 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- பாடநூல் - தரம் 10
- தில்லி சுல்தானியப் பேரரசு - (சிங்களம்) கருணாரத்ன விஜேதுங்க
- மக்காவிலுள்ள க.'.பத்துல்லாஹ் படம் - இணைப்பு 1
- 8 ஆம் நூற்றாண்டாகும் போது முஸ்லிம் ஆட்சிப் பரவலினைக் காட்டும் படம் - இணைப்பு 2
- ஏ4 அளவிலான கடதாசி
- செயற்பத்திரம்
- தகவல் பத்திரம் - இணைப்பு 3

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.6.1.1 :

இணைப்பு 1

- க.'.பத்துல்லாஹ் பள்ளிவாசலின் படத்தினையும் அதற்கு யாத்திரை செல்லும் யாத்திரிகர்களது படத்தினையும் வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- இப்படத்தின் மூலமாக கலந்துரையாடலை ஆரம்பித்து பின்வரும் வினாக்களை மாணவர்களுக்கு முன் வைக்கவும்
  - இங்கு காணப்படும் சமயத் தலம் யாது?
  - அது எந்த சமயத்திற்கு உரித்தானது?
  - அதன் சமயத் தலைவர் யார்?

  இவ்வினாக்களைத் தொடுக்கும் போது முஹம்மத் நபி, இஸ்லாம் சமயம், முஸ்லிம் ஆட்சிப் பரவல்களின் ஆரம்பம் பற்றிய சிறிய கலந்துரையாடலை செய்யவும்
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரும் விதத்தில் கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தவும்.

(10 நிமிடங்கள்)

- முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாம் சமயத்தின் ஸ்தாபகராவார்.
- கி.பி 570ல் மக்காவில் அவர்கள் பிறந்து வாழ்ந்தார்.
- அவர்களது போதனைகளால் கவரப்பட்டு தோழர்கள் குழுவொன்று உருவாகியிருந்தமை.
- முஹம்மத் நபியவர்களது போதனைகளுக்கு அக்கால சமயக் குறவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.
- யூத, கிறிஸ்தவர்களே எதிர்தவர்களுள் முதன்மையான வர்களாகும்.
- அரேபியர் முஹம்மத் நபியவர்களைச் சூழ ஒன்றுபட்ட மையினால் அவர்களது சமய நடவடிக்கைகளுக்கு தேசிய வடிவம் பெற்றமை.
- சமயத்துக்கு எதிராக எதிரிகளின் எதிர்ப்பு நடவடிக்கை கள் அதிகரித்த போது தற்பாதுகாப்புக்காக யுத்தத் திற்குச் சென்றமை.
- அல்லாஹ்வினால் இறக்கப்பட்ட புனிதக் குர்ஆனை முஹம்மத் நபியவர்கள் போதனை செய்தமை.
- நபியவர்களது மரணத்தின் பின்பு முஸ்லிம் ஆட்சிப் பரவல், சமயப் பிரசார நடவடிக்கைகள் கலீபாக்களுக்கு உரித்தானமை.
- கலீபாக்களின் ஆதரவுடன் முஸ்லிம் நாடுகளது பரவல் சிரியா, ஈராக், எகிப்து, வடஆபிரிக்கா, ஸ்பெயின், துருக்கி, மத்தியாசியா, சிந்து முதலானவை.

**படி 10.6.1.2 ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்** : செயற்பாட்டில் ஈடுபடல்

- வகுப்பு மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்கவும்.
- எல்லாக் குழுக்களுக்கும் செயற்பத்திரத்தினை வழங்கவும்.
- தகவல்களடங்கிய படிவத்திற்கான மாதிரிப்படத்தினை குழுக்களுக்கு வழங்கவும்.
- செய்ய வேண்டிய வேலைகள் தொடர்பாக மாணவர் களை அறிவுறுத்தவும்.
- குழுவுக்கு ஒன்று வீதம் செயற்பத்திரம், தகவற் பத்திரம் வழங்கினாலும் அனைத்து மாணவர்களாலும் தகவற் பத்திரம் ஒன்று வீதம் தயாரித்துக் கொள்ளுமாறு கூறவும்.

(10 நிமிடங்கள்)

படி 10.6.1.3 :

- செயற்பாட்டு முடிவில் மாணவர்கள் சிலருக்கு தமது ஆக்கங்களை வகுப்புக்கு முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- முன்வைத்ததன் பின்பு அவற்றின் குறை நிறைகளை சுட்டிக்காட்டி மீட்டாய்வு செய்யவும். மீட்டாய்வின் போது பின்வரும் அம்சங்களை வெளிக் கொணரவும்.

- கி.பி 570ல் மக்காவில் பிறந்த முஹம்மத் நபியவர்கள் இஸ்லாத்தைப் போதித்தமை, இவை அல்குர்ஆனில் இருந்து பெறப்பட்டவையாகும்.
- இஸ்லாம் பரவுகையில் அக்கால சமயக் குறவர்க ளாலும் யூத, கிறிஸ்தவர்களால் எதிர்ப்பும் தடைகளும் மேற்கொள்ளப்பட்டமை.
- அரேபியர்களது உதவி நபியவர்களுக்கு கிடைத்தமை யினால் சமயப் பரவலுக்குத் தூண்டுகோலாயிருந்தமை.
- தடைகளை வெற்றி கொள்ள ஜிஹாத் புனித யுத்தம் மேற்கொள்ளப்பட்டமை.
- முஹம்மத் நபியவர்களது மரணத்தின் பின்பு முஸ்லிம் ஆட்சி பாதுகாப்பாளராகவும் பிரதிநிதியாகவும் கலீபாக்கள் நியமிக்கப்பட்டமை.
- முதலாம் கலீபாவாக அபூபக்கர் (றழி) இருந்தமை.
- கலீபாக்கள் காலத்தில் பரவிய முஸ்லிம்களது ஆட்சிப் பரவல் 8 ஆம் நூற்றாண்டாகும் போது வட ஆபிரிக்கா, ஸ்பெயின், தென் பிரான்ஸ், துருக்கி, ஆப்கானிஸ்தான், மத்தியாசியாவுக்கு பரவியமை.
- கி.பி 711-715 வரை மேற்கு இந்தியாவில் சிந்து, சுல்தான் ஆகிய இடங்களுக்கு அரேபியாவிலிருந்து வருகை - முஸ்லிம்களது ஆட்சிப் பரவலின் ஒரு பகுதியாகக் குறிப்பிடலாம்.

(20 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- இஸ்லாம் சமயம் ஆரம்பித்த விதம் பற்றி விபரிப்பார்.
- பல்வேறு தடைகளை வென்று இஸ்லாம் பரவிய விதத்தைத் தெளிவுபடுத்துவார்.
- இஸ்லாத்தைப் பின்பற்றியோரது சமயப் பற்றும் அர்ப்பணிப்பும் இச்சமயத்தின் துரித பரவலுக்குத் துண்டுதல் அளித்தமையை வெளிப்படுத்துவார்.
- 8 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம் ஆட்சி பரவிய பிரதேசத்திற்கு பழகுவார்.
- மூலாதார நூல்களை வாசித்தறிந்து தகவல்களைத் சேகரிப்பதற்கு பழகுவார்.
- குழுவாக வேலை செய்யும் போது அறிவு வளர்ச்சி இலகுவானது என தெளிவுபடுத்திக் கொள்வார்.

## செயற்பத்திரம் I

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை சிறப்பாக வாசித்து அது தொடர்பான பத்திரத்தின் படி தகவல் பத்திரத்தினை தயாரிப்பது உமக்கு வழங்கப்படும் கருமமாகும். அனைவராலும் இத்தகவல்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

### இஸ்லாம் சமயம், முஸ்லிம் ஆட்சிப் பரவலின் ஆரம்பம்

கி.பி 570 இல் பிறந்து மக்காவில் பிறந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாம் சமயத்தின் ஆரம்ப கர்த்தாவாக இருந்தார்கள். 40 வது வயதில் அவர்களுக்கு வேத வெளிப்பாடு இறைவனிடமிருந்து கிடைக்கப்பெற்று, பிரசாரம் செய்த அவர்கள் இறை தூதராக பணியாற்றியமை.

பிரசாரத்திற்கு வேதநூலான அல்குர்ஆன் பயன்படுத்தப்பட்டது. தனது பிரசாரத்தை விசுவாசித்த அரேபியர்கள் பாரபட்சமின்றி நடந்து கொண்டமையால், அப்போதிருந்த கோத்திரத்தினர் அப்பிரசாரத்திற்கு எதிர்ப்பு நடவடிக்கைகளை காட்டியமை. குறிப்பாக யூத, கிறிஸ்தவர்கள் இரு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்தவர்களுள் அடங்குவர்.

சமாதான வழியில் இடம்பெற்ற சமய பிரசாரத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியபோது அதனை வெற்றி கொள்ள பல்வேறு செயற்பாடுகளைப் பின்பற்றினார்கள்.

இஸ்லாம் சமயத்தின் அடிப்படையில் பண்புகள் சர்வ வல்லமையுள்ள ஏக இறைவனான அல்லாஹ்வை விசுவாசித்தல். எல்லா மனிதர்களும் இறைவனுக்குக் கட்டுப்படல் வேண்டும். மனிதனால் செய்யப்படக்கூடிய அனைத்துக் கருமங்களும் இறைநாட்டத்துடன் செய்யப்படுவதாகும். இஸ்லாத்தின் போதனைகள் (குர்ஆன்) அடங்கியுள்ளது. அது தெய்வ வாக்கியம் எனப்படுகின்றது.

முஹம்மத் நபியவர்களது மரணத்துடன் (கி.பி 632) இஸ்லாம், முஸ்லிம் ஆட்சிப் பிரதேசங்களாகப் பாதுகாக்க கலீபா அபூபக்கர் (றழி) நியமிக்கப்பட்டார்கள். இவருக்குப் பிறகு கலீபா உமர் நியமிக்கப்பட்டார்கள். முஹம்மத் நபிக்குப் பிறகு இஸ்லாத்தினதும் படைத்தளபதியாகவும் கலீபா நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு 8 ஆம் நூற்றாண்டின் இறுதியாகும் போது கலீபாவின் கீழ் சிரியா, ஈராக், எகிப்து, பாரசீகம், தென்னாசியா, வட ஆபிரிக்கா, ஐரோப்பிய ஸ்பெய்ன், தென் பிரான்ஸ், துருக்கி, ஆப்கானிஸ்தான், மத்தியாசியா வரை முஸ்லிம் ஆட்சிப் பரவல் இடம்பெற்றது. கி.பி 711-715 வரை மேற்கிந்தியாவின் சிந்து முல்தான் வரையும் பரவியது.

## இணைப்பு 1



மக்காவின் க.்.பா பள்ளிவாசல்

## இணைப்பு 2



## இணைப்பு 3

### தகவற் பத்திரம்

- இஸ்லாம் சமயத்தின் தோற்றுவிப்பாளரின் பெயர் :-
- அவர் வாழ்ந்த பிரதேசம் :-
- இஸ்லாம் பரவியபோது அதனை எதிர்த்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட தடைகள் யாவை?
- இஸ்லாம் சமயத்துடன் பாரபட்சமின்றி நடந்த இனத்தவர்கள்:-
- தடைகளை வெற்றி கொள்ளக் கடைபிடித்த செயல்கள் யாவை?
- இஸ்லாமிய போதனைகள் அடங்கிய கிரந்தத்தின் பெயர் :-
- கலீபாவுக்குரிய கடமைகள் யாவை?
- கி.பி 8 ஆம் நூற்றாண்டின் இறுதியாகும் போது இஸ்லாம் பரவிய பிரதேசங்கள் யாவை?

## செயற்பாடு 10.6.2

தேர்ச்சி : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார்.

தேர்ச்சி மட்டம் : மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களைச் சேகரிப்பார்.

செயற்பாடு : "தில்லி சுல்தான் ஆட்சி மொகலாயப் போரரசின் கீழ் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவிய விதத்தினைக் கண்டறிவோம்"

காலம் : 120 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- பாடநூல் - தரம் 10
- தில்லி சுல்தானியப் பேரரசு - (சிங்களம்) கருணாரத்ன விஜேதுங்க
- தில்லி - குவ்வதுல் இஸ்லாம் பள்ளிவாயிலின் படம்
- தாஜ்மஹால் படம்
- தில்லி சுல்தான் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிப் பரவலினைக் காட்டும் படம்
- இந்திய மொகலாயப் பேரரசுப் பரவலைக் காட்டும் படம்
- இணைப்பு 1 - குவ்வத்துல் இஸ்லாம் பள்ளிவாயல், தாஜ்மஹால் என்பவற்றைக் காட்டும் படம்
- செயற்பத்திரம் I
- செயற்பத்திரம் II
- செயற்பத்திரம் III
- செயற்பத்திரம் IV

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.6.2.1 :

- இணைப்பு 1 ஐ வகுப்பில் முன்வைத்து அங்கு காட்டப்படும் குவ்வத்துல் இஸ்லாம் பள்ளிவாயில், தாஜ்மஹால் என்பவற்றின் படத்தினூடாக மாணவர் கலந்துரையாடலினை ஆரம்பிக்கவும்

  1. படத்தில் காட்டப்படும் கட்டிடங்கள் இரண்டும் எவை?
  2. அவை யாரால் கட்டப்பட்டவை?
  3. இவ்விரண்டு கட்டடங்களிலும் காணப்படும் விஷேடங்கள் என்ன?
  4. அவை எந்த அட்சிக் காலத்துக்குரியன?

  இவ்வினாக்களுக்கு விடையளிக்க கலந்துரையாடலைக் கட்டியெழுப்பி தில்லி சுல்தான் பேரரசு, மொகலாயப்

பேரரசு என்பவற்றுடன் முஸ்லிம் ஆட்சிப்பரவல் அது இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாக மாண வர்களுடன் சிறு கலந்தரையாடலை மேற்கொள்ளவும்.

- பின்வரும் அம்சங்கள் வெளிக்கொணரும் விதத்தில் அவ்வுரையாடலைக் கட்டியெழுப்பவும்.

- கூர் எனுமிடத்தில் முஹம்மத் வட இந்தியா முஸ்லிம் ஆட்சியின் கீழான பிரதேசங்களுக்கு குதுபுத்தீன் அய்பெக்கை நியமித்தமை.
- அய்பெக் தில்லியை மத்தியாகக் கொண்டு ஆட்சியைக் கொண்டு சென்றமை.
- கோரி முஹம்மத்தின் பின்பு குதுபுத்தீன் அய்பெக் தில்லியின் புதிய அரச வம்சத்தை ஆரம்பித்தமை.
- அது தில்லி சுல்தான் ஆட்சியின் ஆரம்பமாகியமை.
- குதுபுத்தீன் அய்பெக் ஆரம்பித்த ஆட்சி முறை அடிமை ஆட்சி முறையாக இருந்தமை.
- அவர் பஞ்சாப் முதல் வங்காளம் வரை முஸ்லிம் ஆட்சிப் பரவலினை செய்து தில்லி சுல்தான் சாம்ராஜ் யத்திற்கு வித்திட்டமை.
- கி.பி 1206-1210 வரை அய்பெக் ஆட்சி புரிந்தமை.
- சித்திரத்தில் காட்டப்பட்ட குவ்வத்துல் இஸ்லாம் பள்ளி வாயில் அய்பெக்கினால் கட்டப்பட்டது பற்றி. இந்து தேவாலய சிதைவுகளை ஒன்றுபடுத்தி இப்பள்ளிவாயில் கட்டியெழுப்பப்பட்டமை.
- அய்பெக்கின் பிறகு தில்லி சுல்தான் சாம்ராஜ்யப் பரவல் மேலும் இல்ருமிஷ் எனும் இளவரசனால் மேற் கொள்ளப்பட்டமை.
- இல்ருமிஷ்ஷின் பிறகு தில்லி சுல்தானிய சாம்ராஜ்யப் பரவல் மீண்டும் கியாஸுத்தீன் பல்பன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டமை
- தில்லி சுல்தானிய அடிமை அரசர்களில் மிகச் சிறந்த நபர் பல்பனாவர்.
- பல்பனின் அரச காலத்தில் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பாதுகாப்பாயிருந்தமை, வடமேல் எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியமை எல்லா மொகலாய அச்சுறுத்தலையும் ஒழிப்பதற்குத் துணை புரிந்தமை.
- மிகவும் ஏகாதிபத்திய வடிவமும் சுன்னி ஆட்சியாயும் இருந்தமையால் இந்துக்கள் மட்டுமன்றி ஷீயாக்களும் பல்பனின் கொடுமைக்கு ஆளாகியமை.
- பல்பனின் பின் மீண்டும் பலவீனமடைந்த தில்லி சுல்தானிய சாம்ராஜ்யம் ஜலால்தீன் பீரூஸ் கல்ஜியின் கீழ் புதிய ஆட்சி தோற்றுவிக்கப்பட்டுப் பலம் பெற்றமை.
- இவ்வாட்சியில் அலாவுத்தீன் கல்ஜி பலம் வாய்ந்த ஆட்சியாளராகத் திகழ்ந்தமை.
- இவரது ஆட்சிக்காலத்தில் இந்திய முஸ்லிம் ஆட்சி இமயம் முதல் இராமேஸ்வரம் வரையும் அஸாம் முதல் முல்தான் வரையும் பரவியமை.

- அலாவுத்தீன் கொடூர ஆட்சியாளராகத் திகழ்ந்தமை.
- அலாவுத்தீனின் பிறகு மீண்டும் நலிவடைந்த முஸ்லிம் ஆட்சி துக்ளக் அரச காலத்தில் மீளப் பரவியமை.
- முஹம்மத் பின் துக்ளக் அவ்வரசில் பலம் வாய்ந்த ஆட்சியாளராகியமை.
- இவருடைய காலத்தில் தில்லி சுல்தானிய அரசு உச்ச வளர்ச்சி கண்டமையும் அவரது தலைநகர ஆட்சி வீழ்ச்சி கண்டமையும்.
- தில்லியினை தௌலாதாபாதுக்கு தலைநகரமாக மாற்றியமையும் பொருளாதாரக் கொள்கை என்பவற்றி னால் அரசு வீழ்ச்சி. கண்டமையும்.
- துக்ளக் அரச வம்சத்தின் பின் செய்யத் லோடி ராஜ வம்சங்கள் தில்லியை நிருவாகிக்க சென்றமையால் முஸ்லிம் ஆட்சி வீழ்ச்சியுற்றமை.
- லோடியர் தில்லியையும் அதன் பிறகு கதௌஜினையும் 75 வருடங்கள் ஆட்சி புரிந்தமை.
- 1526 இல் பானிப்பத்து சண்டையில் பாபரின் தலைமை யில் வந்த மொகலாயரினால் 1206 லிருந்து தில்லி சுல்தான் பேரரசு முடிவுற்றமை.
- 1526 மொகலாய பேரரசின் ஆரம்பத்திலிருந்து மீண்டும் இந்தியாவில் முஸ்லிம்களது ஆட்சி பரவியமை.
- அக்பர் மன்னன் மொகலாயப் பேரரசின் சிரேஷ்ட மன்னனாகியமை.
- அவர் சமய நிவாரண வேலைத்திட்டமொன்றை எடுத் தமை. (தீன் இலாஹி என்னும் பெயரால் அனைவருக் கும் வழிபடக்கூடிய சமயத்தைக் கட்டியெழுப்பியமை)
- அக்பர் மன்னன் பலம் வாய்ந்த நிருவாகக் கட்டமைப் பைக் கட்டியெழுப்பியமை.
- ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் இந்தியா கீழைத்தேய பிரித்தானிய வர்த்தக சங்கம் என்பவற்றுக்கிடையே உறவுகளை ஏற்படுத்தியமை.
- சாஜஹான் காலத்திலும் மொகலாய ஆட்சி நிலைத் திருந்தமை.
- 2 வது படத்தில் காட்டப்படும் தாஜ்மஹால் சாஜஹானி னால் கட்டப்பட்டமை.
- அவுரங்கசீப் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் மொகலாய ஆட்சி வீழ்ச்சியுற்றமை.

**ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் :**

- பொருத்தமான விதத்தில் மாணவர்களைக் குழுக்களாக ஆக்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் வெவ்வேறாக செயற்பத்திரங்களை வழங்கவும்.
- செய்ய வேண்டிய கருமங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுறுத்தவும்.
- செயற்பாட்டுக்குத் தேவையான தகவல்களைப் பெறும் முறை தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தி அதற்கு தயாராக வருமாறு கூறவும். (செயற்பாட்டின் மறுநாட் காலையிலாயினும் ஈடுபடுத்திக் கொள்ள முடியும்)
- அவ்வாறு செய்வதாயின் அதற்காக ஒவ்வொரு குழுவினரையும் தத்தமக்குரிய செயற்பாட்டிலீடுபடும் விதத்தினை ஒழுங்குபடுத்தும் விதத்தினையும் தெளிவுபடுத்தவும்.
- செயற்பாட்டிலீடுபடும் போது எல்லாக் குழுவினரையும் அவதானித்து தேவையான ஆலோசனைகளை வழங்கவும்.
- மதிப்பிடலையும் அச்சந்தர்ப்பத்திலேயே நடாத்தி குழுவினருக்கு புள்ளிகளை வழங்கவும்.
- செயற்பாட்டின் முடிவில் குழுவினருக்குத் தத்தமது ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கவும்.
- இறுதியாக குழுக்களின் குறை நிறைகளை மீட்டாய்வு செய்க.
- எல்லாக் குழுவினருக்கும் முக்கிய கருத்துக்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு கூறவும். மீட்டாய்வின் போது பின்வரும் அம்சங்கள் வெளிக்கொணருமாறு கலந்துரையாடலை மேற் கொள்ளவும்.

- இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிப்பரவல் பல்வேறு அரசர்களால் கட்டங் கட்டமாக இடம் பெற்றதென,
- குதுபுத்தீன் அய்பெக் எனும் அடிமை ஆட்சியாளரினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட தில்லி சுல்தானிய ஆட்சிக்கு வித்திட்டமை பற்றி.
- அடிமை ஆட்சியில் சக்திமிக்க அரசர்கள் ஆட்சியை விஸ்தரித்தமை பற்றி.
- கல்ஜி ஆட்சியில் அலாவுத்தீன் கல்ஜியின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் ஆட்சிப்பரவல் இந்தியாவில் உரிய பிரதேசத்தைக் கொண்டிருந்தமை பற்றி.

- துக்ளக் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் ஆட்சிப் பரவல் உச்ச நிலை அடைந்த அதே வேளை இராசதானியில் வீழ்ச்சி ஏற்பட்டது பற்றி.
- லோடியர் காலத்தில் தில்லி சுல்தான் வீழ்ச்சி கண்டமை பற்றி.
- மொகலாய ஆட்சியில் மீண்டும் முஸ்லிம் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டமை தொடர்பாக.
- இறுதியில் அவுரங்கசிப் சமயத்தில் மொகலாயப் பேரரசு வீழ்ச்சி கண்டதன் பின் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி வீழ்ச்சி கண்டமை பற்றி.
- இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியாளரினால் இந்துக் களுக்கு பாரியளவில் பிரச்சினைகள் இருந்த அதே வேளை முஸ்லிம் கட்டடக்கலை அம்சங்களில் வளர்ச்சி ஏற்பட்டமை பற்றியதாக.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- வட இந்தியாவின் முஸ்லிம் ஆட்சி பரவல் ஆரம்பித்த விதத்தினை விபரிப்பார்.
- முஸ்லிம் ஆட்சியாளர்களது அர்ப்பணிப்பும் இந்து ஆட்சியாளர்களுக்கிடையில் இடம்பெற்ற ஒற்றுமை யின்மையும் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிப் பரவலுக்கு ஏதுவாயமைந்தமை பற்றி தெளிவுபடுத்துவார்.
- வட இந்திய முஸ்லிம் ஆட்சிப் பரவலினை படமொன் றில் குறித்துக் காட்டுவார்.
- மூலாதார நூல்களைப் பயன்படுத்தி தகவல்கள் சேகரிக்கும் நடவடிக்கைக்கும் பழக்கிக் கொள்வார்.
- குழுச் செயற்பாட்டில் குழுவில் அனைத்து உறுப்பினர்க ளது அர்ப்பணிப்புடன் வெற்றியடைய முடியும் என்பதை விளங்கிக் கொள்வார்.

## இணைப்பு 1



தாஜ்மஹால்



கூவத் உல் இஸ்லாம், தில்லி.

## செயற்பத்திரம் I

தில்லி சுல்தான் ஆட்சிக்குரிய அடிமை சாம்ராஜ்யக் கால இந்திய முஸ்லிம் ஆட்சி பரவியமை பற்றி செய்திப்பத்திரிகைக்குப் பொருத்தமான விதத்தில் விபரமொன்றினைத் தயாரிப்பதுவே குழுவிற்கு வழங்கப்படும் கருமமாகும்.

கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் அத்தகவல்களை தொகுக்கவும்.

1. அடிமை சாம்ராஜ்யம் இடம் பெற்ற காலப்பகுதி
2. அடிமை சாம்ராஜ்ஜியத்தின் ஆரம்ப ஆட்சியாளர் குதுபுத்தீன் அய்பெக் என்பவரால் ஆட்சிப்பரவ லடைந்த பிரதேசம், அவருடைய முக்கியத்துவம் - ஆட்சிப் பரவலினைக் காட்டும் படம்
3. இல்குமிஷ் என்பவரால் விரிவடைந்த பிரதேசங்கள் அவருடைய முக்கியத்துவம் - ஆட்சிப் பரவலினைக் காட்டும் படம்.
4. கியாஸுத்தீன் பல்பன் என்பவரது ஆட்சிப் பரவலும் அவரது முக்கியத்துவமும் பரவலடைந்த பிரதேசங்களைக் காட்டும் படமும்.

தரம் 10 பாடநூலினையும் வேறு மூலாதாரங்களையும் தகவலுக்காகப் பயன்படுத்துக. தேவையேற்படின் ஆசிரியரது உதவியைப் பெறவும்.

## செயற்பத்திரம் II

தில்லி சுல்தான் ஆட்சிக்குரிய கல்ஜி ஆட்சியில் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவலடைந்த விதம் தொடர்பாக சுவர்ப் பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுவதை உமது குழுவிற்கு வழங்கப்படும் கருமமாகும்.

கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் அத்தகவல்களை தொகுக்கவும்.

1. கல்ஜி ஆட்சி இடம் பெற்ற காலப்பகுதி
2. கல்ஜி ஆட்சியின் ஆரம்பகர்த்தா ஜெலாலுத்தீன் பிருஷ் கல்ஜியினது ஆட்சியானது பரவலும் அவருடைய முக்கியத்துவமும்.
3. அலாவுத்தீன் கல்ஜியினது ஆட்சிப் பரவிய பிரதேசங்கள்
4. அக்கால ஆட்சிப் பரவல் இடம்பெற்ற படமொன்றினை உருவாக்குதல்.
5. அலாவுத்தீன் கல்ஜியினது முக்கியத்துவமும் சேவைகளும்

தரம் 10 பாடநூல், வேறு துணை நூல்களிலிருந்து தகவல்களை வழங்கவும் தேவையேற்படும் பட்சத்தில் ஆசிரியரது உதவியை நாடவும்.

## செயற்பத்திரம் III

தில்லி சுல்தான் ஆட்சியில் துக்ளக் ஆட்சிக்கால முஸ்லிம் ஆட்சிப்பரவல் பற்றி தகவற்பத்திரிகைக்கான ஆக்கம் தயாரித்தல்.

கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் தகவல்களை முன்வைக்கவும்

1. துக்ளக் ஆட்சி இடம் பெற்ற காலப்பகுதி.
2. துக்ளக் அரச ஆட்சியின் ஆரம்ப கர்த்தா கியாஸுத்தீன் துக்ளக் காசி தில்லி சுல்தானிய ஆட்சி பரவல் பிரதேசமும் அவரது முக்கியத்துவமும்.
3. முஹம்மத் பின் துக்ளக் கால தில்லி சுல்தானிய ஆட்சிப்பரவலடைந்த பிரதேசங்கள்.
4. முகம்மத் பின் துக்ளக்கின் முக்கியத்தவம்.
5. துக்ளக் ஆட்சிக்கால பரவலினைக்காட்டும் படம் தயாரித்தல்.
6. துக்ளக்கின் இறுதிக்கால தில்லி சுல்தானிய ஆட்சி வீழ்ச்சியுறக் காரணங்கள்.
7. லோடி ராஜ வம்சம் இடம் பெற்ற தில்லி சுல்தானிய வீழ்ச்சிக்கான காரணங்கள்.

இதற்காக தரம் 10 பாடநூல், வேறு மூலாதார நூல்களிலிருந்து தகவல்களைப் பெறவும். தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரது உதவியைப் பெறவும்

## செயற்பத்திரம் IV

மொகலாயப் பேரரசு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிப்பரவல் இடம் பெற்ற விதம் பற்றிய சுவர்ப்பத்திரிகைக்கு பொருத்தமான தகவல்களடங்கிய அறிக்கை தயாரிப்பதே உமது குழுவுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும்

கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் தகவல்களைச் சேகரிக்கவும்

1. மொகலாய பேரரசு இடம்பெற்ற காலப்பகுதி.
2. மொகலாய அரசின் ஆரம்ப கர்த்தா டிமூர்ஷாவின் பேரனுமாகிய பாபரிடமிருந்து மொகலாய ஆட்சி வீழ்ச்சியுற்ற விதம்.
3. அக்பர் சக்கரவர்த்தி ஆட்சி கால மொகலாயப் பேரரசு பரவிய விதம்.
4. அக்பர் சக்கரவர்த்தியின் முக்கியத்துவம்.
5. ஜெங்கிஸ்தான், சாஜஹான் மன்னர்களது மொகலாய அரசுக்கு கிடைத்த சேவைகள்.
6. அவுரங்கசிப் ஆடசிக்கால மொகலாய ஆட்சியின் வீழச்சிக்கான காரணங்கள்.
7. மொகலாயப் பேரரசு பரவலடைந்த பிரதேசங்களைக் காட்டும் படத்தினைத் தயாரித்தல்.

இதற்காக தரம் 10 பாடநூல், ஏனைய மூலாதார நூல்களிலிருந்து தகவல்களைப் பெறவும். தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரது உதவியைப் பெறவும்

## செயற்பாடு 10.6.3

**தேர்ச்சி** : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார்.

**தேர்ச்சி மட்டம்** : மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களைச் சேகரிப்பார்.

**செயற்பாடு** : "வடமேல், மேற்கு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவிய விதத்தினைக் கண்டறிவோம்"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- செயற்பத்திரம் - இணைப்பு 1
- செயற்பத்திரம் - இணைப்பு 2
- செயற்பத்திரம் - இணைப்பு 3
- மேற்கு இந்தியாவின் அரேபிய ஆட்சி பரவலடைந்த பிரதேசங்களைக் காட்டும் படம்.
- கஜினி ஆட்சியின் கீழ் முஸ்லிம் ஆட்சி பரவிய பிரதேசங்களைக் காட்டும் படம்.
- கஜ்னி முஹம்மதின் கீழான முஸ்லிம் ஆட்சி பரவல் பிரதேசங்களைக் காட்டும் படம்.
- செயற்பத்திரம் I தொடர்பான தகவற் பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.6.3.1** :

- முந்திய நாள் முன்வைத்த முஸ்லிம் ஆட்சிப் பரவல டைந்தமையைக் காட்டும் படத்தினை வகுப்பில் காட்சிப் படுத்தவும். பின்வரும் வினாக்களை மாணவர்களுக்கு முன்வைக்கவும்.
  1. படத்தின் படி முஸ்லிம் ஆட்சி பரவலடைந்த பிரதேசங்கள் எவை?
  2. இந்தியாவின் பிரதேசங்கள் அதில் உள்ளடக் கப்பட்டுள்ளனவா?

  இவ்வினாக்களுக்கு மாணவர்களிடமிருந்து கிடைக்கும் விடையை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையா டலைக் கட்டி எழுப்பவும். அதில் வடமேல், மேற்கு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிப் பரவிய விதம் தொடர் பாக படிப்படியாக முன்வைத்து தெளிவுபடுத்தவும். அக்கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரவும்.

- கி.பி 632 முஹம்மத் நபியவர்களின் மரணத்தின் பின்பு ஆட்சிப் பரவல் கலீபாக்களுக்கு பொறுப்பாயிருந்தமை.
- இக்காலமாகும் போது முஸ்லிம் ஆட்சி இந்தியாவுக்குப் பரவலடையாவிட்டாலும் கூட, அரேபியர் இந்தியாவின் மேற்குக் கரையோர பிரதேசங்களுடன் இணைந்ததாக வர்த்தக நடவடிக்கைகளிலீடுபட்டமை.
- அரேபியர் இஸ்லாம் சமயத்தைத் தழுவியதால் முஸ்லிம்களது சமய, அரசியல் நடவடிக்கைகளின் ஒழுங்கமைப்பு கலீபாக்களின் கீழ் இடம்பெற்றதால் அந்நடவடிக்கைகளை ஒழுங்கு முறையாக ஆரம்பித்தமை.
- மேற்கு, வடமேல் இந்தியாவில் அக்காலத்தில் இடம் பெற்ற உள்நாட்டு இராசதானியில் காணப்பட்ட பெருஞ் சொத்துக்கள், வியாபார நடவடிக்கைகளின் முக்கியத்துவம் தொடர்பாக அரேபியரிடத்தில் புதியதோர் ஊக்கம் காணப்பட்டமை.
- இதனால் அரேபியர் மேற்கிந்திய கரையோரங்களைத் தம்வசமாக்கிக் கொண்டமை.
- கி.பி 700 இன் பிறகு இது அரசியல் வடிவம் பெற்றமை.
- ஈராக்கின் ஆளுனரான அரேபிய இனத்தவரான ஹஜ்ஜாஜ் - சிந்துப் பிரதேசத்தின் தாஹிரிற்கு எதிரான ஆக்கிரமிப்பினை மேற்கொண்டு இரண்டு தடவைகளும் தோல்வியுற்றமை.
- கி.பி 711 இன் இறுதியில் முஹம்மத் பின் காஸிம் என்பவரின் தலைமையில் சிந்துப் பிரதேசத்தைக் கைப்பற்றி வெற்றியீட்டியமை.
- கி.பி 713 ஆகும் போது முல்தான் வரையிலான பிரதேசங்கள் அரேபிய ஆட்சிக்குள்ளாகியமை.
- 150 வருடங்கள் இப்பிரதேசங்களில் அரேபிய ஆட்சி இடம் பெற்றமை.
- மேற்கிந்தியா அரேபிய ஆட்சிக்குட்பட்டிருந்த போதிலும் வட இந்தியா சிறிய இந்து இராச்சியங்கள் பலவற்றைக் கொண்டிருந்தமை.
- இவ்வாட்சிகளுக்கிடையே ஒற்றுமையின்மை காணப்பட்டமை.
- பத்தாம் நூற்றாண்டின் இறுதியாகும்போது இந்தியாவின் வடமேற்கு பக்கத்தில் ஆப்கானிஸ்தானில் துருக்கி முஸ்லிம்கள் சுயாட்சியைக் கொண்டு சென்றமை.
- கஜ்னி பிரதேசததில் சுயாதீன முஸ்லிம் ஆட்சி இடம் பெற்றமை.
- அதன் ஆட்சியாளர் கபுக்னிஜின் வடமேல் கணவாயூடாக இந்தியாவைக் கைப்பற்றி ஹிந்துஷா ஆட்சியைப் பரவலிற்கான தேவையான நடவடிக்கைகள் எடுத்தமை.
- இதன் படி கி.பி 998 முதல் 1030 வரை 17 தடவைகள் கஜ்னி மஹ்முத் இந்தியாவை ஆக்கிரமித்தமை.

- மஹ்மூத், கஜ்னியில் ஆட்சி வீழ்ச்சியடைந்த போதிலும் இந்து, முல்தான் பஞ்சாப் பிரதேசங்கள் முஸ்லிம் ஆட்சியின் கீழ் இருந்தமை.
- மஹ்மூத் மரணத்தின் பின் பஞ்சாபியைத் தவிர மேற்கிந்தியா 3 முஸ்லிம் ஆட்சிப் பிரதேசங்களாகவும் வட இந்தியா 6 இந்து ஆட்சிப் பிரதேசங்களாகவும் பிரிந்தமை.
- கஜ்னிய ஆட்சி 1151 ல் கோரிய முஸ்லிம் ஆட்சியின் கீழ் வந்தமை.
- 1173 இல் கஜ்னிய ஆட்சியாளராக கோரிய பிரதேச முஹம்மதை நியமித்தமை.
- 1192 இல் தராவினில் இடம் பெற்ற சண்டையின் பின் அரச புதல்வர்களைத் தோற்கடித்து அப்பிரதேசத்தைக் கைப்பற்றி அதன் நிருவாகத்தினை குதுபுத்தீன் அய்பெக் எனும் படைத்தளபதியிடம் ஒப்படைத்தமை.
- 1193 இல் கஹடவால ஆட்சியைக் கைப்பற்றி கதௌஜ் பிரதேசத்தை கைப்பற்றியமை.
- முஹம்மத்தின் மற்றுமொரு தளபதியாக பக்தியர் கல்ஜி அவுத், வட பீகார், வங்காளம் ஆகியவற்றைக் கைப்பற்றி கிழக்கிந்தியாவையும் கோரிய பிரதேச முஹம்மத் என்பவரின் கீழ் உள்ளடக்கியமை.
- கோரி முஹம்மத், குதுபுத்தீன் அய்பெக் வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் நிரந்தர முஸ்லிம் ஆட்சியைக் கட்டியெழுப்ப அடிப்படைகளை உருவாக்கியமை

(15 நிமிடங்கள்)

படி 10.6.3.2 :

- மாணவர்களைப் பொருத்தமான வித்தில் குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு செயற்படிவம், பகிர்ந்தளிக்கவும்.
- செயற்படிவத்தின் படி தத்தமக்கு ஒப்படைக்கும் தகவல் பத்திரத்தைச் செய்வதற்கு பாடநூலிலிருந்து தகவல்களைப் பெற மாணவர்களுக்குக் கூறவும்.
- செயன்முறையிலீடுபடும் போது அனைத்துக் குழுவினரையும் மதிப்பீடு செய்யவும் அதற்காகப் புள்ளி வழங்கவும்.
- குழுவிலுள்ள அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்பதை அறிவுறுத்தவும்.

(25 நிமிடங்கள்)

படி 10.6.3.3 :

- செயற்பாட்டு முடிவில் ஒவ்வொரு குழுவினருக்கும் தத்தமது ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்க சந்தர்ப் பம் வழங்குக.
- அதன் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி பின்னூட்டல் மூலம் மீட்டாய்வு செய்யவும்.
- தகவற் படிவங்களில் அடங்கியுள்ள விடயங்களினை எல்லா மாணவர்களும் குறித்துக் கொள்ளமாறு ஆலோசனை வழங்கவும்.
- மீட்டாய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரும் வித்தில் கலந்துரையாடவும்.

- முஹம்மத் நபியவர்களின் மரணத்தின் பின் கலீபாக்க ளின் கீழ் இஸ்லாம் சமயமும் முஸலிம் ஆட்சிப் பரவலும் ஒழுங்குபடுத்தப்பட்டமை.
- ஆரம்பகாலத்திலிருந்து இந்தியாவுக்கு முஸ்லிம் ஆட்சி பரவலடையாவிடினும் அரேபியர் இந்தியாவின் மேற்கு கரையோரப் பிரதேசங்களுடன் சமாதானமாக வர்த்தக நடவடிக்கைகளிலீடுபட்டமை.
- அரசியல் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதாக பின் பற்றியும் கலீபாக்களின் சமய, ஆட்சி ஒழுங்கமைப் பினாலும் இந்தியாவுடனான அரேபிய உறவு அரசியல் வடிவம் பெற்றமை.
- இந்தியாவின் மேற்கு கரையோரப் பிரதேசங்களில் சொத்துக்களினை பறிமுதல் செய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்கள் கி.பி 711 ஆகும் போது முஹம்மத் பின் காஸிம் என்பவரின் கீழ் சிந்து. முல்தான் வரை அரேபிய ஆட்சி பரவலடைந்து வளர்ச்சியடைந்தது.
- வட இந்தியாவின் இந்து இராச்சியங்கள் பல பிரிந்தி ருந்த போதிலும் அவர்களிடையில் ஒற்றுமையின்மை காரணமாக அப்பிரதேசங்கள் முஸ்லிம் ஆதிக்கத் துக்குட்படக் காரணமாயிருந்தமை.
- கஜ்னி சுல்தான் என்பவரின் கீழ் வடமேற்கு, மேற்கு இந்தியாவின் முஸ்லிம் ஆட்சிக்கு அடித்தளமிட்டமை.

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- இஸ்லாம் மார்க்கத்தின் ஆரம்பம், முஸ்லிம் ஆட்சியின் பரவல் தொடர்பாக தகவல்களை முன்வைப்பார்.
- இஸ்லாம் மார்க்கத்தினதும் முஸ்லிம் ஆட்சியினதும் துரித வளர்ச்சிக்காக முஹம்மத் நபியவர்களது போதனைகளின் படி கலீபாக்கள் மேற்கொண்ட ஒழுங்க மைப்பு, அர்ப்பணிப்பு என்பவற்றை மதிப்பிடுவார்.
- மேற்கு, வடமேற்கு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவல் தொடர்பான தகவல் பத்திரங்களை தயாரிப்பார்.
- இஸ்லாம் சமயம், ஆட்சிப்பரவலடைந்த பிரதேசங்க ளைக் காட்டும் படமொன்றினைத் தயாரிப்பார்.
- சரியான தகவல்களைக் கோவைப்படுத்தி முன்வைக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- வேறு மூலாதார நூல்களைக் கையாண்டு இஸ்லாம் மார்க்கம் முஸ்லிம் ஆட்சி பரவலடைந்த விதம் பற்றிய தகவல்களைத் தேட தூண்டப்படுவார்.

## செயற்பத்திரம் I

மேற்கு இந்தியாவின் அரேபிய ஆட்சி பரவலடைந்தது தொடர்பான விபரங்களை உள்ளடங்கியதாக தகவல் பத்திரமொன்றினை உருவாக்குவதே உமது குழுவிற்கு வழங்கப்படும் கருமமாகும்.

மேற்கு இந்தியாவின் அரேபிய ஆட்சி பரவலடைந்த பிரதேசங்களைக் காட்டும் படமொன்றினைத் தயாரித்து தகவற் பத்திரமொன்றினை இணைக்கவும்.

மேற்கு இந்தியா அரேபிய ஆட்சி பரவல் தொடர்பாக தகவல் படிவத்தினை தயாரிப்பதற்கான பின்வரும் விபரங்களை சிறப்பாகக் கற்று தகவல்களைப் பெறவும். இதற்காக பாடநூலினை பயன்படுத்துவதுடன் பிரச்சினைகளின் போது ஆசிரியர் துணையை நாடவும்.

### மேற்கு இந்தியாவின் அரேபிய ஆட்சிப்பரவல்

- கி.பி 632 இல் முஹம்மத் நபியவர்களது மரணத்தின் பின் இஸ்லாம் மார்க்கத்தினதும் முஸ்லிம் ஆட்சியாளரினதும் பரவல் கலீபாக்களின் வசமானது.
- அப்போது இந்திய பிரதேசங்களில் முஸ்லிம் ஆட்சி பரவலடையாவிடினும் வர்த்தகத்திற்காக அராபியர் இந்தியாவின் மேற்குக் கரையோரப் பிரதேசங்களுக்கு வருகை தந்திருந்தனர்.

அரேபியர் இஸ்லாத்தை தழுவியமை, கலீபாக்களினால் முஸ்லிம்களது சமய, அரசியல் நடவடிக்கைக்காக ஒழுங்குபடுத்தப்பட்டமையும் இந்தியாவின் இடம் பெற்ற அரேபிய தொடர்பு வேறுபடலாயிற்று.

இதன் படி கி.பி 636 இலிருந்து பல தடவைகள் இந்தியாவின் மேற்கு கரையோரப் பிரதேசங்கள் அரேபியரினால் கொள்ளையிடப்பட்டன. எனினும் அப்பிரதேசங்கள் கைப்பற்றப்படவில்லை.

எனினும் கி.பி 700 இன் பிறகு மேற்கு இந்தியாவிற்குரிய தாக்குதல்களை அரேபிய அரசியல் அச்சுறுத்தல் வடிவினைப் பெற்றது.

இதே வேளை ஈராக் பிரதேச ஆளுனர் ஹஜ்ஜாஜ் தாஹிருக்கு எதிராக சிந்துப் பிரதேசத்தை அக்கிரமித்தமை. எனினும் முதலாம் இரண்டாம் தடவைகளில் சிந்துப் பிரதேச ஆக்கிரமிப்பு வெற்றி கொள்ளப்படவில்லை.

எனிலும் கி.பி 711 இறுதியாகும் போது ஹஜ்ஜாஜ் அவரது மகன் முகம்மத் இப்னு காஸிம் தலைமையின் கீழ் சிந்துப் பிரதேசதிதிற்கு பெரும் படையனுப்பி தாஹிரை தோற்கடித்து கைப்பற்றியமை.

கி.பி 713 இல் இவர் முல்தானையும் கைப்பற்றியமை.

இவர் இவ்வாறு மேற்கு இந்தியாவை மிக இலகுவாக ஆக்கிரமித்துக் கொண்டார். இதற்குப் பல காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன.

1. அப்பிரதேசங்களில் வாழ்ந்த உள்நாட்டு மக்கள் பௌத்தம், இந்து என்ற வகையில் பிரிந்திருந்தமை.
2. தாஹிர் மன்னனது திறமையற்ற செயற்பாடுகள்.
3. அப்பிரதேசங்களில் பாதிப்புற்ற சிறுபான்மையினரின் ஒத்துழைப்பு பின் காஸிமுக்கு கிடைத்தமை
4. உள்நாட்டு மக்கள் மூடக் கொள்கைகளில் நம்பிக்கை வைத்து யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடாமை.
5. அரேபியர் திறமையாகப் போர் செய்யப்பழக்கப்பட்டிருந்தமை.

இத்தகைய காரணங்களால் இந்தியாவின் சிந்து, முல்தான் ஆகிய பிரதேசங்கள் கி.பி 715 ஆகும் போது அரேபியர் கைவசமானது.

## செயற்பத்திரம் I க்கான தகவற் பத்திரம்

கீழ்வரும் தலைப்பின் கீழ் விடயங்களை உள்ளடக்கி மேற்கிந்தியாவில் அரேபியாட்சி பரவிய விதம் தொடர்பாக தகவற் பத்திரத்தைத் தயாரிக்கவும்.

1. மேற்கிந்தியாவுடன் இடம்பெற்ற ஆரம்ப அரேபியர் தொடர்புகளின் இயல்புகள்.
2. ஆரம்ப அரேபிய தொடர்புகளின் இயல்புகள் வேறுபடக் காரணங்கள்.
3. கி.பி 636 - 700 வரை இந்தியாவில் மேற்குக் கரையோரத் தாக்குதலை அரேபியர் ஆக்கிரமித்தமைக்கான நோக்கங்கள்.
4. கி.பி 700 இன் பிறகு மேற்கிந்தியாவைக் கைப்பற்றிய அரேபிய ஆட்சியமைத்தல்.
5. அரேபிய ஆட்சியாளர் கைப்பற்றிய பிரதேசங்களும் தோல்வியடைந்த உள்நாட்டு ஆட்சியாளர்களும்
6. மேற்கிந்தியாவை இலகுவில் அரேபியர் தம் ஆதிகாரத்துக்குள் கொண்டு வர செல்வாக்குச் செலுத்திய காரணிகள்.

மேற்கிந்தியாவில் அரேபிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களைக் காட்டும் படமொன்றினை அமைத்து இப்பத்திரத்துடன் இணைத்து விடவும்.

## செயற்பத்திரம் II

- கஜ்னி ஆட்சியில் இநதியாவில் முஸ்லிம்கள் ஆட்சிப்பரவல் தொடர்பாக தகவல் பத்திரங்களை ஆக்குவதே உமக்கு வழங்கப்படும் கருமமாகும்.
- தகவல் பத்திரத்துடன் கஜ்னி ஆட்சியின் கீழ் முஸ்லிம் ஆட்சி பரவிய பிரதேசங்களைக் காட்டும் படமொன்றினையும் இணைத்து முன்வைக்கவும்.
- தகவற் பத்திரத்துக்காக மாதிரியொன்று இத்துடன் வழங்கப்படுகின்றது. இதில் காணப்படும் தலைப்புகளின் கீழ் விடயங்களை தொகுத்து தகவற்பத்திரத்தினை செய்யவும்.
- பின்வரும் விபரங்களை நன்றாக கற்று தகவற்பத்திரத்தில் விடயங்களைத் தொகுக்கவும் இதற்காகப் பாடநூல்களைத் துணையாக்கிக் கொள்ளவும்.

### கஜ்னி ஆட்சியின் கீழ் இந்தியாவின் முஸ்லிம் ஆட்சிப்பரவல்

மேற்கிந்தியா அரேபிய ஆட்சிக்குட்படினும் கி.பி 10ம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் சிறு இந்து இராச்சியங்கள் பலவறாக பிரிந்திருந்தன.

இந்துகுஷ் மலையடிவாரப் பிரதேசத்தில் இந்துஷார் ஆட்சி இடம் பெற்றது. அதன் ஆட்சியாளர் ஜயபாலன்.

இந்துஷாஹ் ஆட்சிக்கு கிழக்காக லோஹர வம்சத்திற்கு உரிய அரசர்கள் ஆட்சி செய்த காஷ்மீர் அமைந்திருந்தது.

கதௌஜ் நகரை மையமாகக் கொண்ட ஆட்சியில் திருலோச்சனபாலன் ஆட்சியாளனாக இருந்தமை.

ஆற்றங்கரையின் கீழமைந்த பகுதி பாலனின் ஆட்சியாகியது.

இதற்கப்பால் குஜராத்தில் சாலுக்கிய இராசதானியும் புந்தெல்காந்தியில் சந்தெல்லா ஆட்சியும் மல்வாயரீவில மரமார ஆட்சியும் இருந்தது. சந்தெல்லாவுக்கு தெற்கே கலசிசூரி ஆட்சியும் இருந்தது. ராஜ பட்டானா பிரதேசத்தில் சாமானியர்களும் கஹ்தாவபாலுனர்களும் தொமரர்களும் சிற்றரசுகளை அமைத்திருந்தமை. இவ்வாறு வட இந்தியாவில் சிறிய இந்து இராச்சியங்கள் பல பிரிந்தமைந்திருந்தமையுடன் அவற்றுக்கிடையே ஒற்றுமையின்மையும் காணப்பட்டது.

10ஆம் நூற்றாண்டு இறுதியாகும் போது முஸ்லிம் ஆட்சியாளர்களும் கலீபாக்களின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இடத்துக்கிடம் சுயாதீன முஸ்லிம் ஆட்சியை அமைத்துக் கொண்டனர். இதன் பிரகாரம் துருக்கிய முஸ்லிம்களது ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவுக்கு வடமேற்கே அமைந்திருந்த ஆப்கானிஸ்தானின் கஜ்னி பிரதேசத்தில் சுயாதீன முஸ்லிம் ஆட்சியை அமைத்திருந்தது. அலிப்ஜிதீன் அதன் முதலாம் ஆட்சியாளராவார். அவரைத் தொடர்ந்து கஜ்னிய ஆட்சியாளரான சபுக்திஜீன் நாகூரில் அமையப் பெற்ற இந்துஷா ஆட்சியினுடன் மோதியதால் கி.பி 990 ஆகும் போது வட பஞ்சாப் வம்கான், பெஷாவர் ஆகிய பிரதேசங்களைக் கஜ்னிய ஆட்சிக்குட்படுத்திக் கொண்டனர்.

சபுக்திஜீனின் பிறகு கஸ்னியின் பலம் பொருந்திய ஆட்சியாளராக மஹ்மூத் அரசனானமை.

கி.பி 998 முதல் 1030 வரை ஆட்சி புரிந்த கஸ்னி மஹ்மூத் அக்காலத்தில் 17 தடவைகள் இந்தியாவை ஆக்கிரமித்துள்ளார்.

அவர் பின்வரும் இடங்களில் தாக்குதல்கள் மேற்கொண்டார்.

1. கி.பி 999 இல் வடமேல் எல்லையில் அமைந்த இந்துஷா - கோட்டை
2. 1001 இல் வைஹிந்த, பெஷாவர்
3. 1004 இல் ஹனியா
4. 1006 இல் முல்தான்
5. 1007 இல் நஷஷாஷா
6. 1008 இல் நாகர்கோட்
7. 1009 இல் நகீரன்
8. 1010 இல் முல்தான்
9. 1013 இல் நின்துன்
10. 1014 இல் தனேஸ்வர
11. 1015 இல் லோகோன்
12. 1018 இல் மதுரை, கதெளஜ்
13. 1021 இல் றஹீப்
14. 1022 இல் லாஹர்
15. 1023 இல் கவாலியர், கலிஞ்சாப்
16. 1025 இல் சோமனாத்
17. 1026 இல் சாட் கோத்திரத்தினர்.

- கஸ்னி மஹ்மூத் தனதாட்சியை மத்திய மற்றும் மேற்காசியாவுக்குப் பரப்பினார்.
- ஆயினும் மஹ்மூத் மரணத்தின் போது சிந்து, முல்தான் என்பவற்றுக்கு மேலதிகமாக பஞ்சாபிலும் முஸ்லிம் ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருந்தது.
- மஹ்மூதின் செயற்பாடுகளின் காரணமாக இந்தியாவின் செழிப்பும் வனப்பும் அடியோடு அழிக்கப்பட்டதாக வரலாற்றாசிரியர் அல்பிரூனி குறிப்பிடுகிறார்.
- மஹ்மூதின் மரணத்தின் பின் கஸ்னி ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

## செயற்பத்திரம் II க்கான தகவற் பத்திரம்

### கஸ்னி ஆட்சியில் முஸ்லிம் ஆட்சி பரவிய விதம்

கீழ்வரும் தலைப்பின் கீழ் விடயங்களை தொகுத்து கஸ்னி ஆட்சியில் முஸ்லிம் ஆட்சி பரவிய விதம் தொடர்பாக தகவற் பத்திரத்தை தயாரிக்கவும்.

1. கஸ்னி ஆட்சி ஆரம்பிப்பதற்கு முன் 10 ஆம் நூற்றாண்டாகும் போது வட இந்தியா அரசியல் ரீதியாகப் பிளவுபட்டிருந்தமையைத் தெளிவுபடுத்துக.
2. கஸ்னி ஆட்சியில் முஸ்லிம் ஆட்சிப்பரவச் செய்த அரசர்கள், பிரதேசங்களைப் பெயரிடுக.
3. கஸ்னி மஹ்மூத் இந்தியாவில் கடைப்பிடித்த கொள்கையை சுருக்கமாக விளக்குக.
4. கஸ்னி மஹ்மூதின் செயற்பாடுகள் காரணமாக இந்தியாவுக்கு ஏற்பட்ட தாக்கங்களை விபரிக்குக.
5. கஸ்னி ஆட்சியின் கீழ் முஸ்லிம் ஆட்சி பரவலடைந்தமையைக் காட்டும் படம் ஒன்றினைத் தயாரிக்கவும்.

## செயற்பத்திரம் III

- கோரிய முகம்மத் கீழான இந்தியா முஸ்லிம் ஆட்சிப் பரவல் தொடர்பான தகவல் பத்திரம் உருவாக்குவதே உமது குழுவினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணியாகும்.
- இத்தகவல் பத்திரத்துடன் அவருடைய ஆட்சி பரலினைக் காட்டும் படமொன்றினையும் இணைத்து முன்வைக்கவும்.
- தகவற் பத்திரத்துக்காக மாதிரியொன்று உமக்கு வழங்கப்படுகின்றது. அதில் காணப்படும் தலைப்புகளின் கீழ் விடயங்களைத் தொகுத்து தகவற்பத்திரத்தினைத் தயாரிக்கவும்.
- பின்வரும் விபரங்களை நன்றாகக் கற்று தகவற்பத்திரத்தினைத் தயாரிக்கவும். இதற்காக பாடநூல்களைப் பயன்படுத்தவும்.

### கோரி முகம்மதின் கீழ் இந்தியா முஸ்லிம் ஆட்சிப்பரவல்

மஹ்மூத் பின் கஸ்னிய ஆட்சி வீழ்ச்சியடைந்தாலும் பஞ்சாப், முல்தான், மேற்கு இந்தியாவிலும் முஸ்லிம் ஆட்சி காணப்பட்டது.

மேற்கு இந்தியாவில் சக்திமிக்க ராஸ்புத் இராச்சியம் குஜராத்தில் சாலுக்கிய ஆட்சியாகும்.

ராஸ்புத் ராசதானிகளில் கதௌஜ்னை தலைநகரமாகக் கொண்ட கஹடவால இராச்சியம் சக்திமிக்க இராச்சியமாகும். அதற்கு தெற்காக சந்தெல்லா, கல்ச்சூர் இராசதானிகள் காணப்பட்டன. சந்தெல்லா, சாலுக்கிய இராசதானிகளுக்கிடையே பரமார இராசதானி. காணப்பட்டது.

வங்காளத்தில் ஒரிஸ்ஜா பிரதேசத்தில் பாலி ஆட்சி காணப்பட்டது.

இவ்விராசதானிகளிடையே ஒற்றுமையின்மை காணப்பட்டதுடன், ஒருவருக்கொருவர் போராட்டங்களை நடாத்தி பலவீனமான நிலைமை காணப்பட்டது.

கஸ்னி மஹ்மூத் என்பவரது மரணத்தின் 130 வருடங்கள் கழிந்ததன் பின் கஸ்னிய இராச்சியம் கி.பி 1151 இல் கோரிய பிரதேச முஸ்லிம் ஆட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டது. 1173 இல் கஸ்னிய ஆட்சி நிருவாகம் முஹம்மதுக்கு ஒப்படைக்கப்பட்டது.

கஸ்னி ஆட்சிக்கு ஆரம்பத்தில் கட்டுப்பட்டிருந்ததன் பிறகு சுயாதீன வடமேல், மேற்கு இந்தியா முஸ்லிம் ஆட்சிகளுக்கிடையில் மேற்கு, வட இந்தியாவில் சுயாதீனமாகக் காணப்பட்ட இந்து இராச்சியங்களினை மீண்டும் கஸ்னிய நிர்வாகத்திற்குக் கீழ் கொண்டு வருவதே கோரி முகம்மத்தின் நோக்கமாக இருந்தது.

இதன் படி அவர் முதலாவதாக போலான் கணவாயூடாக வட இந்தியாவுக்குப் படையெடுத்து முல்தான் ஆட்சியைக் கைப்பற்றினார். அதன் பிறகு சிந்துவையும் கைப்பற்றினார். 1171 இல் பெஷாவரினையும் 1181 இல் லாஹூரினையும் கைப்பற்றினார். 1192 இல் பஞ்சாபினையும் கைப்பற்றினார்.

சிந்து, முல்தான், பஞ்சாப் ஆகிய முஸ்லிம் ஆட்சிப் பிரதேசங்களை இவ்வாறு மீண்டும் கஸ்னிக்கு கீழ் கைப்பற்றிய முஹம்மத் அடுத்து வட இந்தியாவின் இந்து இராச்சியங்களைக் கைப்பற்றுவதில் கவனஞ் செலுத்தினர்.

இதற்காக இந்தியாவிற்குள் பிரவேசிக்கும் பாதைகளைப் பாதுகாப்பதற்காக கைபர் கணவாய் பிரதேசத்தில் சிர்ஹிந்து பிரதேசத்தில் கோட்டை அமைத்தல்.

இந்தியாவை ஆக்கிரமித்த கோரி முகம்மத் சௌஹான் ஆட்சியுடன் யுத்தம் செய்தார். தில்லிக்கு அண்மையில அமைந்த பாளிப்பித்து சமவெளியில் தராயின் எனுமிடத்தல் கடும் சண்டை இடம் பெற்றது.

அதில் முகம்மத் மிக மோசமாகத் தோல்வியடைந்தார். வெற்றியினால் இந்துக்களிடையே மீண்டும் ஒற்றுமையின்மை தோன்றியதால் அதனைப் பயனபடுத்திய முகம்மத் மீண்டும் 1192 இல் இந்தியாவை ஆக்கிரமித்தார். தராயினில் நடைபெற்ற இச்சண்டையில் முகம்மதுக்கு வெற்றி கிடைத்தது. யுத்தத்தில் ராஜ்புத் மிகவும் அழிவுக்குட்பட்டது. இந்து கோவில்களினை அழித்து முகம்மத் இஸ்லாம் சமயத்தை அப்பிரதேசங்களில் மார்க்கமாக்கி, முஸ்லிம் அரண்களை அமைத்து அப்பிதேச நிருவாகத்தினை குதுபுத்தீன் அய்பெக்கிடம் ஒப்படைத்தார்.

திறமைமிக்க தளபதி குதுபுத்தீன் அய்பெக் மேலும் முஸ்லிம் ஆட்சியினைப் பரப்ப தில்லியில் இருந்த தோமரியர்களைத் தோற்கடித்து தனது மத்திய நிலையமாக தில்லியைத் தெரிவு செய்து கொண்டார்.

1193 இல் முகம்மத் மீண்டும் இந்தியாவைக் கைப்பற்றி கதௌஜ் ராஜ்புத்தையும் தோல்வியடையச் செய்து பரணடுகர வரையும் ஆட்சியைப் பரப்பினார்.

இதற்கிடையே முகம்மதின் மற்றுமொரு படைத்தளபதியான பக்தியார் கஸ்ஜி அவுத், வட பிகார், வங்காளம் ஆகிய பிரதேசங்கனைக் கைப்பற்றி கிழக்கிந்தியாவை முகம்மதின் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்.

இதன்படி கோரி முகம்மத்தின் கீழ் வடக்கு, கிழக்கு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை ஸ்திரப்படுத்தி பிற்பட்ட காலப்பகுதியில் முஸ்லிம் பேரரசு உருவாகுவதற்கு ஆரம்பித்தாகக் கருதப்படுகிறது.

## செயற்பத்திரம் III க்கான தகவற் பத்திரம்

### கோரிய முகம்மத் என்பவரின் கீழான முஸ்லிம் ஆட்சி பரவிய விதம்

கீழ்வரும் தலைப்பின் கீழ் விடயங்களை தொகுத்து கோரி முகம்மதின் கீழ் முஸ்லிம் ஆட்சி இந்தியாவில் பரவிய விதம் தொடர்பாக தகவற் பத்திரத்தை தயாரிக்கவும்.

1. கோரி முகம்மத், கஸ்னிய ஆட்சியைக் கைப்பற்ற முன் வடக்கு, மற்றும் மேற்கிந்தியாவில் முஸ்லிம் ஆட்சி பரவலடைந்து பிரதேசங்கள், இந்து இராச்சியங்களில் இடம் பெற்ற நிலமைகளை சுருக்கமாக விபரிக்கவும்.
2. கோரி முகம்மத் கஸ்னி ஆட்சியைக் கைப்பற்றியதன் பின் முஸ்லிம் ஆட்சி பரவலடைந்த விதத்தினை ஒழுங்கு முறையாக விபரிக்குக.
3. இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நிலைபெற கோரி முகம்மத்திற்கு உதவிய நபர்களினைப் பெயரிடுக.
4. கோரிய முகம்மதின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் ஆட்சி பரவிய பிரதேசங்களைக் காட்டும் படத்தினைத் தயாரிக்கவும்

## செயற்பாடு 10.6.4

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார். |
| தேர்ச்சி மட்டம் | : | மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களைச் சேகரிப்பார். |
| செயற்பாடு | : | "பாமினிய அரசின் கீழ் தக்கணத்தில் முஸ்லிம் ஆட்சியும் விஜய நகர் ஆட்சியின் கீழ் தென்னிந்தியாவில் இந்து ஆட்சியும் வளர்ச்சியடைந்த விதத்தைக் கண்டறிவோம்" |
| காலம் | : | 80 நிமிடங்கள் |
| தர உள்ளீடுகள் | : | • இணைப்பு 1 முஹம்மத் பின் துக்ளக் உடைய ஆட்சிப் பரவலைக் காட்டும் படம்.<br>• இணைப்பு 2 - பாமினிய ஆட்சி பரவலைக் காட்டும் படம்.<br>• இணைப்பு 3 - விஜயநகர் பரவலைக் காட்டும் படம்.<br>• செய்ற்பத்திரம் I - (இணைப்பு 4)<br>• செயற்பத்திரம் II - (இணைப்பு 5) |
| கற்றல் கற்பித்தல் செயன்முறை படி 10.6.4.1 | : | • முகம்மத் பின் துக்ளக் ஆட்சிப் பரவலடைந்த விதத்தினைக் காட்டும் படத்தினை வகுப்பறையில் காட்சிப் படுத்தவும்.<br>• அப்படத்தின் படி தில்லி சுல்தானிய ஆட்சியில் இறுதியாகக் கொண்டு வரப்பட்ட பிரதேசங்கள் எவை என மாணவர்களிடம் வினாத் தொடுக்கவும். ஆட்சி பலவீனமடையும் போது முதலில் சுயாதீன ஆட்சியை எது கொண்டிருந்ததது என வினவி பாமினிய ஆட்சியில் விஜயநகர பேரரசின் ஆரம்பம் தொடர்பாக கலந்துரையாடலைக் கட்டியெழுப்பவும்.<br>• இக்கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வெளிக் கொணரவும். |

| |
|---|
| • பின் துக்ளகின் மோசமான வரிக் கொள்கையால் வெறுப்புற்ற முஸ்லிம் பிரிவுகள் 1347 இல் தௌலாதாபாத்தில் சுயாட்சியை அமைத்துக் கொண்டமை.<br>• ஆரம்ப ஆட்சியாளர் அலிபுத்தீன் பகமன் ஷா என்பது.<br>• ஆட்சித் தலைநகரை குல்தர்காவுக்கு மாற்றியமை.<br>• 1397 முதல் 1422 வரை ஆட்சிபுரிந்த் தாஜுத்தீன் பிரூஷ் ஷா பாமினிய அரசின் சிறந்தவர் என்பது |

- 1422-1435 வரை ஆட்சி புரிந்த ஆட்சியாளர் அகமட் ஷா தெலிங்களாவைக் கைப்பற்றி விஜய்நகரைத் தோற்கடித்தமை.
- தலைநகரினை மிகப் பாதுகாப்பான பிதார் நகருக்குக் கொண்டு சென்றமை.
- பாமிய அரசர்களில் பெரும்பாலானோர் விஜய நகர் பேரரசுடன் அடிக்கடிப் போராடியதால் இராசதானியினுள் ஆட்சியை நிலை நிறுத்த முடியாது வீழ்ச்சி கண்டமை
- பின் துக்ளக்கின் ஆட்சியிலிருந்து வேறாகிய முதலில் சுயாட்சியை வெளிப்படுத்திய பிரதேச ஆட்சி தென் இந்திய ஆட்சியாகும்.
- 1336-1576 வரை சுதந்திர இந்து இராச்சியமாக கிருஷ்ணா துங்கபத்திரா நதி பிரதேசங்களில் விஜய நகருள் ஆட்சி வளர்ச்சியடைந்தமை.
- சங்கம் ராஜவம்சத்தின் ஹரிஹரன் விஜயநகர் ஆட்சியில் முதலாம் அரசனாதல்.
- 1 ஆம் புத் ஆட்சி புரிந்த மதரா பிரதேசத்தை முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றியமை.
- உதயகிரி, பேந்துரு கொண்ட, முல்வாசி அரக மற்றும் துளு ஆகிய இராச்சியங்களைக் கைப்பற்றியமை.
- 1 ஆம் கிருஷ்ணா தேவலாயன் விஜயநகரின் பலமிக்க ஆட்சியாளனாவான்.
- 1 ஆம் கிருஷ்ண தேவராயன் கால பாமினிய ஆட்சியில் குல்பர்க் ராய்ட்டர் தெஹம்மதியையும் கைப்பற்றியமை.
- விஜய நகர். பாமினிய அரசுகளுக்கிடையே அடிக்கடி சண்டை இடம்பெற்றமை.
- தென்னிந்திய இந்து கலாசார முஸ்லிம் ஆட்சி காரணமாக அழியாமல் பாதுகாக்க விஜய நகர் மூலமாக இடம் பெற்ற பெரும் பணி.
- தெலுங்கு இலக்கியத்தில் வளர்ச்சி ஏற்பட்டமை.
- விஜய நகர் ஆட்சி இலங்கையுடன் தொடர்பு வைத்து இருந்தமை.

படி 10.6.4.2 :

செயற்பாட்டில் ஈடுபடல்

ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் :

- பொருத்தமான விதத்தில் மாணவர்களைக் குழுக்களாக்குக.
- செயற்பத்திரம் I, II ஐ வெவ்வேறாக குழுக்களுக்கு வழங்கவும்.
- செயற்பத்திரத்தின் படி தேவையான தகவல்களைப் பெற மூல நூல்களிலிருந்து தேடும் விதம் பற்றி மாணவர்களுக்குக் கூறவும்.
- பாட நூலின் மூலமாக தகவல்களைப் பெறமுடியும் எனக் கூறவும்.

- செயற்பாட்டில் ஈடுபடுகையில் குழு வேலையை மதிப்பீடு செய்க. அதற்குப் புள்ளிகளை வழங்கவும்.
- தேவையேற்படின் தனது ஒத்துழைப்பைப் பெறும் படி கூறவும்.

**படி 10.6.4.3**

- செயற்பாட்டின் இறுதியில் குழு ஆக்கங்களை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- அதன் குறை நிறைகளை சுட்டிக் காட்டி பின்னூட்டல் செய்து மீட்டாய்வு செய்யவும்.
- தகவற் பத்திரத்திலுள்ள தகவல்கள் எல்லா மாணவர் களாலும் அறிக்கைப்படுத்தப்படல் வேண்டும் என்க. மீட்டாய்வின் போது பின்வரும் அம்சங்கள் வெளிக் கொணரப்படல் வேண்டும்.

- வட இந்திய முஸ்லிம் பேரரசு நலிவுற்ற வேளை தக்கிணத்திலும் தென்னிந்தியப் பிரதேசங்களில் உள்ள அரசுகள் சுயாதீனமாக மாறியமை.
- தக்கணத்தில் பாமினி முஸ்லிம் ஆட்சியும் தென்னிந் திய விஜயநகர் (இந்து) ஆகிய இராச்சிமும் உருவாகியமை.
- பாமினி, விஜயநகர் ஆட்சிகளுக்கிடையே அடிக்கடி முரண்பாடுகள் தோன்றியமை.
- தென்னிந்தியாவுக்கு முஸ்லிம் ஆட்சி பரவாது பாதுகாக்க விஜயநகர் ஆட்சி துணை நின்றது.
- விஜய நகர் ஆட்சியின் போது இந்து மறுமலர்ச்சி ஏற்பட்டது.

**கணிப்பீட்டு மதிப்பட்டு நியதிகள் :**

- தக்கண பிரதேச முஸ்லிம்கள் ஆட்சி பரவிய விதம் பற்றி விவரிப்பார்.
- தென்னிந்தியாவுக்கு முஸ்லிம் ஆட்சி பரவலடையாது இந்து கலாசாரத்தைப் பாதுகாக்க விஜய நகர அரசர் கள் மேற்கொண்ட முயற்சிகளை மதிப்பிடுவார்.
- தக்கிணத்தின் முஸ்லிம்கள் ஆட்சிப்பரவல், தென்னிந் தியாவின் விஜயநகர பேரரசுப் பரவல் என்பவற்றைப் படத்தில் காட்டுவார்.
- மூல நூல்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்கப் பழக்கப்படுவார்.
- குழுவேலையின் போது தமது பங்களிப்பை உச்ச அளவில் பெற்றுக் கொடுக்கத் தூண்டப்படுவார்.

## இணைப்பு 1

### செயற்பத்திரம் II

- பாமினி அரசின் கீழ் தக்கிணத்தில் முஸ்லீம் ஆட்சிப்பரவல் எனும் தலைப்பில் தகவற் பத்திரமொன்றைத் தயாரிப்பது எமது குழுவிற்கான ஒப்படையாகும்.
- இதற்காக தரம் 10 பாடப்புத்தகம், ஏனைய மூலாதாரங்களில் தகவல்களைப் பெறவும்.
- தகவற் பத்திரத்தைத் தயாரிக்கும் போது பின்வரும் தலைப்புகளுக்கேற்ப கருத்துக்களை முன்வைக்கவும்.
    1. பாமினி அரசின் தோற்றம்
    2. பாமினி அரசின் முக்கியமான ஆட்சியாளர்களும் அவர்கள் முஸ்லிம் ஆட்சிப் பரவலுக்குச் செய்த பங்களிப்பும்
    3. பாமினி அரசின் ஆட்சி பரவிய பிரதேசங்கள்.
    4. பாமினி அரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்.
    5. பாமினி அரசின் ஆட்சிப்பரவலைக் காண்பிக்கும் தேசப்படமொன்றைத் தயாரித்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் உதவியைப் பெறவும்.

## இணைப்பு 2

### செயற்பத்திரம் II

- தென்னிந்தியாவில் இந்து சமய மறுமலர்ச்சிக்கு அடிப்படையான விஜயநகர் இராசதானியினது முக்கியத்துவம் எனும் தலைப்பில் தகவற் பத்திரம் தயாரிப்பதே உமது குழுவிற்கு வழங்கப் படும் கருமமாகும்.
- தகவற் பத்திரம் தயாரிக்கையில் பின்வரும் தலைப்புகளில் விடயங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும்.
    1. விஜயநகர் ஆட்சியின் ஆரம்பம் நிகழ்ந்த விதம்.
    2. விஜயநகர் அரசின் முக்கிய ஆட்சியாளர்கள், அவர்களது சேவைகள்.
    3. விஜயநகர்ப் பேரரசின் ஆட்சி பரவலடைந்த விதம்.
    4. விஜய நகர் இராச்சியப் பரவலினைக் காட்டும் படமொன்றினை அமைத்தல்.
    5. விஜயநகர் இராச்சிய வீழ்ச்சிக்கு செல்வாக்கு செலுத்திய காரணிகள்.
    6. தென்னிந்திய இந்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தல் தொடர்பாக விஜயநகர் இராசதானி யின் முக்கியத்துவம்.

தரம் 10 பாடநூல், ஏனைய மூல நூல்களிலிருந்தும் தகவல்கள் பெறுவதுடன், ஆசிரியரது ஒத்துழைப்பையும் தேவையேற்படின் பெறவும்.

## செயற்பாடு 10.6.5

**தேர்ச்சி** : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார்.

**தேர்ச்சி மட்டம்** : மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களைச் சேகரிப்பார்.

**செயற்பாடு** : "புத்த சமயமும் இந்து சமயமும் ஆசியாவில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை எனக் கண்டறிவோம்"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- தரம் 10 பாட நூல்
- வேறு மூலாதாரங்கள்
- இணைப்பு 1 செயற்பத்திரம் I
- இணைப்பு 2 - அன்கோர்வாட் வழிபாட்டுத்தலத்தைக் காட்டும் படம்
- மத்தியாசியாவின் பர்மா, சியம், கம்பூச்சியா, ஜாவா, சுமாத்திரா என்பவற்றைக் காட்டும் படம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.6.5.1** :

- இணைப்பு 2, 3 ஐ வகுப்பில் மாணவர்களுக்கு காட்சிப் படுத்தவும். கீழ்வரும் வினாக்களை முன் வைக்கவும்.
  - இணைப்பு 2 இல் உள்ள விகாரை யாது? அது எங்கு அமைந்துள்ளது?

  இவ்வினாக்களுக்கு விடையளிக்கும் போது தேசப்படத் தினூடாக அவற்றின் அமைவிடத்தையும் காட்டுக.
- அதன் பின்னர் பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் வகையில் கலந்துரையாடுக.

| |
|---|
| • ஆரம்பத்திலிருந்து இந்தியாவுக்கும், ஆசியாவின் ஏனைய நாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவு நிலவியமை.<br>• தரைவழிப் பட்டுப்பாதை வழியாக மத்தியாசிய பிரதேசங்களுக்கு பௌத்த, இந்து சமயங்கள் பரவியமை.<br>• இந்தியாவிற்கும் தென்மேல் ஆசிய நாடான ஆப்கானிஸ்தானுக்குமிடையில் நிலவிய உறவுகளினால் அங்கு புத்த சமயம் வளர்ச்சியடைந்தமை. |

- இஸ்லாம் பரவுவதற்கு முன்பு ஆப்கானிஸ்தானில் ஆயி ரக்கணக்கான பௌத்த, இந்து பக்தர்கள் காணப் பட்டமை.
- உலகில் உயரமான புத்தர் சிலையான பாமியன் சிலை ஆப்கானிஸ்தானில் இருப்பது இதற்கு சான்று ஆகும்.
- கி.பி 1 ஆம் நூற்றாண்டிலிருந்து 4 ம் தர்ம மாநாட்டின் பிறகு கணிஷ்க அரசன் மத்தியாசியாவுக்கு மகாயான பௌத்த சமயத்தைப் பரப்பியமை.
- ஹியுங்சியங் எனும் தேச சஞ்சாரியின் அறிக்கைப்படி சான்சானி, துர்பான், குச்ச, கெஸ்கார் ஆகிய இடங்கள் மகாயான மத்திய நிலையங்களாகக் காணப்பட்டமை.
- யார்கண்ட் கோட்டான் ஆகிய இடங்களும் மகாயான மத்திய நிலையங்களாக செயற்பட்டமை.
- விஷ்ணு, சிவ தெய்வ வழிபாடுகள், நாராயண, பிராமண வழிபாடுகள் தொடர்பாகவும் தகவல்களைப் பெறல்.
- சைவ சமயத் தெய்வங்கள் மத்தியாசியப் பிரதேசங் களில் புகழ் பெற்றிருந்தமை.
- தரைவழி பட்டுப்பாதை வழியாக சீனாவுக்கு புத்த சமயம் பரவியமை.
- கனிஷ்க அரசன் காலத்தில் சீனாவுக்கு மகாயான புத்த சமயம் பரவியதாக சீன மூலாதார நூல்களில் குறிப்பிடுகின்றமை.
- பாகியன், ஹியுப்சியெல், டிசிவ் ஆகிய சீனபிக்குகள் இந்தியாவின் நாலந்தா, விக்ரமசீலா ஆகிய கல்வி மத்திய நிலையங்களில் பௌத்த சமயத்தைக் கற்ப தற்கு வருகை தந்தமை.
- இலங்கையிலிருந்து சீனாவுக்கு பிக்குகள் சென்றமை பற்றி பாகியனது குறிப்புகளில் காணப்படுகின்றமை.
- பாகியன் பிக்கு அபயகிரி விகாரையிலிருந்து திரிபீட கத்தை மொழிபெயர்த்தமை.
- அசோக மன்னன் காலத்தில் தேரவாத பௌத்தம் பரவிய பர்மா பொற்பூமி எனும் பெயரால் அழைக்கப் பட்டமை.
- இந்து சமயச் செல்வாக்கினால் பௌத்த சமயம் இந்து சமய வழிபாட்டு முறைகளையும் பெற்றுக் கொண்டமை
- 1ம் விஜயபாகு ஆட்சி செய்த காலத்தில் பர்மாவிலி ருந்து பிக்குகள் இந்நாட்டுக்கு வருகை தந்து உபசம் பதா சடங்கினை நிறைவேற்றியமை.
- இலங்கையிலிருந்து பாளி திரிபிடகநூல் பர்மாவிற்குக் கொண்டு செல்லப்பட்டமை.
- பர்மாவில் பௌத்த செல்வாக்கு, தாய்லாந்திலும் தேரவாத சமயம் பரவியமை.
- கோட்டை 4ம் பராக்கிரமபாகு காலத்தில் தாய்லாந் துடன் பௌத்த சமய உறவு காணப்பட்டமை.

- கண்டி காலத்தில் தாய்லாந்தின் ஈட்சிவ் பிக்குவின் அறிக்கைப்படி தேரவாத பௌத்தம் புகழ்பெற்று எங்கும் காணப்பட்டமை.
- சுமாத்திராவில் முக்கிய பௌத்த மத்திய நிலையம் இருந்தமை.
- மத்திய ஜாவாவில் சிவதேவாலயங்களும் பௌத்த விகாரைகள் யாவும் காணப்படுகின்றமை.
- ஜாவாவில் பொரோபுதூப் விகாரை சிறந்த படைப் பாகும்.
- காம்பூச்சியாவில் அரச ஆதரவுடன் மகாயான பௌத்த மும் பிராமண சமயமும் பரவியமை.
- குன்றுகளில் தேவாலயம் கட்டுவது புகழ் பெற்றமை.
- கி.பி 12ம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட எடகோர்ட் வாட் வழிபாட்டுத்தளம் உலகின் பெரிய பௌத்த வழிபாட்டுத்தளமாகும்.
- காம்பூச்சியாவில் தேரவாத பௌத்தம் விருத்தியுற்ற தாக ஜானகால மாலினி ஆக்கத்தில் குறிப்பிடப்படுகிறது
- சைரூலந்திர அரச வம்சத்தின் கீழ் கம்பூச்சியாவில் இந்து சமயம் வளர்ச்சி பெற்றமை.

**படி 10.6.5.2 :**

- மாணவர்களைக் குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு செயற்பத்திரம் வழங்கவும்.
- செயற்பத்திரத்தின் தகவல்களைப் பெற பாடநூல், ஏனைய நூல்களைப் பயன்படுத்தி தகவற் பத்திரத்தை ஆக்கவும்.
- செயற்பாட்டிலீடுபடுகையில் எல்லாக் குழுக்களையும் கணிப்பிட்டு புள்ளி வழங்கவும்.
- தேவையேற்படின் தனது ஒத்துழைப்பை நாடுமாறு கூறிச் செயற்பாட்டு முடிவில் தமது ஆக்கங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கவும். அதன் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி பின்னூட்டல் செய்து மீட்டாய்வு செய்யவும்.
- அனைத்து மாணவர்களையும் தகவற் பத்திரம் தயாரிக் கும் படி ஆலோசனை வழங்கவும்.
- மீட்டாய்வின் போது பின்வரும் அம்சங்களை வெளிக் கொணரவும்.

- தரைமார்க்கப் பட்டுப்பாதை வழியாக மத்தியாசிய மற்றும் சீனாவுக்கு புத்த, இந்து சமயங்கள் பரவியமை.
- இந்தியா, ஆப்கானிஸ்தானுக்கிடையிலான உறவு மத்தியாசியாவில் புத்த சமயம் பரவ ஏதுவாகியமை.
- மத்தியாசியாவில் மகாயான, ஹீனயான பௌத்த மத்தியப் நிலையங்கள் காணப்பட்டமை.
- சைவ சமயத்துடன் தொடர்பான கடவுள்கள் மத்தியாசி யாவில் புகழ் பெற்றமை.

- கனிஷ்க மன்னன் காலத்தில் புத்த சமயம் மத்தியாசியாவில் பரவியமை.
- தரைமார்க்க பட்டுப்பாதை வழியாக சீனாவுக்கு புத்த சமயம் பரவியமை.
- பரகியன், ஹியுங்சியாங் பிக்குகள் இந்திய பௌத்த மத்திய நிலையங்களுடன் உறவுகளை வைத்து இருந்தமை.
- இலங்கை - சீனாவுக்கிடையில் பௌத்த சமயத் தொடர்புகள் காணப்பட்டமை.
- அசோக மன்னன் காலத்தில் பர்மாவுக்கு புத்த சமயம் பரவியமை.
- பர்மாவில் இந்து சமய வழிபாடுகளின் செல்வாக்கு காணப்படுகின்றமை.
- இலங்கைக்கும் பர்மாவுக்குமிடையே பௌத்த சமயத் தொடர்புகள் காணப்பட்டமை.
- பர்மாவிலிருந்து தாய்லாந்துக்கு புத்த சமயம் பரவியமை.
- இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையில் சமயத் தொடர்புகள் காணப்பட்டமை.
- ஜாவா சுமாத்தராவில் தேரவாத புத்த சமயம் காணப்பட்டமை.
- சைரூந்திய அரச வம்சத்தின் போது இந்து சமயம் புகழ் பெற்றமை.
- கம்பூச்சியாவில் அரச ஆதரவுடன் புத்த சமயம் புகழ் பெற்றமை.
- மத்தியாசியா மற்றும் தென்கீழ் ஆசியாவிலும் சீனாவிலும் கலாசார உருவாக்கலில் இந்து, பௌத்த சமயங்களது தாக்கம் வெகுவாகக் காணப்பட்டமை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- மத்தியாசியா, கிழக்காசியா, தென்கீழ் ஆசிய நாடுகளில் பௌத்த செல்வாக்கினை விபரிப்பார்.
- ஆசிய நாடுகளில் பௌத்த, இந்து சமயச் செல்வாக்கு பரவலில் அரச ஆதரவின் இருந்தமை பற்றி விளக்குவார்.
- ஆசியாவில் புராதன பௌத்த மத்திய நிலையங்களின் அமைவிடத்தை தேசப்படத்தில் குறித்துக்காட்டுவார்.
- மூல நூல்களைப் பயன்படுத்தி தகவல்களைச் சேகரிக்கப் பழகுவார்.
- தனியே தேடியறிந்த தகவல்களை அடுத்தவருக்கும் பகிர்த்தளிக்கத் தூண்டப்படுவார்.

## செயற்பத்திரம் I

மத்தியாசியாவில் பௌத்த, இந்து சமயங்கள் ஏற்படுத்திய செல்வாக்குகள் எனும் தலைப்பின் கீழ் தகவற்பத்திரத்தினைத் தயாரிப்பதே உமது குழுவிற்கு வழங்கப்படும் கருமமாகும். அதனைக் கீழ்வரும் தலைப்புகளில் தயாரிக்கவும்.

1. மத்தியாசியாவில் இந்து, பௌத்த சமயங்கள் பரவியமைக்குரிய காரணிகள்.
2. அச்சமயங்கள் பரவிய பிரதேசங்கள்.
3. முக்கியமான பௌத்த மத்திய நிலையங்களைக் காட்டும் படமொன்றினை அமைத்தல்.
4. முக்கியமான பௌத்த, இந்து சின்னங்கள், படங்களைச் சேகரித்தல்.

தரம் 10 பாடநூல், ஏனைய நூல்களைத் துணையாகக் கொள்ளவும்

## செயற்பத்திரம் II

"சீனாவிலும் பர்மாவிலும் பௌத்த, இந்து சமங்களின் பரவலால் ஏற்பட்ட விளைவுகள்" எனும் தலைப்பின் கீழ் தகவற் பத்திரம் ஒன்றை அமைப்பதே உமது குழுவினருக்கு வழங்கப்படும் காருமமாகும். அத்தகவல்களைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தவும்.

1. சீனாவிலும் பர்மாவிலும் பௌத்தத்தின் பரவலில் தாக்கம் செலுத்திய காரணிகள்.
2. சீனாவும் பர்மாவும் ஏனைய நாடுகளுடன் கொண்டிருந்த சமய உறவுகள்.
3. சீனா, பர்மாவின் முக்கிய பௌத்த தளங்கள்.
4. சீன, பர்மா நாடுகளது பௌத்த மத்திய தளங்களது அமைவிடத்தினைக் காட்டும் படத்தினை உருவாக்கல்.

## செயற்பத்திரம் III

தாய்லாந்து, ஜாவா, சுமாத்திரா மற்றும் கம்பூச்சியா நாடுகளில் புத்த சமயம், இந்து சமயம் என்பன ஏற்படுத்திய தாக்கங்கள் எனும் தலைப்பின் கீழ் தகவற் பத்திரத்தினை அமைப்பதே உமக்கு வழங்கப்படும் கருமமாகும். கீழ்வரும் தலைப்புகளில் விடயங்களைத் தொகுக்கவும்.

1. சீயம், ஜாவா, கம்பூச்சிய நாடுகளில் பௌத்த, இந்து சமயங்கள் பரவியமைக்கு ஏதுவாய மைந்த காரணிகள்.
2. தாய்லாந்து, ஜாவா, கம்பூச்சியா என்பன ஏனைய நாடுகளிடம் கொண்டிருந்த சமயத் தொடர்புகள்.
3. தாய்லாந்து, ஜாவா, கம்பூச்சிய நாடுகளின் முக்கியமான பௌத்த, இந்து சமயத் தளங்கள்.
4. தாய்லாந்து, ஜாவா, கம்பூச்சியாவின் முக்கிய பௌத்த, இந்து மத்திய நிலையங்களின் அமைவிடத்தைக் காட்டும் படத்தினைத் தயாரிப்பார்.
5. தாய்லாந்து, ஜாவா, கம்பூச்சியாவின் முக்கியமான பௌத்த, இந்து மத்திய நிலையங்களது படங்களின் சேகரிப்பிலான தொகுப்பு.

இணைப்பு



## செயற்பாடு 10.6.6

**தேர்ச்சி** : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார்

**தேர்ச்சி மட்டம்** : மத்தி கால ஆசிய நாடுகளிடையே நிலவிய தொடர்புகளை விசாரணை செய்வார்.

**செயற்பாடு** : "தென்கிழக்கு ஆசியாவிற்கும் இலங்கைக்குமிடையே நிலவிய தொடர்புகளைக் கண்டறிவோம்"

**காலம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- தரம் 10 பாட நூல்
- வேறு மூலாதாரங்கள்
- தென்கிழக்காசிய மற்றும் இலங்கையைக் காட்டும் தேசப்படம்
- இணைப்பு 1 செயற்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.6.6.1** :

- தென்கிழக்காசியாவின் தேசப்படத்தினை வகுப்பில் காட்சிப்படுத்தவும். அப்படத்திலுள்ள நாடுகள் எவை? என மாணவர்களிடம் வினவவும். புராதன கால இலங்கைக்கும் இந்நாடுகளுக்குமிடையே நிலவிய உறவுகள் தொடர்பாக வினாத்தொடுத்து தென் கீழ் ஆசியா மற்றும் இலங்கைக்கு இடையே நிலவிய உறவுகள் பற்றி கலந்துரையாடலைக் கட்டியெழுப்பவும்.
- இக்கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வெளிக் கொணரவும்.

| |
|---|
| • தென்கீழ் ஆசியாவிற்கும் இலங்கைக்கும் இடையே இடம்பெற்ற தொடர்புகள் வர்த்தகம், பௌத்த சமயத்தையடிப்படையாகக் கொண்டமைந்தமை.<br>• இலங்கையில் கி.பி. 6 ஆம் நூற்றாண்டாகும் போது பர்மா, தாய்லாந்து, ஜாவா, சுமாத்திரா ஆகிய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றதாக கொஸ்மஸ், ஹியுஹ்சாங், பாகியன் என்போரது அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றமை.<br>• மகா பராக்கிரமபாகு பர்மாவுடன் வியாபாரம் செய்தமை.<br>• கறுவா, யானை, மாணிக்கம் ஆகியன இலங்கையிலிருந்து இந்நாடுகளுக்கு அனுப்பிய அதேவேளை, நறு |

மணப் பொருட்கள் ஆடை என்வற்றை இலங்கைக்கு கொண்டு வந்தமை.

- இலங்கை தென்கிழக்காசிய நாடுகளுடன் சமய உறவு களைப் பேணியமை.
- பர்மா இலங்கையிலிருந்து திரிபிடக நூலைப் பெற்றமை.
- இலங்கையில் அமரபுர பீடத்தை அமைப்பதில் பர்மா வின் உதவியைப் பெற்றமை.
- 1ம் விஜயபாகு அரசன் பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா எனும் சடங்கை ஆரம்பித் தமை.
- இலங்கையில் உபசம்பதாவை ஆரம்பிக்க தாய்லாந் தில் இருந்து பிக்குகள் வரவழைக்கப்பட்டமை.
- இலங்கையில் தாய்லாந்து மகாபீடம் எனும் பௌத்த பீடத்தை அமைக்க தாய்லாந்தின் அனுசரணையைப் பெற்றமை.
- தாய்லாந்தில் லங்காவம்ச எனும் சிங்கள வம்ச பெயர் களால் பௌத்த பீடங்கள் இரண்டு காணப்பட்டமை.
- ஜாவாத் தீவில் கண்டுபிடிக்கப்பட்ட பௌத்த சிலைகளில் இலங்கையின் சாயல் காணப்படுகின்றமை.
- ஜாவா நாட்டின் ஏட்மு குறிப்பின் படி அபயகிரி விகாரையின் ஒரு கிளை அங்கு காணப்பட்டமை.

(10 நிமிடங்கள்)

## படி 10.6.6.2

- அனைத்து மாணவர்களுக்கும் செயற்பத்திரத்தினை பங்கிடவும். இதை எல்லா மாணவர்களும் தனித் தனியே செய்ய வேண்டுமென்பதை அறிவுறுத்தவும். செயற்பத்திரத்தின்படி தமக்கு வழங்கப்படும் கருமத்திற் காக பாடநூல், ஏனைய நூல்களிலிருந்து தகவல்க ளைப் பெற முடியும் எனக்கூறவும்.
- செயற்பாட்டின் போது தேவையேற்படும் எல்லா சந்தர்ப் பங்களிலும் தமது ஒத்துழைப்பைப் பெறமுடியும் எனக் கூறவும்.
- செயற்பாட்டின் இறுதியில் மாணவர்களிலிருந்து எழு மாற்றாக தெரிவு செய்த ஆக்கங்கள் சிலவற்றை வகுப்பில் முன்வைக்கவும்.
- அதன் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி பின்னூட்டல் செய்யவும். மீட்டாய்வின் போது பின்வரும் அம்சங் களை வெளிக்கொணரவும்.

- தென் கிழக்காசியாவிற்கும் இலங்கைக்குமிடையே இடம் பெற்ற உறவுகள் வர்த்தகம், சமயம் எனப் பாகுபடுத்தப்பட்டமை.
- இலங்கை, பர்மா, தாய்லாந்து, ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகள் உடன் வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெற்றமை.

- தாய்லாந்து, பர்மாவுடன் சமய உறவுகள் பரவலாக இடம்பெற்றமை.
- தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகள் இலங்கையுடன் சமய செயற்பாடுகளில் தொடர்புபட்டமை.
- இலங்கையின் கட்டிடக் கலையில் தென்கிழக்காசியாவின் தாக்கம் காணப்படுகின்றமை.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தென்கிழக்காசியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவிய உறவுகள் தொடர்பாக தகவல்களைச் சேகரிப்பார்.
- தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து பௌத்த சமயத்தின் மூலம் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பார்.
- இலங்கையுடன் தொடர்புகளை வைத்திருந்த தென் கிழக்காசிய நாடுகளைப் படத்தில் குறித்துக் காட்டுவார்.
- மூலாதார நூல்களிலிருந்து தகவல்களைப் பெறப் பழக்கப்படுவார்.
- தமது ஆக்கத்தை வகுப்பில் முன்வைப்பார்.
- சுயமான ஆக்கத்திறனை செய்ய பழக்கப்படுவார்.

# இணைப்பு 1

## செயற்பத்திரம் I

தென்கீழ் ஆசியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இடம் பெற்ற உறவுகள் தொடர்பாக அட்டவணை தயாரிப்பதே உமக்கு வழங்கப்படும் கருமமாகும். கீழ்வரும் மாதிரிக்கு ஏற்ப அதை அமைக்கவும். இது நீர் தனியே மேற்கொள்ள வேண்டிய கருமமாகும். பாட நூல், ஏனைய நூல்களிலிருந்து தகவல்களைப் பெறவும்.

| நாடு | இலங்கையுடன் நிலவிய உறவுகள் தொடர்பான விபரங்கள் | தொடர்பான இயல்பு (வர்த்தகம்/ சமயம்) |
|---|---|---|
| | | |

# அலகு 10.7

## மத்தியகால ஐரோப்பாவில் அரசியல் பொருளாதார கலாசார வளர்ச்சி

(10 பாடவேளைகள்)

### அறிமுகம்

கி.பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியை ஐரோப்பாவின் மத்திய காலம் என அழைக்கின்றோம். மத்திய கால ஐரோப்பாவில் காணப்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரம் போன்ற ஒழுங்கு முறைகளை பொதுவாக நோக்கும் போது அதனை நிலமானிய முறை என கூறப்பட்டது. அரசியல் ரீதியாக இந்த காலத்தில் அரசனின் அதிகாரம் விரிவாக்கம் அடைந்ததன் காரணமாக பிரபுக்களின் அதிகாரம் அதிகரித்து காணப்பட்டது.

தன்னிறைவு பொருளாதார முறை காணப்பட்ட போதிலும் சமூக அந்தஸ்தானது பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் சமூக முறை இருந்ததனால் சமூகங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. 11 ஆம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவர்களுக்கிடையிலும் இஸ்லாமியர்களுக்கிடையிலும் சமயம் தொடர்பான நீண்ட கால யுத்தங்கள் நடைபெற்றன. அந்த யுத்தம் சிலுவை யுத்தம் என அழைக்கப்பட்டது. அதன் உச்ச கட்டமாக 1453ல் ஐரோப்பியர்களின் அரசியல், சமய, பொருளாதார கேந்திர நிலையமாகிய கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாயிற்று. கிரேக்க ரோம கருத்துக்களும் கிறிஸ்தவ சமய விடயங்களும் அடங்கிய நூல்கள் பாதுகாப்புக் கருதி, ஐரோப்பாவுக்கு கொண்டு வரப்பட்டன. அத்தோடு அறிஞர்களால் அவை பரீசீலிக்கப்பட்டதன் காரணமாக, மனிதனுள் சிந்தனை எழுச்சி ஏற்பட்டது. அதன் விளைவாக மறுமலர்ச்சி ஏற்பட்டது.

மறுமலர்ச்சி என்பது அரசியல், இயற்கை விஞ்ஞானம், கலை, சமய, நாடுகாண் பயணம் போன்ற சகல துறைகளிலும் ஏற்பட்ட எழுச்சியாகும். இவ்வெழுச்சியை அடிப்படையாகக் கொண்டு நவீன காலம் ஆரம்பமானது. நவீன காலத்தில் அரசியல் துறையில் மன்னனின் அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்பட்ட தேசிய அரசுகள் உருவாகின. பிரபுக்களின் அதிகாரங்கள் குறைந்தன. மன்னர்களின் ஆதரவுடன் நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாகின. இது போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளுக்கு வருவதற்கு வழிகாட்டியாக அமைந்ததுடன், கடலோடி ஹென்றியின் உதவியும் அவர்களுக்கு கிடைத்தது. அத்துடன் சிந்தனை எழுச்சியின் காரணமாக சமயச் சீர்த்திருத்தம் ஏற்பட்டது. அதனால் ஐரோப்பாவில் ஏற்பட்ட சம்பவங்களின் தாக்கம் கீழைத்தேய நாடுகளிலும் பிரதி பலித்தது. அதனால் இலங்கையின் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய பிரிவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதற்கு காரணமான ஐரோப்பாவின் பின்னணியைப்பற்றி கற்க வகை செய்வதே இவ்வலகின் நோக்கமாகும்.

தேர்ச்சி : மத்திய கால உலகில் ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை விளக்குவார்.

தேர்ச்சி மட்டங்கள் :

- மத்திய கால ஐரோப்பாவில் நடைமுறையிலிருந்த நிலமானிய முறை தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- சிலுவை யுத்தத்துடன் வர்த்தகம் வளர்ச்சியுற்ற விதத்தை விளக்குவார்.
- மறுமலர்ச்சி யுகத்தில் ஐரோப்பாவி ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார்.
- ஐரோப்பாவில் உருவாகிய தேசிய அரசுகளின் குணாதிசயங்களை விபரிப்பார்.
- நாடுகாண் பயணங்களில் ஏற்பட்ட முக்கிய சம்பவங்களை தேசப்பட உதவியுடன் விபரிப்பார்.
- ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயச் சீர்த்திருத்தை விளக்குவார்.

பாட உள்ளடக்கம் :

## 10.7 மத்திய கால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி

### 10.7.1 நிலமானிய முறை

♦ நிலமானிய முறை என்றால் என்ன?
- கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் ஐரோப்பாவில் இருந்த எல்லா நாடுளிலும் நடைமுறையில் இருந்த அரசியல், பொருளாதார, சமூக முறைகளை நிலமானிய முறை என அழைப்பார்.

♦ நிலமானிய முறையின் ஆரம்பம்
- உரோம இராச்சியம் வீழ்ச்சியுற்ற வேளையில் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளும் மும்முனைகளில் ஏற்படவே, ஐரோப்பிய சமூகம் பொருத்தமான முறைகளில் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான வழியை அமைத்துக் கொண்டது.
- பொது மக்களுக்கு பாதுகாப்பு அளித்த பிரபுக்களின் பலம் பெருகியது.
- மன்னனுக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு வீழ்ச்சியுற மக்களுக்கும் பிர்புக்களுக்கும் இடையே உள்ள தொடர்பு அதிகரித்தது.

♦ நிலமானிய முறையின் பண்புகள்

* அரசியல் அமைப்பு முறை
- ஆட்சி அதிகாரம் சிதறிக்காணப்பட்டது.
- மன்னர்களின் பலம் குன்றி காணப்பட்டது.
- நிலப்பிரபுக்களுடைய பலம் அதிகரித்திருந்தது.

* பொருளாதார முறை
- தன்னிறைவுப் பொருளாதார முறை
- விவசாயம்
- பண்டமாற்று
- வர்த்தகமும் கைத்தொழிலும் சிறிதளவு காணப்பட்டது.

* சமூக முறை
  - பிறப்பை அடிப்படையைக் கொண்டு சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்பட்டமை.
  - மன்னன், பிரபு, குரு, பொதுமக்கள்
  - புரிந்துணர்வு
* கலாசார முறை
  - உரோமன் கத்தோலிக்க சமயம் ஆதிக்கம் செலுத்தியமை.
  - பாப்பரசர் முதலான குருமார்கள் மக்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தல்.
  - சமயச் சார்புடைய கலை அம்சங்கள்

♦ நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கான காரணங்கள்
- பல்கலைக்கழகங்கள் தோன்றியமையும் கல்விச் சீர்த்திருத்தமும்.
- சிலுவை யுத்தம்.
- வர்த்தக வளர்ச்சியும் பணப்புழக்கமும் அதிகரித்தமை.
- நகரங்கள் உருவாகியமை.
- தேசிய அரசு தோன்றியமை.

## 10.7.2 சிலுவை யுத்தமும் வர்த்தக வளர்ச்சியும்

♦ சிலுவை யுத்தத்தை அறிமுகப்படுத்தல்
- 11 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் ஐரோப்பிய கிறிஸ்தவ மக்கள் தங்களது புனித் பூமியை இஸ்லாமியரிடமிருந்து மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட தொடர் யுத்தங்கள்.

♦ சிலுவை யுத்தத்திற்கான காரணங்கள்
- கி.பி 7 ஆம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவ மக்களின் தலைவராகிய யேசு கிறிஸ்து அவதரித்த புனித பூமியாகக் கருதப்படும் ஜெருசலமை அராபியர் கைப்பற்றியமை.
- கிறிஸ்தவ புனித யாத்திரை தலமாக விளங்கிய ஜெருசலம் பிற்காலத்தில் அவர்களுக்கு உரிமையற்று போனமை.
- இஸ்லாமிய ஆட்சி அதிகாரம் ஐரோப்பாவில் அதிகரித்தமை.
- ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகள் இஸ்லாமிய நாடான துருக்கியுடன் போர் தொடுத்தமை.

♦ கொன்ஸ்தாந்தி நோபிளின் முக்கியத்துவம்.
- வர்த்தக மார்க்கங்களின் மத்திய நிலையமாக விளங்கியமை.
- முஸ்லீம்களால் கீழைத்தேய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பெறுமதியான பண்டங்கள் ஐரோப்பியர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பிரதான மத்திய நிலையமாக விளங்கியமை.

♦ 1453 கொன்ஸ்தாந்தி நோபிள் துருக்கியர் வசமானதன் பலாபலன்கள்.
- கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தகத்தின் விருத்தி, ஐரோப்பாவின் நிலமானிய முறை வீழ்ச்சியுற்றமை.
- ஐரோப்பியர்கள் கொன்ஸ்தாந்துநோபிளினூடாக கீழைத்தேய நாடுகளுக்குப் பயணம் செய்த தரை மார்க்கம் தடைப்பட்டமை.
- கீழைத்தேய நாடுகளுக்கு புதிய வர்த்தக மார்க்கங்கள் கண்டு பிடிப்பதற்கான தேவை உருவாகியமை.
- கிரேக்க, ரோம நூல்கள் ஐரோப்பியர்களின் பாவனைக்கு திறந்துவிடப்பட்டதனால் மறுமலர்ச்சிக்கான வழி ஏற்பட்டமை.

## 10.7.3 மறுமலர்ச்சி

- மறுமலர்ச்சி அறிமுகம்
  - புராதன கிரேக்க ரோம நாகரிகங்கள் மீண்டும் எழுச்சியுற்றமை, மறுமலர்ச்சியாக அறியப்படுகின்றது.
  - 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அரசியல், பொருளாதார, சமய, இலக்கிய கலை, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட எழுச்சி மறுமலர்ச் சியாக அறியப்படுகின்றது.

- மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கு ஏதுவாயமைந்த காரணிகள்
  - கி.பி' 1453 ஆம் ஆண்டு சிலுவை யுத்தத்தினால் கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் துருக்கியின் வசமானது.
  - அங்கிருந்த பெருமதிமிக்க நூல்கள் ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்டன.
  - அப்போது அங்கிருந்த பல்கலைக்கழகங்க அறிஞர்களால் அவை ஆய்வுக்குட்படுத்தப் பட்டன.
  - அறிவு எழுச்சி பெற்றமை.
  - சமயக் கல்வி தர்க்க ரீதியான விமர்சனங்களுக்கு உட்பட்டமை
    ஜோன் வைக்கிலிப், ஜோன்ஸ்பஸ்
  - உலகம் கோளவடிவமானது என்பதை விளங்கிக் கொண்டமை.
  - வர்த்தகம் வளர்ச்சியுற்றமை.

- மறுமலர்ச்சியின் பண்புகள்
  - கிரேக்க ரோம நாகரிகம் புத்துயிர் பெற்றமை.
  - கிரேக்க இலத்தீன் மொழி, கலை கட்டிட நிர்மாணம் வளர்ச்சியுற்றமை.
  - பழங்குடி மக்களின் மொழிக்குப் பதிலாக கிரேக்க, இலத்தின் மொழிகளைக் கற்றமை.
  - லௌகீக இரசனைகள் ஏற்பட்டமை.
  - மத்திய காலத்தில் சமயச் சார்பான இரசனையிலிருந்து லௌகீக இரசனைக்கு மாறியமை.
  - விஞ்ஞானத்துறை புத்துயிர் பெற்றமை.
    திசையறிகருவி, அச்சு இயந்திரம் போன்றன கண்டுபிடிக்கப்பட்டமை - ஜோன் கட்டன்பேர்க்
  - வைத்தியத்துறை - குருதிச் சுற்றோட்டத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டமை - பரசோல்சஸ், வில்லியம் ஹாவே
  - மானிடவியல் - ஏனைய உயிரினங்களையும் தேவர்களையும் விட மனிதன் உயர்வா னவன் என்பதை ஏற்றுக் கொண்டமை.
    * மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டும் என்பதையும் இது உள்ளடக் குகின்றது.
    * 16 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு புத்தபகவான் உட்பட்ட ஏனைய சமயத்தலை வர்களாலும் இக்கருத்தை வெளியிட்டமை.

## 10.7.4 தேசிய அரசு

♦ தேசிய அரசின் அறிமுகம்

- ஒரு குறிப்பிட்ட நாட்டின் எல்லைகளையும் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தையும் உள்ளடக்கிய ஒரே வகையான மொழியைப் பயன்படுத்துகின்ற ஒரே வகையான கலாசார பின்னணியை கொண்டதுமான அரசியல் அலகையே தேசிய அரசுகள் என குறிப்பிடுகின்றோம்.

♦ தேசிய அரசின் தோற்றத்திற்கான காரணங்கள்

- நவீன காலம் உருவாகியதன் காரணமாக வெவ்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டதுடன் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் தேசிய அரசைத் தோற்றுவித்தன.
- சிலுவை யுத்தத்தின் காரணமாக பிரபுக்களின் அதிகாரம் குறைந்து தேசிய அரசுகளின், அரசர்களின் அதிகாரங்கள் அதிகரித்தமை.

♦ தேசிய அரசுகளின் பண்புகள்

- குறிப்பிட்ட புவியியல் எல்லைகள். இருத்தல்.
- இறைமையுள்ள ஆட்சி அமைப்பு.
- தேசிய சட்டவியல் கோவை.
- நிலப் பிரபுக்களின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டமை.
- தேசிய ஆள் அடையாளம்.
- பொருளாதார சுட்டி.
- புதிய சமூக வகுப்புகள் தோன்றுதல்.
- பாப்பாண்டவரை முதன்மையாகக் கொண்ட திருச் சபையின் அதிகாரம் குறைதல்.

♦ ஆரம்ப காலத்தில் ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள்

- ஸ்பெயின்
- பிரான்ஸ்
- இங்கிலாந்து

## 10.7.5 நாடுகாண் பயணங்கள்

♦ நாடுகாண் பயணத்தைத் தூண்டிய காரணிகள்

- 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானதால் கீழைத்தேயத்துடனான வர்த்தகத் தொடர்புகளுக்குத் தடை ஏற்பட்டமை.
- எகிப்து சுல்தான்களினால் கீழைத்தேய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்களுக்கு அதிக வரி அறவிடப்பட்டமை.
- போர்த்துக்கேயர் ஆரம்பத்தில் நாடுகாண் பயணங்களைத் தூண்டியமை.
- சிலுவை யுத்தத்திற்கு முன்னரே கடலோடி ஹென்றி நாடுகாண் பயணங்கள் தொடர்பாக அக்கறை காட்டியமை.
- சிலுவை யுத்தக் காலத்தில் போர்த்துக்கேயர் ஆபிரிக்காவின் மேற்கு கரையின் ஊடாக தெற்கு பிரதேசம் வரை சென்றிருந்தமை.
- தேசிய அரசுகளின் ஆட்சியாளரிடமிருந்து உதவிகள் கிடைத்தமை - ஸ்பெயின் பேடினந்து, இஸபெலா தம்பதிகள் - கிறிஸ்டோபர் கொலம்பஸ்

  இங்கிலாந்தின் ஆம் ஹென்றி - ஜோன் கெபோ

  - செபஸ்தியன் கெபோ

- விஞ்ஞான மறுமலர்ச்சியின் புதிய கண்டு பிடிப்புக்கள்
  திசையறிகருவி, வடக்கு நட்சத்திரம் காட்டி, உலகம் கோள வடிவானது.
- உலகம் தொடர்பான வடிவத்தை தெரிந்து கொள்ளுவதில் ஆர்வம் ஏற்பட்டமை.
- கலகம் தொடர்பான புதுப்புது அனுபவங்கள் பெறும் ஆவல் ஏற்பட்டமை.
- சமய, பொருளாதார ரீதியில் முஸ்லீம்களை தாக்குதல்.
- இந்து சமுத்திரத்தில் வர்த்தக உரிமையை பெற்றுக் கொள்ளும் நோக்கம்
- சமய பிரசாரம் செய்யும் நோக்கம்

♦ நாடுகாண் பயணிகள்

- பத்தலோமிய டயஸ் - புயஸ்முனை
- கிறிஸ்டோபர் கொலம்பஸ் - ஸ்பெனியோவா
- அமெரிக்கவெஸ்புச் - அமெரிக்கா
- கபோ சகோதரர்கள் - கனடா
- வஸ்கொடகாமா - இந்தியா

♦ விளைவுகள்

- ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய அதிகாரம் பரவியமை.
  நாடுகளை ஒன்றிணைக்கும் காலனித்துவ ஆட்சி முறை உருவாகியமை.
- சமய பிரசார நடைமுறை பரவியமை.
- வர்த்தகம் விருத்தியடைந்தமை.
- கைத்தொழில் புரட்சி நோக்கி இட்டுச் சென்றமை.
- ஐரோப்பிய நாகரிகம் பரவியமை.

## 10.7.6 சமயச் சீர்திருத்தம்

- 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சிந்தனை எழுச்சி காரணமாக கிறிஸ்தவ சமயம் பல்வேறு கூறுகளாகப் பிரிந்தமை.

♦ ஐரோப்பாவில் சமய சீர்த்திருத்தத்திற்கு அடிப்படையான காரணங்கள்

- சமய காரணிகள்
- பொருளதாரக் காரணிகள்
- அரசியல் காரணிகள்
- அறிவு ரீதியான காரணிகள்

♦ புரட்டஸ்தாந்து இயக்கத்தின் ஆரம்பமும் பரவலும்

- ஜேர்மனியில் தொடங்கியமை
- மாட்டின் லூதர் பாப்பரசரின் பாவமன்னிப்பு பத்திரத்தை பணத்திற்கு விற்பதை எதிர்த்தமையும், அவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்குதலும்.
- ஜேர்மனி (மாட்டின் லூதர்)
- பிரான்சு (ஜோன் கெல்வின்)
- சுவிட்சர்லாந்து (உல்ரிச் சுவின்லி)
  ஆகிய நாடுகளில் புரட்டஸ்தாந்து இயக்கம் பரவிய விதம்.

- கத்தோலிக்க சமயத்திற்கும் புரட்டஸ்தாந்து சமயத்திற்கும் இடையிலான வேறுபாடுகள்
- கத்தோலிக்க சமயச் சீர்த்திருத்தம் (புரட்டஸ்தாந்துக்கு எதிரான இயக்கம்)
  கத்தோலிக்க சமயத்தைப் பாதுகாப்பதற்காக கத்தோலிக்க சமயத்தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.
  - அதன் முக்கிய கூறுகள்
    1. யேசுய்யிட் சபை
    2. றெண்டா சபை
    3. தடுப்பு இயக்கம்

- சமயச் சீர்த்திருத்தங்களின் விளைவுகள்
  - ஐரோப்பாவில் நடைமுறையிலிருந்த சமய ஏதேச்சதிகாரம் பிரிவடைந்து புதிய சமய எண்ணக்கருக்கள் தோன்றியமை.
  - திருச்சபையில் பிளவுபட்டமை.
  - பாப்பாண்டவரின் அதிகாரங்கள் நலிவடைந்தமை.
  - புனித ரோம் சாம்ராச்சியத்தின் அதிகாரம் நலிவடைந்தமை
  - பிரதேச தலைவர்களின் அதிகாரம் அதிகரித்தமை.
  - மிசனரி இயக்கங்கள்.

## செயற்பாடு 10.7.1

**தேர்ச்சி மட்டம்** : ஐரோப்பாவில் காணப்பட்ட நிலமானிய முறை தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.

**செயற்பாடு** : "அடிமைச்சுவர்"

**காலம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு I
- ஐரோப்பிய தேசப்படங்கள்
- இணைப்பு II - செயற்பத்திரம்
- பாடப்புத்தகம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.7.1.1** :

- பாடப்புத்தகத்தில் நிலமானிய முறை காலம் தொடர்பான பாடத்தை வாசித்து கீழ் கண்ட வினாக்களுக்கு விடைகளைப் பெற்றுக் கொண்டு கீழ் கண்ட விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.
- நில மானிய முறை என்றால் என்ன?
- நிலமானிய முறை ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை?
- நிலமானிய முறையின் பண்புகள் மூன்றினைத்தருக.

- கி.பி 5 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளிலும் நடைமுறையில் இருந்த அரசியல், பொருளாதார, சமூக முறைகளை நிலமானிய முறை என அழைப்பர்.
- 5 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டு வரை நிலமானிய முறை இருந்தமை.
- ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான மிலேச்சர் ஆக்கிரமிப்புகளால் மன்னனின் அதிகாரம் சிதைவடைந்து அதிகாரப்பரவலாக்கம் ஏற்பட்டது.
- நிலமானிய முறையில் எல்லா நிலங்களும் மன்னனுக்கு உரிமையாக இருந்தது.
- மன்னனுக்கு வழங்கிய சேவைக்காக அந்நிலங்கள் பிரபுக்களுக்கு பங்கிடப்பட்டமை.

(10 நிமிடங்கள்)

படி 10.7.1.2 :

- வகுப்பு மாணவர்களைத் தேவைக்கேற்றவாறு குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- ஒரு தலைவரை நியமிக்க.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஐரோப்பிய தேசப்படம் ஒன்றை வழங்குக.
- இணைப்பு 2 சம்பந்தமாக செயற்பாட்டு படிவங்களை பெற்றுத் தருக.
- அதற்குத் தேவையான வழிகாட்டல்களை மேற் கொள்க.
- அவ்வக் குழுக்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

(15 நிமிடங்கள்)

படி 10.7.1.3 :

- குழுக்களின் தலைவர்களுக்கு தமது செயற்பாட்டை வகுப்பறையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றைய குழுக்களுக்கு அந்த முன்வைப்பு தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- குழு முன் வைப்பு தொடர்பாக குறை நிறைகளை மதிப்பிடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர்களின் கருத்துத் தொடர்பாக கவனதிற் கொண்டு கீழ் காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் தொகுப்புரை வழங்குக.

- மன்னனின் அதிகாரம் குறைந்து பிரபுக்களின் அதிகாரம் அதிகரித்தமையின் விளைவாக நிலமானிய முறை தோன்றியது.
- நிலமானிய முறைக் காலத்தில் விவசாய பொருளாதார முறை அமைப்பு இருந்தது.
- பிரபுக்கள், நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நில பிரபுத்துவ முறை உண்டானது.
- பிரபுக்களால் சமூக அந்தஸ்து நிச்சயிக்கப்பட்டமை.
- புரிந்துணர்வுடன் செயற்பட்டமை.
- உரோமன் கத்தோலிக்க சமயம் மிக முக்கியமான தாக அமைந்திருந்தமை.
- சிலுவை யுத்தத்தின் காரணமாக நிலப் பிரபுத்துவ சமூக முறை வீழ்ச்சியுற்றமை.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- நிலமானிய முறைகள், அதன் பண்புகள் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.
- ஐரோப்பிய தேசப்படத்தில் நிலமானிய முறை நடை முறையில் இருந்த நாடுகளை குறிப்பார்.
- நிலமானிய முறையில் இருந்த தன்னிறைவுப் பொருளா தார முறை, புரிந்துணர்வு பற்றி பெருமிதம் அடைவார்.
- குழு முறையில் இயங்குவது தொடர்பான ஆற்றலை விருத்தி செய்வார்.
- மற்றையோரது கருத்துக்களை மதிக்கப்பழகுவார்.

## இணைப்பு 1



## செயற்பத்திரம் I

எல்லாக் குழுக்களுக்கும் முதலாவது இலக்கம் கொண்ட செயற்பத்திரத்தை (ஐரோப்பா தேசப்படத்தை பங்கிடுக.) அதில் நிலமானிய முறை பரவி இருந்த நாடுகளைக் குறித்துப் பெயரிடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

## செயற்பத்திரம் II

நிலமானிய முறை நிலவிய காலத்தின் அரசியல் அம்சங்களை பாடப்புத்தகத்தில் இருந்து எடுத்துக் காட்டுக.

1.
2.
3.
4.

நிலமானிய முறை பொருளாதார பண்பு களைப் பாடப்புத்தகத்தையடிப்படை யாகக் கொண்டு எடுத்துக் காட்டுக.

1.
2.
3.
4.

நிலமானிய முறையின் சமூக, சமயப் பண்பு களை பாடப்புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

## செயற்பாடு 10.7.2

தேர்ச்சி மட்டம் : சிலுவை யுத்தத்துடன் வர்த்தகம் வளர்ச்சி அடைந்த முறையை விபரிப்பார்.

செயற்பாடு : "வர்த்தக முன்னேற்றத்திற்கு வழிகோலிய சிலுவை யுத்தம்

காலம் : 40 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - கீழைத்தேய, மேழைத்தேய வர்த்தகப் பாதைகளைக் காட்டும் தேசப்படம்.
- இணைப்பு 2 - செயற்பத்திரம்
- இணைப்பு 3 - செயற்பத்திரம்
- இணைப்பு 4 - படம் (மாணவர்களின் மேலதிகக் கற்றலுக்கு)
- ஐரோப்பிய வரலாறு (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)
- பாடப்புத்தகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.7.2.1 :

- பாடப்புத்தகத்தில் சிலுவை யுத்தம் தொடர்பான அத்தியாயத்தை வாசித்து, சிலுவை யுத்தம் என்றால் என்ன? என்பது பற்றி அறிந்து கொள்ளல்.
- சிலுவை யுத்தம் என்பது யாது?
- சிலுவை யுத்தம் ஏற்பட ஏதுவாயமைந்த காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
- சிலுவை யுத்தம் ஏற்பட்டது யார் யாருக்கிடையில்? என்ற வினாக்களுக்கு விடையைப் பெற்றுக் கீழ்கண்ட விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக. (இணைப்பு 4 இல் உள்ள படத்தை காட்டுக.)

- கி.பி 11 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் இஸ்லாமியருக்கும் கிறிஸ்த்தவருக்கும் இடையே யுத்தம் ஏற்பட்டது.
- சமய, வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளே இதற்குக் காரணங்களாகும்.
- பாப்பாண்டவரின் வழிகாட்டலில் யுத்தம் ஆரம்பமானது.
- கிறிஸ்தவ புனித பூமியான ஜெருஸலத்தை துருக்கியரிடமிருந்து காப்பாற்றுவதே யுத்தத்தின் நோக்கமாக இருந்தது.
- சிலுவை யுத்தத்தின் உச்சக்கட்டம் 1453 ல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானதாகும்.
- வாசனைத்திரவியங்கள், பட்டுத்துணிகள், மஸ்லீன், சீனி, மருந்து பொருட்கள் பெருமளவிலான இரத்தினக்கற்கள், கண்ணாடிப் பொருட்கள், பழ வகைகள் போன்றவை கிடைப்பது அரிதாக இருந்தது.

(10 நிமிடங்கள்)

படி 10.7.2.2 :

- வகுப்பறையில் நடிப்பாற்றல் கொண்ட ஒருவரைத் தெரிவு செய்க.
- அவருக்கு இணைப்பு 2ல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்திலுள்ள விடயங்களைக் கூறுவதற்கு இடமளி யுங்கள். (தன்னை ஜோனாக உருவகித்து)
- அவற்றை முன்வைக்கும் முறைபற்றி அறிவுறுத்துங்கள்.
- மற்றைய மாணவர்களை அவற்றை அமைதியாக செவிமடுக்க விடுங்கள்.

படி 10.7.2.3 :

- குறிப்பிட்ட பாத்திரத்தில் நடிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவனுக்கு வகுப்பில் நடித்துக் காட்டச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர்களைக் கொண்டு இணைப்பு 3 செயற் படிவத்திலுள்ள வினாக்களை வினாவி வெவ்வேறாக விடையளிக்கச் செய்யுங்கள்.
- எழுமாறாக சில விடைகளை மதிப்பிடுங்கள்.
- கீழ்க் காணும் விடயங்கள் தொடர்பாக அவதானத்தைச் செலுத்திப் பாடந்தொடர்பாக கலந்துரையாடுக.

- ஐரோப்பாவில் துருக்கியின் ஆக்கிரமிப்பை பரவவிடாது தடை செய்வதே சிலுவை யுத்தத்தின் நோக்கமாகும்.
- வியாபாரத்தில் கொன்ஸ்தாந்துநோபிள் மிக முக்கிய நகரம் ஆகும்.
- சிலுவை யுத்தத்தினால் வர்த்தகம் வளர்ச்சி அடைந்தது.
- வெனிஸ், ஜெனோவா, மிலான், மாசெல்ஸ், கொன்ஸ் தாந்துநோபிள் போன்ற நகரங்கள் வியாபாரத்தில் மிக முக்கியமானவை ஆகும்.
- கொன்ஸ்தாந்துநோபிள் துருக்கியர் வசமானதால் கீழைத்தேய மேலைத்தேய நாடுகளின் வர்த்தக மார்க்கம் தடைப்பட்டது.
- வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள கீழைத் தேய நாடுகளுக்குச் செல்வதற்குப் புதிய கடல் மார்க் கத்தை தேடிச் சென்றமை.
- நிலமானிய முறை வீழ்ச்சியடைய சிலுவை யுத்தம் முக்கிய காரணியாக அமைந்தது.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- சிலுவை யுத்தம் ஏற்பட்டமைக்கான காரணங்களை விளக்குவார்.
- உலகப்படத்தில் முக்கிய வர்த்தக நிலையங்களை குறிப்பதற்கான திறனைப் பெறுவார்.
- சிலுவை யுத்தத்தின் பலனாக ஐரோப்பியர்கள் உலகத்தை வெற்றி கொண்ட முறை பற்றி பெருமிதமாகக் கூறுவார்.
- கதாபாத்திரங்கள் உருவாக்கல் தொடர்பாகப் பயிற்சி பெறுவார்.
- தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வார்.
- விமர்சிக்கக் கூடிய ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.

## இணைப்பு 01



# இணைப்பு 2

ஐரோப்பாக்கண்டத்தில், இங்கிலாந்தில் பிறந்து லீவர்பூர் பிரதேசத்தில் வசித்த ஜோன் ஸ்மித் என்பவரின் கதையின் அடிப்படையில் மாணவர் ஒருவருக்கு கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு அறிவுறுத்துக.

நான்தான் ஜோன், நான் லிவர்பூர் பிரதேசத்தில் பிறந்தவன், பல காலமாக கிறிஸ்தவர்க்கும் இஸ்லாமியருக்கும் இடையே சமயம், வர்த்தகம் போன்றவை தொடர்பாக மோதல்கள் ஏற்பட்டன. எங்களது புனித பூமியான ஜெருஸலத்தை இஸ்லாமியர் கைப்பற்றிக் கொண்டனர். ஆரம்பத்தில் அவர்கள் அப்புனித பூமியில் வழிபாடு செய்ய அனுமதித்தனர். ஆனால் பிற்காலத்தில் வழிபாடு செய்யத் தடை விதித்தனர். சில முஸ்லீம் ஆட்சியாளர்கள் எங்களுக்கு பல்வேறு வகையான தொல்லைகளைக் கொடுத்தனர். சிலரைக் கொன்று குவித்தனர். இதற்காகச் சினம் கொண்ட 2ம் பாப்பாண்டவர் மற்றைய ஐரோப்பிய இராச்சியங்களின் உதவியுடன் முஸ்லீம்களுக்கு எதிரான யுத்தத்தைத் தொடங்கினார். கி.பி 1096 ஆம் ஆண்டு தொடக்கம் 1453 வரைக்கும் இடைக்கிடையே யுத்தம் தொடர்ந்தது. ஜேர்மனி, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகள் பாப்பாண்டவருக்கு உதவி புரிந்தன. சில சந்தர்ப்பங்களில் ஐரோப்பியர் வென்றனர். ஆனால் முஸ்லிம்கள் இவ்வாறான பலம் பொருந்தியவர்கள் என்று நினைக்கவில்லை. 1453 இல் சிலுவை யுத்தத்தின் உச்சகட்டம் எனக் கூறலாம். அப்போது நாம் நினைத்தும் பார்க்க முடியாதவாறு எங்களை தோல்வியுறச் செய்து துருக்கியர் வெற்றி கண்டனர். அது மட்டுமல்ல எங்களது கீழைத்தேய மேலைத்தேய வர்த்தக மையமாக விளங்கிய கொன்ஸ்தாந்துநோபிளையும் கைப்பற்றிக் கொண்டனர். அதன் பிறகு எங்களுக்குக் கீழைத்தேய நாடுகளுக்கு அதனூடாக செல்ல தடை வித்தித்தனர். அவர்கள் அவ்வாறு செய்ததுடன் பொருட்களுக்கு அதிக வரியை அறவிட்டும் பொருட்களுக்கு தட்டுப்பாடும் ஏற்படுத்தினர். இதன் காரணமாக எங்களுக்கு வர்த்தகத்தில் மாபெரும் நட்டம் ஏற்பட்டது. நாங்களும் விட்டுக் கொடுக்கவில்லை. கிழக்குத்திசைக்குச் செல்ல புதிய பாதைகளைத் தேட்த் தொடங்கினோம். நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டோம். அதனால் முன்னரை விட நல்ல வாய்ப்புக்கள் கிடைத்தன. அதனால் கீழைத்தேய நாடுகளிலிருந்து தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம், வாசனைத்திரவியங்கள் மட்டுமல்ல, காலனித்துவ ஆதிக்க நாடுகளும் அதனை ஆளக்கூடிய சந்தர்ப்பங்களும் கிடைத்தன. உலகின் எல்லா இடங்களிலும் காலனித்துவத்தை உருவாக்கினோம். அது எவ்வாறு என்றால் சூரியன் மறையாத சாம்ராச்சியம் என்று எங்கள் நாட்டைக் குறிப்பிடும் படியாக உருவாக்கினோம்.

- இந்த கதாபாத்திரத்திற்கான நடிப்பை வகுப்பில் அனைத்து மாணவர்களும் பார்வையிடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- நடிக்கும் போது, கீழ்கண்ட செயற்பாட்டு வடிவத்தில் குறிப்பிடப்பட்டள்ள வினாக்களுக்கு விடையளிக்க மாணவர்களை வழிப்படுத்துக.
- இறுதியாக அவ்விடைகளை எழுமாற்றாக மதிப்பிடுங்கள்.
- அதன் பின்னர் பாடத்தைப் பற்றி தொகுப்புரை வழங்குக.

## இணைப்பு 3

### செயற்பத்திரம்

- சிலுவை யுத்தம் என்றால் என்ன?
- அதில் ஈடுபட்ட நாடுகள் எவை?
- சிலுவை யுத்தத்தை ஆரம்பித்த பாப்பாண்டவர்களின் பெயர் என்ன?
- அதன் உச்ச கட்டம் எது?
- அதன் இறுதி விளைவு யாது?
- சூரியன் மறையாத சாம்ராச்சியம் என்பது யாது?

## இணைப்பு 4



சிலுவை யுத்தம்

## செயற்பாடு 10.7.3

**தேர்ச்சி மட்டம்** : மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிப்பார்.

**செயற்பாடு** : "புதிய உலகத்தை நோக்கி ஐரோப்பா"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 10.7.3.1 - லியானாடோ டார்வின்சியின் மோனாலிசா ஓவியம்
- இணைப்பு 2 - மறுமலர்ச்சி யுகத்தின் ஆக்கங்களைக் காட்டும் படங்கள்
- இணைப்பு 3 - செயற்பாட்டுப்பத்திரம்
- பாடப்புத்தகம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.7.3.1** :

- இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள மோனாலிசா ஓவியத்தை வகுப்பில் காட்சிப்படுத்தி கீழ் காணும் வினாக்களை மாணவர்களிடம் வினவுங்கள்.
  - இந்தப்படத்தை நீங்கள் பார்த்து இருக்கின்றீர்களா?
  - இது என்ன?
  - இதை வரைந்தவர் யார்?
  - இது எந்த காலத்தைச் சேர்ந்தது?
  - இந்த காலத்தில் ஏனைய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் யாது?

  போன்ற வினாக்களை வினாவி கீழ் கண்ட விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில், அரசியல், சமயம், இலக்கியம், கலை, பொருளாதாரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட புதிய எழுச்சி மறுமலர்ச்சி என அழைக்கப்படுகிறது.
- கி.பி 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர்கள் வசம் ஆகியமை.
- இக்கால கட்டங்களில் ஐரோப்பாவில் பல்கலைக் கழகங்கள் உருவாகிக்கொண்டிருந்தன.
- கிரேக்க, ரோம நாகரிகங்கள் புத்துயிர் பெற்றன.
- சமயத்துறையில் இருந்து விலகி கலைகள் லௌகீக இரசனைக்குட்பட்டன.
- விஞ்ஞானத்துறையிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது.

(15 நிமிடங்கள்)

படி 10.7.3.2 :

- வகுப்பைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களை வழங்குக.
- செயற்பாட்டுக்கான அறிவுரையை வழங்குக.
- குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
- வேலையை இலகுவாக்க மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குக.

படி 10.7.3.3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தமது செயற்பாடுகளை வகுப்பறையில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்கள் விடயங்களை முன்வைக்கும் போது குறை, நிறைகள், விசேட அம்சங்கள் (பாட உள்ளடக்கத்துடன் தொடர்புபட்ட) என்பவற்றை கலந்துரையாடுக.
- விசேட அம்சங்களைப் பற்றிப் பாராட்டுக.
- கீழ்க் காணும் விடயங்களையும் கலந்துரையாடி மேலும் மாணவர்களின் அனுபவங்களை வெளிக் கொணரச் செய்க.

- கொன்ஸ்தாந்துநோபிளில் இருந்த பெறுமதிமிக்க நூல்களையும் எடுத்துக் கொண்டு, கற்றவர்கள் ஐரோப்பாவுக்கு ஓடியமை.
- ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் இருந்த கற்றவர்கள் அந்நூல்களைப் பரீட்சித்து பார்த்ததனால் அறிவு எழுச்சி ஏற்பட்டது.
- சமயக்கல்வி தர்க்க ரீதியான விமர்சனத்துக்கு உள்ளானது.
- உலகம் கோளவடிவானது பற்றி அறிவு, திசையறி கருவி, வடக்கு நட்சத்திரக்காட்டி போன்ற கண்டு பிடிப்புக்களினால் ஐரோப்பியர்கள் புதிய பிரதேசங்களை நோக்கி பயணித்தமை.
- எல்லாத்துறைகளிலும் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்த அச்சு இயந்திரத்தை ஜோன் கெட்டன்பேர்க் கண்டு பிடித்தமை.
- வைத்திய துறையில் புதிய கண்டு பிடிப்புக்கள் பல ஏற்பட்டன.
- வேறு எல்லா உயிரினங்களையும் தெய்வங்களையும் விட மனிதன் உயர்வானவனாக கணிக்கப்படத் தொடங்கியமை.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- கலைத்துறையிலேற்பட்ட மறுமலர்ச்சி தொடர்பான தகவல்களை விளக்குவார்.
- மோனலீசா, இறுதி வழக்குத் தீர்ப்பு, இறுதி இராப் போசனம் போன்ற சித்திரங்கள் இன்றும் கூட உலகம் மதிக்கின்ற ஈடிணையற்ற ஆக்கங்கள் எனப் பெருமிதம் கொள்வார்.
- கலை, கைப்பணிகளின் வளர்ச்சி தொடர்பாக சுவர் பத்திரிகைக்கான கட்டுரையொன்றை எழுதுவார்.
- ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- தெளிவாகவும் தர்க்க ரீதியாகவும் சிக்கலின்றியும் கருத்துத்துக்களை முன்வைப்பார்.

இணைப்பு 1



மோனலீசா ஓவியம்

இணைப்பு 2



இறுதி இராப்போசனம் விருந்து



## இணைப்பு 3

### செயற்பத்திரம்

குழு இல 1 (கலையும் இலக்கியமும்)

1. இத்தாலியில் தோன்றுவதற்கான காரணங்களைத் தருக.
2. அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குடும்பங்களைப் பெயரிடுக.
3. அதன் விசேட பண்புகளை விளக்குக.
4. கலை இலக்கியப் படைப்புக்களைப் பெயரிடுக.

குழு இல 2 விஞ்ஞானம்

1. விஞ்ஞான மறுமலரச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
2. விஞ்ஞான மறுமலர்ச்சியின் புதிய கண்டு பிடிப்புக்களைக் குறிப்பிடுக
3. அவற்றோடு தொடர்புபட்ட நபர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

குழு இல 3 (சமயம்)

1. சமய மறுமலர்ச்சி ஏற்படக் காரணங்கள் யாவை?
2. அதன் தோற்றத்திற்கான காரணத்தை விளக்குக.
3. அதன் விரிவாக்கத்தையும் விளைவுகளையும் குறிப்பிடுக.

## செயற்பாடு 10.7.4

தேர்ச்சி மட்டம் : ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளின் பண்புகளை விபரிப்பார்.

செயற்பாடு : "தேசிய அரசுகளில் எழுச்சி"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - ஐரோப்பிய தேசப்படம்
- இணைப்பு 2 - செயற்பாட்டுப்படிவம்
- ஐரோப்பாவின் வரலாறு (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)
- பாடப்புத்தகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.7.4.1 :

- பாடப் புத்தகத்தில் தேசிய அரசு தொடர்பான அத்தியாயத்தைக் கற்று கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- நவீன யுகத்தில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
- தேசிய அரசு என்றால் என்ன?
- தேசிய அரசு தோன்றுவதற்கு உரிய காரணம் யாது?
- முதலாவது தேசிய அரசை ஐரோப்பா தேசப்படத்தில் இனங்காண்க.
- இவ்வினாக்களுக்கான விடைகளைப் பெற்றுக் கொண்டு கீழ் காணும் விடயங்கள் தொடர்பாகவும் கவனத்தைச் செலுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுக.

- நிச்சயிக்கப்பட்ட எல்லைகளையும் மக்கள் கூட்டத்தையும் கொண்ட ஒரே வகையான மொழியைப் பிரயோகப்படுத்தும் சமமான கலாசார கூறுகளை உள்ளடக்கிய அரசியல் அலகு தேசிய அரசு ஆகும்.
- தேசிய அரசு பேணுவதற்கு பல்வேறு காரணிகள் துணை நின்றன.
- நவீன கால அரசியல் துறையில் ஏற்பட்ட மாபெரும் மாற்றம் தேசிய அரசு ஆகும்.
- தேசிய அரசுகளின் மன்னர்கள் நிலமானிய முறையில் இருந்த மன்னர்களை விட அதிகாரம் மிக்கவர்களாக இருந்தனர்.
- வர்த்தகத்துறை விருத்தியடைந்திருந்தது.
- ஸ்பானியா, பிரான்சு, இங்கிலாந்து என்பன ஐரோப்பாவில் முதலில் தோன்றிய தேசிய அரசுகளாகும்.

(15 நிமிடங்கள்)

படி 10.7.4.2 :

- இணைப்பு 2 இல் உள்ள அட்டவணையை வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் தங்களது பயிற்சிப் புத்தகத்தில் வரைந்து கொள்ள இடமளியுங்கள்.
- அதன் பின்னர் பாடப்புத்தகத்தின் துணையுடன் அட்டவணையை நிரப்புவதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குக.
- மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குக.

(25 நிமிடங்கள்)

படி 10.7.4.3 :

- மாணவர்களின் பயிற்சிகள் சிலவற்றை அவர்களைக் கொண்டு வகுப்புக்கு உரத்து வாசித்துக் காட்டச்செய்க.
- அவற்றைப் பாராட்டுக.
- மாணவர்களின் திறமையையும் பலவீனத்தையும் இனங் காண்க.
- திறமையான மாணவர்களைப் பராட்டுதல்.
- கீழ்க் காணும் விடயங்களில் அவதானத்தைச் செலுத்தி பாடத் தொகுப்புரை வழங்குக.

- சிலுவை யுத்தத்தின் புயனாக பிரபுக்களின் அதிகாரம் குறைவடைந்து தேசிய அரசு மன்னர்களின் அதிகாரங்கள் அதிகரித்தன.
- இறைமை உள்ள அரசு தோன்றியது.
- நிலப் பிரபுக்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.
- மத்தியதர வர்க்கம் பலம் அடைந்தது.
- பாப்பாண்டவரை முதன்மையாகக் கொண்ட கிறிஸ்தவர்களின் பலம் குறைந்தது.
- பிரபுக்களின் அதிகாரங்கள் குறைந்து இங்கிலாந்தில் தேசிய அரசை விருத்தி அடையச் செய்தது.
- இங்கிலாந்தின் தேசிய அரசின் 7 ஆம் ஹென்றி முதலாவது மன்னனாவான்.
- 7வது ஹென்றி மன்னனதும் 1 ஆம் எலிசபெத் ராணியினதும் காலத்தில் இங்கிலாந்து தேசிய அரசு மேலோங்கியது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- தேசிய அரசின் பல்வேறு பண்புகளை விளக்குவார்.
- தேசிய அரசு உருவாக்கதின் போது அவ்வவ் நாடுகளின் மன்னர்களினால் நிறைவேற்றப்பட்ட சேவைகளைப் புகழ்ந்துரைப்பார்.
- ஐரோப்பாவின் தேசிய அரசு பற்றிய தகவல்களை அட்டவணைப்படுத்துவார்.
- தேசிய அரசு தொடர்பான நூல்களிலிருந்து விடயங்களைத் தேடும் போது குழு முயற்சியில் ஈடுபடுவார்.
- தாம் தேடியறிந்த விடயங்களை வகுப்பில் மற்றவர்களுக்கும் முன்வைப்பார்.

# இணைப்பு 1

## ஐரோப்பாவில் தோன்றிய ஆரம்ப காலத் தேசிய அரசுகள்



# இணைப்பு 2

## செயற்பாட்டுப்பத்திரம்

கீழ்க் காணும் அட்டவணையை பூரணப்படுத்துக.

| தேசிய அரசின் தோற்றத்திற்கான காரணங்கள் | ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் | அவ்வரசுகளின் மன்னர்கள் | அவ்வவ் மன்னர்கள் தங்களின் அரசை முன்னோக்குவ தற்கு கையாண்ட செயன்முறைகள் |
|---|---|---|---|
| | | 1.<br>2.<br>3.<br>4. | |
| | 2. | 1.<br>2.<br>3.<br>4. | |
| | 3. | 1.<br>2.<br>3.<br>4. | |

## செயற்பாடு 10.7.5

**தேர்ச்சி மட்டம்** : நாடுகாண் பயணத்தின் முக்கிய கட்டங்களை தேசப்படத்தின் மூலம் விபரிப்பார்.

**செயற்பாடு** : "நாடுகாண் பயணம்"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1 - நாடுகாண் பயணிகளின் போக்குவரத்தை காட்டும் படம்
- இணைப்பு 2 - செயற்பத்திரம்
- பாடப்புத்தகம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.7.5.1** :

- இணைப்பு 1 இலுள்ள நாடுகாண் பயணிகளின் போக்குவரத்துக்களைக் காட்டும் தேசப்படத்தை வகுப்பில் முன்வைத்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்யவும்.
  - இப்படத்தில் காட்டப்படுவது யாது?
  - நாடுகாண் பயணத்திற்குத் தூண்டு கோளாக அமைந்த காரணி எது?
  - நாடுகாண் பயணங்களில் முன்னின்று செயற்பட்ட நாடுகள் எவை?
  - நீர் அறிந்த நாடுகாண் பயணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
- கீழ்க் காணும் விடயத்தில் கவனத்தைச் செலுத்திப் பாடப் புத்தகத்தின் துணையுடன் மாணவருடன் கலந் துரையாடுக.

- 1453 இல் கொன்ஸ்தாந்துநோபிள் நகரம் துருக்கியிடம் சென்றதனால் ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளுடன் கொண்ட தொடர்பு பாதிப்படைந்தது.
- கீழைத்தேய நாடுகளிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பொருட்களுக்கு அதிக விலை அறவிடப்பட்டது.
- தேசிய அரசு மன்னர்கள் நாடுகாண் பயணங்களுக்கு அதிக ஒத்துழைப்பு வழங்கினர்.
- மறுமலர்ச்சிக் காலத்தின் புதிய விஞ்ஞான கண்டு பிடிப்புகள் நாடுகாண் பயணத்திற்கு உதவியது.
- ஆரம்ப கால நாடுகாண் பயணிகளாக பாத்தலோமிய டயஸ், கிறிஸ்டொபர் கொலம்பஸ், வாஸ்கோடகாமா, ஜோன் கெபோ ஆகியோர் விளங்கினர்.

(15 நிமிடங்கள்)

படி 10.7.5.2 :

- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலை வரை நியமிக்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 2 இல் உள்ள செயற்பாட்டுப்படிவங்களை வழங்குக.
- செயற்பாட்டுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(25 நிமிடங்கள்)

படி 10.7.5.3 :

- குழுக்களுக்குத் தமது செயற்பாடுகளை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் அளிக்குக.
- ஒவ்வொரு குழுவிலுமுள்ள குறை, நிறைகளை எடுத்துக் கூறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்குக.
- குழுக்களின் சிறப்பம்சங்களையும் இயலாமைகளையும் இனங்காண்க.
- செயற்பாடுகளைப் பாராட்டுக.
- கீழ்க் காணும் விடயங்களை கவனத்திற் கொண்டு தொகுப்புரை வழங்குக.

- கீழைத்தேய நாடுகளுக்கு வருவதற்குப் போர்த்துக்கேயர் முன்னோடியாக விளங்கியனர்.
- இதற்காக கடலோடி ஹென்றிக்கும் போர்த்துக்கல் மக்கள் உதவி வழங்கினர்.
- அவர்களின் முயற்சியின் பயனாக இந்தியாவுக்கு வர முடிந்தது.
- கிறிஸ்டொபர் கொலம்பஸ், ஸ்பானிய மன்னன் பேடினந்து, இஸபெலா தம்பதிகளின் உதவியுடன் நாடுகாண் பயணத்தை தொடர்ந்தனர்.
- அவர் அமெரிக்காவின் அருகில் உள்ள கரீபியன் தீவுகளைக் கண்டுபிடித்தார்.
- ஒல்லாந்தின் ஹென்றி ஹட்சன் வட அமெரிக்காவில் உள்ள ஹட்டன் பிரதேசத்தில் ஆராய்ச்சியில் ஈடு பட்டார்.
- பிரான்சின் டெம் பிளேன்ஸ் மார்விடே வட அமெரிக்காவின் கியூபெக் பிரதேசத்தைக் கண்டு பிடித்தார்.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு

நியதிகள் :

- நாடுகாண் பயணத்திற்கு ஏதுவாயமைந்த காரணி களை விபரிப்பார்.
- தேசப்படம் ஒன்றில் ஐரோப்பிய நாடுகாண் பயணிக ளால் கண்டு பிடிக்கப்பட்ட தேசங்களைக் குறிப்பார்.
- நாடுகாண் பயணங்களினால் ஐரோப்பாவுக்கும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்புகளைப் புகழ்ந்துரைப்பார்.
- குழு முயற்சியுடன் செயற்படும் திறனை வளர்ப்பார்.
- தாம் தேடியறிந்த விடயங்களை வகுப்பிலுள்ள மற்றவர் களுக்கும் விளக்குவார்.

# இணைப்பு 1

## செயற்பத்திரம்

பாடப்புத்தகத்தைத் துணையாகக் கொண்டு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிக்குக. ஆசிரியர் தேவையான வழிகாட்டலை வழங்குதல் நன்று.

போர்த்துக்கல்

1. நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டமைக்கான காரணிகள்
   - 
   - 
   - 
2. நாடுகாண் பயணிகள்
   - 
   - 
   - 
3. ஒத்துழைப்பு வழங்கிய மன்னர்கள்
   - 
   - 
   - 
4. கண்டு பிடிக்கப்பட்ட பிரதேசங்கள்
   - 
   - 
   - 

இங்கிலாந்து

1. நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டமைக்கான காரணிகள்
   - 
   - 
   - 
2. நாடுகாண் பயணிகள்
   - 
   - 
   - 
3. ஒத்துழைப்பு வழங்கிய மன்னர்கள்
   - 
   - 
   - 
4. கண்டு பிடிக்கப்பட்ட பிரதேசங்கள்
   - 
   - 
   - 

ஸ்பானியர்

1. நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டமைக்கான காரணிகள்
   - 
   - 
   - 
2. நாடுகாண் பயணிகள்
   - 
   - 
   - 
3. ஒத்துழைப்பு வழங்கிய மன்னர்கள்
   - 
   - 
   - 
4. கண்டு பிடிக்கப்பட்ட பிரதேசங்கள்
   - 
   - 
   - 

இணைப்பு 2


15, 16 ஆம்
நூற்றாண்டின்
நாடுகாண் பயணம்
ஆசியா
இந்து சமுத்திரம்
தென் அமெரிக்கா
வட அமெரிக்கா
பசுபிக் சமுத்திரம்

## செயற்பாடு 10.7.6

தேர்ச்சி மட்டம் : ஐரோப்பாவில் நடைமுறையிலிருந்த சமயச் சீர்த்திருத்தத்தை நுணுகியாராய்வார்.

செயற்பாடு : "சமயச் சீர்த்திருத்தம்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - யேசு கிறிஸ்துவநாதர், பாப்பரசரின் படங்கள்
- இணைப்பு 2 - செயற்பத்திரம்
- இணைப்பு 3 - வகுப்பின் மேலதிகக் கற்றலுக்காக
- பாடப்புத்தகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.7.6.1 :

- இணைப்பு 1 இலுள்ள படத்தை வகுப்பில் முன்வைத்து கீழே உள்ள வினாக்களுக்கு விடையளிக்கச் செய்க.
  - ரோமன் கத்தோலிக்க சமயத்தின் தலைவர் யார்?
  - தற்போதும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர் யார்?
  - அவரின் வசிப்பிடம் எது?

மேற்கண்ட வினாக்களுக்கு விடைகளைப் பெற்றுக் கொண்டு கீழே குறிப்பிடப்படும் தகவல்களில் அவதானத்தைச் செலுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுக.

- 16 ஆம் நூற்றாண்டின் முன் ஐரோப்பாவின் மிக முக்கியமான சமயமாக கிறிஸ்தவ சமயம் விளங்கியது.
- மறுமலர்ச்சியின் காரணமாக சிந்தனை புரட்சி ஏற்பட்டதன் விளைவாக கற்றோரினால் கிறிஸ்தவ சபையில் ஏற்பட்ட ஊழல்கள் விமர்ச்சிக்கப்பட்டன.
- பாவமன்னிப்பு படிவத்தை பணத்திற்காக விற்கும் செயலை எதிர்த்து மாட்டின் லூதர் ஆரம்பித்த இயக்கம் புரட்டஸ்தாந்து இயக்கம் தொடங்க வழி கோலியது.
- இவ்வியக்கத்தை ஜோன் கெல்வின், உல்ரிச்சா, ஸ்விங்கிரி போன்றோர் வளர்த்தனர்.

(15 நிமிடங்கள்)

படி 10.7.6.2 :

- பொருத்தமான முறையில் வகுப்பைக் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 2 இல் குறிப்பிட்டுள்ள செயற்பாட்டுப்படிவங்களைப் பகிர்ந்தளிக்குக.
- செயற்பாட்டுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குக.
- குழுக்களாகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

படி 10.7.6.3 :

- குழுத்தலைவர்களுக்குத் தங்களது செயற்பாடுகளை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழு முன்வைப்பின் போது அதன் நிறை, குறைவு, சிறப்பம்சம் என்பவற்றைக் கலந்துரையாடுக.
- திறமையைப் பாராட்டுக.
- குழுக்கள் முன்வைத்த விடயம் தொடர்பாக அவதானிப்பதுடன் கீழ்க் காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் தொகுப்புரை வழங்குக.

- ஜோன் கெடன்பேர்க் கண்டுபிடித்த அச்சு இயந்திரங்களால் பைபில் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.
- இதனால் அநேகருக்கு பைபிலை வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.
- கிறிஸ்தவ தேவலாயங்களில் நடந்த ஊழல்களை அறிந்து கொள்ள முடிந்தது.
- கற்றோர்கள் கிறிஸ்தவ சபையை விமர்ச்சித்தன் பயனாக கிறிஸ்தவ சபைகள் பல்வேறு கூறுகளாகப் பிரிந்தன.
- ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளில் வேகமாகப் புரட்டஸ்தாந்து மதம் பரவியது.
- இதனால் பாப்பாண்டவரின் அதிகாரம் நலிவடைந்தது.
- அதன் காரணமாக ரோமன் கத்தோலிக்க சமயத்துக்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்கு ரோமன் கத்தோலிக்கரினால் கத்தோலிக்க சீர்த்திருத்த இயக்கம் தொடங்கப்பட்டது.
- யேசுயீட் சபை தொடங்கியமையும் அதன் மூலம் மிசனரிகள் ஆரம்பிக்கப்பட்டமையும்

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- ஐரோப்பாவில் பிரதான சமயமாக விளங்கிய கிறிஸ்தவ சமயம் 16 ஆம் நூற்றாண்டில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து சென்றது பற்றி விபரிப்பார்.
- மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட சிந்தனை எழுச்சியினால் மனிதன் எதனையும் விமர்சனரீதியில் சிந்திக்கக் கூடிய ஆற்றல் பெற்று, சரியான முடிவுகளுக்கு வர முடிந்தது பற்றியும் புகழ்ந்துரைப்பார்.
- ஒவ்வொரு சமயத்திற்கும் உள்ள சிறப்பம்சங்களை தேடிப்பார்ப்பார்.
- குழு முயற்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைப்பார்.

# இணைப்பு 1

ரோமன் கத்தோலிக்க
சமயத் தலைவர்கள்



யேசுநாதர்



பாப்பரசர்

இணைப்பு 3

புரட்டஸ்தாந்து இயக்கத்தின் தலைவர்கள்



மார்டின் லூதர்



ஜோன் கெல்வின்

உல்ரிச் ஸ்விங்கிலி



# இணைப்பு 2

## செயற்பாட்டுப்பத்திரம்

- உங்களுக்குத் தரப்படும் செயற்பாட்டு படிவத்தில் உள்ள வினாக்களுக்கு (பாடப்புத்தகத்தின் துணையுடன்) விடையளிக்க ஏற்பாடு செய்க.
- தேவையானபோது ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்க.

| ஐரோப்பாவில் சமயச் சீர்த்திருத்தம் ஏற்பட்டமைக்கான காரணிகளைக் குறிப்பிடுக. | புரட்டஸ்தாந்து இயக்கம் தொடங்கிய நாடுகள் | தலைமை தாங்கியவர் களின் பெயர்கள் |
|---|---|---|
| 1. | 1. | 1. |
| 2. | 2. | 2. |
| 3. | 3. | 3. |
| 4. | 4. | 4. |

| புரட்டஸ்தாந்து மதத்தலைவர்களின் பெயர்கள் | அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் | பரவிய நாடுகளும் சபைகளும் |
|---|---|---|
| 1. | 1. | 1. |
| 2. | 2. | 2. |
| 3. | 3. | 3. |
| 4. | 4. | 4. |

| ஐரோப்பாவில் புரட்டஸ்தாந்து இயக்கம் வளர்ந்தமையால் ஏற்பட்ட விளைவுகள் |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |

# அலகு 10.8

## ஐரோப்பாவின் அதிகார பரவலாக்கம்

(05 பாடவேளைகள்)

## அறிமுகம்

1453 இல் சிலுவை யுத்தத்தின் பயனாக கொன்ஸ்தாந்துநோபிள் நகரம் இஸ்லாமியர் வசமானதால் ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்த வழிகள் மூடப்பட்டன அதனால் கீழைத்தேய நாடுகளுக்குச் செல்வதற்கான புதிய வர்த்தகப் பாதைகளைக் கண்டு பிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் புதிய தேசிய அரசுகளின், மன்னர்களின் ஒத்துழைப்பு கிடைத்தது. இதன் பயனாக ஐரோப்பியர் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டனர். இதனால் உலகத்தின் பல்வேறு நாடுகளில் காலனித்துவத்தைக் கொண்டு வர முடிந்தது. இவ்வாறு காலனித்துவத்தை உருவாக்கிய பிரதேசங்களில் அவர்கள் செயற்பட்ட விதமும், தங்களது சமயப் பிரசாரங்களை மேற் கொண்ட விதத்தையும் பற்றி, இவ்வத்தியாயத்தில் கலந்துரையாடப்படுகின்றது. அவ்வாறே பல்வேறு ஐரோப்பியர்கள் இலங்கையுடன் தொடர்புபட்ட விதத்தையும் பற்றியும் கலந்துரையாடப்படும்.

தேர்ச்சி : ஐரோப்பியரின் அதிகாரம் விரிவாக்கப்பட்ட முறையை விபரிப்பார்.

தேர்ச்சி மட்டங்கள் :

- ஐரோப்பியர் காலனித்துவத்தை தேடிச் செல்வதற்கான காரணத்தை கேட்டு அறிந்து கொள்வார்.
- தேசப்படம் ஒன்றின் உதவியுடன் ஐரோப்பியர் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிய நாடுகளை விவரிப்பார்.
- கிறிஸ்தவ சமயம் பரவுதல் சம்பந்தமான விடயங்களை விவரிப்பார்.

பாட உள்ளடக்கம் :

## 10.8 ஐரோப்பாவின் அதிகார விரிவாக்கம்

1453 இல் கொன்ஸ்தாந்துநோபிள் துருக்கியர் வசமானதுடன் வர்த்தகப் பாதைகள் தடைப்பட்டதால் ஐரோப்பியருக்குத் தேவையான வாசனைத்திரவியங்களைப் பெற்றுக் கொள்வதில் தடையேற்பட்டது. இதன் காரணமாக பல்வேறு நாடுகளிலும் நாடுகாண் பயணிகள் தேசிய அரசுகளின் ஆட்சியாளர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட நாடுகாண் பயணத்தின் பயனாக, ஐரோப்பியர்களுக்கு பல்வேறு காலனித்துவ நாடுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. இதன் காரணமாக ஸ்பெயின், போர்த்துக்கல், ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், டென்மார்க் போன்ற நாடுகளின் அதிகாரம் விரிவடைந்தது.

10.8.1

ஸ்பானியர்

* பேடினந்து கெடேஸ் மெக்சிக்கோவைக் கண்டு பிடித்தமை.
* பிரான்சிஸ்கோ பிசரோ பேருவைக் கண்டு பிடித்தமை.
* இப்பிரதேசத்தின் சுதேசிகளை அடக்கித் தமது ஆட்சியை நிலை நிறுத்தினர்.
* கிறிஸ்டோபர் கொலம்பஸ், கரிபியன் தீவைக் கைப்பற்றி, அதனை ஸ்பெயினுக்கு கையளித்தார்.
* பேடினந்து மகலனின் நாடுகாண் பயணத்தினால் பிலிப்பைன்ஸ் தீவுகள் ஸ்பானிய ருக்குக் கிடைத்தது.

போர்த்துக்கல்

* 1487 இல் போர்த்துக்கேயரான பாத்தலோமிய டயஸ் ஆபிரிக்காவின் தென்கரையில் உள்ள புயல் முனைவரை பயணித்தமையே போர்த்துக்கேயரின் கீழைத்தேய அதிகார விரிவாக்கத்தின் முதலாவது படியாகும்.
* அவ்வழியில் சென்ற வாஸ்கொடகாமா 1498 இல் இந்தியாவில் கள்ளிக்கோட்டையை அடைந்து இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்தினர்.
* 1505 இல் லோறன்ஸ் டி அல்மெயிடா இலங்கையை அடைந்து கரையோரப்பிரதேசத் தில் அதிகாரத்தை நிலை நிறுத்தியமை.
* 1500 இல் தென் அமெரிக்காவின் கிழக்கே பிரேசிலை கண்டு பிடித்து, தென் அமெரிக்காவில் போர்த்துக்கேயர் அதிகாரத்தை நிலை நிறுத்தியமை.

ஒல்லாந்து

* 1609 இல் ஹென்றி ஹட்சனால் ஹட்சன் பிரதேசம் ஆய்வு செய்யப்பட்டு அப்பிரதேசத் தில் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தியமை.
* வர்த்தகத்தில் அதிகாரம் செலுத்திய ஒல்லாந்தர் ஸ்பானியருடன் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்டதுடன் வர்த்தகப் பொருட்களைக் கொள்ளையிட்டமை.
* போர்த்துக்கேயரின் அதிகாரங்கள் குறைய, அப்பிரதேசத்தில் ஒல்லாந்தர் ஆட்சி பரவியமை.
* ஒல்லாந்தர் 17ம், 18ம் நூற்றாண்டுகளில் இந்து சமுத்திரத்தில் வலிமை பெற்றுத் திகழ்ந்தமை.
* கிழக்கிந்தியத் தீவுகளில் அதிகாரத்தை நிலை நிறுத்தியமை.
* 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டமை.
* 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் கரையோரப்பிரதேசத்தைக் கைப்பற்றியமை.

இங்கிலாந்து

* 1497 இல் ஜோன் கெபோ நியூபவுன்லாந்து அருகில் உள்ள கேப்பிரிட்டன் தீவை கண்டு பிடித்ததினால் ஆங்கிலேயர் வட அமெரிக்காவில் தமது அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொண்டமை.
* 16 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரான்சிஸ் டிரேக், கில்பர்ட், வொல்டர் ரெலே என்பவர்களின் நாடுகாண் பயணங்களால் வட அமெரிக்காவின் சென் லோரன் ஸிலிருந்து புளோரிடா வரை உள்ள பகுதிகள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன. ஐரோப்பியரிடம் இருந்து எழுந்த வர்த்தகப் போட்டி காரணமாக கீழைத்தேயங்களில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவியது.
* ஆங்கிலேயர் இந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டியமை.
* இலங்கையில் காலனித்துவத்தை ஏற்படுத்தியமை.

பிரான்ஸ்

* 1535 ஆம் ஆண்டு ஜெக்விஸ்காடியரினால் வட அமெரிக்காவின் சென்லோறன்ஸ் நதி கண்டுபிடிக்கப்பட்டது.
* தெம்பிலேன் மாக்கிட்டே , 1608 இல் கியூபெக்கை கண்டுபிடித்தமை.
* ஜொய்லட், லாசலே ஆகியோர் மிசிசிப்பி பள்ளத்தாக்கை ஆராய்ந்ததன் பயனாக கனடாவில் சென்லோறன்ஸ் நதியிலிருந்து மிசிசிப்பி கழிமுகம் வரையான பிரதேசம் பிரான்சின் வசமாகியது.
* பிரான்சிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் ஏற்பட்ட வர்த்தகப் போட்டியினால் பிரான்சின் அதிகாரம் கீழைத்தேய நாடுகளில் பரவியது.
* இந்தியாவில் பாண்டிச்சேரியை மத்திய நிலையமாக உருவாக்கியமை.
* இலங்கையில் திருகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றி தம் வசம் வைத்திருந் தனர். (மீண்டும் அதை ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டனர்)

பெல்ஜியம்

* 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கொங்கோவை கைப்பற்றிக் கொண்டனர்.

டென்மார்க்

* இந்து சமுத்திரத்தில் வர்த்தக ஆதிக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் டென்மார்க் கீழைத்தேய நாடுகளுக்கு வந்தாலும் தமது எதிர்ப்பார்ப்பு நிறைவேறாது போகவே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. (உதா : மலைநாட்டில் சேனரத் மன்னன் காலத்தில் ஒல்லாந்தனான மாசல்ஸ் த பொஸ்குவரின் வேண்டுகோளின் படி டென்மார்க் படைகள் இலங்கைக்கு உதவி அளிக்க வந்தாலும் மன்னர் விரும்பாமை யால் மீண்டும் டென்மார்க்கை அடைந்தமை.)

## 10.8.2 கிறிஸ்தவ சமயத்தின் பரவல்

- ஐரோப்பிய நாடுகாண் பயணிகளின் நோக்கம் வர்த்தகமும் சமயப்பிரச்சாரமுமாகும்.
- இக்காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட சமயச்சீர்த்திருத்தங்களுக்கேற்ப பல்வேறு சமயப் பிரிவுகள் தோன்றின.
- தாம் பின்பற்றிய கிறிஸ்தவ சமயப்பிரிவின் கொள்கைகளைத் தான் கைப்பற்றிய பிரதேசங் களிலும் பிரச்சாரம் செய்தனர்.
- இதற்காகப் பல்வேறு முறைகளைக் கையாண்டனர்.
  * உத்தியோகங்களை வழங்குதல்.
  * கல்வி போன்றன.

## செயற்பாடு 10.8.1

தேர்ச்சி : ஐரோப்பிய அதிகார விரிவாக்கம் ஏற்பட்ட முறையைக் கற்பார்.

தேர்ச்சி மட்டம் : ஐரோப்பியர் தங்களது அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொண்ட முறையை விபரிப்பார்.

செயற்பாடு : "ஐரோப்பிய அதிகார விரிவாக்கம்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - நாடுகாண் பயணங்களைக் காட்டும் தேசப்படம்
- இணைப்பு 2 - செயற்பாட்டு படிவம்
- இணைப்பு 2 - காலணித்துவ ஆக்கம் நாடுகளின் கொண்ட தேசப்படம்
- மாக்கர் பேனா/ டிமை கடதாசி

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.8.1.1 :

- நாடுகாண் பயணம் என்றால் என்ன?
- நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டவர்கள் யாவர்?

என்ற வினாக்களை மாணவர்களிடம் வினவி கீழ்க் காணும் விடயங்கள் வெளிக் கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- போர்த்துக்கல், ஸ்பெய்ன்; ஒல்லாந்தது, இங்கி லாந்து, பிரான்சு, பெல்ஜியம், டென்மார்க் ஆகிய நாடுகள் தங்களது அதிகாரத்தை ஐரோப்பாவுக்கு அப்பால் விரிவாக்குவதற்குகான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- தேசப்படத்தை அடிப்படையாகக் கொண்டு ஸ்பானியர் மெக்சிகோவையும் பேருவையும் கண்டு பிடித்தற் அங்கிருந்த சுதேசிகளை வெற்றி கொண்டு தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.
- கிறிஸ்டோபர் கொலம்பஸ் கரிபியன் தீவுகளைக் கைப்பற்றி ஸ்பானியர்களுக்கு வழங்கியமை.
- மகலனின் நாடுகாண் பயணத்தின் பயனாக பிலிப்பைன் தீவுகள் ஸ்பானியருக்கு சொந்தமானது.
- 1487 இல் பத்தலோமிய டயஸ் நன்னம்பிக்கை முனைக்கு வந்து ஆபிரிக்காவின் கரையோரப் பிரதே சங்களை கைப்பற்றி அதிகாரத்தை நிலை நிறுத் தியமை.

- 1498 இல் கள்ளிக் கோட்டைக்கு வாஸ்கொடகாமாவும் 1505 இல் இலங்கைக்கு லோறன்ஸ்சோ டி அல் மெய்டாவும் வந்தமை.
- 1500 இல் தென் அமெரிக்காவில் பிரேசில் கண்டு பிடிக்கப்பட்டது.
- பலம் பொருந்திய கத்தோலிக்க இராச்சியங்களான ஸ்பானியா, போர்த்துக்கல் ஆகியவற்றுக்கு 1493 இல் அப்போதிருந்த 6 ஆம் அலக்சாண்டர் எனும் பாப் பாண்டவரினால் உலகப்படம் இரண்டாகப் பிரித்து வழங்கினார்.
- 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் ஆட்சி அதிகாரம் எழுச்சியடைந்தது.
- 1609 இல் வட அமெரிக்காவில் ஹட்சன் பிரதேசத்திலும் 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா, இலங்கை, கிழக்கிந்திய தீவுகள், பத்தேவியா போன்ற பிரதேசங்களிலும் அதிகாரத்தை விரிவாக்கினர்.
- 15ம் நூற்றாண்டு நியூபவுன்லாந்திலும் 16 ஆம் நூற்றாண்டு வட அமெரிக்கப் பிரதேசங்களிலும் 16ம் நூற்றாண்டுகளில் ஆசியாவின் பல பிரதேசங்களிலும் ஆங்கிலேயர் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டியமை
- 1535 இல் வட அமெரிக்காவில் லோறன்ஸ் நதிப்பிர தேசமும் 1608ல் கியூபெக் பிரதேசமும் பிரான்சினால் கண்டுபிடிக்கப்பட்டது. பிரான்சு, இங்கிலாந்து அதிகாரப் போட்டியினால் கீழைத் தேய நாடுகளில் பிரான்சின் அதிகாரம் விரிவாக்கமடைந்தது. இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்திற்கு வந்தமை. பாண்டிச்சேரி அவர்களின் தலைமை நிலையமாக விளங்கியமை.
- 19ம் நூற்றாண்டில் பெல்ஜியம் கொங்கோவை வெற்றிக் கொண்டது.
- டென்மார்க் படை ஒல்லாந்தரின் வேண்டுகோளுக் கிணங்கி இங்கே வந்தாலும் செனரத் மன்னனின் எதிர்ப்பினால் திரும்பிச் செல்ல நேர்ந்தது.
- மேலைத்தேய மக்கள் பல்வேறு பொருட்களை கீழைத் தேய நாடுகளிலிருந்து கொண்டு சென்றனர்.
- மேலைத்தேய மக்களின் பழக்க வழக்கங்களை கீழைத் தேய மக்கள் பின்பற்றத் தொடங்கினர்.

(40 நிமிடங்கள்)

படி 10.8.1.2 :

- வகுப்பு மாணவர்களைத் தேவைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- இணைப்பு 1 இலுள்ள செயற்பாட்டு படிவங்களை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கவும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் செயற்பாடுகளை இலகு வாக்குவதற்குத் தேவையான அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்குக.

(20 நிமிடங்கள்)

படி 10.8.1.3 :

- ஒவ்வொரு குழுவும் செய்த செயற்பாடுகளுக்குரிய தகவல்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் மற்றைய குழுக்கள் முன்வைத்த விடயங்களிலுள்ள நிறை, குறைகளை மதிப்பிடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த தகவல்கள் தொடர் பான கருத்துக்களை முன்வைக்க மற்றைய குழுவுக்கு சந்தர்ப்பம் அளிக்குக.
- செயற்பாடுகளைப் பாராட்டுக.
- கீழ்க் காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுக.

- ஸ்பானியாவில் பேர்டினந்து மன்னன், இசபெலா அரசி, ஹென்றி இளவரசன் போன்ற ஆட்சியாளர்கள் கடலோ டிகளுக்கு உதவினர்.
- ஐரோப்பியர் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர்.
- ஐரோப்பியர் அப்பிரதேசங்களிலிருந்து எடுத்துச் சென்ற பொருட்களை கொண்டு செல்வந்தராகினர்.
- மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்கும் காலனித் துவ ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

(20 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- ஐரோப்பாவிற்கு வெளியே தமது ஆதிக்கத்தை விரிவாக்கிய நாட்டினரைப் பற்றியும் அவர்களுக்கு உதவி அளித்த நபர்களைப் பற்றியும் விபரிப்பார்.
- ஐரோப்பியர் காலனித்துவத்தை உருவாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பற்றிப் புகழ்ந்துரைப்பார்.
- ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்க நாடுகளை அட்டவணைப்படுத்துவார்.
- குழு முறையில் செயற்பாடுவார்.
- தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்துவார்.
- இணைப்பு 1,2 இல் குறிப்பிடப்பட்டுள்ள படத்தைக் குறித்துப் பெயரிடுவார்.

பின்தொடர்வேலை :

இணைப்பு 1,2 இல் இருக்கும் படங்களை தனித்தனியாக அடையாளப்படுத்துவதற்காக மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

- காலனித்துவத்துவ நாடுகளைத் தேடிச் சென்ற நபர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுங்கள்.

# இணைப்பு 1

## செயற்பத்திரம்

- காலனித்துவத்தை உருவாக்கிக் கொண்டது தொடர்பாக கீழ்க்காணும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நாடுகாண் பயணங்களை மேற்கொண்ட நாடுகள் | நாடுகாண் பயணிகள் | ஒத்துழைப்பு வழங்கியவர்கள் | கைப்பற்றிய நாடுகள் |
|---|---|---|---|
| | | | |

- இவ்வட்டவணையை வகுப்பில் காட்சிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்குக.
- இதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

இணைப்பு 2


15, 16 ஆம்
நூற்றாண்டின்
நாடுகாண் பயணம்
ஆங்கிலேயர்
ஸ்பானியர்
போர்த்துக்கல்
பிரான்க
ஒல்லாந்து
ஆசியா
இந்து சமுத்திரம்
பசுபிக் சமுத்திரம்
தென் அமெரிக்கா
வட அமெரிக்கா
மாகனின்

# அலகு 10.9

# இலங்கையும் மேலைத்தேயரும்

# (7 பாடவேளைகள்)

## அறிமுகம்

கி.பி. 16ம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையின் வரலாற்றில் நவீன காலம் ஆரம்பமாகின்றது. மேலை நாட்டவரின் வருகையோடு தேசிய அரசுகள் அரசியல் ரீதியாக பலவீனப்பட்டதனால், இலங்கை அவர்களின் காலனித்துவ நாடானது பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதே இவ்வலகின் நோக்கமாகும். இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளதனால் மேலைத்தேயரின் விசேட அவதானிப்பிற்கு உட்பட்டது. இதனால் அவர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு தங்களது வர்த்தக அதிகாரங்களை இலங்கையில் நிலைநிறுத்த முயற்சித்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் வர்த்தக சாம்ராச்சியத்தை நிலை நிறுத்துவதற்காக, இலங்கையின் அரசியல் அதிகாரத்தை தந்திரோபாயமாகக் கைப்பற்றியதனால், இலங்கையில் அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம் என்பற்றில் இக்காலப்பகுதியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே இக்காலப்பகுதியை கற்பது மிகவும் அவசியமாகின்றது.

**தேர்ச்சி** : இலங்கையருக்கும் மேலைத்தேயருக்கிடையில் ஏற்பட்ட தொடர்புகளை நுணுகியாராய்வார்.

**தேர்ச்சி மட்டங்கள்** :

- கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை போன்ற இராச்சியங் களுடன் போர்த்துக்கேயர் கொண்டிருந்த தொடர்புகளை நுணுகியாராய்வார்.
- மேலைத்தேயர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர் புகளை விசாரணை செய்வார்.

## பாட உள்ளடக்கம்: (பாடவேளைகள் 7)

## 10.9 இலங்கையும் மேலைத்தேயரும்

### 10.9.1 கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்கள் போர்த்துக்கேயருடன் கொண்டிருந்த தொடர்புகள்

#### கோட்டையும் போர்த்துக்கேயரும்

- கி.பி 1505 இல் போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்திற்கு வர்த்தக நோக்குடன் வந்தமையும் கொழும்புத் துறைமுகத்தில் வர்த்தகக் கோட்டையைக் கட்டியெழுப்பியமையும்.
- 1521 இல் விஜயபாகு கொள்ளையின் பின்னர் கோட்டை இராச்சியத்தில் 7 ஆம் புவனேகபாகுவின் பாதுகாவலர்களாகப் போர்த்துக்கேயர் செயல்பட்டனர்.
- கோட்டை இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதும் வர்த்தக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலும்.
- கி.பி 1551 இல் குழந்தை தருமபால இளவரசனை கோட்டை சிம்மாசனத்தில் இருத்தி ஆட்சி அதிகாரத்தைத் தாம் கைப்பற்றிக் கொண்டனர்.
- தருமபால இளவரசனின் உருவத்தை போர்த்துக்கலுக்கு அனுப்பி முடி சூட்டி கத்தோலிக்கராக ஞானஸ்நானம் வழங்கினர்.
- 1597 இல் தருமபாலனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியத்தை நன்கொடையாகப் பத்திரத்தின் மூலம் போர்த்துக்கேயர் அபகரித்துக் கொண்டனர்.
- கோட்டை இராச்சியத்தின் அதிகாரத்தை நிலை நிறுத்திய போர்த்துக்கேயர், சீதாவாக்கை இராச்சியத்தையும் கைப்பற்றுவதற்கு யுத்தம் புரிந்தனர்.

#### யாழ்ப்பாணமும் போர்த்துக்கேயரும்

- யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதே போர்த்துக்கேயரின் பிரதான நோக்கமாக இருந்தது.
- கி.பி 1543 இல் முதலாவது சங்கிலி மன்னனுக்கு எதிராக போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தனர்.
- கி.பி 1591 இல் போர்த்துக்கேயருடன் நட்பு கொண்ட பரராசசேகரனிடம் ஆட்சியை ஒப்படைத்து கப்பம் பெற்றுக் கொண்டனர்.
- 1617ல் யாழ்ப்பாணத்தை போர்த்துக்கேயர் கைப்பற்றிக் கொண்டனர்.

#### சீதாவாக்கையும் போர்த்துக்கேயரும்

- சீதாவாக்கையில் மாயாதுன்னை மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிராக கடும்போக்கை கடைப்பிடித்தமை.
- கள்ளிக்கோட்டை சமோரின் கடற்படையின் உதவியுடன் கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரைத் தாக்கினான்.
- சீதாவாக்கை இராச்சியத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட போர்த்துக்கேயருக்குத் தடை விதித்து முஸ்லிம் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கினார்.
- 1562ல் மாயாதுன்னை மன்னன், டிக்கிரி குமாரனின் தலைமையில் மேற்கொண்ட போரில் முல்லேரியாவில் போர்த்துக்கேயர் படு தோல்வியடைந்தனர்.
- 1597 இல் முதலாம் இராஜசிங்க மன்னனின் மரணத்தின் பின்னர் சீதாவாக்கை இராச்சியம் பலவீனமடைந்ததனால் போர்த்துக்கேயர் சீதாவாக்கை இராச்சியத்தோடு ரைகமத்தையும் தம்மோடு இணைத்துக் கொண்டனர்.

## 10.9.2 கண்டி இராச்சியத்துடன் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் கொண்டிருந்த தொடர்புகள்

### கண்டி இராச்சியமும் போர்த்துக்கேயரும்

- மலையக ஜயவீர பண்டார மன்னன், சீதாவாக்கை மன்னனான மாயாதுன்னையினால் மலையகத்திற்கு ஏற்படும் இடையூறுகளை அகற்றுவதற்கு போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். அதனால் 1542ல் முதலாவதாக போர்த்துக்கேயர் படை மலையகத்திற்குச் சென்றது.
- மலையக இராச்சியத்தின் உரிமையாளரான குசுமாசன தேவியும், யமசிங்கபண்டாரவும் போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தனர்.
- மலையக பிரபுவான வீர சுந்தர பண்டாரவின் மகன் கோனப்பு பண்டாரவும் போர்த்துக்கேயரின் பாதுகாப்பின் கீழ் ஆஸ்திரியாவில் தொன்யுவான் என்னும் பெயரில் ஞானஸ்நானம் பெறுதல்.
- கோனப்பு பண்டார போர்த்துக்கேயரின் உதவியுடன் படைகளை அனுப்பி அரசாட்சியை பெற்றுக் கொண்டதன் பின்னர், போர்த்துக்கேயருக்கு எதிராக யுத்தம் செய்தான்.
- முதலாம் விமலதர்ம சூரியன் 1592 இல் மலையக இராச்சியத்தின் மன்னனானான்.
- 1ம் விமலதர்மசூரியன் போர்த்துக்கேயருக்கு எதிராகக் கடும் போக்கைபட பின்பற்றினான்.
- 1594ல் தந்துர போரில் விமலதர்ம சூரியன் போர்த்துக்கேயரை படுதோல்வியடையச் செய்தான்.
- 1638ல் கன்னொருவ யுத்தத்தில் 2ம் இராஜசிங்கனிடம் போர்த்துக்கேயர் தோல்வியடைந்தனர்.
- 1630ல் ரந்தெனிவெல என்னும் இடத்தில் 2 ஆம் இராஜசிங்க மன்னனிடம் போர்த்துக்கேயர் தோல்வியடைந்தனர்.
- 2 ஆம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிரான போக்கைக் கடைபிடித்தான்.
- ஒல்லாந்தருடன் 1638ல் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு 1658ல் போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து துரத்தி அடித்தான்.

### கண்டி இராச்சியமும் ஒல்லாந்தரும்

- 1602ல் ஜோஜ் பன் ஸ்பீல்பேஜன் எனும் ஒல்லாந்துத் தளபதி 1ம் விமலதர்மசூரியனை சந்திக்க மலையகத்திற்கு விஜயம் செய்தான்.
- 2ம் இராசசிங்க மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிரான போக்கை கடைப்பிடித்தான்.
- 1638ல் ஒப்பந்தம் ஒல்லாந்தருக்கு மிகவும் சாதகமாக இருந்ததும் 1658ல் போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களை ஒலலாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். இது ஒல்லாந்தர் அடைந்த பாரிய வெற்றியாகும்.
- ஒல்லாந்தர் மலையக மன்னனிடம் நட்புறவுடன் செயல்பட்டனர். மன்னனுக்கு இந்தியாவி லிருந்து நாயக்க வம்ச இளவரசியை கொண்டு வரவும், சீயம் நாட்டின் உபசம்பதா சடங்கு முறைகளை செய்விக்கவும் கடற்படையைக் கொடுத்து உதவினார்.
- 1766 இன் ஒப்பந்தத்தின் பின்னர் கரையோரப்பிரதேசங்கள் அனைத்தும் ஒல்லாந்தர் வசமானது.
- ஒல்லாந்தர் தமது அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள மலையக இராச்சியத்தை வெளியு லகத்துடன் தொடர்பு அற்றதாக்கத் தலைப்பட்டனர்.
- மலையக இராச்சியத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படும் வண்ணம் ஒல்லாந்தர் துறைமுகங்களை மூடினர்.
- மலையக இராச்சியத்தின் வர்த்தக உரிமைகளை ஒல்லாந்தர் இழந்தனர்.

## கண்டி இராச்சியமும் ஆங்கிலேயரும்

- கி.பி 1662ல் ஜோன் பைவஸ் என்னும் தூதுவன் மலையகத்திற்கு விஜயம் செய்தான்.
- 1796ல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒல்லாந்தரிடம் இருந்த கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி ஒப்படைத்தனர்.
- நாட்டின் மத்திய பகுதியில் ஒரு சுதந்திரமான இராச்சியம் இருப்பது ஆபத்து என உணர்ந்த பிரடறிக் நோர்த், தோமஸ் மெயிற்சென்ட், ரொபெட் பிரௌன்றின் ஆகிய ஆளுநர்கள் மலையக இராச்சியத்தை கைப்பற்ற முயன்றனர்.
- மலையகத்தைக் கைப்பற்ற, பலன் அளிக்காத சில படையெடுப்புகளை மேற்கொண்டனர்.
- சில மலையக நில் பிரபுக்கள் பிரித்தானியருக்கு உதவி நல்கினர்.
- கொழும்பையும் திருகோணமலையையும் இணைப்பதற்கு மலையக இராச்சயத்தினூடாக பாதையை உருவாக்க மலையகத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.
- 1815ல் ரொபட் பிரௌன்றிக் ஆளுநர் மலையக நிலப்பிரபுக்களுடன் ஒன்றிணைந்து கையொப்பம் இட்ட மலையக ஒப்பந்தத்தின் மூலம் மலையக இராச்சியம் பிரித்தானியர்க ளுக்கு உரித்தாயிற்று.

## செயற்பாடு 10.9.1

தேர்ச்சி மட்டம் : கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்களும் போர்த்துக்கேயரும்

செயற்பாடு : "காலணித்துவ ஆதிக்கத்தின் நிழல்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - தேசப்படம்
- இணைப்பு 2 - செயற்பத்திரம்
- மூலாதார நூல்கள்
- இலங்கையின் வரலாறு மூன்றாம் பாகம் (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)
- பாடப்புத்தகத்தில் கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்களுடன் மேற்கொண்டிருந்த தொடர்பு என்ற அலகு

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.9.1.1 :

- இலங்கையை அடிமைப்படுத்திய மேற்கைத்தேய தொடர்பாக மாணவர்கள் அறிந்துள்ள தகவல்களைக் கேட்டறிந்து, பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவும்.

- இலங்கை வருகை தந்த மேற்கத்தேயருள் போர்த்துக் கேயரும் அடங்குவர்.
- அவர்கள் வியாபாரிகளாக இலங்கைக்கு வந்தனர்.
- வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதும் கத் தோலிக்க சமயத்தைப் பரப்புவதுமே ,அவர்களின் நோக் கமாகும்.
- இலங்கையில் காணப்பட்ட பலவீனமாக அரசியல் சூழ் நிலையின் காரணமாக அனேக இடங்களை அவர்கள் கைப்பற்றக் கூடியதாக இருந்தது.
- விஜயபாகு கொள்ளையின் பின்னர் கோட்டை இராச்சியம் கோட்டை, சீதாவாக்கை, ரைகம என மூன்று பிரிவுகளாகப் பிரிந்தது பற்றி
- யாழ்ப்பாணம் சுதந்திர இராச்சியமாக இருந்தது பற்றி
- கோட்டை இராச்சிம் போர்த்துக்கேயரின் பாதுகாப்பில் இருந்தது பற்றி
- சீதாவாக்கை இராச்சியத்தின் மன்னர்களான மாயாதுன் னையும் முதலாம் இராஜசிங்கனும் போர்த்துக்கேய ருக்கு எதிரான போக்கை கடைபிடித்தது பற்றி
- 16ம் நூற்றாண்டில் இலங்கை அரசியல் பிளவு பட்டு பிரிந்து சென்றது பற்றி

(15 நிமிடங்கள்)

படி 10.9.1.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- இணைப்பு 2 இலுள்ள செயற்பத்திரத்தை வழங்குக.
- குழுக்களுக்கு ஏற்றாற்போல விடய ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்களின் ஆக்கங்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

*(25 நிமிடங்கள்)*

படி 10.9.1.3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தகவல்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைக் கலந்துரையாடுக.
- கருத்துக்களின் உண்மைத்தன்மையைக் கேட்டறிதல்.
- குழுச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தொகுப்புரை வழங்குக.

- கத்தோலிக்க மதத்தை பரப்புவதற்கும் கருவாவை பெற்றுக் கொள்வதற்காகவுமே கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை போர்த்துக்கேயருக்கு ஏற்பட்டது.
- கோட்டை இராச்சியத்தில் கத்தோலிக்க சமயப் பரவல் வெற்றியளித்தமை.
- தருமபால இளவரசன் மன்னன் ஆகியதனால் கோட்டை தம் வசமாகியது.
- மல்வானை ஒப்பந்தத்தின் மூலம் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் வசமானது.
- யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைகளை தெரிந்து கொள்ளுதல்.
- யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க சமயம் பரவுதலில் வெற்றி பெற்றமை.
- முதலாம் சங்கிலி மன்னனுக்கு எதிராக போர்த்துகேயர் ப்டையெடுத்தனர்.
- கோட்டை இராச்சியத்தைப் போன்றே யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் தங்களுடன் உடன்படக்கூடிய மன்னனை நியமித்தது.
- மன்னன் பரராசசேகரன் போர்த்துக்கேயருக்கு கப்பம் கொடுத்தது.
- போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டமை.
- கருவாவை பெற்றுக் கொள்வதும் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்குமே சீதாவாக்கை இராச்சியத்தை கைப்பற்றுவது போர்த்துக்கேயருக்கு அவசியமாக இருந்தது.

- சீதாவாக்கையின் அதிகார எல்லையினை தெரிந்து கொள்வது.
- சீதாவாக்கை இராச்சியத்தின் மாயாதுன்னை மன்னனும் 1ம் இராச சிங்கனும் போர்த்துக்கேயருக்கு எதிராக போர் செய்தமை.
- கள்ளிக்கோட்டை சமோரினது கடற்படை ஆதரவுடன் மாயாதுன்னை போர்த்துக்கேயரை விரட்டியமை.
- சீதாவாக்கை இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் வர்த்தக நடவடிக்கைகளை தடைசெய்தமை.
- முஸ்லீம் வர்த்தகர்களுக்கு மாத்திரம் வர்த்தக நடவடிக்கைக்கு இடம் கொடுத்தது.
- முதலாவது ராஜசிங்க மன்னனின் போர் ஆற்றல் காரணமாக முல்லேரியா யுத்தத்தில் போர்த்துக்கேயர் தோல்வியுற்றனர்.
- முதலாவது இராஜசிங்கனின் மரணத்தின் பின்னர் சீதாவாக்கை போர்த்துக்கேயர் வசமானது.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- இலங்கையில் போர்த்துக்கேயர் கைப்பற்றிய இராச்சியங்களின் பெயர்களை குறித்துப் பெயரிடுவார்.
- போர்த்துக்கேயர் கைப்பற்றிய இராச்சியங்களைத் தேசப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுவார்.
- நாடு ஒன்று அரசியல் ரீதியாக பலவீனமடையும் போது எதிரிகளுக்கு இரையாகும் என்பதை ஏற்றுக் கொண்டு கலந்துரையாடுவார்.
- ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் கருமமொன்றை திறம்படச் செய்யும் ஆற்றலைப் பெறுவார்.
- செயற்பாட்டின் போது தாமாக முன்வந்து செயற்படுவார்.

**பின்தொடர்வேலை :**

- இலங்கைத் தேசப்படத்தில் போர்த்துக்கேயர் கைப்பற்றிய இடங்களைக் குறித்துப் பெயரிடுவார்.

# இணைப்பு 1

## செயற்பத்திரம்

### குழு 1

உங்கள் குழுவினர் கோட்டை இராச்சியத்துடன் போர்த்துக்கேயர் கொண்ட தொடர்பை கற்பார்.

I போர்த்துக்கேயருக்கு கோட்டை இராச்சியத்துடன் தொடர்பு ஏற்படுவதற்கு ஏதுவாயமைந்த காரணிகளை முன்வைப்பார்.

II போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட முறையை விளங்கிக் கொள்வார்.

IV போர்த்துக்கேயர் கோட்டையைக் கைப்பற்றிய முறையை விபரிக்குக.

குழுவினூடாகத் தகவல்களை வகுப்பில் முன்வைக்குக.

### குழு 2

உங்கள் குழுவின் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயருக்குமிடையிலான தொடர்பைக் கற்பார்.

I போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்பு கொள்ள ஏதுவாயமைந்த காரணிகளை யாவை?

II போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய விதத்தை விளக்குக.

குழு முறையில் தகவல்களை வகுப்பில் முன்வைக்குக.

### குழு 3

உங்கள் குழு சீதாவாக்கை இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயருக்குமிடையிலுள்ள தொடர்புகளைக் கற்பார்.

I போர்த்துக்கேயர் சீதாவாக்கை இராச்சியத்துடன் தொடர்பு கொள்ள எவ்வகையான கொள்கைகளைப் பின்பற்றினர் என்பதை விளக்குக.

II சீதாவாக்கை இராச்சியம் போர்த்துக்கேயர் தொடர்பாகப் பின்பற்றிய கொள்கையைக் குறிப்பிடுக.

III முதலாம் இராஜசிங்கனது போராட்டத்தைப் பற்றிய பாடல் ஒன்றை முன்வைக்குக.

IV போர்த்துக்கேயர் சீதாவாக்கை இராச்சியத்தை எவ்வாறு கைப்பற்றினர்?

பாடல்

பால் மனம் மாறா பாலகனே
யுத்த முனைக்கு போனவனே
முல்லேரியாவில் செந்நீர் ஓடச்செய்தவனே
இராஜ சிங்கனான டிக்கிரி குமாரனே

குழு முறையில் தகவல்களை முன்வைக்கச் செய்க.

### பின் குறிப்பு

குழுக்கள் முன்வைத்த தகவல்களை, மாணவர்கள் தொகுத்து எழுதிக்கொள்ள ஏற்பாடு செய்க.

விஜயபா கொள்ளையின் பின்னரான அரசியல் பிரிவு




யாழ்ப்பாண
இராச்சியம்
கோட்டை
மலை நாடு
சீதவாக்கை
கொழும்பு
கோட்டை
மரகமை
காலி

## செயற்பாடு 10.9.2

**தேர்ச்சி மட்டம் :**

- மேலைத்தேயர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொர்புகளை விசாரணை செய்வார்.
- கண்டி இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் நிலவிய கற்பார்.

**செயற்பாடு :** "கண்டி இராச்சியமும் போர்த்துக்கேயரும்"

**காலம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 1 - பாடல்
- இணைப்பு 2 - செயற்பத்திரம்
- பாடப்புத்தகத்தில் போர்த்துக்கேயருக்கும் கண்டி இராச்சியத்துக்குமிடையிலான தொடர்பு என்ற பாடம்
- இலங்கையின் வரலாறு III ம் பாகம் (கல்வி வெளியீட்டுத்திணைக்களம்)

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 10.9.2.1 :**

- இணைப்பு 1 ஐ வகுப்பில் முன் வைக்கவும்.
- அதில் உள்ள பாடலை கரும்பலகையில் எழுதிக் காட்டுங்கள்.

  I பாடலை மாணவர்களிடம் முன் வையுங்கள்.
  II குசுமாசன தேவி என குறிப்பிடப்படுபவர் யார்?
  III அவருக்குரிய அரசுரிமை யாது?
  IV போர்த்துக்கேயரின் பாதுகாப்பில் இருந்த மலையக பிரபுக்கள் யாவர்? அவர்கள் எப் பெயர்களினால் அழைக்கப்பட்டனர்?

  போன்ற வினாக்களை வினவி போர்த்துக்கேயர் மலையக இராச்சியத்துடன் தொடர்பு கொண்டிருந்த தொடர்புகளை விளங்கிக் கொள்ள இடம் அளியுங்கள்.
- பாடப்புத்தகத்தையும் வேறு மூலாதாரங்களையும் கொண்டு கீழ்க் காணும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலை மேற்கொள்க.

- மலையக இராச்சியம் தொடர்பான சட்ட பூர்வமான உரிமை கொண்டிருந்த குசுமாசன தேவி போர்த்துக் கேயரின் பாதுகாப்பில் இருந்தமை.
- கோணப்பு பண்டார, யமசிங்க பண்டார இருவரும் போர்த்துக்கேயரின் பாதுகாப்பில் இருந்தமை.
- கோணப்பு பண்டார, விமல தர்ம சூரியன் என்ற பெயரில் செங்கடகல இராச்சியத்தின் மன்னனாக நியமிக்கப்பட்டமை.
- குசுமாசன தேவியை மணம் செய்து கொண்டமை.
- 1ம் விமல தர்ம சூரியன் மலையக இராச்சியத்திற்கு மன்னானதின் பின்னர் போர்த்துக்கேயருக்கு எதிரான போக்கை கடை பிடித்தான்.

(10 நிமிடங்கள்)

**படி 10.9.2.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறை யில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- இணைப்பு 2 இலுள்ள செயற்பத்திரத்தை மாணவர் களுக்கு வழங்குக.
- குழுக்களுக்கு ஏற்ற வகையில் விடய ஆராய்ச்சியில் ஈடுபடுத்துங்கள்.
- செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- பாட்ப்புத்தகத்தையும் ஏனைய மூலாதாரங்களையும் பயன்படுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 10.9.2.3 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் தகவல்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்கள் முன்வைக்கும் கருத்துக்களை கலந்துரை யாடுக.
- கீழ் கண்ட விடயத்தில் கவனத்தைச் செலுத்தி தொகுப்பு ரையை வழங்குக.
- குழுவினரின் தகவல்கள் உள்ளடக்கிய சாரம்சத்தை பயிற்சி புத்தகத்தில் சேர்த்துக்கொள்ள இடம் அளிக்குக.

- கருவாவை பெற்றுக் கொள்வதும் கத்தோலிக்க சம யத்தை பரப்புவதுமே போர்த்துக்கேயர் மலையகத் தைக் கைப்பற்றுவதற்கான நோக்கமாக இருந்தது.
- போர்த்துக்கேயர் மலையக இராச்சியம் தொடர்பாக நாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் செயற்பட்டமை.
- 1ம் விமல தர்ம சூரியனைப் போல 2ம் இராஜசிங்கனும் போர்த்துக்கேயருக்கு எதிரான கடும் போக்கை கொண் டிருந்தமை.

- தந்துர, ரந்தெனிவெல, கண்ணொருவ ஆகிய இடங்களில் நடைபெற்ற யுத்தங்களின் போது போர்த்துக்கேயர் தோல்வியுற்றமை.
- மலையக மன்னர்கள் பலன கணவாயை பலத்த காவலிட்டு பாதுகாத்தமை.
- 2ம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை விரட்டுவதற்கு ஒல்லாந்தரின் உதவியை நாடினர்.
- 1658ல் போர்த்துக்கேயர் இலங்கையிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டமை.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- போர்த்துக்கேயர் மலையக இராச்சியம் தொடர்பாக நாட்டை கைப்பற்றும் கொள்கையை பின்பற்றினர் என்பதை விளக்குவார்.
- போர்த்துக்கேயரின் அதிகார விரிவாக்கத்தையும் மலையக இராச்சியத்தையும் தேசப்படம் ஒன்றில் வரைந்து குறிப்பார்.
- போர்த்துக்கேயருக்கும் மலையக இராச்சியத்திற்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தின் போது மலையக இராச்சியத்திற்கே வெற்றி கிட்டியது பற்றியும் பெருமிதம் கொள்வார்.
- குழு முறையில் இயங்கி ஒற்றுமையைக் காட்டுவார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் தாமாக முன்வந்து செயற்படுவார்.

**பின்தொடர்வேலை :**

- போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களையும் மலையக இராச்சியத்தையும் குறிக்கும் எல்லைகளை தேசப்படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார்.

## இணைப்பு 1

வேறு ஊர் எதற்கு? பேர் எதற்கு?
இதயம் எனும் செங்கட கலையில்
கரலியத்த பண்டார எங்கே?
குசுமாசன டோன கெதரினா எங்கே?

## இணைப்பு 2

### செயற்பாட்டு படிவம்

குழு 1

I போர்த்துக்கேயர் மலையக இராச்சியம் தொடர்பாக எத்தகைய கொள்கைகளைப் பின்பற்றினர் என்பதை விளக்குக.
II போர்த்துக்கேயர் மலையகத்திற்கு மேற்கொண்ட படையெடுப்புத் தொடர்பாக சரித்திரப் பிரசித்தி பெற்ற போரின் பெயர் என்ன?
III இலங்கை தேசப்படத்தில் செங்கடகல, மகாவலி கங்கை ஆகியவற்றைக் குறித்துப் பெயரிடுக.
IV குழு முறையில் தகவல்களை முன்வைக்குக.

குழு 2

I மலையக மன்னர்கள் போர்த்துக்கேயர் தொடர்பாக பின்பற்றிய கொள்கைகள் யாதென விபரிக்குக.
II 1ம் விமல தர்ம சூரிய மன்னன் பலன கணவாயை பாதுகாத்தது ஏன் என விளக்குக.
III இலங்கை தேசப்படத்தில் பலன கணவாய், களனி கங்கை ஆகியவற்றைக் குறித்துப் பெயரிடுக.
IV குழு முறையில் தகவல்களை முன்வைக்குக.

குழு 3

I போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டி அடிக்க 2ம் இராஜசிங்க மன்னன் எடுத்த நடவடிக்கைகளை விளக்குக.
II கண்ணொருவ யுத்தம் தொடர்பாக நீர் அறிந்த கவிதை ஒன்றை எழுதிக் காட்டுக.
III இலங்கை தேசப்படத்தில் ஹங்குராங் கெத்த, களு கங்கை ஆகியவற்றைக் குறித்துப் பெயரிடுக.
IV குழு முறையில் தகவல்களை முன்வைக்குக.

பின்தொடர் வேலை :

மலையக இராச்சியத்தின் எல்லையையும் போர்த்துக்கேயர் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களின் எல்லைகளையும் தேசப்படத்தில் குறித்துக் கொள்ள ஏற்பாடு செய்க.

## செயற்பாடு 10.9.3

தேர்ச்சி மட்டம் :

- மேலைத்தேய நாட்டினர் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொர்புகளை ஆராய்வார்.
- கண்டி இராச்சியத்துடன் ஒல்லாந்தர் கொண்டிருந்த தொடர்புகளை கற்பார்.

செயற்பாடு : "கண்டியும் போர்த்துக்கேயரும்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1
- இணைப்பு 2 - செயற்பாட்டு படிவம்
- இலங்கையின் வரலாறு III ம் பகுதி (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)
- பாடப்புத்தகத்தில் ஒல்லாந்தர் மலையக இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகளைக் காட்டும் பாடம்
- இலங்கைத் தேசப்படம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.9.3.1 :

- இணைப்பு 1 ஒப்பந்தப் படிவம்
- இதனை வகுப்பில் எல்லோருக்கும் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்துக.
- கோடிட்ட வாக்கியங்கள் தொடர்பாக கவனம் செலுத்துக.
- 1638 ல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் ஏன் முக்கியமாகக் கருதப்படுகின்றது.
- ஒல்லாந்தரின் தந்திரோபாயத்தைக் காட்டும் பகுதிகள் யாவை?
- ஒல்லாந்தர் யுத்தத்திற்கான செலவை திரட்டிக் கொண்டது எவ்வாறு?
- ஒப்பந்தம் யார் யாருக்கிடையில் இடம் பெற்றது?
- இவ்வாற்றான வினாக்களை முன்வைத்து, ஒல்லாந்தர் மலையக இராச்சியத்தில் 2ம் ராஜசிங்கனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரிவுகளை விளங்கிக் கொள்வதற்கு வழி செய்க.
- கீழ்க் காணும் விடயங்கள் தொடர்பாக அவதானத்தை செலுத்தி கலந்துரையாடலை மேற்கொள்க.

- 2ம் ராஜ சிங்க மன்னன் போர்த்துக்கேயரை நாட்டிலி ருந்து விரட்டி அடிப்பதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றுக் கொண்டமை.
- போர்த்துக்கேயரின் வர்த்தகக் கோட்டைகள் ஒல்லாந்தர் வசமானது.
- திருகோணமலை துறைமுகத்தின் உரிமை ஒல்லாந்த ருக்கு கிடைத்தது.
- போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட அனைத்து பிரதே சங்களும் ஒல்லாந்தருக்கு கிடைத்தன.
- மலையக மன்னர்கள் யுத்தச் செலவிற்காக கருவா வைக் கொடுத்ததனால் ஒல்லாந்தர் பொருளாதார ரீதியில் அதிக நன்மை அடைந்தனர்.
- ஒல்லாந்தரின் தந்திரோபாயத்தினால் அவர்களின் ஆட்சி அதிகாரம் மிக இலகுவாக இந்நாட்டில் பரவியது.

(15 நிமிடங்கள்)

படி 10.9.3.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறை யில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- 10.9.2.3 செயற்பாட்டுப் படிவத்தை மாணவர்களுக்கு பெற்றுத் தருக.
- குழுக்களுக்குரிய விடயங்களைத் தேடிக் கொள்வதற்கு இடம் அளிக்குக.
- பாடப்புத்தகத்தையும் ஏனைய மூலாதாரங்களையும் பரிசீலிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு குழுவிற்கும் தகவல்களை முன்வைக்கச் சந்தர்ப்பத்தைப் பெற்றுத்தருக.
- தரப்பட்ட விடயங்களைக் கலந்துரையாடுக.
- மற்றைய குழுக்களினது ஆலோசனைகளையும் தெரி விப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- தேவையான தகவல்களை மாணவர்களுக்கு குறித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர்களின் குறை நிறைகளையும் சிறப்பம்சங்க ளையும் இனங்கண்டு கீழ்க்காணும் விடயங்கள் வெளிப் படும் வண்ணம் தொகுப்புரை வழங்குக .

- 1602ல் பன் ஸ்பில்பேகன் என்னும் ஒல்லாந்த தூதுவன் மலையகத்திற்கு விஜயம் செய்தமை.
- 1638ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினால் மிக இலகுவாக தமது அதிகாரத்தை உறுதி செய்து கொண்டமை.
- 1658ல் ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் வசம் இருந்த எல்லாப் பிரதேசங்களையும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தமை.
- தென்னிந்தியாவில் நாயக்க வம்ச பெண்களை பெற்றுத் தர ஏற்பாடு செய்தது.

- பர்மாவிலிருந்து உபசம்பதா பெற்ற பிக்குகளை மலையகத்திற்கு கொண்டு வர கடற் படையினரின் உதவியைப் பெற்றுத் தந்தது.
- 1766ல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினால் ஒல்லாந்தர்களுக்கு இலங்கையில் கரையோர எல்லையிலிருந்து ஒரு காத தூரம் உரிமையானது.
- மலையக மன்னர்கள் ஒல்லாந்தர்களை மலையகத்துக்குள் நுழைய விடாது எல்லா நுழைவாயில்களையும் மூடி வைத்தது.
- மலையக இராச்சியத்தை வெளியுலகத்துடன் தொடர்பு ஏற்பாடாத வண்ணம் ஒல்லாந்தர் செயற்பட்டது.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- ஒல்லாந்தர் மலையக இராச்சியத்துடன் சமாதானக் கொள்கையை பின் பற்றிய முறையை விளக்குவார்.
- இலங்கை தேசப்படத்தில் ஒல்லாந்தர் வசம் இருந்த பிரதேசங்களை குறித்துக் காட்டுவார்.
- தந்திரோபாயமும் முடியுமானவரை யுத்த நடவடிக்கைகளிலிருந்து விலகி இருத்தலும் அரசியல் பொருளாதார ரீதியில் அதிக இலாபத்தை பெறுவதற்கு காரணமாக அமைந்தது என்பதை ஏற்றுக் கொண்டு உரையாற்றுவார்.
- குழுச் செயற்பாடுகள் வெற்றி பெற ஒத்துழைப்பார்.
- குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைப்பார்.

## பின்தொடர்வேலை :

- 1666 ஆண்டளவில் இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களை தேசப்படத்தில் வரைந்து குறிப்பார்.

# இணைப்பு 1

1638 ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள பிரிவுகள் சில

| 2ம் இராஜசிங்கனிடம் இருந்த பிரதி | ஒல்லாந்தரிடம் இருந்த பிரதி |
|---|---|
| • போர்த்துக்கேயர்களிடம் இருந்த வர்த்தக கோட்டைகளை மன்னன் விரும்பினால் மட்டுமே ஒல்லாந்தருக்கு பெற்றுக் கொடுத்தல்.<br>• திருகோணமலை துறைமுகத்தின் உரிமையை மன்னன் விரும்பினால் மட்டுமே ஒல்லாந்தருக்குப் பெற்றுக் கொடுத்தல்.<br>• போர்த்துக்கேயர் வசம் இருந்த பிரதேசங்களை மன்னன் விரும்பினால் மட்டுமே ஒல்லாந்தருக்குப் பெற்றுக் கொடுத்தல்.<br>• யுத்தத்திற்காக செலவினங்களை கருவாவினால் செலுத்துதல். | • போர்த்துக்கேயரிடம் இருந்த வர்த்தக கோட்டைகளில் உரிமையை பெற்றுக் கொடுத்தல்.<br>• திருகோணமலை துறைமுக உரிமையை பெற்றுக் கொடுத்தல்.<br>• போர்த்துக்கேயர் வசம் இருந்த பிரதேசங்களை ஒல்லாந்தருக்குப் பெற்றுக் கொடுத்தல்.<br>• யுத்தத்திற்கான செலவினங்களை கருவாவினால் மட்டுமே வழங்குதல். |

# இணைப்பு 2

குழுச் செயற்பாடுகளுக்காக வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.

## குழு 1

1. 2ம் ராஜசிங்கன் போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து துரத்தியடிப்பதற்காக ஒல்லாந்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட உதவிகள் எவை என விளக்குக.
2. 1638ம் ஆண்டு ஒப்பந்தத்தின் பின்னர் 1658ம் ஆண்டு கால அளவில் ஒல்லாந்தரிடம் இருந்த பிரதேசங்களை தேசப்படம் ஒன்றில் வரைந்து குறிப்பிடுக.
3. கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய வர்த்தக துறைமுகங்களை அதில் குறித்துப் பெயரிடுக.
4. குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைக்குக.

## குழு 2

1. 1602ல் மலையகத்திற்குவருகை தந்த ஒல்லாந்த தூதுவர் வருகையினால் ஏற்பட்ட மாற்றங்களை போர்த்துக்கேயர் மலையகம் தொடர்பாக பின் பற்றிய நடைமுறைகளை குறிப்பிடுக.
2. இலங்கை தேசப்படத்தில் மலையக இராச்சியத்தின் எல்லைகளை குறிப்பிட்டு கண்டி நக ரத்தையும் மகாவலி கங்கையையும் வரைந்து காட்டுக.
3. ஒல்லாந்தர் மலையக மன்னனின் வெளிநாட்டு தொடர்புகளுக்கு இடையூறு விளைவித்த போது, மலையக மன்னர்கள் மேற்கொண்ட நடவடிக்கை யாது?
4. குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைக்குக.

## குழு 3

1. ஒல்லாந்தர் மலையக மன்னர்களுக்கு அளித்த ஒத்துழைப்பு எவ்வாறானது என விபரிக்குக.
2. 1766ம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் ஒல்லாந்தர் பெற்றுக் கொண்ட கரையோரப் பிரதேசங் களைத் தேசப்படம் ஒன்றில் குறித்துக் காட்டுக.
3. மலையக மன்னனை வெளியுலகுடன் தொடர்பு கொள்ளாதவாறு தனிமைப்படுத்த ஒல்லாந்தர் மேற்கொண்ட முயற்சிகள் யாவை?
4. மாணவர்களின் குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைக்குக.

## செயற்பாடு 10.9.4

**தேர்ச்சி மட்டங்கள் :**

- மேலைத்தேயத்தவர்கள் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொர்புகளை ஆராய்வார்.
- கண்டி இராச்சியத்துடன் ஆங்கிலேயர் கொண்டிருந்த தொடர்புகளைக் கற்பார்.

**செயற்பாடு :** "கை நழுவிய சுதந்திரம்"

**காலம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 1 - தேசப்படம்
- இணைப்பு 2 - செயற்பத்திரம்
- இலங்கை வரலாறு IV ம் பகுதி (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)
- பாடப்புத்தகத்தில் கண்டி இராச்சியமும் ஆங்கிலேயரும் என்ற அத்தியாயம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 10.9.4.1 :**

- இணைப்பு 1 இலுள்ள தேசப்படத்தை வகுப்பில் முன்வைக்க.
  1. பிரித்தானிய ஆட்சி பரவிய பிரதேசங்களைக் காட்டுக.
  2. மலையக இராச்சியத்தின் ஆட்சி விரிவாக்கத்தை இனம் காண்க.
  3. பிரித்தானியரின் தலைமை நிலையம் அமைந்திருந்தது எங்கே?
  4. பிரித்தானியரின் கடற்படை தலைமை நிலையமமைந்திருந்தது எங்கே?

  எனும் வினாக்களை மாணவர் முன் வைத்து கீழ் காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.

- இலங்கையில் ஒல்லாந்தர் வசம் இருந்த கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் 1796 ஆகும் போது ஆங்கிலேயர் வசம் வீழ்ந்தன.
- நாட்டின் மத்தியில் சுதந்திரமான இராச்சியம் ஒன்று நிலவியது.

- கொழும்பு பிரித்தானியரின் நிர்வாக மத்திய நிலையமாக விளங்கியது.
- பிரித்தானிய கடற்படை மத்திய நிலையமாக திருகோணமலை விளங்கியது.
- கடைசி சிங்கள மன்னனாக மலைநாட்டில் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன் விளங்கியனான்.
- பிலிமத்தலாவ, எக்னேலிகொட, கெப்பிட்டிபொல, மடுகல்ல ஆகிய நிலப்பிரபுக்கள் பிரித்தானியருக்கு சாதகமாக இருந்தனர்.
- மலையக இராச்சியத்தின் சுதந்திரம் கைநழுவியது.

(10 நிமிடங்கள்)

படி 10.9.4.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- இணைப்பு 2 செயற்பாட்டுப்படிவத்தை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்க.
- குழுக்களுக்குரிய விடயங்களைத் தேடிக் கொள்வதற்கு அவர்களை வழிப்படுத்துக.
- மூலாதார நூல்களை உபயோகிக்கச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க.
- மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 10.9.4.3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தகவல்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்கள் முன்வைத்த தகவல்களை கலந்துரையாடுக.
- தகவல்களின் உண்மைத்தன்மை தொடர்பாக ஆசிரியரின் அறிவுரைகளைப் பெற்றுக் கொடுக்க.
- தேவையான தகவல்களைத் திரட்டிக் கொள்வதற்கு, மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழ்க்காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் குழுக்களின் தகவல்களைக் கொண்டு தொகுப்புரை வழங்குக.

- ஜோன் பைபஸ் என்பவரின் தூதின் காரணமாக மலையகம் உறுதியற்ற அரசியல் பின்னணியை கொண்டிருந்ததைத் தெரிந்து கொண்டனர்.
- பிரடறிக் நோர்த் தேசாதிபதி மலையகத்தைக் கைப்பற்ற முயற்சித்தார்.
- நாட்டின் மத்தியில் ஒரு சுதந்திர இராச்சியம் இருப்பது, பிரித்தானிய ஆட்சிக்கு இடையூறாக அமைந்தது.
- தோமஸ் மெயிற்லண்ட், றொபட் பிரௌண்டிக் ஆகிய தேசாதிபதிகளுக்கு மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

- பிரித்தானிய ஆட்சியின் மத்திய நிலையமாக விளங்கிய கொழும்பையும் கடற்படையின் மத்திய நிலையமாக விளங்கிய திருகோணமலையையும் இணைத்து, தரை வழிப்பாதையை உருவாக்குவதற்காக தேவை ஏற்பட்டது.
- மலையகத்தின் இயற்கை காப்பரண்களினாலும் மலையகத்தவரின் கெரில்லா போர் முறையினாலும் யுத்தம் ஒன்றின் மூலம் மலையகத்தை ஆங்கிலேயருக்கு கைப்பற்ற முடியாது.
- ரொபட் பிரௌன்றிக் தேசாதிபதியும் மலையக நிலப் பிரபுக்களும் ஒன்றிணைந்து மலையக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- 1815ல் மலையக ஒப்பந்தத்தினால் மலையக இராச்சியம் பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் வந்தது.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- 1815ல் இலங்கையின் சுதந்திரம் கைநழுவிய விதத்தை விளக்குவார்.
- மலையக இராச்சியத்திற்குட்பட்ட எல்லைகளை வரைந்து காட்டுவார்.
- இலங்கையின் சுதந்திரம் பறிபோனது நாட்டினரிடையே நிலவிய ஒற்றுமையீனமே என்பதை ஏற்றுக் கொண்டு உரையாடுவார்.
- குழுச் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைப்பார்.

**பின்தொடர்வேலை :**

- கண்டிக்கான கல்விச் சுற்றுலாவில் 1815 ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டிருக்கும் "கண்டி திருமண மண்டபம்" என்பதைப் பார்க்கச் செய்க.

# இணைப்பு 1




18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இலங்கை

## இணைப்பு 2

- வகுப்பில் உள்ள மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- பாடப்புத்தகங்களையும் வேறு மூலாதார நூல்களையும் வாசிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குக.

## செயற்பாட்டு படிவம்

குழு 1

1. மலையக நிலப் பிரபுக்களின் ஒற்றுமையின்மையே பிரித்தானிய ஆட்சியை இங்கே நிலை நாட்ட ஏதுவாக அமைந்ததை எடுத்துக் கூறுக.
2. மலையக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்புகளையும் குறிப்பிடுக.
3. பிரித்தானியாவிற்கு ஆதரவாக விளங்கிய மலையக நிலபிரபுக்கள் யார்?

குழு 2

1. பிரித்தானியருக்கு மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது ஏன் என விளக்குக.
2. ஆரம்பத்தில் பிரித்தானியரால் மலையக இராச்சியத்தின் மீது தொடுக்கப்பட்ட படையெடுப் புக்கள் தோல்வில் முடிந்தமைக்கான காரணம் யாது?
3. மலையக இராச்சியத்திற்கு எதிராகப் படை எடுத்த பிரித்தானிய தேசாதிபதிகள் யாவர்?

குழு 3

1. மலையகத்தவர் கொண்டிருந்த யுத்த தந்திரோபாயங்களை எழுதுக.
2. 1815ல் மலையக ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரிவுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
3. முழு இலங்கையும் பிரித்தானியர் வசமான ஆண்டு எது?

# அலகு 10.10

## கைத்தொழில் புரட்சி

(06 பாடவேளைகள்)

## அறிமுகம்

மனிதன் தனது முயற்சியினால் செய்த வேலைகளை இயந்திரங்களைக் கொண்டு செய்வித்தமை அல்லது தொழிநுட்பத்துறையில் ஏற்பட்ட பெரும் முன்னேற்றமே கைத்தொழில் புரட்சி எனப்படுகின்றது. 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இது ஏற்பட்டதுடன் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்யும் அளவிற்கு வளர்ந்தது. இது ஐரோப்பா முழுவதும் பரவிய போதும் முன்னணியில் திகழ்ந்தது பிரித்தானியாவே. புதிய இயந்திரங்களினாலும் புதிய முறையினாலும் இக்கருமத்தை நிறைவேற்றியதனால் மனிதனின் வேலை இலகுவானது. கைத்தொழில் புரட்சி உலகம் முழுவதும் மாபெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தது. இதன் மூலம் நன்மைகள் ஏற்பட்டது போல் தீமைகளும் ஏற்பட்டன.

மாணவர்கள் தாங்கள் வாழ்வது, இயந்திரமயமான உலகத்தில் என்பதனால் உலக வரலாற்றின் போக்கை மாபெரும் மாற்றங்களுக்குட்படுத்திய கைத்தொழில் புரட்சியை தெரிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது. ஆதலால் இவ்வலகைக் கற்பதன் நோக்கம் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதற்கான காரணத்தையும் அது பரவிய பிரதேசங்களையும் அதன் தாக்கத்தையும் பற்றிய அறிவை மாணவருக்கு ஏற்படுத்துவதேயாகும்.

**தேர்ச்சி** : ஐரோப்பாவில் ஏற்பட்ட வரலாற்று ரீதியான நிகழ்வுகளை ஒப்பிட்டு நுணுகியாராய்வார்.

## தேர்ச்சி மட்டங்கள்:

- கைத்தொழில் புரட்சி ஆரம்பித்த முறையை விளக்குவார்.
- கைத்தொழில் புரட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய உற்பத்தி தொடர்பான தகவல்களைக் கற்பார்.
- கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதகங்களை விபரிப்பார்.
- கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்களைக் காட்டும் தேசப்படம் ஒன்றின் மூலம் விளக்குவார்.

## பாட உள்ளடக்கம்:

## 10.10 கைத்தொழில் புரட்சி

கைத்தொழில் புரட்சி என்பது யாது?

மனிதன் தன்னுடைய முயற்சியின் மூலம் செய்த வேலைகளை இயந்திர சாதனங்கள் மூலம் செய்து, பெருந்தொகையாக பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கியமையையே கைத்தொழில் புரட்சி என்கின்றோம்.

### 10.10.1 கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பமும் வளர்ச்சியும்

- ஐரோப்பாவில் ஆரம்பித்தது.

  கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் தொடங்கியமைக்கான காரணங்கள்.
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை.
- சனத்தொகை அதிகரித்தமையால் பொருட்களுக்கான கேள்வியும் அதிகரித்தது.
- குடிசைக் கைத்தொழில் மூலம் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனது.
- காலனித்துவ நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை பெறமுடிந்தமை.
- கைத்தொழிலுக்கு தேவையான முதலீடுகளைச் செய்வதற்கு நபர்கள் இருந்தமை.
- பொதுவான வர்த்தக மையங்கள் இருந்தமை.
- அரசியல் ரீதியாக சுமுகமான நிலைமை இருந்தமை.
- விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- இலண்டன் அரச சங்கம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தமை.
- மறுமலர்ச்சியின் பின்னர் விஞ்ஞான அறிவு வளர்ச்சி அடைந்து இயந்திர சாதனங்களின் உற்பத்திக்கு அவ்வறிவு பயன்படுத்தப்பட்டமை.
- இயந்திர சாதனங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நிலக்கரி இங்கிலாந்தில் இலகுவாக பெறக்கூடியதாக இருந்தமை.
- வேலியடைப்பு வேலைத்திட்டத்தினால் காணியற்ற விவசாயிகளின் உழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனமை.
- நெசவுக் கைத்தொழில், சுரங்கக் கைத்தொழில், இரும்புருக்குக் கைத்தொழில் போன்ற மூன்று துறைகளினால் கைத்தொழில் துறையில் மாற்றங்கள் எற்பட்டமை.
- பிற்காலத்தில் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளிலும் கைத்தொழில் புரட்சி பரவியது.

## 10.10.2 நவீன கைத்தொழிற் சாதனங்கள்

- நெசவுக் கைத்தொழிலுக்காக கண்டு பிடிக்கப்பட்ட சாதனங்கள்.

  (உதா: ஜோன் கே என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட நெசவு நாடா, ஜேமிஜ் ஆகிரிவ்ஸ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட நூல் நூற்றல் இயந்திரம், ரிச்சட் ஆக்றைட் - நீர்ச்சட்டம், எட்மண்ட காட்ரைட் - மின்தறி இயந்திரம்)

  - இரும்புருக்குக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி

    இயந்திர சாதனங்களின் உற்பத்திகாக இரும்பு பயன்படுத்தப்பட்டமை.

  உதா: ஹென்றி பெசமர் இலகுவில் இரும்பை உற்பத்தி செய்யும் முறையைக் கண்டு பிடித்தமை.

  ஏப்ரகாம் டர்பி இரும்பை உருக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தியமை.

  - நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சி

- தோமஸ் நியூமன் - நீராவி இயந்திரம்
- ஜேம்ஸ் வார்ட் - நீராவி இயந்திரம்
- ஹம்பிரி டேர்வி - பாதுகாப்பு விளக்கு

  - போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி

  உதா : மாற்றுப்பயிர்ச்செய்கை முறை

  - போக்குவரத்துத்துறையின் வளர்ச்சி

  உதா : கற்களைப் பரப்பி தார் இட்டு பெருந்தெருக்களை அமைத்தமை.

  ஜோன் மெக்கடம் - முதலாவது புகையிரதப் பாதையை உருவாக்கியமை.

  ஆகாய விமான உற்பத்தி.

## 10.10.3 கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்

- அரசியல் விளைவு
  - அரசியல் துறையில் நில உரிமை உடைய முதலாளித்துவ வர்த்தகத்திற்குப் பதி லாக தைத்தொழிற்துறையை சேர்ந்த முதலாளித்துவ வர்க்கமும் தொழிலாளர் வர்க் கமும் தோன்றியமை.
  - மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தை வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்வதற்கும் மேன்மேலும் காலனித்துவ நாடுகளை உருவாக்க முயற்சித்தமை.
- பொருளாதார விளைவு
  - விவசாயத்துறையில் தங்கி இருந்த பொருளாதார முறைமை, கைத்தொழில் துறைக்கு மாறியமை, சிறு கைத்தொழில் துறை பாரிய கைத்தொழில் துறையாக மாற்றம் பெற்றமை.
- சமூக விளைவுகள்
  - நகர மயமாக்கல்.
  - முதலாளித்துவ வர்க்கம் வலுவடைந்தமை.
  - தொழிலாளர் வர்க்கம் உருவாகியமை, போராட்டங்கள் ஏற்பட்டமை.
  - குடிசை, சேரிகள் என்பவற்றினால் ஏற்பட்ட சிக்கல்கள்.
  - குடும்ப அமைப்பு, சிதறுற்றமை.

செயற்பாடு 10.10.1

தேர்ச்சி மட்டம் :

- கைத்தொழில் புரட்சி ஆரம்பமான முறையை விவரிப்பார்.

செயற்பாடு : "தொழிற் புரட்சி"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - புராதன காலங்களில் தமது தேவை களை நிறைவேற்றிக் கொண்ட முறையை காட்டும் படங்கள்
- இணைப்பு 2 - கைத்தொழில் புரட்சியின் மூலம் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவைகளைக் காட்டும் படங்கள்.
- இணைப்பு 3 - செயற்பாட்டு படிவம்
- பாடப்புத்தகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.10.1.1 :

- இணைப்பு 1, இணைப்பு 2 என்பவற்றிலுள்ள படங் களை வகுப்பில் முன்வையுங்கள்.
- இந்தப்படங்களில் காட்டப்படுபவை யாவை?
- இயந்திரங்களினால் வேலை செய்வது இலகுவானதா? எனும் வினாக்களை மாணவர்களிடம் வினவி பாடப் புத்தகத்தின் துணையுடன் கீழ்க் காணும் தகவல்களில் அவதானத்தைச் செலுத்தி கலந்துரையாடலை மேற் கொள்க.

- கைத்தொழிற்துறையில் ஏற்பட்ட பாரிய மாற்றமே தொழிற் புரட்சி ஆகும்.
- கைத்தொழிற் புரட்சி இங்கிலாந்திலேயே முதன்முதல் ஆரம்பமாகியது.
- கைத்தொழிற் புரட்சி 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகியது.
- இங்கிலாந்தின் சனத்தொகை அதிகரிக்கவே பண்டங்கள் தொடர்பாக கேள்வியும் அதிகரித்தது.
- குடிசைக் கைத்தொழில் மூலம் இக்கேள்வியைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனமை.

(15 நிமிடங்கள்)

படி 10.10.1.2 :

- வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களையும் தனித்தனியாக கணிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.
- இணைப்பு 3ல் உள்ள செயற்பாட்டு ப்டிவத்தில் உள்ள வினாக்களை கரும்பலகையில் எழுதுக.
- செயற்பாடுகளுக்குத் தேவையான வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் பெற்றுத் தருக.
- வகுப்பு முழுவதையும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
- மாணவர்களுக்குத் தேவையான வளங்களையும் அறிவுரைகளையும் பெற்றுக் கொடுக்கவும்.

படி 10.10.1.3 :

- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து வெவ்வேறாக ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையைப் பெற்றுக் கொள்க.
- இவ்விடயத்தில் மாணவர்களின் குறை நிறைகளைப் பற்றிக் கலந்துரையாடுக.
- சிறப்பான கூற்றுக்களுக்கு பாராட்டுத் தெரிவியுங்கள்,
- கீழ்க் காணும் விடயங்களை கலந்துரையாடி மாணவர்களின் அனுபவங்கள் மேலும் விருத்தியடையச் செய்யவும்.

- இங்கிலாந்தில் அப்பொழுதிருந்த அரசியல் ஸ்திரத் தன்மையும் சமூகமான நிலைமையும் கைத்தொழில் புரட்சி ஆரம்பிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்தது.
- நல்லதொரு பொருளாதார நிலைமை நிலவியதனால் இயந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டமை.
- விஞ்ஞானத்துறையின் புதிய கண்டுபிடிப்புக்கள் கைத் தொழில் புரட்சி ஆரம்பிப்பதற்கு வழிகோலியது.
- இங்கிலாந்தின் காலனித்துவ நாடுகளிலிருந்து மூலப் பொருட்கள் பெற்றுக் கொள்ள முடிந்தது.
- இங்கிலாந்தில் கடற்படை பலம் பொருந்தியதாக இருந் தமையால் மூலப் பொருட்களைக் கொண்டு வர முடிந்தமை.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- கைத்தொழில் புரட்சியின் ஆரம்பம் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.
- கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பிப்பதிலிருந்து இங்கிலாந்து ஆற்றிய பங்களிப்பைப் பற்றி பெருமிதம் அடைவார்.
- சுவர்ப் பத்திரிகை ஒன்றுக்கு கைத்தொழிற் புரட்சியும் பிரித்தானியாவும் என்ற தலைப்பில் கடிதம் ஒன்றை தயாரிக்க.
- சிக்கலின்றியும் தெளிவாகவும் கருத்துக்களை முன் வைக்கும் திறன்களையும் வளர்ப்பார்.
- வேறு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு கைத் தொழிற் புரட்சி தொடர்பாக தகவல்களை சேமிப்பதற்கு முயற்சிப்பார்.

## இணைப்பு 1





முற்காலத்தில் மனிதன் எழுத்துக்களை ஒழுங்கமைக்கும் முறை

## இணைப்பு 3

### செயற்பாட்டு படிவம்

1. கைத்தொழிற் புரட்சி என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
2. அது ஆரம்பமானது எங்கே? அது தொடர்பான உமது கருத்து யாது?
3. ஆரம்பத்தில் கைத்தொழில் புரட்சி எங்கே ஏற்பட்டது?
4. கைத்தொழில் புரட்சி அங்கே ஆரம்பிப்பதற்கு பிரதானமாக அமைந்த காரணிகள் நான்கை கூறுக.
5. "நாடுகாண் பயணங்கள் கைத்தொழிற்புரட்சிக்கு ஏதுவாக அமைந்தன" என்பது பற்றி உமது கருத்துக்களைக் கூறுக.

## செயற்பாடு 10.10.2

தேர்ச்சி மட்டம் : கைத்தொழில் புரட்சிக்கு காரணமாக அமைந்த புதிய உற்பத்திகள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.

செயற்பாடு : "விந்தை மிகு புத்தாக்கம்"

காலம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 1 - கைத்தொழிற் புரட்சியின் புதிய கண்டு பிடிப்புக்களைக் காட்டும் படம்
- இணைப்பு 2 - செயற்பாட்டு படிவம்
- ஐரோப்பிய வரலாறு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- உலக வரலாறு
- பாடப்புத்தகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படி 10.10.2.1 :

- இணைப்பு 1 இல் உள்ள படத்தை வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு காட்டி பாடப்புத்தகத்தின் உதவியுடன் கீழ்க் காணும் வினாக்களை மாணவரிடம் வினவுங்கள்.
  - கைத்தொழிற் புரட்சி முதன் முதல் ஆரம்பமானது எத்துறையில்?
  - கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் மக்கள் தங்கள் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றிக் கொண்டனர்?
  - கைத்தொழிற் புரட்சியின் மூலம் முதன் முதலாக கண்டு பிடிக்கப்பட்ட எரிபொருள் எது?
- மாணவர்களிடமிருந்து விடைகளைப் பெற்று கீழ் காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரை யாடலை மேற்கொள்க.

- நெசவுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஜோன்கே என்பவ ரால் கண்டு பிடிக்கப்பட்ட நெசவு நாடா இயந்திரம் காரணமாக அமைந்தது.
- ஏப்ரகாம் டர்பி விறகிற்குப் பதிலாக நிலக்கரியை பாவித்து இரும்பத் தாதுகளை உருவாக்கினர்.
- ஜேம்ஸ்வாட் என்பவரினால் நீராவி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.

- குடிசைக் கைத்தொழிலுக்கும் கைத்தறிக்கும் பதிலாக பாரிய கைத்தொழிற்சாலைகள் உருவாகியன.
- மக்கடம் என்பவரால் அறிமுகப்படத்தப்பட்ட கற்களைப் பரப்பி தார் இட்டு பெருந்தெருக்கள் உருவாக்கும் முறையினால் போக்குவரத்திற்கும் கைத்தொழிற் புரட்சிக்கும் காரணமாக அமைந்தது.

(15 நிமிடங்கள்)

படி 10.10.2.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவரை நியமியுங்கள்.
- குழுக்களுக்கு இணைப்பு 2ல் உள்ள செயற்பாட்டு படிவத்தைப் பங்கிடுக.
- செயற்பாடுகளுக்குத் தேவையான வழிகாட்டல்களையும் வளங்களையும் பெற்றுத்தருக.
- குழுக்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

(25 நிமிடங்கள்)

படி 10.10.2.3 :

- குழுக்களின் தலைவர்களுக்கு தமது செயற்பாடுகளை வகுப்பறையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அது தொடர்பான கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்களின் குறை நிறைகளையும் சிறப்பம்சங்களையும் கலந்துரையாடுக.
- திறமைகளைப் பாராட்டுங்கள்.
- குழுக்கள் முன்வைக்கும் கருத்துக்களைச் செவிமடுத்து கீழ்க் காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் தொகுப்புரை வழங்குக.

- ஜேம்ஸ் ஹாகிறிவ்ஸ் என்பவரால் நூல்நூற்கும் இயந்திரம் நெசவுக் கைத்தொழிலுக்காக கண்டு பிடிக்கப்பட்டது
- வேகமாக நெசவு நெய்தலுக்காக எட்மண்ட் காட்ரையிட் என்பவரால் நெசவு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.
- சுரங்கக் கைத்தொழிலில் பாவிப்பதற்காக பாதுகாப்பான விளக்கு ஹம்ப்ரிடேவி என்பவரால் கண்டு பிடிக்கப் பட்டது மிகவும் உபயோகமாக அமைந்தது.
- தோம்ஸ் நியூகொமன் என்பவரால் கண்டு பிடிக்கப் பட்ட நீராவி இயந்திரம் கைத்தொழிற் துறையில் மிகவும் முக்கியமானதொன்றாக விளங்கியது.
- மாற்றுப் பயிர்ச்செய்கை முறையும் வரிசையாக நாற்று நடும் முறையும் கண்டு பிடிக்கப்பட்டதால் விவசாயத் துறையும் வளர்ச்சி அடைந்தது.

- ஜோர்ஜ் ஸ்டீவன்சன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட நீராவி புகையிரத இயந்திரத்தினால் போக்குவரத்து துறை வளர்ச்சியுற்று, பண்டங்களை வேகமாக எடுத்துச் செல்லும் முறை வளர்ச்சியுற்றது.
- ரொபட் பூல்மன் நீராவி கப்பல்களைக் கண்டு பிடித்த தனால் கடற் பயணங்கள் துரிதமாகியது.
- என்றிபெல் என்பவரால் முதன் முதல் அறிமுகப்படுத்தப் பட்ட கொமட் என்னும் நீராவி கப்பல் மக்கள் பயணத் திற்கு பாவிக்கப்பட்டது.
- ஜேர்மனியின் டெம்லர் முதன் முறையாக மோட்டார் காரைக் கண்டு பிடித்தார்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- கைத்தொழில் புரட்சியின் புதிய கண்டு பிடிப்புக்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- கைத்தொழிற் புரட்சியின் மூலம் உருவாகிய புதிய உற்பத்திகளின் முக்கியத்துவம் பற்றிப் பெருமிதப் படுவார்.
- கைத்தொழிற் புரட்சியின் பயனாகக் கண்டு பிடிக்கப்பட்ட புதிய உற்பத்திகளையும் அதனைக் கண்டு பிடித்தவர் களின் தகவல்களையும் உள்ளடக்கிய சிறு கைந்நூல் ஒன்றைத் தயாரிக்குக.
- குழு முறையில் ஒற்றுமையாகச் செயற்படப் பழகிக் கொள்வார்.
- தலைமைத்துவம் வகித்தல், முன்வருதல் போன்ற குணாதிசயங்களை வளர்த்துக் கொள்வார்.

இணைப்பு 1





# இணைப்பு 2

- செயற்பாட்டுப் படிவத்திலுள்ள வினாக்களுக்கு பாடப்புத்தகத்தைக் கொண்டு விடையளிக்குக.
- தேவையான அறிவுரைகளைப் பெற்றுத் தருக.
- தேவையான அறிவுரைகளையும் விளக்கங்களையும் தருக.

## செயற்பாட்டுப் படிவம்

நெசவுத்தொழில்

| உற்பத்தி செய்தவர் | உற்பத்தி செய்த இயந்திரம் |
|---|---|
| | |

போக்குவரத்து

| உற்பத்தி செய்தவர் | உற்பத்தி செய்த இயந்திரம் |
|---|---|
| | |

நிலக்கரி கைத்தொழில்

| உற்பத்தி செய்தவர் | உற்பத்தி செய்த இயந்திரம் |
|---|---|
| | |

## செயற்பாடு 10.10.3

**தேர்ச்சி மட்டம்** : கைத்தொழிற் புரட்சி பரவிய இடங்களைத் தேசப்படம் ஒன்றின் மூலம் விளக்குவார்.

**செயற்பாடு** : "மனித வரலாற்றை புதிய வழிக்கு கொண்டு சென்ற கைத்தொழிற் புரட்சி"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1 - சூழல் மாசடைதலைக் காட்டும் படம்
- ஐரோப்பிய வரலாறு - க.பொ.த (உயர்தரம்) கல்வி வெளியீட்டுத்திணைக்களம்
- உலக வரலாறு
- இணைப்பு 2 - பாட முன்னாயத்தம் தொடர்பான அறிவுரை
- பாடப்புத்தகம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.10.3.1** :

- இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படத்தை வகுப்பில் உள்ள மாணவர்களுக்குக்காண்பித்து,
  - இந்தப்படத்தில் காட்டப்படுவது யாது?
  - இச்சூழலைப் பற்றி உமக்கு யாது கூற முடியும்?
  - அவ்வாறாயின் நீர் முன்வைக்கும் காரணம் யாது?

இவ்வாறான வினாக்களை வினவி விடைகளை மாணவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு, பாடப்புத்தகத்தின் உதவியுடன் கீழ்காணும் விடயம் வெளிவரும் வண்ணம் கலந்துரையாடுக.

- கைத்தொழில் நகரங்கள் உருவானமை சூழல் மாசடைதலுக்கு காரணமாக அமைந்தது.
- கைத்தொழிற்சாலைகளைக் கொண்ட செல்வந்த வர்க்கம் உருவாகியது.
- கைத்தொழிற்சாலைகளில் தொழில் புரிவதற்காக தொழிலாளர் வர்க்கம் என புதிய வர்க்கமும் தோன்றியது.
- குடிசைக் கைத்தொழிலும் விவசாயத்துறையும் செல்வாக்கிழந்தமை.
- கைத்தொழிற்சாலைகளை அண்மித்து நகரங்கள் உருவாகியமை.

(15 நிமிடங்கள்)

படி 10.10.3.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து விவாதத்திற்குத் தயார்படுத்துங்கள்.
- விவாதத்திற்கு தேவையான வழிகாட்டலையும் அறிவுரைகளையும் வழங்குக.
- அரசறிவியல் ஆசிரியரையும் புவியியல் ஆசிரியரையும் மத்தியஸ்தர்களாக ஈடுபடுத்துக.

(25 நிமிடங்கள்)

படி 10.10.3.3 :

- விவாதத்திற்கு உரிய இரு குழுக்களுக்கும் தங்கள் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- விவாதத்தின் இறுதியில் மத்தியஸ்தர்களைக் கொண்டு மாணவர்களின் குறை நிறை, சிறப்பம்சம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு மாணவர்களை பெருமைப்படுத்துக.
- கீழ்க்காணும் விடயங்களையும் கலந்துரையாடி மேலும் மாணவர்களின் அனுபவங்களை விரிவாக்குக.

- நிலவுரிமையைக் கொண்ட முதலாளித்துவ வர்க்கம் அரசியல் ரீதியாக பலம் பொருந்தியது.
- தொழிலாளர்களின் நன்மையை கருத்திற் கொள்ளாது, தொழிற்சாலை உரிமையாளர்களினது நலனை கருத்தில் கொண்டே சட்டதிட்டங்கள் உருவாகியன.
- தொழிலாளர் மிகவும் ஏழ்மையான வாழ்க்கையைக் கொண்டிருந்தனர்.
- தொழிலாளரின் குடும்ப வாழ்க்கை சிதைவு அடைந்து காணப்பட்டது.
- மனித வாழ்க்கையின் வேலைகள் மிகவும் இலகுவாகியது.
- உலகில் உள்ள நாடுகளுக்கிடையிலுள்ள தொடர்புகள் நெருக்கமாகியும் உலகம் ஒரு கிராமமாக மாறியது.
- மனித வாழ்க்கைக்குப் பாதகமான விளைவுகளை உண்டாக்கும் ஆயுத உற்பத்தி ஏற்பட்டமை.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதகமான விளைவுகள் பற்றி விபரிப்பார்.
- கைத்தொழிற் புரட்சியினால் உருவாகிய சிறப்பான படைப்புக்கள் பற்றி பெருமிதம் அடைவார்.
- கைத்தொழிற் புரட்சியின் சாதக, பாதகமான அம்சங்களைக் கொண்ட கடிதம் ஒன்றை சுவர்ப்பத்திரிகைக்கு தயார் செய்வார்.
- பேச்சாற்றலை வளர்ப்பார்.
- தலைமைத்துவப் பண்பையும் முன்வைக்கும் திறனையும் வளர்ப்பார்.
- புரிந்துணர்வுடன் செயற்படப் பழகிக் கொள்வார்.

பின்தொடர்வேலை :

- உலகப்படத்தில் கைத்தொழிற்புரட்சி பரவிய நாடுகளை குறித்துப் பெயரிடுக.

## இணைப்பு 1



## இணைப்பு 2

### பாட முன் ஆயத்தம் தொடர்பான அறிவுரைகள்

- பாடத்திற்கு முன்னைய தினத்தில் பேச்சாற்றல் கொண்ட மாணர்களைத் தெரிவு செய்க.
- பொருத்தமான முறையில் அவர்களை இரு குழுக்களாகப் பிரிக்குக.
- அவர்களைக் கைத்தொழிற் புரட்சியின் சாதக, பாதகமான அம்சங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கச் செய்க.
- மேலதிகப் புத்தகங்கள், செய்தித்தாள்கள், வளவாளர்கள் துணை கொண்டு தலைப்புக்கு ஏற்றவாறு விடயங்களைத் திரட்டி விவாதத்திற்குத் தயார்ப் படுத்துங்கள்.
- குறிப்பிட்ட நாளையும் நேரத்தையும் தீர்மானித்து உயர்தர அரசறிவியல் ஆசிரியரையும் உதவிக்கழைத்து விவாதத்தை நடாத்துக.
- விவாதத்தின் தலைப்பு.

கைத்தொழிற் புரட்சியினால் நன்மை ஏற்பட்டது/ கைத்தொழிற் புர்சியினால் தீமை ஏற்பட்டது.

# அலகு 10.11

## ஐரோப்பாவின் புதிய அரசியல் சிந்தனையின் வளர்ச்சி

(12 பாடவேளைகள்)

## அறிமுகம்

மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு பல்வேறு நிகழ்வுகள் காரணமாக அமைந்துள்ளன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பற்றிய அறிவை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே இவ்வலகு மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக ஐரோப்பாவின் வரலாற்றின் சில முக்கியமான சந்தர்ப்பங்களைக் காட்ட முடியும். தங்களது உரிமைகளை வெற்றி கொள்வதற்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வழிகளில் மக்கள் செயற்பட்டிருக்கின்றனர். மனிதனின் முக்கியத்துவத்தை உயர்வான நிலைக்கு கொண்டு வந்த பிரான்சிய புரட்சி, தேசியவாதம், லிபரல் வாதம் போன்றவைகளினால் இத்தாலியும் ஜேர்மனியும் ஒன்றிணைந்த முறைகளும் பற்றிக் கலந்துரையாடப்படுகின்றது. அவ்வாறே ரஷ்யப் புரட்சியால் ஊழல் நிறைந்த சர்வாதிகார அரசாங்கத்தையும் முதலாளித்துவ, பொருளாதாரத்தையும் அழித்துப் பொதுவுடமை கூட்டாட்சியைக் கட்டி எழுப்பும் நோக்கத்தைக் கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை ரஷ்யாவில் உருவாக்கிய முறையும் இவ்வலகின் மூலம் கூறப்படுகின்றது.

தேர்ச்சி : ஐரோப்பாவின் வரலாற்று ரீதியான முக்கிய சம்பவங்களை கற்பார்.

தேர்ச்சி மட்டங்கள் :

- பிரான்சியப் புரட்சியின் மூலம் பெற்றுக் கொண்ட உரிமைகள் பற்றி விபரிப்பார்.
- இத்தாலியை ஒன்றுபடுத்தும் வேலைத்திட்டம், ஜேர்மனியை ஒன்றுபடுத்தும் வேலைத்திட்டம் என்பவற்றிற் கூடாகத் தேசிய வாதம், மானிட வாதம் என்பன தோன்றிய முறைகளை விளக்குவார்.
- ரஷ்யப் புரட்சியின் மூலம் புதிய பொருளாதார அரசியல் சிந்தனைகள் உருவாகிய முறைகளை விபரிப்பார்.

## பாட உள்ளடக்கம்:

### 10.11.1 மானிட வாதம்

- மானிட வாதம் என்பது யாது?

  ஏனைய எல்லா வித உயிரினங்களையும் தெய்வங்களையும் விட மனிதன் உயர்வானவன் என ஏற்றுக் கொள்ளுதல்.

- கி.மு. 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலே புத்த பெருமானால் முன் வைக்கப்பட்ட மனித நேயத்துடன் செயற்பட வேண்டும் எனும் கருத்து மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டு வருவதையே இது காட்டக் கூடியதாக இருக்கின்றமை.
- ஐரோப்பாவில் மானிட வாதம் எனும் கருத்து மறுமலர்ச்சி காலத்தில் மேலெழுந்தமை.
- மானிட வாதம் சிறிதளவாவது செயலுருவில் வந்தது பிரான்சிய புரட்சியின் போதேயாகும்.
  - * பிரான்சில் நடைமுறையிலிருந்த சர்வாதிகார அரசியல் அமைப்பு முறைக்கும் சமூக முறைக்கும் எதிராக 1789ல் புரட்சி ஏற்பட்டது.
  - * இது சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களில் பங்களிப்புடன் நடந்தேறியமை.
  - * பொது மக்கள் அதிக வரிச்சுமையினால் இதில் கலந்து கொண்டமை.
  - * நடுத்தர வர்க்கத்தினர் சமூகத்தில் தமக்கு நிலையான இடமின்மையால் கலந்து கொண்டமை. (கற்ற கல்விக்கும் செல்வத்திற்கும் ஏற்ற முறையில்)
  - * மானிட வாதப்படி சமூக ஏற்றத்தாழ்வுகளை இல்லாமற் செய்தமை.
  - * சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றிற்காக ஒன்று சேர்தல்.
  - * பிரான்சில் நெப்போலியனால் மானிடவாதச் சீர்த்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டமை.

### 10.11.2 தேசிய வாதமும் லிபரல் வாதமும்

#### தேசிய வாதம்

- 15ம் நூற்றாண்டில் தேசிய அரசுகளின் ஆரம்பத்தைத் தொடர்ந்து தேசிய வாதம் தொடர்பான சில எண்ணங்கள் உருவாகின.
- 18ம் நூற்றாண்டு ஆகும் போது ஐரோப்பிய நாட்டினரிடையே நாட்டுப்பற்று வளர்ந்து வந்தமை.
  - இத்தாலியை ஒன்றுபடுத்தும் வேலைத்திட்டம்
- 1ம் நெப்போலியனின் இராச்சியத்தின் வளர்ச்சியின் விளைவாக இத்தாலியிலும் ஜேர்மனியிலும் தேசப்பற்று வளர்ச்சி அடைந்தது.
- கபோஹரி என்னும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் சங்கத்தினால் இத்தாலியை வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்கு இத்தாலியரிடம் தேசிய பற்று ஏற்படுத்தப்பட்டது.
- மெளினியின் "இளைய இத்தாலி" எனும் இயக்கத்தின் மூலம் இளைஞர்களுக்கு ஐக்கிய வேலைத் திட்டத்திற்கு தேவையான வலிமையும் நோக்கமும் கிடைக்கப் பெற்றமை.
- கெவூர், கரிபோல்டி ஆகியோரால் இனவாதக் கருத்துக்கள் மக்களிடம் மேலும் வளர்ச்சி அடையச் செய்யப்பட்டமை.

### ஜேர்மனியை ஒன்றிணைக்கும் இயக்கம்

- 17ம் நூற்றாண்டில் சமய யுத்தங்களினால் சிதறுண்ட ஜேர்மனி 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நெப்போலியனால் ஜேர்மனியின் பல்வேறு அரசியல் பிரிவுகளை ஒன்று திரட்டி ரைன் கூட்டாட்சியை ஏற்படுத்தியதன் மூலம் ஜேர்மனி நாட்டினர் இடையே முதன் முதலாக தேசிய உணர்வு வளரத்தொடங்கியது.
- 1818ல் ஜேர்மனியின் பிரதேசங்கள் சிலவற்றை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட 'சொல்வரைன்' சங்கத்தின் வழிகாட்டலில் ஜேர்மனி நாடுகளுக்கிடையே உருவாகிய பொருளாதார ஐக்கியத்தினால் அவர்களிடையே ஒரே நாட்டினர் என்ற ரீதியில் எழுச்சி பெறும் தேவை உருவாகியமை.
- ஜேர்மனி பல்கலைக்கழகத்தின் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து 1815ன் பின்னர் ஜேர்மனிய மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்தியமை.
- ஜேர்மனியை ஒன்றிணைக்கும இயக்கத்தின் போது ஒடோ பொன் பிஸ்மாக்கினால் பிரான்சுக்கு எதிராக ஜேர்மன் மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்தியமை.

### லிபரல் வாதம்

- லிபரல் வாதம் என்பது யாது?

  அரசியல், பொருளாதார, சமய, சமூகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் சுதந்திரமாகச் செயற்படுவதே லிபரல் வாதம் எனப்படும்.
- 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஐரோப்பாவில் லிபரல் வாத நோக்கங்கள் பரவத் தொடங்கினாலும் அதற்கு முன்னரே (கிரேக்க நாகரிகம் தோன்றிய காலத்தில் கூட) சிறியளவிலேனும் ஐரோப்பாவில் இக்கருத்துக்கள் நடைமுறையில் இருந்தமை.

### இத்தாலியை ஒன்றிணைக்கும் இயக்கம்

- இத்தாலி 19ம் நூற்றாண்டு ஆகும் போது பல்வேறு கூறுகளாகப் பிரிந்து வெவ்வேறு வெளிநாட்டு அரசுகளின் கீழ் இருந்தமை.
- இத்தாலி இராச்சியத்தில் 19ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் அவ்வெளிநாட்டு அரசுகளுக் கெதிராக லிபரல் வாதம் தோன்றியது.
- 1814 ஆகும் போது பாப்பாண்டவரினால் லிபரல் சீர்த்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டமை.
- லிபரல் வாதிகளின் செயல்பாட்டினால் இத்தாலி, ஒன்றிணைந்த இராச்சியமாக உருவாகியமை.
- 1848 புரட்சியின் பலனாக லிபரல் வாதிகளால் பிராங்கப்ர்ட் பாராளுமன்றம் கூட்டப்பட்டமை.

## 10.11.3 பொதுவுடமை வாதம்

- பொதுவுடமை வாதம் என்றால் என்ன?

  எவ்வித வேறுபாடுகளுமின்றி அனைவருக்கும் நியாயமான வகையில் பகிரப்படும் நாட்டின் சொத்துக்கள் எப்போதும் வர்க்க பேதமற்ற சமூகத்தை உருவாக்குதல் பொதுவுடைமையாகும்.

### ரஷ்யப்புரட்சி

- ரஷ்யாவில் நடைமுறையில் இருந்த ஊழல் மிகுந்த அரசாங்கத்திற்கெதிராக 1917ம் ஆண்டு விவசாயிகள், தொழிலாளர்கள், பாதுகாப்பு படையினர் போன்றோரினால் ஏற்படுத்தப்பட்ட கலகமே ரஷ்யப்புரட்சியாகும்.
- சமாதானம், காணி, உணவு என்னும் கோரிக்கைகளின் கீழ் ரஷ்ய மக்கள் அதில் பங்கேற்றனர்.

## செயற்பாடு 10.11.1

**தேர்ச்சி மட்டம்** : பிரான்சிய புரட்சியின் மூலம் பெற்றுக் கொண்ட உரிமைகள் தொடர்பாக விபரிப்பார்

**செயற்பாடு** : "உரிமைகளை வென்றனர்"

**காலம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1 - செயற்பாட்டு படிவம்
- பாடப்புத்தகம்
- ஐரோப்பிய வரலாறு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 10.11.1.1** :

- சுதந்திரம் என்பது என்ன?
- உரிமை என்பது யாது?

போன்ற வினாக்களை வினவி கீழ்க்காணும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.

- உலகில் உள்ள ஏனைய உயிரினங்களை விட மனிதன் உயர்வானவன் என்பதை ஏற்றுக் கொள்வதே மானிடவாதம்.
- கி.மு. 6ம் நூற்றாண்டிற்கு முற்காலத்தில் புத்த பெருமானால் முன்வைக்கப்பட்ட மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டுமென்ற எண்ணம் மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டு வருவதையே இது காட்டுகின்றது.
- ஐரோப்பாவில் மானிட வாதம் மறுமலர்ச்சிக் காலத்திலும் வெளிப்பட்டது.
- மானிட வாதம் பிரான்சியப் புரட்சியின் மூலம் செயலுருவில் வெளிப்பட்டமை.

(15 நிமிடங்கள்)

**படி 10.11.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- குழுக்களுக்கு இணைப்பு 1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவத்தைப் பெற்றுக் கொடுக்க பாடப்புத்தகத்தையும் வேறு முலாதார நூல்களையும் பாவித்து, செயற்பாடுகளில் ஈடுபட அறிவுறுத்துக.

(25 நிமிடங்கள்)

படி 10.11.1.3 :

- மாணவர்களின் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்வைக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருக.
- ஏனைய குழுக்களுக்கு முன்வைத்தல் தொடர்பாக அறிவுறுத்துக.
- மாணவரின் குறை நிறைகளை இனங்காண்க.
- பாடத்தின் முழுமையான நோக்கமும் நிறைவேறும் வண்ணம் கீழ்காணும் விடயங்கள் வெளிப்படுமாறு தொகுப்புரை வழங்குக.

- பிரான்சில் நிலவிய சர்வதிகார அரசாட்சி முறைக்கும் சமூக முறைக்கும் எதிராக 1789ல் இடம் பெற்ற புரட்சி பிரான்சியப் புரட்சி என அழைக்கப்படுகின்றது.
- இது சமூகத்தின் எல்லா தரப்பினருடைய பங்களிப்புடன் அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக நடந்தது.
- பொது மக்கள் வரிச்சுமை அதிகரித்ததினால் இதில் பங்கேற்றனர்.
- மத்திய தர வர்க்கத்தினர் சமூகத்தில் தாம் மதிக்கப்பட வில்லை என்பதற்காக பங்கேற்றனர். (தாம் கற்ற கல்விக்கும் செல்வந்த நிலைமைக்கும் ஏற்றவாறு)
- மானிட வாதத்தின் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளை இல்லாது ஒழிப்பது.
- அதாவது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் தொடர்பாக ஒன்று திரண்டது.
- பிரான்சில் நெப்போலியனினால் மானிடவாதச் சீர்த் திருத்தங்கள் ஏற்படுத்தியது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- மானிட வாதம் என்பது யாதென விபரிப்பார்.
- மானிட வாதத்தில் மனிதன் உயர்வாக எண்ணப் படுவதை பெருமிதப்படுவார்.
- பிரான்சிய புரட்சியின் மூலம் மானிடவாதம் எழுச்சி பெற்ற விதத்தை விபரிப்பார்.
- குழு முறையில் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- தமது குழுவை வழிநடத்தும் ஆற்றலைப் பெறுவார்.

# இணைப்பு 1

## செயற்பாட்டுப்படிவம்

கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிக்குக.

- பிரான்சியப் புரட்சி தோன்றியமைக்கான காரணங்கள் யாது?
- பிரான்சியப் புரட்சியின் மூலம் பெற்ற உரிமைகள் யாது?
- மானிட வாதம் என்பது யாது?
- பிரான்சியப் புரட்சியில் இருந்த மானிடவாத அம்சங்கள் யாவை?

# மதிப்பீடும் கணிப்பீடும்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவு பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாக பின்னூட்டல் (Feed Back) முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தியாக்குவதற்குப் பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிவுகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். எனவே திட்டமிட்ட செயற்பாடுகளினூடாக நடைமுறைப்படுத்தப்படும் இக்கலைத் திட்டத்தைக் கற்றல் - கற்பித்தல், கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றுடன் ஒன்றிணைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டினதும் படி 2 இல் மாணவர்கள் குழுவாகக் கண்டறிதலில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும், படி 3இன் போது குழுக்கள் தமது பெறுபேற்றை முன்வைக்கும் போதும் விரிவாக்கம் செய்யும் போதும் அவர்களை மதிப்பீடு செய்யவும் ஆசிரியருக்கு முடியும். மாணவர்கள் தேடலில் ஈடுபடும் போது மாணவர்களை அணுகி அவர்கள் செய்யும் பணிகளை அவதானித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வசதியையும், வழிகாட்டலையும் வழங்குவது ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்பான நடத்தை மாற்றங்களை ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின் போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

கணிப்பீடு - மதிப்பீடு பற்றிய வேலைத் திட்டத்தை மேம்படுத்துவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை விரிவுபடுத்த முடியும். இவ்வாறு கற்றல்- கற்பித்தலை நீடிப்பதற்கு முதலில் செய்ய வேண்டியது செயற்பாட்டுத் தொகுதியில் உள்ள செயற்பாடுகளை சில பிரிவுகளாக வகுத்துக் கொள்வதாகும். மாணவர் கற்றலை மலரச் செய்யக் கூடிய சில பிரிவுகளை ஒவ்வொரு செயற்பாடுடனும் தொடர்புபடும் பாடப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குகளை நீடிக்கும் உபகரணங்களைத் தயார் செய்வது அடுத்த படிமுறையாக

இருப்பதுடன் ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆரம்பத்தில் இவ்வுபகரணங்கள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தலும் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் பணியாகும். இதன்படி கற்றலையும் கற்பித்தலையும் நீடிப்பதற்காக ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சில வழி வகைகள் பின்வருமாறு:-

- எண்ணக்கருப் படம் (Concept Maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall News Papers)
- அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயலடைவுக் கோவை (Portfolios)
- மாணவர் ஆக்கங்களின் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடன் பேச்சு (Impromptu Speeches)
- வகிபாகமேற்றல் (Role Plays)
- இலக்கிய விமர்சனம் (Presentation of Literature Reviews)
- களநூல், இயற்கை நாட்காட்டி, பயிற்சிப் புத்தகம் (FieldBooks/ Nature Diaries)
- செய்முறைப் பரீட்சை (Practical Tests)

பாடத்திட்டத்தின் மூன்றாவது பகுதியில் கற்றல்-கற்பித்தல் நீடிப்புச் சந்தர்ப்பங்கள், அதற்காக தெரிவு செய்யக் கூடிய உபகரணங்கள் என்பவற்றை அறிமுகம் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பாட்டின் உள்ளேயும், அவற்றுக்கிடையையும் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இரண்டு வழிகளிலும் மேற்கொள்வதன் மூலம் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கு மேலும் விரிவடைவதுடன், ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்றலில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்கு முடியும்.

## வரலாற்றுப் பாட கணிப்பீடும் மதிப்பீடும்

பரீட்சை, கணிப்பீட்டுச் செயற்பாடுகளை கீழ்வருமாறு மேற்கொள்ளுதல் சிறந்தது.

### வகுப்பறைக் கணிப்பீடு

எழுத்துப் பரீட்சை, வாய்மொழி மூலப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற்கொள்ளப்பட முடியும். இதற்காகப் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயன்முறையில் வழங்கப்பட்டுள்ள மாதிரிகளினூடாக கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்ளல் உசிதமானது.

### ஆண்டிறுதிக் கணிப்பீடு

வருட இறுதியில் நடைபெறும் பாடசாலை மட்டத்தில் அல்லது வலய மட்டத்திலான அல்லது மாகாண மட்டத்திலான எழுத்துப் பரீட்சைக்கு மாணவர்களை தோற்றச் செய்தல்.

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு நீடிப்புக் கருவிகள்

## 1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் முதலாம் தவணை- கருவி 01

## 2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்

- வரலாறு என்றால் என்னவென வரைவிலக்கணப்படுத்துவார்.
- வரலாற்றைக் கற்பதன் பெறுமதியைப் பரிசீலிப்பார்.
- வரலாற்றைக் கற்பதற்குள்ள மூலாதாரங்களைப் பரிசீலிப்பார்.
- இந்திய ஆரிய குடியிருப்புக்கள் பற்றிய தகவல்களை விசாரிப்பார்.
- பதினாறு பெருங் குடியிருப்புக்களைப் படமொன்றின் மூலம் விபரிப்பார்.
- மௌரிய சாம்ராச்சிய பரம்பலுக்குக் காரணமாகவிருந்த மன்னர்களைப் பற்றிக் கற்பார்.
- குப்த சாம்ராச்சிய பரம்பரையைப் பற்றிக் கற்பார்.
- இலங்கையின் வரலாற்றுக்கு முந்தைய யுகம் பற்றிய தகவல்களைப் பரீட்சிப்பார்.
- ஆரிய குடியிருப்புக்கள் அமைத்தல் தொடர்பாகக் கற்பார்.
- பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரை வாழ்ந்த முக்கியமான அரசர்களின் பணிகள், சம்பவங்களை விபரிப்பார்.
- தென் இந்திய ஆக்கிரமிப்பைப் பற்றிக் கற்பார்.
- நீர்வள நாகரிகத்தின் நிர்வாக அமைப்பு உருவாகியிருந்த விதத்தைப் பரிசீலிப்பார்.
- நீர்வள நாகரிகத்தின் பொருளாதாரப் போக்கைப் பகுப்பாய்வார்.
- நீர்வள நாகரிகத்தின் சமய, கலாசாரம் பற்றிய தகவல்களைக் கற்பார்.
- வெளிநாட்டுத் தொடர்புகளை பகுப்பாய்வார்.
- நீர்வள சார்ந்த நாகரிகத்தின் வீழ்ச்சியைக் கற்பார்.

## 3.0 உள்ளடக்கப்படும் விடயதானம்

அலகுகள : 10.1, 10.2, 10.3, 10.4

## 4.0 கருவியின் தன்மை

கண்காட்சி நடாத்துதல்

## 5.0 கருவியின் நோக்கம்

- வரலாற்றைக் கற்பதற்குப் பயன்படும் மூலாதாரங்களைக் கற்றலில் ஈடுபடுத்தல்.
- இந்தியாவின் ஆரிய குடியிருப்புக்களின் ஆரம்பமும் பரம்பலும் பற்றிய தகவல்களைக் கற்றலில் ஈடுபடுத்தல்.
- இலங்கையின் வரலாற்றுக்கு முந்தைய யுகத்திலிருந்து நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி வரையான தகவல்களைக் கற்றலின் ஊடாக ஆக்க முயற்சிகளில் ஈடுபடுத்தல்.

## 6.0 கருவியை செயற்படுத்துவதற்கான ஆசிரியர்களுக்கான ஆலோசனை

- கல்வித்தவணை ஆரம்பத்தில் செயற்பாடுகளையும் அவற்றின் நோக்கங்களையும் பற்றி மாணவர்கள் அறியச் செய்யவும்.
- வகுப்பில் மாணவர்களை ஏற்றவாறு குழுக்களாக்கவும்.
- உரிய நான்கு அலகுகளின் கீழ் கண்காட்சிக்கான பொருட்களைத் தயாரித்துக் கொள்வதற்காக குழுக்களுக்கு தலைப்புக்களைப் பிரித்து வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் கண்காட்சிக்கான பொருட்களைத் தயார் செய்து கொள்ளக் கூடிய தொனிப்பொருள்கள் பற்றி வகுப்பில் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கின் போதே மாணவர் அறியச் செய்யவும்.

- தேவையான வழிகாட்டலையும் அறிவுறுத்தலையும் வழங்கவும்.
- கண்காட்சி நடத்தப்படும் தினத்தை அறிவிக்கவும்.
- உரிய தினத்தில் கண்காட்சியை ஒழுங்கு செய்து ஏனைய மாணவர்களும் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- உரிய தினத்தின்போது காட்சிக்கு வைக்கப்படும் பொருட்களிலிருந்து வெளிப்படும் தகவல்கள் குறித்து பிற மாணவரை அறியச் செய்ய வாய்ப்பளிக்கவும்.
- உரிய நியதிகளின் கீழ் மதிப்பீட்டைச் செய்யவும்.

## 7.0 மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்குக் கிடைத்த தலைப்பின் கீழ் படங்கள்/ மாதிரிகள்/ தேசப்படங்கள்/ புகைப்படங்கள்/ விபரங்கள் என்பவற்றை கண்காட்சிக்குப் பொருத்தமானவாறு தயார் செய்து கொள்ளவும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் ஆலோசனையைப் பெறவும்.
- தமக்குரிய தொனிப்பொருளுக்காகத் தயார் செய்து கொள்ளக் கூடிய காட்சிப் பொருட்கள் தொடர்பாக ஒவ்வொரு பாடங்களையும் கற்கும் போதே உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.
- உங்களுக்கு விருப்பமான ஊடகத்தைக் கொண்டு காட்சிப் பொருட்களைத் தயார் செய்யவும்.
- ஆசிரியர் கூறும் தினத்தில் உங்கள் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தலுக்காகச் சமர்ப்பிக்கவும்.
- கண்காட்சியின் போது அதனைத் தரிசிப்போருக்கு உங்கள் ஆக்கம் தொடர்பான விளக்கங்களை முன்வைக்கவும்.

## 8.0 மதிப்பீட்டு நியதிகள்

- பாடத்திட்டத்துக்குரியதானது.
- தகவல்கள் சரியானவை.
- ஆக்கபூர்வமானவை.
- குழு உணர்வுடன் செயற்படுகின்றமை.
- ஒட்டு மொத்தமான நிறைவு.

ஒவ்வொரு நியதிக்குமாக தலா 4 புள்ளிகள் வீதம் பெறக் கூடிய மொத்தப் புள்ளி 20 ஆகும்.

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு நீடிப்புக் கருவிகள்

1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் இரண்டாம் தவணை - கருவி 02

2.0 உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்

- பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரை இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் மக்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வார்.
- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்ட வரை இலங்கையின் கலை, வீடு நிர்மாணம் மற்றும் இலக்கியம் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை இலங்கையின் இராசதானியை தேசப்படத்தின் வாயிலாக விபரிப்பார்.
- மத்திய கால ஆசியாவின் அரசியல் தகவல்களை ஒன்று திரட்டியவாறு விபரிப்பார்.
- மத்திய கால ஆசியாவின் கலாசார செயற்பாடுகளை கற்பார்.
- மத்திய கால ஆசியாவின் நாடுகளுக்கிடையே இடம்பெற்ற தொடர்புகளைப் பரிசீலிப்பார்.
- மத்திய கால ஆசியாவின் வரலாற்றிடங்களை தேசப்பட வாயிலாக விபரிப்பார்.
- ஐரோப்பாவிலிருந்த நிலச்சுவர்தர் முறை தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- சிலுவை யுத்தத்துடன் வர்த்தகம் விருத்தியடைந்த விதத்தை விபரிப்பார்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் இடம் பெற்ற மாற்றங்களைக் கற்பார்.
- ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளின் இயல்புகளை விளக்குவார்.
- நாடுகள் கண்டறியும் இயக்கத்தின் முக்கிய சந்தர்ப்பங்களைத் தேசப்படத்தின் வாயிலாக விபரிப்பார்.
- ஐரோப்பாவிலிருந்த சமய சீர்த்திருத்தங்கள் பற்றிய தகவல்களைக் கற்பார்.

3.0 உள்ளடக்கப்படும் விடயதானம்

10.5, 10.6, 10.7 அலகுகள்

4.0 கருவியின் தன்மை

சஞ்சிகையொன்றைத் தயாரித்தல்

5.0 கருவியின் நோக்கம்

- இலங்கையிலும் உலகத்திலும் மத்திய கால யுகத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் கற்றலில் ஈடுபடுத்தல்.

6.0 கருவியை செயற்படுத்தலும் அறிவுறுத்தலும் ஆசிரியருக்கான அறிவுறுத்தல்

- 10.5, 10.6, 10.7 அலகுகளின் கீழுள்ள உப தலைப்புக்களை பகுதிகளாக்கி வகுப்பிலுள்ள மாணவரின் தொகைக்கேற்ப பொருத்தமானவாறு பகிர்ந்து கொடுக்கவும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் கிடைக்கும் தலைப்பின் அடிப்படையில் தேசப்படம், படங்கள், படவுருக்கள், வரைபுகள் மற்றும் சம்பந்தப்பட்ட விளக்கங்கள் அடங்கியவாறு கட்டுரை ஒன்றைத் தயாரிக்கும் படி அறிவுறுத்தவும்.
- அக்கட்டுரையை சஞ்சிகைக்கு ஏற்றவாறு ஒரே அளவான தாள்களில் எழுதுவதற்கு அறிவுரை வழங்கவும்.
- மூலாதாரப் பயன்பாடு தொடர்பாகவும் மாணவர் அறியச் செய்யவும்.

- கட்டுரையை உருவாக்குவதற்காக தேவையான அளவு நேரத்தை வழங்கவும்.
- கட்டுரையைச் சமர்ப்பிக்க வேண்டிய நேரத்தையும் அறிவிக்கவும்.
- கட்டுரையை மதிப்பீடு செய்யவும்.
- கட்டுரைகளை ஒன்று சேர்த்து மேல் அட்டையைத் தயார் செய்து சஞ்சிகையை உருவாக்கும் படி அறிவுரை வழங்கவும்.
- மாணவரிடையே அறிவைப் பரிமாற்றஞ் செய்து கொள்வதற்காக அனைத்து மாணவருக்கும் சஞ்சிகையை வாசிப்பதற்கு வாய்ப்பு அளிக்கவும்.

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்

- தமக்குரிய தலைப்பின் கீழ் உரிய மூலாதாரங்களையும் நூல்களையும் கையாண்டு கட்டுரையைத் தயார் செய்து கொள்ளவும்.
- தேசப்படம், படவரைபுகள், படங்கள், படவுருக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விளக்கங்களை இங்கு காட்டவும்.
- சஞ்சிகையொன்றுக்கு உள்ளடக்குவதற்கு ஏற்ற கட்டுரையைத் தயார் செய்யவும்.
- உரிய தினத்தில் ஆசிரியருக்குச் சமர்ப்பிக்கவும்.
- மேலட்டையைத் தயாரித்து கட்டுரைகளை ஒன்று சேர்த்து சஞ்சிகையைத் தயாரிப்பதற்கு ஒத்துழைக்கவும்.
- ஓய்வான வேளையின் போது சஞ்சிகையில் உள்ளடங்கும் கட்டுரைகளை வாசிக்கவும்.

## 7.0 மதிப்பீட்டு நியதிகள்

- தலைப்புடனான பொருத்தப்பாடு.
- படங்கள்/ படவுருக்கள்/ தேசப்படம் என்பன உள்ளடங்கியிருத்தல்.
- தகவல்கள் போதுமாக இருப்பது.
- பணியில் ஈடுபட்டிருக்கும் போது காட்டும் அவதானம்.
- ஆக்கபூர்வமான தன்மை

ஒவ்வொரு நியதிக்குமாக தலா 4 புள்ளிகள் வீதம் பெறக் கூடிய மொத்தப் புள்ளியளவு 20 ஆகும்.

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு நீடிப்புக் கருவிகள்

1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் முன்றாந் தவணை- கருவி 03

2.0 உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்

- ஐரோப்பிய நாட்டின் குடியேற்ற நாடுகளைத் தேடிச் செல்வதற்கான காரணங்களைத் தேடிப் பார்ப்பார்.
- ஐக்கிய நாடுகள் தமது அதிகாரத்தை நிலை நாட்டிய நாடுகளை தேசப்படத்தின் வாயிலாக விபரிப்பார்.
- கிறிஸ்தவ சமயத்தின் பரம்பல் நிகழ்ந்த விதத்தைப் பரிசீலனை செய்வார்.
- கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராசதானிகளுடன் போர்த்துக்கேயர் மேற்கொண்ட உறவுகளைப் பகுப்பாய்வு செய்வார்.
- மேற்கத்திய நாட்டின் கண்டி இராசதானியுடன் மேற்கொண்ட உறவுகளைத் தேடிப்பார்ப்பார்.
- கைத்தொழில் புரட்சி தோன்றிய விதத்தை விளக்குவார்.
- கைத்தொழில் புரட்சிக்காலத்தில் செய்யப்பட்ட புதிய உருவாக்கங்கள் பற்றிய தகவல்களைக் கற்பார்.
- கைத்தொழில் புரட்சியின் உடன்பாடான, எதிர்மறையான தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார்.
- கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்களை தேசப்படத்தின் வாயிலாகப் பகுப்பாய்வு செய்வார்.
- பிரஞ்சுப் புரட்சியினால் வெற்றி கொள்ளப்பட்ட உரிமைகளை விபரிப்பார்.
- இத்தாலியை ஒன்றிணைக்கும் இயக்கம் மற்றும் ஜேர்மனியை ஒன்றிணைக்கும் இயக்கம் வாயிலாக தேசிய வாதமும் மானிட வாதமும் மேலெழுந்த விதத்தை விளக்குவார்.
- இரஷ்யப் புரட்சியின் மூலம் புதிய பொருளாதார மற்றும் அரசியல் சிந்தனைகள் உருவாகிய விதத்தை விபரிப்பார்.

3.0 உள்ளடங்கும் விடயதானம்

10.8, 10.9 10.10, 10.11 அலகுகள்

4.0 கருவியின் தன்மை

வினா-விடைத் தொகுதியொன்றைத் தயாரித்தல்.

5.0 கருவியின் நோக்கம்

- ஐரோப்பிய அதிகாரப் பரம்பலும் அதன் விளைவுகள் பற்றிய கற்றலில் ஈடுபடுத்தல்.
- கைத்தொழிற் புரட்சியையும் அதன் விளைவுகளையும் பரிசீலனை செய்தல்.
- ஐரோப்பாவின் முக்கிய அரசியல் நிகழ்வுகளையும் அதன் விளைவுகளையும் கற்றலில் ஈடுபடுத்தல்.

6.0 கருவியை செயற்படுத்துவதற்கான ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்

- உரிய அலகின் கீழ் வினா விடைத் தொகுப்பொன்றைத் தயாரிப்பதற்காக மாணவரை அறிவுறுத்தவும்.
- தயார் செய்த வினாக்களின் தொகை 100 இற்குக் குறையாதிருக்கும் படி அறிவிக்கவும்.
- வினா, விடைகளை இரு நிறங்களில் எழுதும் படி அறிவுறுத்தவும்.
- தேசப்படங்கள், படவுருக்கள், படங்களின் வாயிலாகவும் வினாக்களைத் தயார் செய்யும் படி அறிவுறுத்தவும்.

- மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாக மாணவரை அறியச் செய்யவும்.
- வினா விடைத் தொகுப்பைச் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை அறிவிக்கவும்.

7.0 மாணவர்களுக்கான அறிவித்தல்

- 8, 9, 10, 11ம் அலகுகளின் சிறு வினாக்களையும் விடைகளையும் உள்ளடக்கியவாறு வினா விடைத் தொகுப்பு ஒன்றைத் தயாரிக்கவும்.
- வினாக்களை ஒரு நிறத்திலும் விடைகளை இன்னொரு நிறத்திலும் எழுதவும்.
- தேசப்படங்கள், வரைபுகள், வரைபடங்கள், அட்டவணைகள் என்பன வாயிலாகவும் வினாக்களைத் தயாரிக்கவும்.
- பொருத்தமான மேலட்டை, ஏற்ற தலைப்பு, உள்ளடக்கம், நன்றி நவிலல் என்பன உள்ளடக்கப் படுமாறு வினாவிடைத் தொகுப்பைத் தயாரிக்கவும்.
- உரிய தினத்தில் ஆசிரியருக்குச் சமர்ப்பிக்கவும்.
- ஏனைய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட வினா-விடை தொகுப்புக்கள் சிலவற்றை வாசித்து அறிவை விருத்தி செய்து கொள்ளவும்.

8.0 கணிப்பீட்டு நியதிகள்

- தொனிப்பொருளுக்கு ஏற்றது.
- சரியான தன்மை.
- போதுமானவை.
- ஆக்கபூர்வமானது.
- ஒட்டு மொத்தமான நிறைவு.

ஒவ்வொரு நியதிக்குமாக தலா 4 புள்ளிகள் வீதம் பெறக் கூடிய மொத்தப் புள்ளி 20 ஆகும்.



ඉතිහාසය 10 - (දෙ)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010 / T / 10 / TIM / 5500